வெளியீடு 29-7-2002 Issued 29-7-2002

513/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

C

வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 31, 2001 – தொகுதி 8 – எண் 3

**Friday the 31st August, 2001 – Volume 8 – No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

*விலை ரூ. 3.00*] [**Price Rs. 3.00**

**31-8-2001**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

**1. ஒழுங்குப் பிரச்சினை–**

வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைக்கத் தீர்மானம் கொண்டு வருதல் 327-329, 331

**2. அரசினர் தீர்மானம்–**

விதி 32-ஐத் தளர்த்தல் 330

**3. சிறப்புக் கவன ஈர்ப்பு–**

கத்தர் நாட்டிற்கு மீன்பிடிக்கச் சென்ற கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் தாயகம் திரும்பாதது 332-334

* திரு. டி. மணி 332-333

திரு. ஆஸ்டின் 333-334

* மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத் 334

**. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்** தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 26 - கதர் கிராமத் தொழில்கள்

(ஆ) கோரிக்கை எண் 47 - ஊரகத் தொழில்கள்

(இ) கோரிக்கை எண் 59 - ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

(ஈ) கோரிக்கை எண் 24 - தொழில்கள்

(உ) கோரிக்கை எண் 53 - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

335-376, 377-378, 380-474

* மாண்புமிகு திரு கே. பாண்டுரங்கன் 335, 339, 343, 346, 367, 368, 369, 370, 438-460, 464

பக்கங்கள்

**4. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்**-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 26 - கதர் கிராமத் தொழில்கள்

(ஆ) கோரிக்கை எண் 47 - ஊரகத் தொழில்கள்

(இ) கோரிக்கை எண் 59 - ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

(ஈ) கோரிக்கை எண் 24 - தொழில்கள்

(உ) கோரிக்கை எண் 53 - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

-தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்

* திரு. எ.வ. வேலு

திரு. ஜி.கே. மணி

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்

* திரு. சி. சண்முகம்

* திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்

* திரு. டி.என். சிவசுப்பிரமணியன்

* திரு. இரா. வில்வநாதன்

* திரு. ஏ.எஸ். கண்ணன்


223444
சென்னை-600 009


பக்கங்கள்

**4. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்**-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 26 - கதர் கிராமத் தொழில்கள்

(ஆ) கோரிக்கை எண் 47 - ஊரகத் தொழில்கள்

(இ) கோரிக்கை எண் 59 - ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

(ஈ) கோரிக்கை எண் 24 - தொழில்கள்

(உ) கோரிக்கை எண் 53 - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

-தொடர்ச்சி

* திரு. எம். ராதாகிருஷ்ணன் 411-414

திரு. கே. மகேந்திரன் 424-430

**5. விதி 110-ன்கீழ் அறிக்கை-**

சென்னைப் பெருநகர்ப் பகுதிக்குள் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்கள் மற்றும் மனைகள் முறைப்படுத்துதல் குறித்து மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சரின் அறிக்கை 376-377

**6. தகவல் கோரல்-**

உறுப்பினர்கள் உரையாற்றுகையில் கடைப்பிடிக்க வேண்டிய மரபு 378-380

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 475-477

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 15, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 ஆகஸ்ட் 31, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு."

குற்றம் இல்லாதவராய் குடிமக்கள் உயர்வதற்கான செயல்களைச் செய்து வாழ்கின்றவரைச் சுற்றமாக விரும்பி மக்கள் சூழ்ந்துகொள்வர்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. ஒழுங்குப் பிரச்சினை

#### வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைக்கத் தீர்மானம் கொண்டு வருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. அடுத்தது, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் கத்தர் நாட்டுக்கு...(குறுக்கீடு)

***திரு. துரைமுருகன்:** Sir, I am on a point of order. ஒரு முக்கியமான பிரச்சினை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையைத் தங்களுடைய மேலான கவனத்திற்கும் தங்களுடைய தீர்ப்புக்கும் கொண்டு வருகிறேன். இந்த அவையில் முதல் ஒரு மணி நேரம் என்பது கேள்வி நேரத்திற்கு ஒதுக்கப்படுகின்ற ஒன்றாகும். அந்தக் கேள்வி நேரத்தை நாம் இரத்து செய்கிறோம் என்று சொன்னால்

[திரு. துரைமுருகன்] [2001 ஆகஸ்ட் 31

அதற்குச் சில நடைமுறைகள் உண்டு. "The first hour of every sitting shall, unless the House unanimously resolves otherwise, be available for asking and answering the questions" என்று நம் விதிகளிலே உள்ளது. எனவே, ஒருமனதாக இந்த அவை தீர்மானித்தாலன்றி கேள்வி நேரத்தை இரத்து செய்ய முடியாது. அப்படி இரத்து செய்ய வேண்டுமானால் அவை முன்னவர் அவர்கள் இந்த அவையிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும். அந்தத் தீர்மானம் தங்களால் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு ஒருமனதாக அது நிறைவேற்றப்பட்டால்தான் கேள்வி நேரத்தை இரத்து செய்ய முடியும். ஆனால், நேற்றைக்கிருந்த நம்முடைய சோகச் சுமையில், நீங்கள் B.A.C.-யில் எடுக்கப்பட்ட முடிவை நேராக வந்து தெரிவித்து நாளைக்குக் கேள்வி நேரம் இல்லை என்று சொல்லிவிட்டீர்கள். அது இந்த அவையினுடைய சட்டத்திற்கும் மரபுக்கும் மாறுபட்ட ஒன்றாகும் என்பது என்னுடைய ஒழுங்குப் பிரச்சினையினுடைய மையக் கருத்தாகும். இதற்குத் தங்களுடைய தீர்ப்பை நான் எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று அலுவல் ஆய்வுக் குழுவிலே இந்த முடிவு எடுக்கப்பட்டது. நேற்றைய சூழ்நிலையில் நாம் அதைக் கொண்டுவரக்கூடிய வாய்ப்பு இல்லை. அவை முன்னவரும் அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரக்கூடிய நிலைமை இல்லை. கேள்வி நேரம் இன்றைக்கு இல்லை என்பது நேற்று ஏற்கெனவே எடுக்கப்பட்ட முடிவு.

**திரு. துரைமுருகன்:** It is against the rules and customs. இன்றைக்குக் கேள்வி நேரத்தை நீங்கள் இரத்து செய்ய வேண்டுமானால் அவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வந்தாலொழிய கேள்வி நேரத்தை இரத்து செய்ய முடியாது. மாண்புமிகு அவை முன்னவரையே கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதில் ஒன்றும் இல்லை. ஏற்கெனவே மரபுகள் இருக்கின்றன.

**திரு. துரைமுருகன்:** இல்லை. ஓர் உறுப்பினர் மறுத்தால்கூடக் கொண்டுவர முடியாது. You ask the Leader of the House.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே மரபுகள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது.



2001 ஆகஸ்ட் 31]

**திரு. துரைமுருகன்:** இப்போதும் நேற்றைய நிலையை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. ஏற்கெனவே...

**திரு. துரைமுருகன்:** இல்லை, பிரச்சினை இருக்கிறது. ஏனென்றால் இது எழுதப்பட்ட சட்டம். நாம் கொஞ்சம் கொஞ்சமாக மரபுகளையும் சட்டத்தையும் விட்டு விலகிக்கொண்டு போய்க் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. துரைமுருகன், ஏற்கெனவே முன்னுதாரணங்கள் இதற்கு இருக்கின்றன என்று எனக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. அப்படிச் சொல்லி இருந்தால், உங்களைத் தவறான பாதைக்கு அழைத்துச் செல்கிறார்கள் என்பது பொருள். இப்போதும் குடி முழுகிவிடவில்லை. சட்டத்தை மதித்து மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும். அதை அவை ஏற்றுக்கொண்ட பிறகுதான் தாங்கள் கேள்வி நேரத்தை இரத்து செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப் பற்றி ஒன்றும் இல்லை. உங்களுடைய விருப்பம் அதுவானால் தீர்மானத்தைக் கொண்டுவரச் சொல்லலாம்.

**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே, அப்படியென்றால் நேற்றுதான் கொண்டு வந்திருக்க வேண்டும்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை.

**திரு. துரைமுருகன்:** அப்படியென்றால் கேள்வி நேரத்தைக் கொண்டு வாருங்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அலுவல் ஆய்வுக் குழுவில் நேற்று எடுக்கப்பட்ட முடிவு.

## 2. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே இதற்கு எடுத்துக்காட்டுக்கள் நிரம்ப இருக்கின்றன. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சித் தலைவர்களும் இருந்தபோது அலுவல் ஆய்வுக் குழுவிலே 'இன்று கேள்வி நேரம் வேண்டாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. ஏற்கெனவே மரபு உண்டு என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் கூறியிருக்கிறார்கள். அப்படியிருந்த போதிலும்கூட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய கேள்வி நேரத்தை ஒத்தி வைத்து மற்ற அவை நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்னும் தீர்மானத்தை நான் தற்போது மொழிகிறேன்.

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ இன்று (31-8-2001) தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

இன்று கேள்வி நேரம் இல்லை. திரு. துரைமுருகனுடைய கோரிக்கை நிறைவேறியது. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்கள்....



## 1. ஒழுங்குப் பிரச்சினை-தொடர்ச்சி

### வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைக்கத் தீர்மானம் கொண்டு வருதல்-தொடர்ச்சி

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தலைவர் அவர்களே, ஏன் மரபு இல்லை? நேற்று நீங்கள் சபைக்கு அறிவிப்புச் செய்தீர்கள். அந்தப் பிரச்சினை, அதாவது இன்றைக்குக் கேள்வி நேரம் இல்லை என்பது சபைமுன் வைக்கப்பட்டது. ஆனால் தீர்மான வடிவிலே வைக்கப்பட்டதா இல்லையா என்பது பிரச்சினை அல்ல. ஏதாவது சில முக்கியமான காலகட்டத்திலே சபையின் முன் வைக்கப்படுகிற பிரச்சினையைச் சபை ஏற்றுக்கொள்கிறது என்பதுதான் மரபு. Presumption. That is the legal presumption. The presumption is that it has been duly accepted by the House and therefore, the Hon. Minister need not present a new resolution. இன்றைக்கு நீங்கள் அதை ஏற்படுத்தினால் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அது ஏற்கெனவே நேற்று ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்படியோ தீர்மானம் நிறைவேறிவிட்டது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நிறைவேறி விட்டது சரிதான். ஆனால் சரியான மரபுக்கு மரபு ஒன்று கொண்டு வருவது சரியல்ல.

**திரு. துரைமுருகன்:** நேற்று அந்தச் சூழ்நிலையில் point of order கிளப்பி இருக்க வேண்டும் என்று சொல்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** அந்தச் சூழ்நிலையில் ஒரு தீர்மானத்தை முறையாக மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் சபைமுன் வைத்தார்கள். அதை, அந்த நேரத்தில் தீர்மானம் தேவையில்லை என்பதற்காக சபை ஏற்றுக்கொண்டது. சபை ஏற்றுக்கொண்ட பிறகு House is supreme...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லத்தீப் அவர்கள் சொல்லக் கூடிய அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். இப்போது துரைமுருகன் சொன்ன கருத்தையும் ஏற்றுக்கொண்டேன். எல்லாம் முடிந்து விட்டது. பிரச்சினை தீர்ந்தது.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கத்தர் நாட்டிற்கு மீன்பிடிக்கச் சென்ற கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் தாயகம் திரும்பாதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் கத்தர் நாட்டிற்கு மீன் பிடிக்கச் சென்றவர்கள் இதுவ்ரை திரும்பாதது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. டி. மணி மற்றும் திரு. ஆஸ்டின் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறேன். சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பைச் சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு அழைக்கிறேன். திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த 4 மீனவர்கள் கடந்த 6 மாதங்களுக்கு முன்னால், கத்தர் நாட்டிலே மீன் பிடிக்கச் சென்று காணாமல் போய்விட்டார்கள். வறுமையில் வாடுகின்ற அவர்களுடைய குடும்பங்கள் பல்வேறு கடிதங்களையும் பல்வேறு மனுக்களையும் மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் அனுப்பியுள்ளார்கள். இன்று வரையிலே அவர்கள் உண்டா இல்லையா என்ற கேள்விக்குறி இருந்து கொண்டேயிருக்கிறது. அவர்களுடைய குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு எந்தவிதமான உதவியையும் இதுவரையிலே மாநில அரசோ, மத்திய அரசோ வழங்கவில்லை. அந்த உதவிகளை வழங்குகின்றபோது மாநில அரசு சில சட்டப் பிரச்சினைகள் அல்லது விதிமுறைகளில் சில பிரச்சினைகள் இருப்பதாகக் கூறி இதுவரை அது வழங்கப்படாத நிலை உள்ளது.

எனவேதான், அவர்களைக் கண்டுபிடிப்பது இனி எந்த அளவிற்கு சாத்தியம் என்பது தெரியவில்லை. மத்திய அரசு அந்தக் க த்தர் நாட்டோடு தொடர்பு கொண்டு அவர்களுக்குரிய உதவிகளைச் செய்வதும், அது கிடைக்கின்ற வரையிலும் எந்தக் கம்பெனியில் அவர்கள் வேலை செய்தார்களோ அந்தக் கம்பெனி, எந்தக் கம்பெனி என்பதைக் கண்டறிந்து அதன் மூலமாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணத்தைப் பெற்றுத்தர வேண்டும். நம்முடைய மாநில அரசு, மத்திய அரசுக்கு இந்த விவரங்கள் பூராவையும் எடுத்துச் சொல்லி, அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாநில அரசு அந்தக்





குடும்பங்களைப் பாதுகாக்கின்ற வகையில் அந்த விதிகளைத் தளர்த்தி-அந்த 4 குடும்பங்களைப் பாதுகாப்பதற்கு-உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் நீரோடியைச் சேர்ந்த வில்சன், குளச்சலைச் சேர்ந்த சோபன், கீழமுட்டத்தைச் சேர்ந்த இருதயதாசன், கடியப்பட்டணத்தைச் சேர்ந்த ஜோசப், ஆகிய 4 பேரும் கடந்த 8-2-2001 அன்று கத்தர் நாட்டிலுள்ள ஜியாகர் அப்கலைன்ஸ் என்ற படகிலே கடலிலே மீன் பிடிக்கச் சென்றவர்கள் மீண்டும் கரைக்குத் திரும்பவில்லை. அவர்கள் கடலிலே விபத்திற்குள்ளானார்களா அல்லது சிறைப் பிடிக்கப்பட்டார்களா என்பது இதுவரையில் அந்தக் குடும்பங்களுக்குத் தெரியவில்லை. அதைத் தொடர்ந்து 7-6-2001-லே கொல்லங்கோடு தபால் நிலையத்தின் முன்பாக அந்தக் கிராமத்தைச் சார்ந்த பொதுமக்கள் எல்லாம் ஒரு அடையாளப் போராட்டத்தை நடத்தினார்கள். அப்போது அங்குள்ள விளவங்கோடு தாசில்தார் அவர்கள் நேரிலே வந்து அவர்களிடம் மனுக்களைப் பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதன் அடிப்படையிலே, அந்தப் போராட்டம் அன்றைக்குக் கைவிடப்பட்டது.

அதற்குப் பிறகு, இரண்டாம் கட்டமாக 20-8-2001 ஆம் நாளன்று குழித்துறை சந்திப்பிலே, சாலை மறியல் போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். அன்றைக்கும் பத்மநாபபுரம் கோட்டாட்சியர் அவர்கள் அந்த இடத்திற்கு நேரிலே வந்து சாலை மறியல் போராட்டத்தைக் கைவிட வேண்டுமென்று அவர்களிடத்திலே கோரிக்கை வைத்ததன் அடிப்படையிலே சில கோரிக்கைகளை அன்றைக்கு கோட்டாட்சியரிடத்திலே வழங்கியிருக்கிறார்கள். இதுவரை கடலுக்குச் சென்ற அந்த மீனவர்கள் இன்னும் திரும்பவில்லை என்று சொல்லி, அந்தக் கோரிக்கை மனு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தமிழகத்திலிருந்து ஒரு தனி அதிகாரியை கத்தர் நாட்டிற்கு அனுப்பி அங்கு என்ன நிலைமை, அவர்கள் என்ன ஆனார்கள் என்பதைக் கண்டுபிடிக்கச் சொல்ல வேண்டுமென்றும், பாதிக்கப்பட்ட அந்த 4 மீனவர்களின் குடும்பங்களுடைய அன்றாட வாழ்க்கைக்கு அரசு உதவி செய்ய வேண்டும் என்றும் சில கோரிக்கைகளை கோட்டாட்சியர் மூலமாக இந்த அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். எனவே, உடனே அரசு அதிலே தலையிட்டு பாதிக்கப்பட்ட அந்த 4 குடும்பங்களுக்கும்

[திரு. ஆஸ்டின்] [2001 ஆகஸ்ட் 31

நிவாரணம் வழங்கவும், காணாமல் போன அந்த 4 மீனவர்கள் என்ன ஆனார்கள் என்பதைக் கண்டுபிடிப்பதற்கு மாநில அரசு, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, மத்திய அரசு மூலமாகவும், முடிந்தால் மாநில அரசினுடைய அதிகாரியை கத்தர் நாட்டிற்கு அனுப்பி வைத்து அவர்களுடைய நிலைமை என்ன என்பதைக் கண்டறியவும் வேண்டி இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பைக் கொண்டு வந்து அரசினுடைய கவனத்தை நான் ஈர்க்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நீரோடி, குளச்சல், கடியப்பட்டணம் மற்றும் கீழமுட்டத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் முறையே திருவாளர்கள் வில்சன், சோபன், ஜோசப் அந்தோணி மற்றும் இருதயதாசன் ஆகியோர் 8-2-2001 அன்று மீன் பிடிக்கச் சென்றதிலிருந்து இன்றுவரை வீடு திரும்பவில்லை. இந்நால்வரும் தோகா கத்தர் என்ற நாட்டில் அல்கோர் என்ற இடத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட தகவலையடுத்து, மைய அரசின் வெளியுறவுத் துறை மூலமாக தோகா கத்தர் நாட்டிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரியுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. தூதரகமோ மேற்குறிப்பிட்ட நால்வரும் அல்கோர் என்ற இடத்தில் தங்கி வேலை செய்ததாகவும், தற்போது இல்லை என்றும் தெரிவித்து, ஈரான், துபாய், பகரைன் மற்றும் சௌதி அரேபியாவிலுள்ள இந்தியத் தூதரகங்கள் மூலமாகத் தேடிக் கண்டுபிடிக்கக் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளதாகவும், ரேடியோ ஆசியா என்ற வானொலி மூலம் தேடிக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது. இதற்கிடையே கொல்லங்கோட்டிலிருந்து செயல்படும் Action Council for saving migrant fishermen என்ற மீனவர் அமைப்பு அவ்வப்போது காணாமல் போனதாகக் கருதும் மீனவர்களைத் தேடிக் கண்டுபிடித்துத் தரவேண்டி, மத்திய, மாநில அரசுகளின் கவனத்திற்குக் கொண்டுவர போராட்டங்களில் ஈடுபடுகிறது. அந்நேரங்களில் எல்லாம் மாவட்ட நிர்வாகமும், மீன்வளத் துறையும் தக்க நடவடிக்கைகள் எடுத்து சட்டம்-ஒழுங்கு பாதிக்காதவாறு கண்காணித்து வருகிறது.



2001 ஆகஸ்ட் 31]

## 4. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 26 – கதர் கிராமத் தொழில்கள்

(ஆ) கோரிக்கை எண் 47 – ஊரகத் தொழில்கள்

(இ) கோரிக்கை எண் 59 – ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

(ஈ) கோரிக்கை எண் 24 – தொழில்கள்

(உ) கோரிக்கை எண் 53 – தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

– – –

### (அ) கோரிக்கை எண் 26 – கதர் கிராமத் தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் - 26, கதர் கிராமத் தொழில்கள். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்."

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கு ஏற்ப, துன்பம் வந்தபோது அதற்காக வருந்திக் கலங்காமல், அந்தத் துன்பத்திற்கே துன்பத்தை உண்டாக்கி வெற்றி கண்டவரும், கணினிகூடக் கணிக்க முடியாத கணக்கை நொடியில் போட்டு, தமிழகத்தின் கணக்கை தன் கையில் வைத்திருக்கும் தாயின் காலடிகளைத் தொட்டு வணங்கி, என் துறையின் கன்னிக் கணக்கையும், கொள்கை விளக்கக் குறிப்புகளையும் இங்கே அமர்ந்திருக்கின்ற கண்ணியவான்கள் நிறைந்த இம்மாமன்றத்தில் பனிவோடு முன்வைக்கின்றேன்.

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.31,90,31,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

[2001 ஆகஸ்ட் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 192, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1162, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் கதர்த் துணி அதிக அளவில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,90,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1544, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பெரியேரிப்பட்டி ஊராட்சி, ஏரட்டிப்பட்டியில் பட்டுச் சேலை உற்பத்தியாளர் நெசவு மையம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,90,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 797, திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,90,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1374, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.



2001 ஆகஸ்ட் 31] [பேரவைத் தலைவர்]

வெட்டுத் தீர்மானம் எண் 1804, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 236, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,90,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 350, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,90,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 982, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,90,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1196, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 708, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 846, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1092, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,90,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 34, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 646, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,90,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 474, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு, வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் வட்டம், ஏலுகாம்வலசு பொன்னிவாடி கிராமம் கதர் நெசவாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,90,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 818, திரு. துரை. கி. சரவணன்.



**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,90,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-15

## (ஆ) கோரிக்கை எண் 47 - ஊரகத் தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 47 - ஊரகத் தொழில்கள். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.82,73,86,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 182, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 583, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1173, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் தேயிலைத் தூளை இரத்து செய்ய மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,73,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1565, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,73,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 796, திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,73,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1224, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 78, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 429, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 316, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,73,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 346, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,73,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1019, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,73,86,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1495, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 707, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 847, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1091, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,73,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 35, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 65, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 647, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,73,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 490, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதியில், சிறு தொழிற்பேட்டை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,73,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 466, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, வேப்பம்பாளையத்தில் அமைந்துள்ள தொழிற்பேட்டையில் உடனடியாகத் தொழில்கள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,73,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 812, திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் பகுதியில் ஊரகத் தொழில்களை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,73,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (இ) கோரிக்கை எண் 59 - ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 59, ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1,08,47,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1167, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் உள்ள 17 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் உள்ள பழுதுபட்ட கருவிகளை, மெஷின்களை மாற்றி புதிய கருவிகளை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,08,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1566, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,08,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 795, திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,08,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 306, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி." விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்றரூ.1,08,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 353, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,08,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1047, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,08,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1498, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 752, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 848, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1090, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,08,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2977, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,08,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 26, கதர் மற்றும் கிராமத் தொழில்கள், மானியக் கோரிக்கை எண் 47, ஊரகத் தொழில்கள் மற்றும் மானியக் கோரிக்கை எண் 59, ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய தலைப்புகளில் கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளன. அதிலே தமிழிலே இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி, அவைக் குறிப்பிலே பதிவு செய்யக் கோருகிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துரைக்கும் கருத்துகளுக்கும், நல்ல ஆலோசனைகளுக்கும் என்னுடைய பதிலுரையில், இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும், புதியதாக எடுக்கப்படவுள்ள முடிவுகள் குறித்தும் விளக்கமாகப் பணிவோடு பதில் அளிக்கின்றேன்.

### (ஈ) கோரிக்கை எண் 24 – தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 24 - தொழில்கள், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி,

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.17,09,33,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 479 முதல் 564 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II-ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 179, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1122, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,09,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1168, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,09,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1242, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென் மாவட்ட சாதிக் கலவரம் குறித்து விசாரிக்க நீதிபதி மோகன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி தென் மாவட்டங்களின் மையப் பகுதியான மதுரையில் தொழிற்பேட்டை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,09,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1522, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்தில் சர்க்கரை ஆலை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,09,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 794, திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,09,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1426, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கவுந்திமலையில் இரும்புத் தாது அதிகம் கிடைப்பதால் அங்கு ஒரு தொழிற்சாலை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,09,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1275, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 546, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1803, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 286, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்க்ள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,09,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 355, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,09,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 944, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,09,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1494, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 705, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 844, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1089, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,09,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 765, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 52, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 648, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் புதிய தொழிற்சாலை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,09,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1386, திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1266, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் தொகுதி, அரூரைச் சார்ந்த பகுதிகளில் மாலிக்பாட்டினம் என்னும் தாதுப்பொருள் வெட்டி எடுக்கப்பட்டு வெளியிலே தொழிற்சாலைக்குக் கொண்டு செல்வதைத் தவிர்த்து, சுத்திகரிக்கும் தொழிற்சாலை ஒன்று அரூரிலேயே அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,09,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2995, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,09,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 817, திரு. துரை. கி. சரவணன்.



**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதியிலுள்ள பட்டதாரி இளைஞர்களின் வேலைவாய்ப்பைப் பெருக்கிட தொழிற்பேட்டை ஒன்றினை அங்கு தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,09,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 20, திரு. து. நெப்போலியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 485, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் முருங்கைக்காய் அதிகமாக விளைகிறது. முருங்கைக்காயை மூலப்பொருளாகக் கொண்டு, முருங்கைக்காய் பவுடர் தொழிற்சாலை அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,09,33,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (உ) கோரிக்கை எண் 53 - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 53 - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.51,02,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 169, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1170, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1559, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 793, திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1286, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 553, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 276, திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1029, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1499, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 706, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 845, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1084, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 916, திரு. கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1222, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 905, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மூடப்பட்ட பஞ்சாலைகளை மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2940, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்கள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்புகளில் கொள்கை விளக்கக் குறிப்புகள்



தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @நான் இந்தப் பேரவையில் ஆற்றிய உரையாகக் கருதி, அதை இந்தப் பேரவைக் குறிப்பேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளின்மீது மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் தங்களுடைய அறிவார்ந்த கருத்துகளையும், ஆலோசனைகளையும் எடுத்துக்கூறிய பிறகு, அரசின் தரப்பிலே கூறவேண்டிய விளக்கங்களையும், எடுத்துள்ள முடிவுகளையும் இறுதியாக என்னுடைய பதிலுரையில் தெரிவிக்கின்றேன் என்பதைச் சொல்லிக்கொண்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கதர் கிராமத் தொழில்கள், ஊரகத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு, தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம். திரு. எ.வ. வேலு.

முற்பகல் 10-25

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 24 - பெருந்தொழில்கள் என்ற மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே கலந்துகொண்டு உரையாற்றுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் வளர்ச்சியின் வேகத்தினை ஒருமுகப்படுத்தி, பெருந்தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றை மேம்படுத்தி உற்பத்தி விகிதத்தை அதிகரிக்க இந்த அரசு எந்த முயற்சியும் எடுத்துக்கொண்டதாக நான் அறிந்தவரையில் தெரியவில்லை. பல திட்டங்களுக்கு முந்தைய கலைஞர் அரசு அனுமதி பெற்று, கால்கோள் விழா எடுத்து, நிலங்களைக் கையகப்படுத்தி, வெளிநாட்டு மூலதனங்கள் தமிழ்நாட்டிற்கு வருவதிலே முன்னுதாரணமாக இருந்து, அனைத்து மாநிலங்களையும்விட தமிழ்நாடு முன்னுதாரணமாக இருந்து, சொல்லப்போனால், இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்திலே நிறைய இடங்களில் கலைஞருடைய அரசுத் திட்டங்கள் நிரப்பப்பட்டுள்ளன என்பதை என்னால் சொல்ல முடியும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பக்கம் 14-ல் இந்திய அரசின் விமான நிலைய உட்கட்டமைப்பிற்கான புதிய கொள்கையின் அடிப்படையில் பன்னாட்டு—

---

@ 565 முதல் 608 வரையிலான பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் தங்களது பதிலுரையிலே சொல்லுங்கள். உறுப்பினர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. எ.வ. வேலு:** விமான தளம்; அதாவது பன்னாட்டு விமான தளம் இங்கே அமைவதற்கு கலைஞருடைய அரசு பெருமுயற்சி எடுத்து, மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்று TIDCO மூலமாக, அதற்கான ஆய்வு செய்து அதைத் தொடங்குவதற்குப் பெருமுயற்சி எடுத்தது இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதேபோன்று கனிம வளத்தைப் பொறுத்தவரையில் payment மூலமாக 1991-92 ஆம் ஆண்டில் 22 கோடி, 1992-93-ல் 63 கோடி, 1994-95-ல் 64 கோடி, 1995-96-ல் 66.90 கோடி என்று இருந்தாலும்கூட, 1996-97-ல் ஆட்சிக்கு வந்த பிறகு 73.85 கோடி, 89.94 கோடி, 110.37 கோடி மற்றும் 124.86 கோடி என்றும் 2000-2001-ல் சனவரி முடிய 121.82 கோடி என்றும், இப்படி 5 ஆண்டு காலம் கனிம வளத்தைப் பொறுத்த அளவிற்கு அதிகமாக நிருவாகத் திறமையின் மூலமாக வருவாயை அந்த அரசு ஈட்டித் தந்ததையே அதில் குறிப்பிட்டிருக்கிறது.

அதேபோன்று கணினியைப் பொறுத்தவரையில் இப்போது நாட்டிலே மனித வளத்தை மேம்படுத்துகின்ற வகையில் பள்ளிக் கல்வித் துறையின் ஒத்துழைப்போடு மாநிலத்திலுள்ள 1,200 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலே கணினியை கலைஞருடைய அரசு அறிமுகப்படுத்தி, கிட்டத்தட்ட 80 ஆயிரம் மாணவர்கள் அதிலே சேர்ந்து இப்போது படித்துக்கொண்டிருப்பதையும், கடந்த கால கலைஞருடைய அரசு செய்திருக்கிறது என்பது இந்தப் புத்தகத்தில் பல இடங்களிலே நிரப்பப்பட்டிருந்தாலும், ஆக எந்த இடத்திலும் முந்தைய அரசு இப்படிச் சிறப்பாக அந்த நிருவாகத்தை நடத்தியது என்று ஒரு இடத்திலும் குறிப்பிடவில்லை.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்"

என்று வள்ளுவர் குறிப்பிட்டதைத் தாங்களும் அறிவீர்கள்; தமிழ்நாடும் அறியும். அதே நேரத்திலே தொழில் துறையைப் பொறுத்தவரையில் அரசு மூலதனத்திலே தொழில் துறையை வளப்படுத்துவது ஒரு வகை. தனியார் தொழில் துறையை ஊக்கப்படுத்தி அதற்கு உறுதுணையாக இருந்து அதற்கு வேண்டிய செயல்பாடுகளை இந்த அரசாங்கம் செய்து



அதை ஊக்கப்படுத்துவது இன்னொரு வகை. ஆக, இந்த இரண்டு வகைகளையும் ஒரு கண்ணோட்டத்தோடு பார்த்தால்தான் தொழில் துறையில் முன்னேற முடியும். இந்த ஆட்சியாளர்கள் 1995 ஆம் ஆண்டு ஆண்டபொழுது தொழில் வளர்ச்சி முதலீட்டில் தமிழகம் 5-வது இடத்திலே இருந்தது. ஆனால் தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் Centre for Monitoring Indian Economy தனது 22-5-2000 தேதியிட்ட அறிக்கையின்படி, 1,56,893 கோடி ரூபாய் முதலீடுகளைப் பெற்று தமிழகம் இந்தியாவிலேயே முதலிடம் பெற்றிருக்கிறது என்று உறுதிபடச் சொல்லியிருக்கிறது.

அதேபோன்று 1995 ஆம் ஆண்டு software ஏற்றுமதியில் 34 தொழில் பிரிவுகள்தான் இருந்தன. தமிழக அரசுக்கு வருமானம் 37 கோடி ரூபாய்தான் வந்தது. ஆனால், 1999-2000-ல் கழக ஆட்சி பொறுப்பேற்ற நேரத்தில் மென்பொருள் - software - ரூ.1,914 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-30

அதேபோன்று ஸ்ரீபெரும்புதூரில் 12-7-1996-லே ஹூண்டாய் கம்பெனியோடு ஒப்பந்தம் செய்யப்பட்டு 2,450 கோடி ரூபாய் திட்டத்திலே ஆண்டுக்கு இரண்டு இலட்சம் கார்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை உருவாக்கித் தந்தது. இங்கிலாந்து நாட்டினுடைய பில்கிளிங்டன் என்ற நிறுவனத்தோடு 16-7-1996-ல் ஒப்பந்தம் செய்யப்பட்டு, 550 கோடி ரூபாய் திட்டத்தில் கண்ணாடித் தொழிற்சாலை இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. அதேபோன்று, இருங்காட்டுக்கோட்டையில் SIPCOT தொழில் வளாகத்தில் 32 தொழிற்கூடங்களை அமைத்து இன்றைக்குச் சிறப்பாக தொழிற்சாலைகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருப்பது கலைஞருடைய ஆட்சியின் முயற்சி.

தென்மாவட்டங்களில் பெரும் வளர்ச்சியாக உருவாகி இருக்கிற நாங்குநேரியில் சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலத்தில் 8 ஆயிரம் கோடி ரூபாய் செலவுத் திட்டத்தில் உயர் தொழில்நுட்பத் தொழிற் பூங்கா - High-tech Industrial Park - தொடங்கப்பட்டிருக்கிறது. அதுகூட கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. தலைவர் கலைஞர் ஆட்சியில் உருவாக்கப்பட்ட - 1999 ஆம் ஆண்டு மென்பொருள் ஏற்றுமதியைப் பொறுத்தளவில் அமெரிக்காவிலுள்ள ஹார்வேட் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில், இந்தியாவிலேயே தமிழகம் ஒரு மாபெரும் தகவல் தொழில்நுட்ப மாநிலமாக உருவெடுத்துள்ளது

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தகவல் தொழில் நுட்பத்தைப் பொறுத்தளவில் கலைஞருடைய ஆட்சியில் I.Tech. Policy - Information Technology Policy - என்ற policy-யை எந்த மாநிலமும் எடுக்காத நேரத்தில் முதன்முதலாக தமிழ்நாடு அந்தப் policy-யை எடுத்திருக்கிறது. அதுகூட இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கின்றேன். அதேநேரத்திலே தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் Software Engineers, Software professionals, Multi-media software application - அதிகமாகத் தயாரிக்கப்படும் பெரிய மையமாக இன்றைக்கு சென்னை உருவாகியிருக்கிறது. பொதுவாக தமிழ்நாட்டில் மூலப்பொருட்கள் குறைவு, மனித வளம் அதிகம். எனவே, நமது நாட்டு மக்கள் அயல்நாடுகளுக்குச் சென்று இந்தியாவினுடைய பொருளாதாரத்தை, குறிப்பாக தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு உறுதுணையாக இருந்து இன்றைக்குப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. உச்சியிலே நின்று உரக்கச் சொல்லவில்லை என்றால்கூட, ஏராளமான மென்பொருட்கள் (software) தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நகரம் சென்னைதான். அதை ஓசைப்படாமல் செய்தவர் கலைஞர்தான் என்பதை 6-3-2000 தேதியிட்ட 'DQ Week' என்ற நாளிதழிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் 9-8-2000 அன்று நடுநிலை நாளேடான 'தினமணி' எழுதிய 'தொழில் முதலீட்டில் தமிழகம் முதலிடம்' என்ற தலைப்பில், கடந்த சில ஆண்டுகளாக மாநிலங்களிடையே தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் போட்டி ஏற்பட்டிருக்கிறது. இது ஆரோக்கியமான அம்சம். அதிலும் குறிப்பாக, மகாராஷ்டிரம் மற்றும் தமிழகம் இடையே அண்மைக் காலமாக இந்தப் போட்டி கடுமையாக இருந்து வந்தது. இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் அறிக்கையின்படி, 1,60,804 கோடி முதலீடு திரட்டி, நாட்டின் முதலிடத்தைப் பிடித்துள்ளது தமிழகம். தொழில் வளர்ச்சியில் தமிழகத்தின் வரலாறு, சாதனை மனநிறைவைத் தருகிறது என்றும் மகாராஷ்டிரம் இரண்டாவது இடத்தில் இருக்கிறது என்றும் வந்துள்ளது. 'Economic Times'-லே 15-6-2001 அன்று வந்த கட்டுரையில் இந்திய ரிசர்வ் வங்கி ஆய்வின்படி திட்டங்கள் செயல்பட்ட இடங்களில் மாநிலவாரியாகப் பரிசீலித்தபோது, தமிழ்நாடு 2000-ல் 24.3 சதவிகிதத்துடன் அதாவது 13,017 கோடி பெற்று முதலிடத்தைப் பெற்றிருக்கிறது. மகாராஷ்டிரம் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.



6-7-1998 தேதியிட்ட 'Times of India' கடன் வைப்புத் தொகை விகிதத்தில் - Credit Deposit Ratio - அகில இந்திய அளவில் தமிழகம் முதலிடம் பெற்றிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இலண்டனிலிருந்து வெளிவரும் Financial Times என்ற பத்திரிகை 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், சென்னையை இந்தியாவின் Tetroit என்கிற அந்த அடிப்படையிலே - அந்தப் பத்திரிகைகூட - குறிப்பிட்டு இருக்கிறது. இந்தியாவிலேயுள்ள மாநிலங்களிலே தமிழ்நாடு தொழில் துறையில் மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும். அதே நேரத்திலே கடைசியாக ஒரு வெளிநாட்டு நண்பர் சொன்னார். பிரெஞ்ச் நாட்டினுடைய தூதுவராக இருக்கும் பெர்னாடு டி. மாண்ட் பெர்னாடு, என்பவர் தொழில் வர்த்தக சபைக் கூட்டத்திலே 1999-2000-ல் தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்ட தொழில் புரட்சி என்பது மிகவும் பாராட்டுக்குரியது என்கிற அடிப்படையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, இந்தியாவிலே மென்பொருளாக இருந்தாலும் சரி, தொழில் துறையில் இருக்கிற முதலீடாக இருந்தாலும் சரி, தமிழகம் சிறப்பாக இயங்கிக் கொண்டு இருக்கிறது என்று அந்த ஐந்தாண்டு கால ஆட்சியை வெளி நாட்டினரும், பத்திரிகை நண்பர்களும், பத்திரிகையாளர்களும் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் சென்ற ஆட்சியிலே அமெரிக்காவிலே உள்ள மேடிசன் நகரில் அமைந்துள்ள விஸ்காசின் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ஜினோம் டெக்னாலஜியின் தலைவர் டாக்டர் சேனாதிபதியிடம், தமிழ்நாடு டிட்கோ நிறுவனம் இணைந்து 5-12-2000 அன்று உயிரியல் தொழில் நுட்ப Bio-Technology-யைப் பயன்படுத்தி 450 கோடி ரூபாய் திட்டத்தில் நோய் தடுக்கும் மருந்து தயாரித்தல், வேளாண்மை ஆகிய தொழில் துறையிலே முன்னேற வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் முயற்சி எடுத்து ஒரு ஒப்பந்தத்தை ஏற்பாடு செய்தார்கள். ஆனால், இந்தக் கொள்கைக் குறிப்பிலே.... (மணியடிக்கப்பெற்றது) போன முறை 4 நிமிடம் பேசி மொத்த பேரையும் பேசவிடாமல் பண்ணிவிட்டீர்கள், பேரவைத் தலைவர் அவர்களே...

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடே இல்லாமல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். திருமதி யசோதா அவர்கள் இடையிலே குறுக்கிட நினைத்தார்கள். நான் அவர்களை அமர வைத்திருக்கிறேன். நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** எனவே Bio-Technology-யைப் பயன்படுத்தி 450 கோடி ரூபாய் திட்டத்தில் நோய் தடுக்கும் மருந்து தயாரித்தல், வேளாண்மை போன்றவற்றிற்குப் போடப்பட்ட ஒப்பந்தம் இதிலே குறிப்பிடப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாடு டிட்கோவும் அமெரிக்காவினுடைய கார்னல் பல்கலைக்கழகத்தோடு இணைந்து தமிழகத்தின் உயிரியல் தொழில் நுட்பத்தை Bio-Technology-யைப் பயன்படுத்தி 100 கோடி ரூபாய் செலவில் திட்டங்களை நிறைவேற்றி 15-1-2001 அன்று இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. இது நம்முடைய வளாகத்திலே. ஆனால் அந்தத் திட்டம் என்ன ஆனது என்பதை இதிலே குறிப்பிடவில்லை. தென்னகத்தைப் பொறுத்தளவிற்கு ஜாதிக் கலவரம் அங்கே நிறைய இருந்து கொண்டிருந்த நேரம். நீதியரசர் இரத்தினவேல் பாண்டியனுடைய பரிந்துரையின் பேரில் தென் மாவட்டங்களில் ஜாதிக் கலவரங்கள் ஏற்படாமல் இருக்க இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற வகையில் தலைவர் கலைஞர் அவர்கள் பெரிய அளவிலே புதிய தொழில் திட்டத்தை அறிவித்து பணிகள் நடந்து வந்தன. அந்தப் பணிகளைப் பற்றி இந்தக் கொள்கைக் குறிப்பிலும் திட்டங்களிலும் எதுவும் ஆய்வு செய்யப்படவில்லை என்று இந்த நேரத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

சர்க்கரை ஆலையைப் பொறுத்தளவிற்கு இன்றைக்கு அரசு கூட்டுறவுக் கடனை செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் கட்டினால் அவர்களுக்கு சலுகை அளிக்கிறோம், தள்ளுபடி செய்கிறோம் என்று அறிவித்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு சர்க்கரை ஆலையைப் பொறுத்தளவிற்கு கரும்பை விநியோகம் செய்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இன்னும் பல ஆலைகளிலிருந்து பணம் திரும்ப வரவில்லை. அப்படி பணம் வந்தால்தான் அந்தப் பணத்தைப் பெற்று கூட்டுறவுக் கடன் 30 ஆம் தேதிக்குள் கட்டப்பட்டு, அந்தச் சலுகையை அவர்கள் அனுபவிக்க முடியும். ஆனால் இந்த அரசு இன்றைக்கு சர்க்கரைக் கொள்கையைப் பொறுத்தளவிற்கு, விவசாயிகளுக்குப் பணம் கொடுப்பதைப் பற்றி இந்தக் கொள்கைக் குறிப்பிலே எதுவும் சொல்லவில்லை. எனவே, பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இரண்டு தினங்களாக நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்றபோது மாண்புமிகு நிதி அமைச்சரும் சரி, பெருந்தொழில் அமைச்சரும் சரி, சிறு தொழில் அமைச்சரும் சரி - ஆக எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏனென்று சொன்னால் - இந்தப் பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தளவில் சில நேரங்களில், ஏதோ சிறு தொழிலை நாங்கள் நசுக்கிவிட்டதைப் போலவும், பெருந்தொழிலை



ஆதரிப்பது போலவும் வெளிப்படுகிறது அவர்களுடைய குரல். சில நேரங்களில் பெருந்தொழிலுக்கு நாங்கள் உறுதுணையாக இருந்தோம் என்ற அடிப்படையில் அந்தக் குரல் ஒலிக்கிறது.

உண்மை நிலை என்னவென்று சொன்னால் 1993 ஆம் ஆண்டு அன்றைக்கு நரசிம்மராவ் அவர்கள் பிரதம அமைச்சராக இருந்தார்கள். இன்றைய ஆட்சியாளர்கள் இதே மன்றத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த நேரத்தில்தான் இந்த உலகப் பொருளாதாரக் கொள்கை இந்த நாட்டிற்கு வந்தது. அப்படி வருகிறபோது, அப்போது இருந்த இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு இதே சட்டமன்றத்தில் என்ன சொன்னார்கள்? "இந்திய நாட்டினுடைய பொருளாதாரம் தொழில் துறையில் ஒரு முக்கிய கால கட்டத்தை கடந்துகொண்டிருக்கிறது. தொழில் துறை வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக ஏற்கெனவே இருந்து வந்த கட்டுப்பாடுகளை நீக்குவது, பொருளாதாரத் துறையில் அரசின் நேரடித் தலையீட்டைக் குறைப்பது, தனியார் துறையைப் பெருமளவில் ஊக்குவிப்பது, வெளிநாட்டு மூலதனம் மற்றும் பொருட்களைப் பெறுவதில் உள்ள தலையீடுகளைக் குறைப்பது, இந்தியத் தொழில் வளத்தை உலகப் பொருளாதாரத்தோடு இணைப்பது என்று மத்திய அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றங்களைக் கருத்தில்கொண்டு தொழில் அதிபர்களுடன் நேரடியாக நாங்கள் விலாவாரியாக விவாதித்த பின்னர் கடந்த ஆண்டு நமது மாநிலத்தின் புதிய தொழில் கொள்கையை அறிவித்துள்ளேன். தமிழ்நாட்டில் தனியார் மூலதனத்தை ஊக்குவிப்பதற்காக நியாயமான ஊக்குவிப்புத் திட்டத்தை வகுத்துள்ளேன்." என்று அவர்களே இந்த மாமன்றத்திலே 8-4-1993 ஆம் நாளன்று குறிப்பிட்டுள்ளார்கள். ஏன் அதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், ஏதோ சிறு தொழிலை அந்த அரசு ஒடுக்கிவிட்டது என்கிற உணர்வோடு குரல் ஒலிக்கப்படுகிறது. உண்மையிலேயே அது அல்ல.

முற்பகல் 10-40

சாதாரணமான toys - விளையாட்டு பொம்மையை ஒரு காலத்தில் 150 ரூபாய் கொடுத்தால்தான் நம்முடைய சென்னையிலே வாங்க முடியும். பர்மா பஜாரிலே வாங்க முடியும். ஆனால் இன்றைக்கு சைனா பொருட்கள் இங்கே வந்திருக்கிற காரணத்தினால் அந்த 150 ரூபாய் பொருள் இன்றைக்கு 50 ரூபாய்க்குக் கிடைக்கிறது. இன்னும் சொல்லப்போனால், காதிலே குடைகிற Buds இருக்கிறதே, அது ஜான்சன் கம்பெனியிலே 50 Buds-ஐக் கொண்ட ஒரு டப்பா அன்றைக்கு வாங்க வேண்டுமென்று சொன்னால் 45 ரூபாய்க்கு வாங்குகிற நிலை இருந்தது.

இன்றைக்கு 6 ரூபாய்க்கு, சைனாவினுடைய மார்க்கெட் இங்கே வந்துவிட்ட காரணத்தினால், 6 ரூபாய்க்கு 100 Buds வாங்க முடிகிறது. அதேபோன்று சின்ன cell இருக்கிறதே, pen torch cell என்று சொல்லுவார்கள். pen cell இருக்கிறதே அந்த ஒரு cell-னுடைய விலை 7 ரூபாய். இன்றைக்கு சைனா பொருட்கள் இங்கே வந்துவிட்ட காரணத்தினாலே அது 2 ருபாய்க்கு இன்றைக்குக் கிடைக்கிற நிலைமை தமிழ்நாட்டிலே இருக்கிறது.

இந்த பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. ஒன்று தொழிலதிபர்களைக் காப்பாற்ற முடிகிறதா, அல்லது தொழிலாளிகளைக் காப்பாற்ற முடிகிறதா; அல்லது பயனாளிகள் இருக்கிறார்களே அந்தப் பயனாளிகளை இன்றைக்குக் காப்பாற்ற முடியுமா என்று மூன்று கோணத்திலும் இதைப் பார்க்க வேண்டும். மூன்று பகுதிகளாகப் பார்க்க வேண்டும். பயனாளிகள்தான் இந்த நாட்டிலே மிக அதிகம். கோடிக்கணக்கான பயனாளிகள் இருக்கிறார்கள். தொழில்களுக்கு உறுதுணையாக இருக்கிற தொழிலாளர் பெருமக்கள் சில இலட்சம் பேர் இருக்கிறார்கள். தொழிலதிபர்கள் ஆயிரக்கணக்கிலே இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான பேரைக் காப்பாற்றுவதா அல்லது இலட்சக்கணக்கான பேருக்கு மறுவாழ்வு அளிப்பதா அல்லது கோடிக்கணக்கான பேருக்கு குறைந்த விலையில் பொருட்கள் கிடைப்பதற்கு இந்த அரசாங்கம் உதவி செய்வதா என்பதில் மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்துதான் முடிவு எடுக்க வேண்டுமேயொழிய, இதில் நேரத்துக்குத் தகுந்தமாதிரி இந்த அரசு மாறிப் பேசுவது என்பது அவ்வளவு சரியாக இருக்காது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, உரையை முடித்துக் கொள்ளுங்கள். நேரம் முடிந்து விட்டது. (குறுக்கீடு) அவர் முடித்தவுடன் கூப்பிடுகிறேன். வேலு, உட்காருங்கள். (குறுக்கீடு) அவர்கள் கேட்பதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) பழனிசாமி. முதலில் யசோதா கேட்கட்டும். (குறுக்கீடு) பழனிசாமி, நீங்கள் கேளுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது முன்னாள் அரசால், முன்னாள் முதலமைச்சரால், தமிழகம் தொழில் துறையிலே தன்னிறைவு பெற்றதாகவும், அதன் மூலமாக இந்திய நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் வருவாய் வருவதாகவும் கூறினார். இன்று திரும்ப அதே வார்த்தையைப் பேசுகிறார். சைனாவிலேயிருந்து பொருட்கள் இறக்குமதியாவதன் மூலமாக, இந்தியாவிலுள்ள பொருட்களின் விலை குறைந்து இருப்பதாகவும்



கூறுகிறார். அப்படியென்று சொன்னால், உள்ளூரிலே செய்யக்கூடிய பொருட்களின் விலையைவிடக் கூடுதலாக இருக்கிறதா? குறைவாக purchase பண்ணப்படுகிறதா? வெளிநாட்டிலிருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டால் உள்ளூரில் உற்பத்தியாகும் பொருட்கள் எப்படி விநியோகம் செய்யப்படும் என்பதைப்பற்றி அவர் விளக்குவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு பதில் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) கருணாகரன், நீங்கள் பதில் சொல்லுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராளமயமாக்கல் கொள்கை மற்றும் தனியார்மயமாக்கும் கொள்கை அறிவிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாகிறது. ஆகவே, இதற்கு முன்னர் இருந்த அ.தி.மு.க. அரசு 1993-ல் அதைச் சரி செய்வதற்காக, அதை ஏற்றுக்கொள்வதற்காகச் சொல்லப்பட்ட காரணங்கள் முழுவதையும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். உண்மையிலேயே அவர் எதிர்ப்பு தெரிவிப்பது உண்மையென்றால், இவர்கள் ஆட்சிக்கு வந்த கடந்த 5 ஆண்டுகளில் உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்கின்ற வகையிலே எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? இலட்சக்கணக்கான மக்கள் சிறு தொழிலிலும், குறுந்தொழிலிலும் உள்ளவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்; இப்போதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். தமிழ்நாடு தொழில் துறையிலே முன்னேறி இருக்கிறது என்று பறைசாற்றிக் கொண்டு அதை சுடுகாட்டுக்கு அனுப்பும் நடவடிக்கையைத்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எடுத்தது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மத்தியிலும் மாநிலத்திலும் இப்போதும் கூட்டணி ஆட்சியிலே இருந்துகொண்டு இதைத் தீர்ப்பதற்கான உறுதிபூர்வமான எந்த நடவடிக்கையையும் எடுக்காதவர்கள் இவ்வாறு பேசுவது சரியல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா அவர்களும் சொல்லட்டும்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, ஸ்ரீபெரும்புதூரில் ஹூண்டாய் கம்பெனி, Glass கம்பெனி, இருங்காட்டுக்கோட்டை முழுமையுமாக மிகப் பெரிய தொழிற்பூங்கா என்றெல்லாம்

சொன்னார்கள். கண்ணுக்கு அழகாக இருக்கிறது. அத்தனையும் அங்கே இருக்கின்ற மக்களுக்குப் பயன்படாத சூழ்நிலையில். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், நிலம் கையகப்படுத்தியதிலே மட்டும் ஒரு ஏக்கர் 30 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கி, அங்கே இருக்கின்ற அந்தக் கம்பெனிக்காரர்களுக்கு அதே ஒரு ஏக்கர் நிலத்தை 12 இலட்சம் ரூபாய்க்கு விற்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மக்கள் முழுக்க முழுக்க ஏமாற்றப்பட்டு இருப்பதோடு மட்டுமல்லாமல், அந்த நிலங்களைக் கையகப்படுத்திக்கொண்டு, நிலத்தைப் பெற்றுக் கொண்டவர்கள், நிலத்தைக் கொடுத்தவர்களுடைய குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருகின்றேன் என்று சொன்ன வாக்குறுதியையும் காப்பாற்ற முடியாமல், பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இன்றைக்கு அங்கே வேலையில்லாத் திண்டாட்டத்திலே வாடிக்கொண்டு இருக்கின்றார்கள். தோற்றுவிக்கப்பட்ட கம்பெனிகூட நாங்கள் புதிதுபுதிதாக கார்களை உருவாக்கிக்கொண்டு இருக்கின்றோம், விலை போகவில்லை என்று சொல்லக்கூடிய நிலைமைதான் இன்றைக்கு இருக்கிறது என்பது மன்றத்தினுடைய உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

*முற்பகல் 10-45*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலு அவர்கள், தொழில் துறையில் கடந்த ஐந்தாண்டு காலத்தில் ஏற்பட்ட தி.மு.க. ஆட்சியின் சாதனைகள் என்று பல தவறான தகவல்களை இதுகாறும் அவைக்கு ஏ்டுத்தியம்பி வந்தார்கள். உதாரணமாக, 1991-96 ஆம் ஆண்டுகள் வாக்கிலே, 6.92 சதவிகிதம், தொழில் துறையில் உயர்வு என்று திட்டக் குழுவால் ஏற்கப்பட்டிருந்த நிலைமை மாறி, ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியிலே அது 4.14 என அவர்களது ஆளுகைக்கு உட்பட்டிருக்கிற மைய அரசினுடைய திட்டக் குழுவே அறிவித்திருக்கிறது என்பதனை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, தனியார் துறையிலே. பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலும், புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலும் பல்வேறு தொழில் நுட்பக் கல்லூரிகள்



தொடங்கப்பட்டு, Menpower Technology in Computer Engineering and Information Technology ஆகியவற்றில் பல ஆயிரக்கணக்கில் தொழில்கள் உருவாக்கப்பட்டதன் காரணமாக, வேலையின்றி அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று பயிற்சியினைப் பெற்று அங்கிருந்து தமிழகத்திற்கு மீண்டும் வந்து, தனியார் துறையிலே அவரவர்கள் கையைக் கொண்டு அவரவர்கள் சம்பாதித்த பணத்தைக் கொண்டு, போட்ட முதலீடு காரணமாக, Information Technology has gone to the peak. இதற்கெல்லாம் வித்திட்டவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)—1982-லிருந்து—என்பதை அவைக்குத் தெரிவிப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

ஆட்சியினுடைய பொறுப்பு என்பது, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, proper cost management, proper material management, ஆகியவற்றைக் கடைப்பிடிக்காததால், அரசுத் துறையிலே, அரசுப் பொறுப்பிலே இருக்கின்ற தொழில்கள் எல்லாம், எந்த க்ஷீண நிலையை அடைந்தன தி.மு.க. ஆட்சியிலே என்பதை அவைக்கு ஏற்கெனவே வெள்ளை அறிக்கை மூலமாக நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் 1995-96-ல் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி, பதவியிலிருந்து இறங்குகிற நேரத்தில் வெறுமனே 6 கோடியே 79 இலட்சம் ரூபாய் மட்டுமே இழப்பு என்ற நிலை மாறி, நிர்வாகச் சீர்கேடுகள், முறைகேடுகள், தவறான பொருளாதார அணுகுமுறைகள் ஆகியவற்றின் காரணமாக, கடந்த ஐந்தாண்டு ஆட்சிக் காலத்திலே 372 கோடி ரூபாயாக அந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலே இழப்பு ஏற்பட்டது. இதனையும் மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதைப்போலவே, கூட்டுறவு நூற்பாலைகளிலே 352 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. அது மக்களுடைய வரிப் பணம். அதைச் சரிக்கட்டுவதற்குக்கூட எந்தவித நடவடிக்கையும் கடந்த ஐந்தாண்டு காலத்திலே எடுக்கப்படவில்லை.

அதுமட்டுமல்லாமல், ஒட்டுமொத்தமாக அனைத்துப் பொது நிறுவனங்களிலும் தொடர் நட்டம் ஏற்பட்டு, கண்காணிப்பு குறைவாக இருந்த காரணத்தால், முறைகேடுகள் அங்கு மிளிர்ந்திட்ட காரணத்தால் 1,292 கோடி ரூபாய் என்ற அளவிற்கு இழப்பு ஏற்படக்கூடிய ஒரு மோசமான பொருளாதார நிலை இருந்தது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், தொழில் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்த அரசு என்றிருந்தால், அரசின் பொறுப்பிலே இருக்கிற தொழில்களை ஏன் கவனிக்கவில்லை?

இலட்சக்கணக்கான உழைக்கும் வர்க்கம் பணியாற்றுகிற சிறு தொழில்கள் எல்லாம் மூடப்பட்ட நிலை. G.O. 75 என்று கொண்டுவந்து, வெளி மாநிலங்களிலேயிருந்து பொருட்களை வாங்கி, தமிழகத்திலே இருக்கிற சிறு தொழில்களுக்கெல்லாம் மூடுவிழா நடத்திய ஆட்சிதான் தி.மு.க. ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனையும், மைய அரசிலே அவர்கள் பங்கு வைத்துக்கொண்டு, இங்கே இருக்கிற தொழில்களுக்கு ஊக்கம் தராமல், இங்கே இருக்கிற பொருட்களை மிகையாக உற்பத்தி செய்கின்றபோது, அதற்குப் பாதுகாப்பைத் தராமல் W.T.O.-ல் கையெழுத்திட்டு, அதற்கு, மேலும் மேலும் உற்சாகத்தைத் தந்து வெளிநாட்டிலேயிருந்து பொருட்களை இறக்குமதி செய்து, இங்கே இருக்கிற சிறு தொழில்களை மைய அரசு, உங்களது ஆட்சியை நசுக்கியதே, அது தொழில்களை வாழவைத்த முறையா என்று கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம். (குறுக்கீடுகள்) திரு. சந்தானம், சொல்லிவிடட்டும்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர், தொழில் துறையிலே ஏதோ அவர்கள் ஆட்சியிலே இந்த மாநிலம் முதலிடத்தை வகித்தது என்று சொல்கிறார்கள். இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற மிகப்பெரிய பொதுத் துறை நிறுவனமாகிய சேலம் உருக்காலையை, பொதுத் துறை நிறுவனத்தைத் தனியாருக்கு விற்றதுதான் அவர்கள் தொழில் துறையிலே செய்த மாபெரும் புரட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அதை விற்கக்கூடாது என்று சொல்லி, இந்த அவையிலேயே ஒரு தீர்மானத்தைப் போட்டு இந்த அவையின் மூலமாக ஒட்டுமொத்தமாக நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தின்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காது அவர்கள் பங்கு கொண்டிருக்கிற மத்திய அரசு, அதை விற்றுக் கொண்டிருப்பதுதான் அவர்கள் தொழில் துறையிலே ஆற்றியிருக்கிற மாபெரும் புரட்சி என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே-(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லி முடித்து விடட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் சொல்லி முடித்தபின் நீங்கள் விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு விளக்கம் சொல்ல வாய்ப்புத் தருகிறேன்.



முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது சிறு மற்றும் குறுந்தொழில்கள் கடந்த காலத்திலே ஊக்குவிக்கப்பட்டன, வளர்க்கப்பட்டன என்று சொன்னார்கள். 'நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே' என்பதை நான் இந்த நேரத்திலே இந்த மாமன்றத்திலே உறுதியாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் ஒன்றும் நெற்றிக் கண்ணைத் திறக்கவில்லை.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** இந்தியத் திருநாடு விடுதலை அடைந்ததற்குப் பிறகு இந்தியாவிலேயே சிறு மற்றும் குறுந்தொழில்கள் தமிழகத்திலேதான் முதன்மையாகத் திகழ்ந்து வந்தன என்றிருந்த காலம் மாறி-கடந்த ஐந்தாண்டு காலமாக அந்த நிலை மாறி-இருக்கின்றது என்பதை நான் ஆதாரத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் சிறு மற்றும் குறுந்தொழில்கள் முந்தைய ஆட்சியாளர்களாலே அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டதுதான் உண்மை என்பதையும் அதற்கு ஒரு சில புள்ளிவிவரங்களையும் இந்த மாமன்றத்தில் வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களே, இந்தப் புள்ளிவிவரங்களை எல்லாம் பதிலுரையிலே சொல்லலாம். (குறுக்கீடு) புள்ளிவிவரங்களைப் பதிலுரையிலே சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டு காலமாக உங்கள் மீது இருந்த அன்பின் காரணமாகவும், பாசத்தின் காரணமாகவும், பக்தியின் காரணமாகவும் எங்களுடைய மாவட்டத்திற்கு 10 ஆண்டுகளுக்கும் மேலாக இயக்கத்தினுடைய பொதுக் கூட்டங்களுக்கு அழைத்துச் செல்கின்றபோது, தாங்களே அந்தப் பொதுக் கூட்டங்களிலே சற்று உரையாற்ற வேண்டுமென்று நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நீங்கள் அன்பு வேண்டுகோள் விடுத்திருந்தாலும்கூட, உங்கள் தமிழ்ப் பற்றின் காரணமாக உங்களது உரையை நானும் மற்றவர்களைப் போல கேட்கவேண்டுமென்ற ஆசை-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களே, விவகாரத்திற்கு வாருங்கள். சொல்ல வேண்டிய கருத்துக்கு வாருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** அதற்குத்தான் வருகிறேன். அப்போதெல்லாம் என்னைப் பேச அனுமதி அளித்த தாங்கள், தற்போது நேரத்தைச் சுருக்க வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்த அளவிலே கடந்த ஐந்தாண்டு காலத்திலே தமிழகத்திலே சிறு தொழிற்பேட்டைகள் ஒன்றுகூடத் தொடங்கப்படவில்லை என்பதையும் 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை தமிழகத்திலே டாக்டர் புரட்சித் தலைவி அவர்களாலே 19 தொழிற்பேட்டைகள் தொடங்கப்பட்டன என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோன்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே உருவாக்கப்பட்ட தொழிற்கூடங்கள் 681 என்பதையும் அந்த சிறு தொழில் அதிபர்களுக்கு மூலப்பொருட்கள் விநியோகித்த அளவிலே, 2,50,400 மெட்ரிக் டன் அதனுடைய மதிப்பீடு ஏறக்குறைய 451 கோடி. இப்படி சிறு மற்றும் குறுந்தொழில் அதிபர்களுடைய மூலப்பொருட்கள் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வந்தன. ஆனால் சிறு தொழில் அதிபர்களுக்கும் குறுந்தொழில் அதிபர்களுக்கும் ஆதரவாக அவர்களுக்கு அனுசரணையோடு செயல்பட்டுக்கொண்டிருந்தது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு என்று சொல்லிக்கொள்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறேன். அந்த 1996 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை விநியோகிக்கப்பட்ட மூலப்பொருள்களுடைய அளவு 91,867 மெட்ரிக் டன் என்பதையும் அதனுடைய மதிப்பீடு 197 கோடி என்பதையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். (கூச்சல்-குழப்பம்)

*(திரு. ப. ரங்கநாதன், திரு. மீ.அ. வைதியலிங்கம், திரு துரைமுருகன், திரு. இ. புகழேந்தி, திரு. மு.பெ. சாமிநாதன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பதில் சொல்லுகிறார். (குறுக்கீடுகள்) பதில் சொல்லுகிறார். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள். வேலு அவர்கள் பேசியதற்கு விளக்கம் சொல்லுகிறார். (குறுக்கீடு) உட்காருங்கள். சொல்லி முடிக்கட்டும்.



அவருடைய மானியக் கோரிக்கை. (குறுக்கீடு) அவருடைய மானியக் கோரிக்கை. அவர் சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லுகிறார். (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள்.(குறுக்கீடு) ஊரகத் தொழில் துறை அமைச்சர் சொல்லி முடியுங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆளும் கட்சித் தரப்பிலே இருக்கின்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். ஊரகத் தொழில் அமைச்சர் விளக்கம் சொல்லுகிறார். ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களே, தாங்கள் சொல்ல வேண்டிய விளக்கமான புள்ளிவிவரங்களை பதிலுரையிலே சொல்லலாம். வேலு அவர்கள் சொன்ன கருத்துக்கு ஏதாவது மாறுபட்ட கருத்துகள் இருக்குமானால் ஒன்றிரண்டு வாக்கியங்களிலே சொல்லி முடிக்கலாம். நீங்கள் சொல்லி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சில புள்ளிவிவரங்களை அந்தந்த கருத்திற்கு உரிய நேரத்திலே சொல்லாமல் விட்டுவிட்டால் அது தவறான ஒரு முன்னுதாரணமாகிவிடும் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன்...(குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், என்ன சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு செய்தி...

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** சுருக்கிவிடுகிறேன், சுருக்கிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களே, நீங்கள் சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லி முடித்துவிட்டீர்களா? (குறுக்கீடு) அமைச்சர் சொல்லி முடித்துவிடட்டும்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிறு மற்றும் குறுந்தொழில் அதிபர்களுக்கு விற்பனை வகையிலே, உதவிய வகையிலே 755 தொழில் அதிபர்களுக்கு உதவி இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அவருடைய மானியக் கோரிக்கை. அவர் சொல்ல வேண்டிய விளக்கங்களைச் சொல்கிறார். அதில் ஒன்றும் தவறு இல்லை.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** 1996 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரையில் 95 சிறு மற்றும் குறுந்தொழில் அதிபர்களுக்குத்தான் அவர்கள் உதவி இருக்கிறார்கள் என்பதை நான் ஆதாரத்தோடு இந்த மாமன்றத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** இன்னும் யாராவது இருக்கிறார்களா? நான் பிறகு பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. சொன்னதற்கு ஏதாவது விளக்கம் சொல்ல வேண்டியிருந்தால் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** திரு. பி.ஆர். சுந்தரம். நிற்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுந்தரம், சொல்லுங்கள். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். சுந்தரம் பேசுகிறார்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள் பேசும்போது ஹூண்டாய் தொழிற்சாலை ஏதோ இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வந்ததுபோலக் கூறினார். இந்த ஹூண்டாய் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது கடைசி ஆண்டு அதற்காக ஒப்பந்தம் எல்லாம் போடப்பட்டு, இடத்தைக் கையகப்படுத்தி ஒப்பந்தத்தை நிறைவேற்றினார்கள். வந்ததற்குப் பின்னால் இவர்கள் ஆரம்பித்தார்கள். ஆகவே, இதுதான் உண்மை. (குறுக்கீடு) முடித்து விடுகிறேன். Please. வேலு அவர்கள் பேசும்போது இந்தத் தொழில் கொள்கையில் புதிதாகத் தொழில் ஆரம்பிப்பது குறித்து எதுவுமே சொல்லவில்லை என்று கூறினார்கள். நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன், சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இவர்களுடைய அமைச்சர், மத்தியிலே தொழில் துறை அமைச்சராக இருந்தபோது, தமிழகத்திற்காக எத்தனை திட்டங்களைக் கொண்டு வந்தார்கள்? அந்த அரசு, அவர்கள் டெல்லியைக் கேட்டு எத்தனை திட்டங்களை, பெரிய தொழில்களை வாங்கியது என்று இந்த நேரத்திலே



அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். மேலும் இந்த மாமன்றத்திலே அருமை உறுப்பினர் சந்தானம் அவர்கள் சொல்லியபோது, சேலம் உருக்காலையை தனியாருக்கு தாரை வார்ப்பதை எதிர்த்து ஒரு தீர்மானம் போட்டதற்குப் பிறகும்கூட, அதை எதிர்த்து ஒரு கூக்குரல்கூட, அங்கே, சென்ற பாராளுமன்றத்திலே அவர்கள் வைக்கவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, யார் யார் என்ன பேசினார்கள் என்பதே எனக்கு ஞாபகம் இல்லை.

**திரு. கா.பூ. முனுசாமி:** தலைவரவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கேள்வி நேரம் இல்லை. வேலு அவர்கள் பேசியதற்கு விளக்கத்தை ஊரகத் தொழில் துறை அமைச்சர் சொல்லிவிட்டார். அவை முன்னவர் அவர்கள் அதுபற்றிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். இப்போது அவர்களுடைய தரப்பிலே வேலு அவர்கள் பேசிய அந்தக் கருத்துகளுக்கு ஆதரவாக துரைமுருகன் அவர்கள் சொல்ல விரும்புகிறார். அந்தக் கருத்தை துரைமுருகன் அவர்கள் சொல்லலாம். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். முனுசாமி, உட்காருங்கள். திரு. துரைமுருகன் சொல்லி முடிக்கட்டும்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவரவர்களே, இங்கு பலபேர் பல கருத்துகளைச் சொன்னார்கள். (குறுக்கீடு) சரிதான், right, ஆமாம், ஆமாம். No. No. I won't take up arms.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமர்ந்துகொண்டே யாரும் பேசக்கூடாது. அமர்ந்துகொண்டே பேசுவது அவை மரபுக்கு மாறுபட்டது.

**திரு. துரைமுருகன்:** இதிலே பதில் சொல்லக்கூடிய அளவுக்கு நம்முடைய நிதி அமைச்சர்தான் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். திருமதி யசோதா அவர்கள் சொன்னார்கள், நிலத்தை எல்லாம் எடுத்துக்கொண்டார்கள், சரியாகப் பணம் கொடுக்கவில்லை, எங்கள் நிலத்திற்கு பணம் கொடுக்கவில்லை என்று. இப்போது யார் எடுத்தார்கள் என்று சரியாகத் தெரிந்ததாமா? சுந்தரம்தான், அவர்களுடைய ஆட்சியில்தான் எடுத்தார்கள். ஆகவே, அவர்களுக்குப் பணம் கொடுக்கவில்லை என்கிறார்கள். (குறுக்கீடு) It is entirely different. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும், துரைமுருகன் சொல்ல வேண்டியதை சொல்லி முடிக்கட்டும்.

**திரு. துரைமுருகன்:** நான் இவ்வளவு நேரம் பேசாமல் இருந்தேன். சரி பேசுங்கள். அமைச்சர் பேசுகிறார், அமைச்சர் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** பேரவைத் தலைவரவர்களே, நிலம்தான் கையகப்படுத்தப்பட்டதேயொழிய, பணம் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அந்த நிலத்தின் உடைமையாளர்களுக்கு என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் யசோதா அம்மா அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிலம் கையகப்படுத்தப்பட்டது, ஆனால் நில உரிமையாளர்களுக்கு தி.மு.க. ஆட்சியில்தான் மோசடி செய்துவிட்டார்கள் என்று சொன்னார்களேதவிர, அதி.மு.க. ஆட்சி என்று சொல்லவில்லை என்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் பேச்சை மாண்புமிகு அமைச்சர் கூர்ந்து கவனித்திருந்தால் இப்படிச் சொல்லியிருக்க மாட்டார். ஏனென்று கேட்டால் நிலத்தைக் கையகப் படுத்தி தொழிற்சாலை ஆரம்பித்து, திறக்கிற காலத்தில் நாங்கள் வந்தோம் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) நீங்கள் வேண்டுமென்றால் decide பண்ணிக்கொள்ளுங்கள். Word by word அப்புறம் decide பண்ணிக் கொள்ளுங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். World Trade Organisation-ஆலே எல்லாமே கெட்டுப் போய்விட்டது என்று. இது ஏதோ, தி.மு.க. அமைச்சர்கள் இருக்கிற காலத்திலேயோ, B.J.P. இருக்கிற காலத்திலேயோ அல்ல. இது நரசிம்மராவ் இருந்த காலத்திலேயே, மன்மோகன் சிங் இருந்த காலத்திலேயே கொண்டு வந்த ஒன்று. மூன்றாவது, யாரோ நம்முடைய நண்பர்கள் சொன்னார்கள், யாரோ கொண்டுபோய், சேலம் உருக்காலையை விற்றுவிட்டார்கள் என்று. நிலைமை என்னவென்று கேட்டால், அரசுக்குச் சொந்தமான, அரசு சிமெண்ட் தொழிற்சாலையை விற்பதற்கு இந்த ஆட்சி முற்பட்ட பிறகு, அதை நீதிமன்றத்திற்குப் போய் தடையாணையை வாங்கியது திராவிட முன்னேற்றக் கழகமே தவிர வேறல்ல.



அடுத்தது ஒன்றைச் சொன்னார்கள். நம்முடைய கருணாகரன் என்று நினைக்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்கள் சொல்லும்போது, வெளிநாடுகளிலிருந்து முதலாளிகளை எல்லாம் அழைத்து, வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டு வந்து, இங்கே தொழிற்சாலைகளை எல்லாம் கொண்டு வந்தார்கள் என்று சொன்னார்கள் என்று நினைக்கிறேன். இப்போது பார்த்தீர்கள் என்றால், கல்கத்தாவில் — இப்போது கொல்கத்தா — அங்கேயும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, வெளிநாட்டு முதலாளிகளை, வாருங்கள், வாருங்கள், இங்கே பணத்தைப் போடுங்கள், invest பண்ணுங்கள் என்று நம்முடைய மதிப்பிற்குரிய ஜோதிபாசு அவர்கள் இருந்த காலத்திலேயே அழைத்து, வெளிநாட்டு முதலாளிகள் மற்ற மாநிலங்களுக்கு வருவதைவிட, கல்கத்தாவிற்குப் போய் இறங்கி, அங்கே பணத்தைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, உலகம் இன்றைக்குச் சுருங்கி வந்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை இதைப்பற்றிப் பேசச் சொன்னாலும் ஒரு மணி நேரம் பேசுவார். W.T.O...

*முற்பகல் 11—00*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், துரைமுருகன் அவர்கள் பேச்சை முடிக்கட்டும், உங்களுக்கு நான் பேச வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. துரைமுருகன்:** எனவே பேசவேண்டும் என்பதற்காக வேண்டுமானால் பேசலாமேதவிர, அது உண்மையல்ல.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன் சொல்லட்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்கள் தவறானத் தகவலை இந்த அவைக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மேற்கு வங்காள அரசு சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டு-அந்த மாநில அரசினுடைய கட்டுப்பாடுகளுக்குட்பட்டுத்தான்-ஏற்பாடு செய்திருக்கிறதேதவிர, unconditional எனச் சொல்லவில்லை. ஆனால் இங்கே கேள்வி என்னவென்றால் Salem Steel Plant விஷயத்திலே நீங்கள் என்ன

செய்தீர்கள்? (குறுக்கீடு) அரிசி எவ்வளவு என்று கேட்கும்போது, பயறு, நாழி என்று சொல்லக்கூடிய முறையில் துரைமுருகன் அவர்கள் பேசக்கூடாது. அவர்கள் Salem Steel Plant-ஐப் பொறுத்தவரையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் சொல்லி முடித்துவிட்டீர்கள். அவர் விளக்கம் சொல்கிறார். திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் அவைக்கு W.T.O.-வைப் பற்றிக் கூறியிருக்கிற கருத்து முற்றிலும் சரியானதல்ல. திரு. நரசிம்மராவ் அவர்கள் காலத்தில் G.A.T.T., அதையொட்டி W.T.O. என்று வருகிறபோது, இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற சிறு தொழில்களுக்கும், குறுந்தொழில்களுக்கும் பாதுகாப்பைத் தந்து, அந்தப் பாதுகாப்புக்கு உட்பட்ட தாராளமயக் கொள்கையைத்தான் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் தற்போதைய மைய அரசு, பாரதிய ஜனதா-தி.மு.க. மைய அரசைப் பொறுத்தவரைக்கும், இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற உழவுத் தொழிலையொட்டிய தொழிற்சாலைகளுக்கெல்லாம் மூடுவிழா நடத்தி-சிறு தொழில்களுக்கெல்லாம் பாதுகாப்பைத் தந்து, பெருந்தொழிலதிபர்களுக்கு ஆதரவைத் தந்து, அதற்கேற்றவாறு தேயிலையில் அளவு கடந்த உற்பத்தி, இந்தியத் துணைக் கண்டத்திலே இருந்தபோதிலும்கூட, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி என்ற கொள்கையை எல்லாம் கொண்டுவந்து, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலே இருக்கிற ஏழைகளுக்கு வாழ்வளிக்கக்கூடிய, இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய Rural Industries, Small Scale Industries போன்றவற்றை நசுக்குகின்ற பணியை W.T.O.-ல் கொண்டு வந்தது தற்போதைய மைய அரசு என்பதனை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அனிதா ராதாகிருஷ்ணன். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், விளக்கம் முடிந்தது. இது அனுமார் வால் மாதிரி, திரௌபதி சேலைமாதிரி நீண்டுகொண்டே போனால் முடியாது. ஒரு கட்டத்தோடு முடிய வேண்டும். திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**டாக்டர் க. பொன்முடி:** சிறுதொழில் G.O. பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு பொன்முடி, முடிந்துவிட்டது. உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமதி யசோதா அவர்கள் சில பிரச்சினைகளைச் சொன்னார்கள். திருப்பெரும்புதூர் பகுதியில் தொழிற்சாலைகள் தொடங்குவதற்காக நிலம் ஆக்கிரமிப்புச் செய்த நேரத்திலே, ஏழை விவசாயிகளுடைய நிலத்தை 30 ஆயிரம் ரூபாய்க்கு அவர்களிடமிருந்து பிடுங்கி, தனியார் நிறுவனத்திற்கு 12 இலட்சம் ரூபாய் வரைக்கும் கொடுத்ததாகச் சொன்னார்கள். நான் ஆட்சியைக் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. கடந்தகால ஆட்சியிலே தொடங்கி இன்றும் தொடர்ந்து கொண்டு இருக்கக்கூடிய ஒரு பிரச்சினையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஜெயங்கொண்டம் நிலக்கரித் தொழிலுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்ற பெயரிலே இப்போது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நீங்கள் பேசக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. நீங்களும் இந்த மானியத்திலே பேசக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. மானியக் கோரிக்கையிலே பேசப் போகிறீர்கள். அப்போது பேசுங்கள். திரு. அனிதா ராதாகிருஷ்ணன். (குறுக்கீடு) திரு. மணி உட்காருங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** நிதி அமைச்சர் அவர்களிடம் சிறுதொழில் G.O. பற்றிக் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், விட்டுவிடுங்கள்.

*(தி.மு.க. உறுப்பினர்கள் திரு. எ.வ. வேலு, திரு. மீ.அ. வைத்தியலிங்கம், திரு. ப. ரங்கநாதன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய 6 கோடி மக்களின் விடிவெள்ளியாக, நம்பிக்கை நட்சத்திரமாக, எங்களுடைய அன்னையாக இருக்கிற மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆசியாலும், அம்மா அவர்களுடைய ஏகோபித்த மக்கள் செல்வாக்காலும், திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியிலே வெற்றி பெற்று என்னுடைய கன்னிப் பேச்சை இந்த மாமன்றத்திலே தொடங்குகின்றேன்.

[திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்] [2001 ஆகஸ்ட் 31

மேலும் எனது வெற்றிக்குப் பாடுபட்ட மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும் மற்றும் தொண்டர்களுக்கும் என்னுடைய வெற்றிக்காக திருச்செந்தூர் தொகுதியிலே வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை இந்த அவையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

என்னுடைய சட்டமன்றத் தொகுதி திருச்செந்தூர் தொகுதி. திருச்செந்தூரிலே அசுரனை வீழ்த்தியும், அழித்தும் முருகப் பெருமான் வெற்றிக் கொடியை எப்படி நாட்டி அமர்ந்திருக்கின்றாரோ, அதுபோல அரசியலிலே வன்முறைக்குச் சொந்தக்காரர்களாக இருக்கின்ற அசுரர்களை அழித்து, மக்கள் இதயம் என்ற சிம்மாசனத்திலே வீற்றிருக்கும் எங்கள் இதயதெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதம் தொட்டு இந்த மாமன்றத்திலே என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். எந்தவொரு நாட்டிலும் சிறு தொழில் வளர்ச்சியடைந்தால்தான் ஒரு...

## 5. விதி 110-ன்கீழ் அறிக்கை

### சென்னைப் பெருநகர்ப் பகுதிக்குள் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்கள் மற்றும் மனைகள் முறைப்படுத்துதல் குறித்து மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அனிதா ராதாகிருஷ்ணன், கொஞ்சம் பொறுங்கள். பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு வீட்டு வசதி அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர். திரு. அனிதா ராதாகிருஷ்ணன், அமைச்சர் அறிக்கையைப் படித்தவுடன் நீங்கள் பேசுங்கள்.

***மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே, சென்னைப் பெருநகர் பகுதிக்குள் 31-7-2001 வரை விதி மீறி அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்கள் மற்றும் அனுமதியற்ற மனைகளை முறைப்படுத்த ஏதுவாக,



2001 ஆகஸ்ட் 31] [திரு. ஏ.கே. செல்வராஜ்]

முறைப்படுத்தும் திட்டத்தின்கீழ் விண்ணப்பங்கள் பெறும் காலத்தை 30-11-2001 வரை நீட்டித்து தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டப் பிரிவு 113-ஏ-யைத் திருத்தி மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசால் 9-8-2001 அன்று வெளியிடப்பட்டது. 31-7-2001 வரை விதி மீறி அல்லது அனுமதியின்றிக் கட்டப்பட்ட கட்டடங்கள் மற்றும் அனுமதியற்ற மனைகள் ஆகியவை இத்திட்டத்தின்கீழ் முறைப்படுத்தத் தகுதியுடையவை. இதற்கான விண்ணப்பங்கள் 30-11-2001 வரை ஏற்கப்படும். இதற்காக முறைப்படுத்தும் திட்ட விதிகளுக்குரிய திருத்தங்கள் அரசால் தனியே வெளியிடப்படும். கட்டுமானம் தொடர்பாக 2000 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களில் 10 விழுக்காடு கட்டட விதி மீறல்களுக்கு மட்டும் குறைக்கப்படும். இந்த விதித் திருத்தங்கள் மாமன்றத்தில் வைக்கப்படும். பிறகு இதுபற்றிய விவரங்கள் பத்திரிகையிலே விளம்பரப்படுத்தப்படும். பொதுமக்கள் இந்த இறுதி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 26 – கதர் கிராமத் தொழில்கள்**

**(ஆ) கோரிக்கை எண் 47 – ஊரகத் தொழில்கள்**

**(இ) கோரிக்கை எண் 59 – ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு**

**(ஈ) கோரிக்கை எண் 24 – தொழில்கள்**

**(உ) கோரிக்கை எண் 53 – தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு**

–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி. திரு அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** எந்தவொரு நாட்டிலும் சிறுதொழில் வளர்ச்சியடைந்தால்தான் பொருளாதாரம், வேலைவாய்ப்பு, தனிநபர் வருமானம், வாங்கும் திறன் ஆகியவை அதிகரிக்கும். அந்த...

## 6. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் உரையாற்றுகையில் கடைப்பிடிக்கவேண்டிய மரபு

**திரு. ம. அப்துல் லத்தீப்:** ஒரு நிமிடம். தலைவர் அவர்களே, இந்த அவையில் இடம் பெற்றிருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர் புதிதாக வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அவையினுடைய மரபு கொஞ்ச காலத்தில்தான் தெரியும். எதற்கும் பயிற்சியும் நேரமும் தேவை. தங்களைத் தவிர வேறு யாரையும் விளித்துப் பேசக் கூடாது. அதைத்தான் தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். பேரவைத் தலைவரைத்தவிர வேறு யாரையும் விளித்துப் பேசக் கூடாது. இப்போது அண்மைக் காலத்தில் தங்களைத் தவிர்த்து வேறு சிலரை, வேறு யாராக இருந்தாலும்-யாரையும் குறிப்பிட்டுப் பேசலாம், பேச்சில் அவர்களுடைய பெயர்கள் இடம் பெறலாம், அது தவறில்லை. ஆனால், தங்களைத்தவிர-வேறு யாரையும் விளித்துப் பேசக் கூடாது. அதிலே பல சிக்கல்கள் உருவாகும். எனவே, தங்களைத்தான் விளித்துப் பேசவேண்டும் என்பது அவையினுடைய மரபு. அது காலங்காலமாகக் கட்டிக்காக்கப்பட்டு வருகிறது. இடைமறித்து நாங்கள் பேச முடியாது. நீங்கள்தான் அதைத் திருத்துவதற்கு உரிமை படைத்தவர்கள். எனவே, அவை உறுப்பினர்களே என்றெல்லாம் எங்களையும் விளித்துப் பேசக்கூடாது. எனவே, அதைத் தாங்கள்தான் திருத்தமுடியும். அவை உறுப்பினர்கள் பலர் புதிதாக வந்திருக்கிறார்கள். எனவே, அதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய பொறுப்பு உங்களுடையது.

இரண்டாவது, வாதப் பிரதிவாதங்கள் சூடாகவும் நடக்கலாம்; சுவையாகவும் நடக்கலாம். ஆனால், ஏகாரத்தில் ஒருவரை ஒருவர் வார்த்தைகளால் பரிமாறிக்கொள்வது என்பது தடுக்கப்பட வேண்டும். வாடா, போடா, அது யார் சொன்னதாக இருந்தாலும், நான் சொன்னதாக இருந்தாலும், அதற்கு ஏதாவது ஒரு வரையறை வேண்டும். தயவுசெய்து அந்த வார்த்தை இனிமேல் அவையில்-தங்களுடைய தலைமையில் நடக்கும் இந்த அவையில், அந்த வார்த்தை-பயன்படுத்தப்படுவதை எக்காலத்திலும் அனுமதிக்க முடியாது என்பதைத் தாங்கள் மிகத்



தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். அதையும் மீறி வாடா, போடா, என்று-நான் சொன்னதையும் நீங்கள் சபைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிட வேண்டும். யாராவது பயன்படுத்தினால் தயவுசெய்து அதை அனுமதிக்க முடியாது, அதையும் மீறிப் பயன்படுத்தினால் நடவடிக்கை எடுப்போம்-என்பதைத் தாங்கள் தயவுசெய்து தெளிவாகச் சொல்ல வேண்டும். அவையினுடைய கண்ணியத்தைக் காக்க வேண்டும். புதிய உறுப்பினர்களுக்கு அவையினுடைய மரபுகளை நாம் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் இதைச் சொல்கிறேனேதவிர, வேறு அல்ல. நான் யாரையும் குறிப்பிட்டும் சொல்லவில்லை; குற்றமும் சொல்லவில்லை. தயவுசெய்து அவை மரபைக் காக்க தாங்கள் உரிய முறையில் உறுப்பினர்களுக்கு அறிவுரை கூற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11—10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லத்தீப் அவர்கள் சொல்லியிருக்கிற கருத்தை நான் சொன்ன கருத்தாகவே அவையினர் எடுத்துக் கொள்ளலாம். அவைக்கு வந்திருக்கக்கூடிய புதிய உறுப்பினர்களுக்கு அந்த மரபுகள் தெரியாமல் இருக்கலாம். ஆகவே, அந்த மரபுகளை எல்லாம் கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வழிகாட்டிகளாக நம்முடைய துரைமுருகனைப் போன்றவர்கள், பொன்முடியைப் போன்றவர்கள், பரிதி இளம்வழுதியைப் போன்றவர்கள்-அவர்கள் எல்லாம் மூத்த உறுப்பினர்கள். ஆகவே, அந்த உறுப்பினர்கள் எல்லாம்-மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** இன்றைக்கு ஒரு நல்ல முயற்சியிலே....

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு மாதிரியான instruction.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிச்சயமாக இல்லை. ஒரு நட்பு ரீதியாகத்தான் நான் சொல்கிறேனேதவிர, தவறாகச் சொல்லவில்லை. புதிய உறுப்பினர்களுக்கு, துரைமுருகனைப் போன்ற, பரிதி இளம்வழுதியைப் போன்ற, பொன்முடியைப் போன்ற, மூத்த உறுப்பினர்கள், அமைச்சர் பொறுப்பிலே இருந்த பெருமக்கள் வழிகாட்டிகளாக விளங்க வேண்டும்

என்றுதான் நான் சொல்கிறேனே தவிர, இதை நான் ஒன்றும் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நீங்கள் அப்படி நடந்து கொள்கிறீர்கள் என்று நான் சொல்லவில்லை.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இப்படிச் சொல்லியிருக்கலாம். புதிதாக வந்த மாண்புமிகு உறுப்பினர்கள், துரைமுருகனைப் போல், பொன்முடியைப் போல் நடந்துகொள்ள வேண்டும் என்று நீங்கள் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப்போல், நடந்துகொள்ள வேண்டிய அளவிற்கு நீங்களும் நடந்துகொள்ள வேண்டும். (சிரிப்பு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதோடு விட்டுவிடுங்கள்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும் — தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 26 – கதர் கிராமத் தொழில்கள்**

**(ஆ) கோரிக்கை எண் 47 – ஊரகத் தொழில்கள்**

**(இ) கோரிக்கை எண் 59 – ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு**

**(ஈ) கோரிக்கை எண் 24 – தொழில்கள்**

**(உ) கோரிக்கை எண் 53 – தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு**

—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி. திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)





**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நல்ல முயற்சியிலே, தாயுள்ளம் கொண்ட நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மானியக் கோரிக்கையிலே பல்வேறு அம்சங்களோடு, பல திட்டங்களை அறிவித்துள்ளார்கள். அதிலே குறிப்பாக திருவள்ளூர் மாவட்டம், திருமுல்லைவாயிலில் 290 ஏக்கர் நிலப் பரப்பிலே சிறுதொழில் நிறுவனங்களுக்கான தொழிற்பேட்டை ஒன்றை நிறுவுகிற அந்த நிலையை அறிவித்திருக்கிறார்கள். மேலும் காஞ்சிபுரம் மாவட்டம், பள்ளிக்கரணை கிராமத்திலே மகளிருக்கென சுமார் 27 ஏக்கர் நிலப்பரப்பிலே தொழிற்பேட்டை அமைத்தல் என்பதோடு மகளிருக்கென காஞ்சிபுரம், வேலூர், சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களிலே தொழிற்பேட்டை அமைக்கிற வழியையும் இன்றைக்கு இதயதெய்வம் அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

அதுபோல வேலைவாய்ப்பு இல்லாத மிகவும் வறட்சியான பகுதியான என்னுடைய திருச்செந்தூர் தொகுதியிலே மகளிருக்கென ஒரு தொழிற்பேட்டையை அமைத்துத் தரவேண்டும் என்று அம்மா அவர்களை வேண்டுகிறேன். அதுபோல பின்தங்கிய நிலையிலே வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்கள், பட்டதாரிகள் ஆகியோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையிலே, என்னுடைய தொகுதியிலே SIDCO மூலம் தொழிற்பேட்டை அமைத்து என்னுடைய தொகுதி மக்களுடைய வாழ்விலே ஒளி விளக்கேற்றிட அம்மா அவர்களை வேண்டுகிறேன்.

இன்றைக்கு கதர் கிராமத் தொழில் துறையிலே, குறிப்பாக, சொல்லப்போனால், பனைத் தொழில் மிகவும் சிறப்பானதாகவும், முக்கியமானதாகவும் கருதப்படுகிறது. அதுபோல பனைத் தொழில் மூலம் கிடைக்கின்ற ஓலைகள் மூலமாகவும், கிராமங்களில் உள்ள பெண்களுக்கு சுய வேலைவாய்ப்பு என்ற வகையிலே இன்றைக்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன. அந்த வாய்ப்புக் கிடைக்கிற வகையிலே அழகான, அலங்காரப் பொருட்கள், பெட்டிகள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை எல்லாம் தயார் செய்ய முடிகிறது. அதுமட்டுமல்ல, அந்த அலங்காரப் பொருட்கள் எல்லாம் பெல்ஜியம், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு இன்றைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

அதைப்போல பனையிலிருந்து கிடைக்கின்ற தும்புகளை எடுத்து, இப்போது என்னுடைய மாவட்டமான தூத்துக்குடி மாவட்டத்தின் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதுபோல பனையிலிருந்து கிடைக்கின்ற பதநீரை வைத்து மருத்துவ குணம் கொண்ட

[திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்] [2001 ஆகஸ்ட் 31

கற்கண்டு தயார் செய்யப்பட்டு இந்தியாவிலே பல மாநிலங்களுக்கும் மற்றும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இப்போது பனையிலிருந்து கிடைக்கின்ற பதநீரைக் காய்ச்சி, கருப்பட்டி தயார் செய்து இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்கு விற்பனை செய்யப்படுகிற அந்த நிலையை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதியைச் சேர்ந்த உடன்குடியிலே இப்போது தயார் செய்யப்படுகிற கருப்பட்டி என்றால், உடன்குடி கருப்பட்டி என்பது ஒரு சிறப்பான கருப்பட்டி என்று பல வகையான வியாபாரிகள் அதை உபயோகப்படுத்துகிறார்கள் என்று சொல்கின்ற நிலையை இன்றைக்குக் காண்கின்றேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கிற மகளிர் குழுக்கள் எல்லாம் இப்போது சுய வேலைவாய்ப்பு என்ற முறையிலே அந்தப் பதநீரைக் காய்ச்சி, சுத்தமான கற்கண்டை அருமையாக pack செய்து, தயாரித்து, Packet-களாக இந்தியா முழுவதும் இப்போது அனுப்புகிற ஒரு நிலையை எடுத்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11—15*

அதேபோல எனது தொகுதியில் உள்ள குலசேகரப்பட்டினம் பகுதியிலே ஏற்கெனவே ஆங்கிலேயர் காலத்திலே பதநீரை வைத்து சீனி தயாரிக்கின்ற ஒரு factory இருந்ததாகச் சொல்கின்றார்கள். சீனி தயாரிக்கின்ற ஆலை இருந்தது, செயல்பட்டதாகவும் கூறப்படுகிறது. அதே பகுதியிலே வேலை வாய்ப்பு கிடைக்கின்ற வகையிலே பதநீரிலிருந்து சீனி தயாரிக்கின்ற ஆலையை அரசே கொண்டு வர வேண்டுமென புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

இன்றைக்கு கிராமத் தொழிலை வளர்க்கின்ற பனையேறுகின்ற தொழிலாளர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளார்கள். அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற வகையில் பனையேறுகின்ற தொழிலாளர்களுக்கு அரசே அடையாள அட்டை வழங்க வேண்டுமென அம்மா அவர்களை வேண்டுகிறேன்.

அதேபோல பனையேறுகின்ற தொழிலாளர்கள் பனை மரத்திலிருந்து தவறி விழுந்து உடல் ஊனமுற்றால் அந்தக் குடும்பங்களில் கடுமையான கஷ்ட நிலை ஏற்படுகிறது. அந்தக் கஷ்டங்களையெல்லாம் போக்குகின்ற வகையில் அவர்களுக்கு நிவாரணமாக, ஊனமுற்ற அந்தத் தொழிலாளியினுடைய குடும்பத்தைக் காக்கின்ற வகையில் ஒரு இலட்சம் ரூபாயை அரசே வழங்க வேண்டுமென அம்மா அவர்களை வேண்டுகிறேன்.



2001 ஆகஸ்ட் 31] [திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்]

அதேபோல அத்தகைய விபத்திலே உயிரிழப்பு ஏற்படுமானால் பனையேறுகின்ற தொழிலாளர்கள் குடும்பத்தைக் காக்கின்ற வகையிலே குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாயை தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் கனிவுடன் வழங்க அன்புடன் வேண்டுகிறேன்.

பனையேறுகின்ற அந்தச் சமுதாயத்தின் நிலையெல்லாம்-அந்தத் தொழிலை ஊக்குவிக்கின்ற அந்தப் பனைத் தொழிலாளர்களுடைய நிலையெல்லாம்-மோசமாக இருக்கிறது. அவர்கள் இன்றைக்குப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இருக்கிறார்கள். அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்ப்போமேயானால், அவர்களுடைய நிலைமையெல்லாம் வளர்வதற்கான வாய்ப்பு உள்ளது. ஆகவே தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் அந்தச் சமுதாய மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியில் உள்ள சில கோரிக்கைகளை இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவிக்க விரும்புகிறேன். திருச்செந்தூரிலே தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கிறார்கள். ஆனால் திருச்செந்தூர் இன்னும் விரிவடைந்த ஊராக, அங்கு வருகின்ற பக்தர்களை, சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையில் இல்லை. ஆகவே திருச்செந்தூரை சுற்றுலாத் தலமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிப்பார்களேயானால், அங்கே பல்வேறு திட்டங்கள் வந்து அந்த ஊர் விரிவடைவதற்கு, வருகின்ற பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் பெருமையடைவதற்கு வழிவகை காண முடியும்.

அதுபோல தூத்துக்குடியிலே இருக்கின்ற தலைமை மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக உயர்த்தப்பட்டுள்ளது. அந்தத் தலைமை மருத்துவமனையை, தூத்துக்குடியினுடைய மத்தியப் பகுதியாக இருக்கின்ற திருச்செந்தூரில் எனது தொகுதியிலே அமைத்துத் தர வேண்டுமென்று அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

அதுபோல திருச்செந்தூர் தொகுதி ஒரு Revenue Sub-Division; பலதரப்பட்ட sub-divisions நிறைந்திருக்கின்ற ஒரு பகுதி. அங்கேயிருந்து பெரிய வழக்குகள், மண முறிவு வழக்குகள் போன்ற வழக்குகளைக் கொண்டு போக வேண்டுமென்றால், தூத்துக்குடி, திருநெல்வேலி போன்ற ஊர்களுக்கு, 60 கிலோ மீட்டர் தூரம் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, வழக்கறிஞர்கள் மற்றும் அந்த ஊரில் உள்ள பொது மக்களுடைய நீண்ட நெடுநாள் கோரிக்கையான சார்பு நீதிமன்றத்தை எங்களுடைய

[திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்][2001 ஆகஸ்ட் 31

திருச்செந்தூரிலே அமைத்துத் தர வேண்டுமென்று பணிவுடன் வேண்டுகிறேன்.

அதேபோல புரட்சித் தலைவி அம்மாவினுடைய காலத்திலே ஏற்படுததப்பட்ட சடையனேரி கால்வாய்த் திட்டம். நல்லவர்கள் காலத்தில் தொடங்கப்பட்ட சடையனேரி கால்வாய்த் திட்டம், இன்றைக்கு நல்லவர்கள் கையாலே முடிக்கப்பட வேண்டுமென்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த சடையனேரி கால்வாய்த் திட்டத்திலே, வரவிருக்கின்ற காலத்திலே மழை நீர், உபரி நீரை அதில் அளிப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். வருகின்ற காலத்திலே உபரி நீரை அந்தச் சடையனேரி கால்வாய்த் திட்டத்திலே நீங்கள் அளிக்க வேண்டும்; அவ்வாறு அளித்து, உடன்குடி மக்கள், சாத்தான்குளம் தொகுதி மக்கள் எல்லாம் மனதார வாழ்த்துகின்ற பண்பை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல உடன்குடி-சாத்தான்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், புரட்சித் தலைவி அம்மாவினுடைய காலத்திலே தொடங்கப்பட்டது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தாலும், 68 கிராமங்களில் இன்னும் முடிவடையாமல் இருக்கின்றது. அதிலே ஐந்து பஞ்சாயத்துக்கள் விடப்பட்டிருக்கின்றன உடன்குடி ஒன்றியத்திலே. அந்த ஐந்து பஞ்சாயத்துக்களையும் அதில் சேர்த்து, அந்த நீரை வழங்க வேண்டுமென்று அன்புடன் வேண்டுகிறேன்.

அதுபோல எனது தொகுதிக்குட்பட்ட நல்லூர்-காயல்பட்டினம் சாலை, ஆறுமுகநேரி-வீரபாண்டியபட்டினம் சாலைகள் எல்லாம் ஏற்கெனவே பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகின்ற சாலைகளாகும். அந்தச் சாலைகள் அகலப்படுத்தப்படாமல் ஒரு வழிப்பாதையாக இருக்கின்றன. அதிலே அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே வருகின்ற பக்தர்களை, சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வண்ணம், அந்த இரண்டு சாலைகளையும் அகலப்படுத்தும் பணியைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மீனவர்கள் நிறைந்த பகுதியான புன்னக்காயல் பகுதியிலே உள்ள முகத்துவாரங்கள் எல்லாம் மணலால் சூழப்பட்டுள்ளதால் மீனவர்கள் எல்லாம் படகிலே உள்ளே செல்ல வேண்டுமென்றால் கடுமையான சோதனைகளைச் சந்திக்கின்ற நிலை உள்ளது. அந்த நிலையை எல்லாம் மாற்றுவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 10,000 மீனவர்கள்



2001 ஆகஸ்ட் 31] [திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்]

வசிக்கின்ற புன்னக்காயல் பகுதியிலே இருக்கிற முகத்துவாரத்தை ஆழப்படுத்துகின்ற பணியைச் செயய வேண்டுமென்று கேட்டு, இதுவரையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்களுடைய தலைவி, புரட்சித் தலைவி அவர்களை வணங்குகிறேன். இன்றைக்குள்ள சோதனைகளை எல்லாம் தாண்டி, இனி வரவிருக்கின்ற சோதனைகளையும் தாண்டி, வெற்றிக் கொடி நாட்டவிருக்கிற புரட்சித் தலைவியின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் எனக்கு கதர் கிராமத் தொழில்கள் மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

சட்டமன்ற உறுப்பினராவதற்கு எனக்கு வாய்ப்பளித்த இனமானக் காவலர், தமிழினப் போராளி, டாக்டர் அய்யா அவர்களுக்கும், டாக்டர் சின்ன அய்யா அவர்களுக்கும் மற்றும் எனக்குப் பெருவாரியாக வாக்களித்து வெற்றிபெறச் செய்த வாக்காள வள்ளல்களுக்கும், கூட்டணிக் கட்சியின் தலைவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மற்றும் தோழமைக் கட்சித் தோழர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியின் தோழர்களுக்கும் என் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, மானியக் கோரிக்கைமீது பேச்சைத் தொடங்குகிறேன்.

கதர் என்றாலே அண்ணல் காந்தியை நினைவுகூர்கிற ஒரு துறையாகவே கதர்த் துறை உள்ளது. இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின் உச்சக் கட்டத்தில் பல்வேறு போராட்டங்களை அண்ணல் காந்தி அவர்கள் அறிவித்தார்கள். அந்நிய நாட்டுப் பொருட்களை வாங்கும் மோகத்திலிருக்கும் இந்திய மக்களுக்கு, சுதேசிப் பொருட்களை வாங்கி நம் நாட்டுப் பொருளாதாரத்தை உயர்த்தவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வெள்ளை ஆதிக்கத்தை நாட்டை விட்டே விரட்டவும் நடத்திய போராட்டம்தான் 'அந்நியத் துணிகளை பகிஷ்காரம்' செய்யும் போராட்டமாகும். மக்களுக்கு அந்த உணர்வை வலியுறுத்த இராட்டையில் நூல் நூற்றார் மகாத்மா காந்தி; அந்த நூலினால் நெசவு செய்யப்பட்ட ஆடையையே அணிய வேண்டுமென்ற கொள்கையைப் பின்பற்றியவர் அவர். தேச பக்திக்கு ஒரு சான்றாக கதர்த் துணியை மக்கள் அணிந்தார்கள். காந்தி ஆசிரமங்கள் பல்வேறு இடங்களில் தோன்றின. அண்ணல் காந்தியின் நினைவாக கதருக்கு ஒரு துறையே உருவானது.

1960-ல் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் ஏற்பட்டது. அந்த வாரியத்தின் முக்கிய நோக்கமே கிராமப்புறத்தில் வசிக்கும் ஏழைஎளிய மக்களுக்கு, குறிப்பாக, ஆதிதிராவிட மக்களுக்கு, வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதாகும். கிராமப் பகுதிகளில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டே விற்பனைக்கு வாய்ப்புள்ள பொருட்களை உள்ளூரிலேயே தயாரித்து, அப்பகுதி ஏழை மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி வாழ்வு அளிப்பதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும். இது ஒரு தேசிய திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. இலாபம் ஈட்டுவதே இதன் முழு நோக்கமல்ல. 1,613 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும், 358 கிராமிய நூற்பு நிலையங்களும், 193 சொந்த அலகு யூனிட்டுகளும் பலர் வாழ வழி செய்கின்ற கிராமத் தொழில்களுடன் செயல்படுகின்றன. இந்த கதர் மற்றும் கிராமத் தொழில் அடங்கிய கதர்த் துறை மானியக் கோரிக்கையில் 2001-2002 ஆம் ஆண்டுக்கு ரூ.31,90,31,000/- நிதி வழங்கக் கோரப்பட்டுள்ளது. கிராமப்புறப் பொருளாதாரத்தை உயர்த்த அதற்காகக் கொண்டு வந்த இந்தத் துறைக்கு வழங்கப்படுகிற நிதி குறைவாக உள்ளது. தேசப்பிதா காந்தியின் நினைவாக உள்ள இந்தத் துறையை நம்பி வாழ்கின்றவர்கள் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ள ஏழைகள். இன்னும் கிராமப்புறங்களில் வறுமையில் வாடும் பல்லாயிரக்கணக்கான ஏழைகள் வாழவும் அதிகமான நிதியை அரசு ஒதுக்கி ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியமும், இதை நம்பியுள்ள ஏழை கிராமப்புற மக்களும் மேன்மையடைய கிராம ஊராட்சிதோறும் கதர் நெசவு அலகுகள் தொடங்கப்பட வேண்டும்; அதற்கு விற்பனை வாய்ப்புள்ள ஜவுளி உற்பத்தி இரகங்களையே அரசாங்கம் ஒதுக்கித் தரவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். கதர் வாரியத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பட்டு ஜவுளிகளை வெளிநாடுகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யுமளவுக்கு உயர் தரத்தில் உற்பத்தி செய்யவேண்டும், புதிய தொழில்நுட்பங்களை, நெசவாளர்களுக்குப் பயிற்சி அளித்துக் கற்றுக் கொடுக்கவேண்டும். அதற்கு அரசு அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும். பல்வேறு நவீனத் தொழில்நுட்பங்களையும் கையாண்டு கிராமத் தொழில் வாரிய உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்த வேண்டும் என்றும், தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஊராட்சிகளிலும் கதர் கிராமத் தொழில்களைத் தொடங்கி, அரசு அதற்குப் புத்துயிர் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் கிராமப்புற ஏழை மக்கள் பசியாறுவார்கள். ஆகவே அரசு பெருமளவு நிதி வழங்கி இத்துறையை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 11—25

எனது தொகுதியான பூவிருந்தவல்லி தொகுதியில் வீரராகவபுரம் பகுதியில் காகிதம் உற்பத்தி செய்யும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் உள்ளது. அதில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 1992 முதல் ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை. அதை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது 1971-ல் ஆரம்பிக்கப்பட்டது. அந்த வாரியம் 1971-லேயிருந்து தரமுள்ள Paper-களை உற்பத்தி செய்கிறது. அந்த வாரியத்திலிருந்து தரமுள்ள Paper-களை அரசாங்கம் வாங்க அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்படி வாரியத்தில் காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்கூடம் ஒன்றும் எங்களுடைய தொகுதியில் தேவை. அதை உடனே தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கதர்த் துணிகளுக்கான தள்ளுபடியை 40 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக அரசாங்கம் உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். கதர்ப் பொருட்கள் விற்பனைக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்றும், கதர் நெசவுத் தொழிலாளிகளுக்கும், கிராமத் தொழிலாளர்களுக்கும் 58 வயது முடிந்ததும், அவர்களுக்கும் மாதம் 250 ரூபாய் ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கதர் மற்றும் கிராமத் தொழிலாளர்கள் (மணியடிக்கப்பெற்றது) எனது பேச்சு கன்னிப் பேச்சு, ஆகையினாலே அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கதர் மற்றும் கிராமத் தொழிலாளர்கள் தமிழகத் தொழிலில் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றனர். மாநிலத்தில் உள்ள கிராமங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கவும், வறுமையை ஒழிப்பதிலும், ஊரக வளர்ச்சியை மேம்படுத்துவதிலும் கதர்த் தொழிலாளர்கள் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் தங்களது குறைந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற நீண்ட நெடுங்காலமாக இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் சமீப காலத்திலே இத்தொழில் நசிந்து வருவதைப் பார்க்க முடிகிறது.

1997-98 ஆம் ஆண்டின் புள்ளிவிவரப்படி 1,131. காதித் தொழிற் கூடங்களில் 49,000 முதல் 55,000 பேர் வேலையில் இருந்தனர். 86.5 இலட்சம் மீட்டர் காதி நூலையும், 6.5 இலட்சம் மீட்டர் காதித் துணியையும், 3.2 இலட்சம் மீட்டர் சில்க் காதியையும், 4.9 இலட்சம் மீட்டர் காதி பாலியஸ்டர் துணியையும் உற்பத்தி செய்துள்ளனர். இது முந்தைய ஆண்டான 1996 ஆம் ஆண்டின் உற்பத்தியைவிட, பாதி மடங்காகக்

குறைந்திருப்பதை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, உற்பத்தியை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காதிப் பொருட்களின் ஏற்றுமதிக்காக அரசு எடுத்துள்ள சிறப்பான நடவடிக்கைகள் யாவை என்பதையும், பயன்கள் யாவை என்பதையும் அறிய விரும்புகிறேன். மத்திய அரசு காதித் தொழிலை ஊக்குவிக்க எடுத்த நடவடிக்கைகளை மாநில அரசு சரியாகப் பயன்படுத்தியதா என்பதைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன். காதித் தொழில்களை நவீனப்படுத்தவும், தொழிற்சாலைகளுக்குத் தேவையான கடன் வசதிகளைப் பெருக்கித் தரவும், எதிர்காலத் திட்டங்கள் யாவை? கதர் மற்றும் ஊரகத் தொழில்கள் வாரியத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய பூவிருந்தவல்லி தொகுதி. ஆவடி பகுதியிலேயும், பூவிருந்தவல்லி பகுதியிலேயும் உள்ள மக்களைக் கொசுத் தொல்லையிலிருந்து காப்பாற்ற, பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டத்திற்கும், ஆவடி பகுதியில் அரசு காமராஜர் மகளிர் தொடக்கப் பள்ளியை 'மாண்புமிகு புரட்சித் தலைவர் மகளிர் தொடக்கப் பள்ளி' என மாற்றியதற்கும் மற்றும் பிளஸ் 1, பிளஸ் 2 படிப்பிற்கு அனுமதி கொடுத்ததற்கும் மாண்புமிகு அம்மையார் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பூவிருந்தவல்லி பகுதியில், ஆவடி பகுதி மற்றும் அனைத்துப் பகுதிகளில் உள்ள அனைத்து உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தேவையான இடவசதி இல்லாத நிலை இருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம்.

பூவிருந்தவல்லி பகுதியில் ஒரு மகளிர் பள்ளி அவசியம் தேவைப்படுகிறது. அந்தப் பகுதியைச் சுற்றி 1 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். பெண்களுக்கு என தனியாக மகளிர் பள்ளி சென்ற ஆட்சியின்போது தொடங்கப்படாமல் நிலுவையில் விடப்பட்டது. அதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆவடி பகுதியில் உள்ள Housing Board குடிநீர்த் தொட்டி 9 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள தொட்டி. அந்தத் தொட்டியானது இன்றுவரை, 10 ஆண்டு காலமாகச் செயல்படாமல் இருக்கிறது. அதை உடனடியாகச் செயல்பட வைக்க வேண்டும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அது செயல்படுத்தப்பட்டால் மக்களுக்குத் தேவையான குடிதண்ணீர் கிடைக்கும் என்றும்



தெரிவித்துக்கொள்கிறேன். ஆவடியில் 53 அங்கன்வாடிகள், குழந்தைகள் சத்துணவுக் கூடங்கள் இருக்கின்றன. அவை பராமரிப்பின்றி, நான் சென்று பார்த்தபோது 6 பள்ளிகளில் உணவு வைக்கும் இடங்களில் எலிகளே வளைகளைத் தோண்டியிருந்தன. அந்த எலி வளைகளில் 100 கிலோ அளவிற்கு எலி வளை மண்ணுடன் உணவுப்பொருட்கள் இருந்தன. அதை அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொண்டேன். ஆனாலும் 100 நாட்களாக நடவடிக்கை எடுக்கவில்லை. அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

*முற்பகல் 11—30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. சண்முகம்:** ஆவடி பகுதியிலே, தண்டரை பகுதியைச் சேர்ந்த 426-வது சர்வே எண்ணில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தை தனியார் ஒருவர் அபகரித்து அதில் உள்ள பழமரங்களை - 1958 இல் பஞ்சாயத்தாக இருந்தபோது வைக்கப்பட்ட பழமரங்களை - பராதீனமாக வெட்டிக்கொண்டு அங்கு கட்டடம் கட்ட முயற்சிக்கிறார். அப்படி தனி நபர் ஒருவர், தன்னைக் கட்சிக்காரர் என்று சொல்லிக்கொண்டு மரங்களை வெட்டுவதை அரசு உடனடியாகத் தடுத்து, அந்த 4 ஏக்கரை நகராட்சிக்குச் சொந்தமாக ஆக்கவேண்டும். ஏற்கெனவே கவன ஈர்ப்பு அறிவிப்பாகவும் அரசுக்கு முறையீடு கொடுத்துள்ளேன். இதுவரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிசீலனையில் வைத்துள்ளார்கள்; அரசும் பரிசீலனையில் வைத்துள்ளது. ஆனால் அதை அனுபவிப்பவர்களோ அதில் தலையிட்டு அங்கே கட்டடம் கட்டுவதற்கு முயற்சிக்கின்றனர். அதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல பூவிருந்தவல்லி Bus Stand-ஐ விரிவுபடுத்த வேண்டும். அரசாங்கம் நிலத்தைக் கையகப்படுத்தி அதை விரிவுபடுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பூவிருந்தவல்லி பகுதியில் 250 செங்கல் தொழிலகங்கள் உள்ளன. அவற்றிற்குத் தேவையான மண் செம்பரம்பாக்கம் ஏரியின் உள்பகுதியிலுள்ள மேட்டுப் பகுதியிலேயிருந்து எடுத்தால் நமக்குத் தண்ணீரைத் தேக்கவும், ஏரியினுடைய கொள்ளளவை அதிகமாக்கவும் முடியும், செங்கல்லும் உற்பத்தியாகும். ஆனால் இந்த Chamber-களில்

உள்ளவர்கள் அந்தந்த ஏரியாவிலே இருக்கிற ஏரிகள் மற்றும் கோயில் நிலங்களை ஆழப்படுத்தி விடுகிறார்கள். திருட்டுத்தனமாக மண் எடுத்து ஆழப்படுத்தி விடுவதால், அந்தப் பகுதி சென்னையை ஒட்டியுள்ள மாநகர வளர்ச்சிப் பகுதியாக இருப்பதால் வீட்டுவசதி வாரியத்திற்கோ அல்லது மற்ற இதர வேலைகளுக்கோ - பள்ளமாக இருப்பதால் - உபயோகமற்றுப் போய்விடுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மீதியை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் பொத்தாம்போக்கிலே சத்துணவுக் கூடங்கள் பழுதடைந்திருக்கின்றன என்று சொன்னார்கள். எந்தப் பகுதியிலே அப்படிப் பழுதடைந்திருக்கிறது என்பதை அவர் குறிப்பிட்டுச் சொன்னால், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அமைச்சர் அவர்களிடத்திலே எழுதிக் கொடுத்துவிடுங்கள். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்.

***திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். புதிய நூற்றாண்டின் புதிய முதல்வராகப் பதவியேற்றிருக்கும் எங்களது புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக, மாதர் குலத்தின் மாணிக்கமாக, எதற்கும் அஞ்சாத சிங்கமாக, பொன்னகையே வேண்டாம், எனக்குப் புன்னகை ஒன்றே போதும் என்று சிரித்த முகத்துடன் அனைத்துத் துயரங்களையும் தன்னகத்தே ஏற்று, சோதனைகள் அனைத்தையும் சாதனைகளாக்கி சரித்திரம் படைத்திட்ட எங்களுடைய இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மக்களின் பலம் அம்மா அவர்களுக்குத்தான் என்று நிரூபித்துக் காண்பித்து அதிக இடங்களிலும் அதிகமான வாக்கு வித்தியாசத்திலும் வெற்றிபெறச் செய்ய உதவிய தமிழக மக்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

அதுபோன்றே மேல்மலையனூர் சட்டமன்ற உறுப்பினராக என்னை அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்து இந்த மாமன்றத்திலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், எங்களது தொகுதி மக்களுக்கும், எங்களுடன் இணைந்து செயல்பட்ட எங்களது தோழமைக் கட்சிச் சகோதரர்களுக்கும் மீண்டும் மீண்டும் என்னுடைய நன்றியை உரித்தாக்குகின்றேன்.

பெண்களை இழிவு செய்தவர்கள்-நம்முடைய புராணக் கதைகளிலே பார்க்கின்றோம்- இதுவரை வாழ்ந்ததாகச் சரித்திரமே இல்லை. அன்று மகாபாரதத்திலே திரௌபதியை அவமானப்படுத்தினார்கள்; துரியோதனனுடைய கூட்டமே கூண்டோடு அழிந்தது. இராமாயணத்திலே சீதாப்பிராட்டியை அவமானப்படுத்தினார்கள்; அந்த இராவணனுடைய அசுரக் கூட்டமே கூண்டோடு அழிந்தது. சிலப்பதிகாரத்திலே கண்ணகியை அவமானப்படுத்தினார்கள்; மதுரை நகரமும் அந்த மாமன்னனும் கூண்டோடு .அழிந்தார்கள். அதைப்போன்றே இந்தக் கண்ணியம் மிக்க சட்டசபையிலே புரட்சித் தலைவி அவர்கள் ஒரு பெண்மணி என்றும் பாராமல் பலவிதமாக அவமானப்படுத்தப்பட்டு, பலவிதமான அவதூறு வழக்குகளையும் போட்டு, பெண் குலத்தையே கேவலப்படுத்தியிருக்கிறார்கள். இந்தப் புராணக் கதைகளிலே நேர்ந்த அந்த தண்டனையைத்தான் இவர்களுக்கும் ஆண்டவன் கொடுக்க வேண்டுமென்று ஆண்டவனை வேண்டிக்கொண்டு என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

[திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்][2001 ஆகஸ்ட் 31

*முற்பகல் 11—35*

இன்று கதர் கிராமத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் குறித்த மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் சிறுதொழில்களின் வளர்ச்சியை மேம்படுத்தவும், பெண்கள் தொழில்முனைவோரை ஊக்கப்படுத்தவும், கிராமப்புற மக்களின் வேலை வாய்ப்பைப் பெருக்கவும், விவசாய மக்களின் நிலையை உயர்த்தவும், இம்மானியக் கோரிக்கையில் பலவிதமான சிறுதொழில் முனைவோருக்கான திட்டங்கள் உள்ளதை வரவேற்கின்றேன். குறிப்பாக மகளிருக்கு நான்கு தொழிற்பேட்டைகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்திருப்பதை மனதார வரவேற்கின்றேன்.

அதுபோல கடந்த ஆட்சியில் நெசவாளர்களின் நிலை மிகவும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இவர்களின் வாழ்க்கைத் திறனை மனதில் கொண்டு தாயுள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நெசவாளர்களின் துயர் துடைப்பதற்கு அவர்களுடைய வேலை வாய்ப்பைப் பெருக்கிடவும், அவர்களின் தொழில் சிறக்கவும் அரசு அதிக அளவில் பண உதவி செய்து அவர்களின் வாழ்க்கைத் திறனை உயர்த்துவதற்கு பரிசீலனை செய்ய அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மேல்மலையனூர் தொகுதி முழுக்க, முழுக்க கிராமங்கள் நிறைந்த பகுதி. இங்கு பிரதான தொழில் விவசாயம் மட்டும்தான். இயற்கை பொய்த்துவிட்டதன் காரணமாக, விவசாயத்தில் நஷ்டமடைந்து, வேறெந்தத் தொழிலும் செய்யத் தெரியாத நிலையில், அவர்களின் வாழ்க்கைத் தரம் ஒரு கேள்விக்குறியாக உள்ளது. இவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விவசாயம் சார்ந்த தொழிலான உணவு பக்குவப்படுத்தல், மாம்பழங்களிலிருந்து ஜாம் தயாரித்தல், தேனீ வளர்த்தல், பட்டுப் பூச்சி வளர்த்தல், பனைப் பொருட்களின் உற்பத்திக்கு வித்திடுதல் போன்ற தொழில்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அந்த விவசாய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுகோள் விடுக்கின்றேன்.

ஆளுநர் உரையில் அறிவித்துள்ளபடி முதலீடுகளை ஈர்த்து, வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்கும், தொழில் வளர்ச்சி மற்றும் புதிய தொழில்கள் தொடங்குவது குறித்தும் அரசுக்கு ஆலோசனை வழங்க வல்லுநர் குழு அமைக்கவும், வெளிநாட்டு முதலீட்டைப் பெறவுமான



2001 ஆகஸ்ட் 31] [திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்]

தொழில் வளர்ச்சி உத்திகளை இம்மாநிலத்திற்குக் கொண்டுவரும் திட்டத்தையும் நான் மனதார வரவேற்கின்றேன்.

சர்க்கரை ஆலையுடன் இணைந்த மின் உற்பத்தி; 200 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்ய இந்த நிதி ஆண்டில் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை நான் வரவேற்கிறேன். எங்கள் தொகுதியில் தரமான கரும்பு விளைகின்றது. விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையான சர்க்கரை ஆலை ஒன்றை எங்கள் பகுதியில் தொடங்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

என்னுடைய தொகுதியில் காடுகளும், மலைகளும் அதிக அளவில் உள்ளதால் இங்கு மலைத் தேன் அதிகம் கிடைக்கின்றது. ஆகவே மாண்புமிகு அம்மா அவர்கள் கதர் கிராமத்தொழில் வாரியத்தின் மூலமாக வேலையில்லாத இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் வகையிலே தேனீ வளர்த்தலை ஒரு தொழிலாகச் செய்ய பயிற்சி அளித்திடவும், உற்பத்தி செய்யும் தேனை மற்ற இடங்களுக்கு விற்பனை செய்யவும், தேன் பெட்டிகள் மற்றும் உப கருவிகளை மானிய விலையில் வழங்கிடவும் அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன். அதுபோன்றே பனை மரத்தில் கைவினைப் பொருட்கள் செய்யவும், கிராமப்புறப் பெண்களுக்கு இந்தத் துறையின் மூலம் பயிற்சி அளித்திடவும் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் பயன்பெறும் வகையிலே பட்டுப் பூச்சி வளர்த்தலில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, பட்டுப் பூச்சி வளர்ப்போரின் குறைகளைத் தீர்க்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். இந்தத் திட்டம் மிக அருமையானதொரு திட்டம். இதனால் பல ஏக்கர் நிலங்களும், எத்தனையோ ஏழை விவசாயக் குடும்பங்களும் பலனடைகின்றன. இந்தத் திட்டத்தில் பட்டுப் பூச்சி வளர்க்கப் பயன்படுத்தப்படும் மல்பரி செடி வளர்க்க தரிசு நிலத்தைப் பயன்படுத்த வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

மேல்மலையனூர் தொகுதியைச் சார்ந்த என்னுடைய தொகுதிக்குச் சில கோரிக்கைகளை அவையின் முன் வைக்கின்றேன். வெளியில் சென்று கல்லூரி பயில இயலாத நிலையில் என் தொகுதி பெண்கள் இருக்கின்றார்கள். அவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு மேல்படிப்பு

படிப்பதற்காக மேல்மலையனூர் தொகுதியில் ஒரு மகளிர் கல்லூரி தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கிராமப்புறக் கல்விக்கு முக்கியத்துவம் தரும் அம்மா ஆட்சியில், இக்கல்லூரி தொடங்குவதால் எத்தனையோ கிராமப் பெண்களின் கல்வித் தரம் உயரும் என்பதை அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேல்மலையனூர் அங்காளம்மன் கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயம். அமாவாசை, பௌர்ணமி அன்று பல இலட்சக்கணக்கான மக்கள் அங்கு வந்து செல்கின்றார்கள். சாதாரண நாட்களில்கூட ஆயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு வந்து செல்கின்றார்கள். அவர்களுடைய நலனைக் கருத்திற்கொண்டு-குறிப்பாகப் பெண்கள் அதிகம் வருவதால், அவர்களின் நலனைக் கருதி-இங்கு அம்மா அவர்கள் ஒரு காவல் நிலையம் அமைத்துத் தர ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

இந்தக் கோரிக்கையைப் பல நாட்களாக இந்தத் தொகுதி மக்கள் முன்வைத்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அதுபோல இந்த ஆலயத்தைச் சுற்றி சுகாதாரக் கேடாக இருப்பதால் தொற்று நோய்கள் அதிகம் வரும் அபாயம் உள்ளது. அம்மா அவர்கள் இந்த ஆலயத்தின்மீது தனிக் கவனம் செலுத்தி, இங்கு வரும் பக்தர்கள் நலன் கருதி, தங்கும் விடுதியும், குளியலறை வசதியும், கழிப்பறை வசதியும் செய்து தரவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) மேலும் இங்கு அறநிலையத் துறையினால் விருந்தினர் மாளிகை ஒன்றும் கட்டித் தர மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

*முற்பகல் 11-40*

பாதிக்கப்பட்டவர்களின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடம் ஒரு கோரிக்கையை வைக்கிறேன். அவர் நிச்சயம் நிறைவேற்றித் தருவார் என்ற நம்பிக்கையில் இந்தக் கோரிக்கையை அவர்களிடம் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இரண்டாண்டு காலம் கைத்தொழில் பயிற்சி முடித்துவிட்டு, வேலை வாய்ப்பு அலுவலகத்திலும் பதிவு செய்துவிட்டு, வயது வரம்பையும் கடந்த நிலையில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். தயவுசெய்து மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு இதனைப் பரிசீலித்து அவர்களுக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சியாவது அளித்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முன்னுரிமை கொடுத்து, அவர்களுடைய குடும்ப நலனைக் காக்க அம்மா அவர்கள் தயவுசெய்து இதனைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இந்த மானியக் கோரிக்கைகள்மீது எனது கருத்துகளைக் கூற வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி.என். சிவசுப்பிரமணியன்.

***திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக மற்றும் நகர்ப்புற பொருளாதார மேம்பாட்டில் சிறு தொழில், குறுந்தொழில் மற்றும் குடிசைத் தொழில்கள் ஆகியவை முக்கியப் பங்கினை வகிக்கின்றன. இதனை இந்த அரசு மிகச் சரியாகப் புரிந்துகொண்டு, சிறுதொழில், குறுந்தொழில் மேம்பாட்டிற்கென பல்வேறு நலம் பயக்கும் நடவடிக்கைகளை எடுக்க இருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். உதாரணமாக, சிறு தொழில்களுக்கு மூலதன ஊக்குதவித் தொகை, மின்னாக்கி ஊக்குதவித் தொகை மற்றும் மின் கட்டண ஊக்குதவித் தொகை ஆகியவற்றை அறிவித்திருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

தொழில் முனைவோர்க்குத் தேவையான ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் வகையில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடன் இணைப்பு ஏற்படுத்துதல் மற்றும் தேவைப்படும் அனைத்துத் தொழில் ஆலோசனைகள் வழங்குதல் என்னும் கொள்கையை வரவேற்கிறேன். ஏனென்றால் வங்கிகளும், நிதி நிறுவனங்களும் சமீப காலமாக தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்காமல், தொழில் ஆர்வத்திற்கு முட்டுக்கட்டையிட்டு முடக்குகின்ற வகையிலே, சிறு தொழில்களுக்கு நிதி உதவி அளிக்கத் தயக்கம் காட்டி மறுத்து வருகின்றன என்பது வேதனையான உண்மை. இந்நிலை மாற இவ்வரசாங்கம் அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சிறு தொழில்களுக்கு அதிக சலுகை வட்டியில் கடனுதவி வழங்கவும், நிதியுதவியைக் காலதாமதமின்றி தொழில் முனைவோர்க்கு வழங்கவும், நிதியுதவி பெறும் வழிமுறைகளை எளிமைப்படுத்தவும், இவ்வரசு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அனைத்திற்கும் மேலாக சிறு தொழில் வளர்ச்சியிலே நமது தமிழகம் பிற மாநிலங்களுக்கு ஒரு நல்ல முன்னோடியாக இருக்கவேண்டும் என்ற நல்ல நோக்கோடு, கடந்த ஆட்சி

சிறு தொழில்களை ஒடுக்கவும், நசுக்கவும் கொண்டு வந்த அரசாணை எண் 75-ஐ இவ்வரசு திரும்பப் பெற்றுள்ளதன் விளைவாக சிறு தொழில் வளர்ச்சியை இமயத்தின் உச்சிக்கு இட்டுச் செல்ல வழிகோலியிருப்பதை நான் மெத்த மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

அதேபோன்று நலிவுற்ற தொழில் பிரிவுகளைக் கண்டறிந்து நிதியுதவி வழங்கப்படும் என்பது நல்ல பாராட்டுக்குரிய திட்டமாகும். ஏனென்றால், கடந்த ஆட்சி இதனைச் செய்யத் தவறி, அலட்சியப்போக்கோடு இருந்த காரணத்தினால்தான் நலிவுற்ற தொழில்களின் எண்ணிக்கை அதிகமாகி பணப் புழக்கம் பாதிக்கப்பட்டு பஞ்சம் தலைவிரித்து ஆடத் தொடங்கியது.

கரூர் தொகுதியில் உள்ள சில பிரச்சினைகளைக் கூற விழைகிறேன். என்னுடைய கரூர் தொகுதியில் உள்ள புகளூர் வாய்க்காலில் பாசன நிலங்களுக்கு தண்ணீர்ப் பற்றாக்குறை இருந்தபோதிலும், கடந்த கால ஆட்சியின்போது 7-10-1999 தேதியிட்ட அரசாணை எண் 473-ன்படி தமிழ்நாடு காகித ஆலை, அவர்களுக்குத் தேவையானபோது புகளூர் வாய்க்காலில் தண்ணீர் எடுத்துக்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளார்கள். விவசாயிகள் நலன் கருதி அந்த அரசு ஆணையை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளை திருப்தி செய்யும் வண்ணம் கரும்புக்கு ஒரு நல்ல விலை உடனே அறிவிக்கப்பட வேண்டும் என்று நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-45*

என்னுடைய தொகுதியில் சிறு விவசாயிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து அரசு ஒப்புதல் பெற்று நடத்தும் பாசனத் திட்டங்களில் உயர் அழுத்த மின்சாரம் பெற்று இருப்பதன் காரணமாக அவர்களிடம் யூனிட் ஒன்றுக்கு 25 பைசா வீதம் வசூல் செய்யப்படுகிறது. அவர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கிட வேண்டும் என்று நான் இங்கே கோரிக்கை வைக்க விரும்புகிறேன்.

கரூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் காவிரி ஆற்றில் பல இடங்களில் பெரிய அளவில் மணல் எடுக்க கடந்த கால ஆட்சியில் உரிமம் வழங்கியுள்ளதால் சுற்றுச் சூழலுக்கும், பாசன வாய்க்காலுக்கும் பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அதை ஆட்சேபணை செய்த தளபாளையத்தைச் சேர்ந்த பொதுமக்கள் 45 பேர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த அப்பாவி மக்கள் மீது போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெற்று அவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



நீலகிரியில் உள்ள இந்துஸ்தான் போட்டோ ஃபிலிம்ஸ் தொழிற்சாலையைச் சீரமைக்க மத்திய அரசுக்கு நம்முடைய தமிழக அரசாங்கம் பரிந்துரை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் மேலே சொன்ன கோரிக்கைகளை எல்லாம் அம்மா அவர்கள் பரிசீலித்து ஒரு நல்ல முடிவை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையைச் சீக்கிரம் முடித்ததற்கு நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. வில்வநாதன்.

***திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 6 கோடியே 21 இலட்சம் தமிழக மக்களின் முதல்வராகவும், 1-1/2 கோடி கழகத் தொண்டர்களின் தாயாகவும், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசியல் வாரிசாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற தமிழகத்தின் விடிவெள்ளி, சமூக நீதி காத்த வீராங்கனை, இருபது, இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டின் ஒப்பற்ற தலைவி, அன்னை தெரசாவால் பாராட்டப்பட்ட உத்தமத் தலைவி, எதிரிகளின் சிம்ம சொப்பனமாக விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தின் காவல் தெய்வம், தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியில் எங்கோ ஒரு மூலையில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை அம்மாவின் ஆசியால் இரண்டு முறை ஒன்றிய கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தும், 1986 முதல் 1991 ஆம் ஆண்டு வரை ஊராட்சி மன்றத் தலைவராகவும், 1989 முதல் 1991 வரை கூட்டுறவுச் சங்க இயக்குநராகவும், கடந்த 17 வருடங்களுக்குப் பிறகு சோளிங்கர் தொகுதியை கழகத்திற்கு ஒதுக்கி கழக வேட்பாளராக என்னை அறிமுகம் செய்து வைத்து, என் வெற்றிக்காக அயராது பாடுபட்டு கடந்த நாற்பது வருட காலமாக, தொகுதியில் ஒரு குடும்ப அரசியலை நடத்தி வந்த குடும்ப ஆதிக்க அரசியலுக்கு ஒரு முற்றுப்புள்ளியை வைத்து, என்னை சட்டமன்ற உறுப்பினராக அறிமுகம் செய்து வைத்து, இந்த மாபெரும் அவையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்த எங்கள் குலவிளக்கு, நான் அன்றாடம் வழிபடும் தெய்வம், எங்கள் அன்னை மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தின் காவல் தெய்வம், தமிழகத்தின் முதல்வர்

[திரு. இரா. வில்வநாதன்] [2001 ஆகஸ்ட் 31

டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சிரம்தாழ்ந்த வணக்கத்தையும், நன்றியையும் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் நன்றியுடன் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று என் வெற்றிக்காக இரவு, பகல் என்று பாராமல் உழைத்திட்ட கழகப் பொறுப்பாளர்களுக்கும், கழகச் செயல் வீரர்களுக்கும், தொகுதியின் பொது மக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று அம்மா அவர்களின் கூட்டணித் தலைமையை ஏற்றுக்கொண்டு என் வெற்றிக்காக என்னோடு சேர்ந்து ஒத்துழைத்து, பாடுபட்ட அனைத்துத் தோழமைக் கட்சி நண்பர்களுக்கும் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11—50

2001-2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கதர் கிராமத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய மானியக் கோரிக்கையில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியைக் கூறி என் உரையைத் தொடங்குகிறேன்.

ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தமட்டிலே 12,619 கிராம ஊராட்சிகள் அனைத்திலும் விரைவான கிராமப்புற மேம்பாடு செய்வதில், படிப்படியாக மகளிர் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் ஒருங்கிணைந்த மகளிர் துப்புரவு வளாகங்கள், கழிப்பிடம் மற்றும் குளியல் வசதிகள் சுமார் ரூபாய் இரண்டு இலட்சம் செலவிலே இந்த நிதியாண்டில் செய்து தரப்படும் என்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். நடப்பு நிதியாண்டில் இந்தத் திட்டத்திற்காக ரூபாய் 92 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது குறித்தும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளில் மகளிரின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும், அவர்களிடம் சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கவும் விழையும் இந்த அரசினுடைய சிறுகடன் வசதித் திட்டம் மேலும் சீரமைக்கப்பட்டு விரிவுபடுத்தப்படும் என்று கூறியிருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

சிறுதொழில்களின் வளர்ச்சியினால் மட்டுமே ஊரக மற்றும் புறநகர்ப் பகுதியில் தனி நபர் வருமானம், வேலைவாய்ப்பு மற்றும் பொது மனிதனின் வாங்கும் திறன் ஆகியவற்றைப் பரவலாக்க முடியும் என்ற உயரிய கருத்தை மனதில்கொண்டு மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 13-7-1993-ல் சிறுதொழில்களுக்கெனத் தனியாக ஒரு துறையைத் தலைமைச் செயலகத்திலே ஏற்படுத்தி, அதை நடத்தி வந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



2001 ஆகஸ்ட் 31] [திரு. இரா. வில்வநாதன்]

சுமார் 7 இலட்சம் பேருக்கு, குறிப்பாக மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் தொழிலான, தீப்பெட்டி தயாரிப்பதில் மத்திய அரசின் இயந்திரமயமாக்கலைத் தடை செய்யும் பொருட்டும், இயந்திரம் மூலம் தயாரிக்கும் தீப்பெட்டி மீதான சுங்க வரியை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்க மத்திய அரசை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்டுக்கொண்டதையும் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு அலுவலகக் கட்டடங்கள் இல்லாமையினால் அவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றத் தடையாக இருப்பதைக் கருத்திற்கொண்டும், மக்கள் தங்கள் குறைகளைத் தீர்க்க கிராம நிர்வாக அதிகாரிகளை எளிதில் அணுக முடியாத நிலையில் உள்ளனர் என்பதைக் கருத்திற்கொண்டும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு ஊராட்சி அலுவலகத்தையொட்டி ரூபாய் 60 ஆயிரம் செலவிலே அலுவலகம் கட்டித் தரப்படும் என்ற திட்டத்தை அமல்படுத்தும் வகையில், இந்த நிதி ஆண்டிலே 4000 அலுவலகங்கள் கட்ட ரூபாய் 24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதையும் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தற்போது 77 இலட்சம் ரூபாய் என்று இருப்பதை ரூபாய் 82 இலட்சமாக உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சிரம் தாழ்ந்த நன்றியினைச் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரும்பாலான ஊராட்சிகளில் போதிய அடிப்படை வசதிகள் இல்லாமலேயே கிராமச் சந்தைகள் நடைபெற்று வருகின்றன என்பதை அறிந்து NABARD வங்கியின் ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதி உதவியுடன் குடிநீர் வசதிகள், விளக்கு வசதி, பொதுக் கழிப்பிடம், இணைப்புச் சாலைகள் ஆகிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு நிதி ஒதுக்கி உள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர்

புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துப் பாராட்டுகிறேன்.

இம்மாநிலத்தில் தற்போது நலிவுற்ற நிலையில் உள்ள பெரும் எண்ணிக்கையிலான சிறு தொழில் பிரிவுகளுக்குப் புத்துயிர் அளிக்கவும், அதன்மூலம் ஆயிரக்கணக்கானோருக்கு மீண்டும் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவும், 19-2-1997 ஆம் நாளிட்ட அரசு ஆணை 75-ஐ நீக்கிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

கதர்த் துணி நெசவாளர்களின் வேலைவாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்குடன், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் வழங்கும் கதர்த் துணியின் விற்பனை மீதான தள்ளுபடியை ஆண்டு முழுமைக்கும் வழங்கும் வகையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனால், கதர்த் துணியின் விற்பனை அதிகரிப்பதோடு, கதர்த் துணி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் கூடுதலான வேலைவாய்ப்பும் கிடைக்கச் செய்த மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தின் முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து மனதாரப் பாராட்டுகிறேன்.

அதேபோல ஊட்டி தேயிலை விவசாயிகள்; திமுக. அரசில் பச்சைத் தேயிலைக்கு உரிய விலை கொடுக்காததைக் கண்டித்து நடத்திய போராட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூபாய் 31 இலட்சத்து 32 ஆயிரம் அளவிற்கு பெருமனதோடு நிதியுதவி அளித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை என் மனதாரப் பாராட்டுகிறேன்.

முற்பகல் 11-55

தேயிலைத் தோட்ட விவசாயிகளின் வாட்டத்தைப் போக்கவும், கடந்த தி.மு.க. ஆட்சியில் தேயிலை விவசாயிகள் பட்ட வேதனையைப் போக்கவும், கூட்டுறவுக் கடைகளின் மூலம் தேயிலை விற்பனையை ஏற்படுத்தி, அம்மா அவர்களின் பொற்கரங்களால் முதல் விற்பனையைத் தொடங்கி வைத்த டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நானும் ஒரு விவசாயி என்ற முறையிலே என் மனமார்ந்த நன்றியையும், இந்தத் திட்டம் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதையும் தெரிவித்து, மனதாரப் பாராட்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்லி விடுகிறேன்.



அம்மா அவர்களுக்கு என்னுடைய சோளிங்கர் தொகுதியைப் பற்றிய ஓரிரு கோரிக்கைகளை இந்த நேரத்திலே இங்கே வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். சோளிங்கர் தொகுதியைப் பொறுத்தமட்டில் முக்கியமாக விவசாயத்தையும், நெசவுத் தொழிலையும் நம்பி வாழ்கின்ற தொகுதியாகும். என்னுடைய தொகுதி 85 ஊராட்சிகளும், இரண்டு பேரூராட்சிகளும் அடங்கிய தொகுதியாகும். என்னுடைய தொகுதியில் அரசு தொழிற்சாலைகளோ, அரசுக் கல்லூரிகளோ இதுவரையில் ஏற்படுத்தப்படவில்லை என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோளிங்கர் பேரூராட்சியில் ஒரு அரசு மகளிர் கலைக் கல்லூரி ஏற்படுத்தித் தரவும், சோளிங்கர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றிக் கொடுத்து, சோளிங்கரை தனித் தாலுகாவாக அமைத்துத்தர வேண்டுமென்றும், சோளிங்கர் நகரிலேயே ஒரு அரசு போக்குவரத்துப் பணிமனை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும், சோளிங்கர் நகரிலேயே அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க உலகப் புகழ் பெற்ற ஸ்ரீலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலுக்கு மேலும் ஒரு மலைப்பாதை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும், அங்கே உள்ள திருக்குளத்தைச் செப்பனிட்டுக் கொடுக்குமாறும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

காவேரிப்பாக்கம் ஒன்றியத்தின் மையப் பகுதியான பாணாவரம் பிர்காவை, கரும்பு விவசாயப் பெருமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான செங்கற்பட்டு மாவட்டம், வாலாசாபாத்திலுள்ள தனியார் சர்க்கரை ஆலைக்கு, வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலிருந்து மாற்றியதை இரத்து செய்துவிட்டு, மீண்டும் வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கே மாற்றிக் கொடுக்கும்படி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். கடந்த 25 ஆண்டுகளாக (மணியடிக்கப்பெற்றது) பாணாவரம் பகுதியைச் சேர்ந்த கரும்பு விவசாயிகள் சுமார் 2,000 பேர் வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்குத்தான் தாங்கள் உற்பத்தி செய்த கரும்பினை ஏற்றி வந்தனர். கடந்த கால தி.மு.க. ஆட்சியில் 1-6-1999 அன்று செங்கற்பட்டு மாவட்டம், வாலாசாபாத்திலுள்ள எஸ்.வி. கரும்பு சர்க்கரை ஆலைக்கு, தாங்கள் சுயலாபம் அடையும்பொருட்டு மாற்றிவிட்டார்கள். பாணாவரம் முதல் வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வரை 42 கிலோ மீட்டர் தூரம்தான் உள்ளது. ஆனால் பாணாவரத்திலிருந்து வாலாசாபாத் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 70 முதல் 80 கிலோ மீட்டர் தூரம் வரை உள்ளது.

தனியார் மில்லில் முன்கடன் வசதி கிடையாது. எடையும் குறைவாகக் கணக்கிடப்படுகிறது. கரும்பு வெட்டு தேதியும் உரிய காலத்தில் கொடுப்பதில்லை. கரும்பு ஏற்றுவதற்கான லாரியை விவசாயிகள் மில்லிற்குச் சென்று தங்கியிருந்துதான் எடுத்துவர வேண்டும். சுமார் 40 ஆயிரம் ரூபாய், கரும்பு விவசாயிகள் பங்குத் தொகை இதுவரையில் வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில்தான் உள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 2 ஆண்டுகளாக பல இன்னல்களுக்கு ஆளாகிவரும் கரும்பு விவசாயிகள் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பிலே இந்த வருடம் பயிர்செய்ய வேண்டிய கரும்பு நடவை இதுவரை செய்யாமல் உள்ளனர். தனியார் மில்லுக்கும், கூட்டுறவு மில்லுக்கும் ஒரு டன்னுக்கு விலை வித்தியாசம் ரூபாய் 250 வரை உள்ளது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த வட ஆற்காடு மாவட்டத்திலேயே மிகப் பெரிய ஏரியான காவேரிப்பாக்கம் ஏரி தன்னுடைய முழுக் கொள்ளளவான 31 அடி நீரைத் தேக்க முடியாத நிலையில் உள்ளது. காரணம் ஏரியில் 13 அடி தூர் நிரம்பி உள்ளது. 18 அடி நீரைத்தான் பாசனத்திற்காகத் தேக்க முடிகிறது. சுமார் 32 கிராமங்கள் இந்த ஏரியின் மூலம் பாசன வசதியைப் பெறுகின்றன. இந்த ஏரிக் கரையின் நீளம் சுமார் 8 கி.மீ. மேற்படி ஏரியில் ஏற்பட்டுள்ள 13 அடி தூரை லாரியின் மூலம் அகற்றி, ஏரியின் ஆழத்தை அதிகப்படுத்தி, பாசன விவசாயிகள் நலன் பெறும் வகையில் ஏரியைச் சீர் செய்து கொடுக்குமாறும், அகற்றப்படும் தூரை அருகிலுள்ள பாணாவரம் காட்டுப் பகுதியில் மிகத் தாழ்வான பகுதியில் நிரப்பலாம் என்றும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12—00

அதேபோல சோளிங்கர் தொகுதியில் விவசாயத்திற்கு அடுத்து பெரிய தொழிலாகக் கருதப்படுவது நெசவுத் தொழில்தான். அதிகமான நெசவாளர்கள் என்னுடைய தொகுதியிலே உள்ளனர். அவர்கள் 1991 முதல் 1996 வரை நல்ல முறையிலே தங்களுடைய தொழிலைச் செய்து வந்தனர். ஆனால் அடுத்து வந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மிகவும் நலிந்து, வாங்கிய கடனுக்கு வட்டியைக்கூடக் கட்ட முடியாத அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளனர்; மிகவும் வாடியுள்ளனர். அம்மா அவர்கள், செய்கின்ற நெசவுத் தொழில் மீண்டும் மேன்மை அடைய வழிகாட்டுமாறு மிகவும் பணிவுடன் அவரது இரு பொற்பாதங்களையும் தொட்டு வணங்கி



வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். காவேரிப்பாக்கம் பேரூராட்சிக்கு அரசு பொது மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் தீயணைப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். காரணம் காவேரிப் பாக்கத்திலிருந்து ராணிப்பேட்டை 22 கிலோ மீட்டர்; காவேரிப் பாக்கத்திலிருந்து காஞ்சிபுரம் 30 கிலோ மீட்டர்; காவேரிப்பாக்கத்திலிருந்து அரக்கோணம் 40 கிலோ மீட்டர்; காவேரிப்பாக்கத்திலிருந்து சோளிங்கர் 30 கிலோ மீட்டர். இவ்வளவு நீண்ட தூரம் சென்று அவசர நேரத்திலே, ஏற்படுகிற தீயை அணைக்க முடியாது என்ற காரணத்தினால் சென்னை-பெங்களூர் Highways Road-ல் உள்ள காவேரிப்பாக்கத்திற்கு ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அம்மா அவர்களை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சோளிங்கர் தொகுதியைப் பொறுத்தமட்டில் இதுவரை ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் தொகுதியைப் பற்றியோ, கிராமப்புறச் சாலைகளைச் செப்பனிடுவது பற்றியோ சிறு பாலங்கள் அமைப்பது பற்றியோ, நெசவாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள் நலன் பற்றியோ சிறிதும் அக்கறை உள்ளவர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ளவில்லை. தாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தொடர்ந்து இருந்தால் போதும் என்ற நிலையைத்தான் கடைசி வரை கடைப்பிடித்தார்கள் என்பதை இந்த நேரத்தில் அம்மா அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உரையைச் சீக்கிரம் முடியுங்கள். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. இரா. வில்வநாதன்:** நன்றி சொல்லி முடித்துக் கொள்கிறேன். எனவே டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என் தொகுதி மீது தனிக் கவனம் செலுத்தி பின்தங்கிய நிலையில் உள்ள என்னுடைய தொகுதியை தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவித்து தொழிற்சாலைகளை அமைத்துக் கொடுக்குமாறு, தாயுள்ளத்தோடு கருணை காட்டுமாறு மிகவும் பணிவுடன், தாழ்பணிந்து கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன்.

***திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைய விவாதப் பொருளாக உள்ள மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த உங்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்பார்ந்த சபையோர்களே, சென்ற ஆண்டு இதேபோல சிறு குறுந் தொழில்களுடைய பிரச்சினைகள் விவாதத்திற்கு வந்தபோது அன்றைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த எங்களுடைய கட்சியின் உறுப்பினர் திருப்பூர் சுப்பராயன் அவர்கள் அன்றைய ஆட்சியாளர்களைப் பார்த்து, 'உங்களுடைய ஆட்சியில் தொழில் நசுக்கப்படுகிறது, குறிப்பாக சிறு, குறுந்தொழில்கள் நசுக்கப்படுகின்றன; ஆதலால் உடனடியாக உங்களால் முடிந்த காரியம்; அரசு ஆணை 75-ஐ நீங்கள் நீக்க வேண்டும்; அதன் மூலம் சிறு பாதுகாப்பாவது கிடைக்கும்' என்று அன்றைய முதலமைச்சரைப் பார்த்து எங்கள் சுப்பராயன் அவர்கள் கேட்டார்கள். அப்படிக் கேட்டபோது அன்பார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களே, அவையோர்களே, இந்த அவையில் மெஜாரிட்டியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும், அமைச்சர்களும் எங்களுடைய சுப்பராயனைப் பார்த்து சிரித்த நாள் ஒன்று உண்டு. அந்தச் சிரிப்பு ஆணவச் சிரிப்பு என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆணவச் சிரிப்புக்குக் கிடைத்த பதிலடிதான் இன்றைக்குக் கிடைத்த ஆட்சி மாற்றம் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நான் பணிவோடு கூறிக்கொள்கிறேன்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே கவர்னர் உரையில் மரியாதைக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் சிறு, குறுந்தொழில்களைப் பாதிக்கின்ற அந்த G.O. 75-ஐ உடனடியாக இரத்து செய்கிறேன் என்று அறிவித்து இன்று இரத்து செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று கூறுகின்றபோது தமிழகத்திலே இருக்கின்ற 5 இலட்சத்திற்கும் மேலான சிறு, குறுந்தொழில் முனைவோர்களுடைய சார்பாக புரட்சித் தலைவி அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை ஏதோ சபையின் பாராட்டுதலுக்காக நான் சொல்லவில்லை நண்பர்களே, இங்கே தினமலர் நாளிதழிலே அன்றைக்கு அவர்கள் ஆடிய கும்மாளம், ஆணவப் பேச்சு இந்தப் பத்திரிகையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை நான் அவையின் உப தலைவர் அவர்களுக்கு சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். அன்பார்ந்த அவை துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற



இந்தக் கொள்கை அறிக்கையில் இருக்கின்ற பல நல்ல அம்சங்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வரவேற்கத் தயாராக இருக்கிறேன்; நன்றி சொல்லத் தயாராக இருக்கிறேன்.

இன்றைக்கு புதிய பொருளாதாரக் கொள்கையால் அழிந்து கொண்டிருக்கின்ற தீப்பெட்டித் தொழிற்சாலைகளைப் பாதுகாப்பதற்காக மத்திய அரசைப் பார்த்து தமிழகத்தில் இத்தொழிலில் இயந்திரங்களைப் புகுத்துவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற ஒரு கொள்கையை நீங்கள் ஏற்று இருக்கின்றீர்கள். அதற்காகத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளை நடத்துகின்ற பல்லாயிரக்கணக்கான தொழில் முனைவோர் சார்பாகவும் அதிலே பணிபுரிகின்ற 10 இலட்சம் தொழிலாளர்கள் சார்பாகவும் நன்றியறிதலை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல தேயிலைத் தொழிற்சாலைகள்; தேயிலை உற்பத்தியாளர்களுடைய நிலைமை உங்களுக்குத் தெரியும். அந்தத் தேயிலை உற்பத்தியாளர்களின் நிலைமையை அறிந்து ஏற்கெனவே புரட்சித் தலைவி அவர்கள் 200 டன் கொள்முதல் செய்வது மட்டுமல்ல; வியாபாரத்தையும் அரசே பொறுப்பேற்று நடத்தும் நிகழ்ச்சியை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அடுத்து இறக்குமதி செய்கின்ற தேயிலைக்கு இன்றைக்கு 70 சதவிகித சுங்க வரி விதிக்கப்படுகிறது; அதை முடிந்த அளவு அதிகபட்சமாக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசுக்கு இன்றைக்குத் தெரிவித்திருப்பதற்காக நான் நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-05

அன்பார்ந்த நண்பர்களே, புதிய பொருளாதார ஒப்பந்தத்தைப் பற்றி இன்றைக்கு ஆட்டம் போட்டுக்கொண்டிருக்கின்ற அரசியல்வாதிகள் இந்த அவையிலே உண்டு. நான் பணிவன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இநதப் புதிய பொருளாதாரக் கொள்கை இந்த நாட்டிலே அமல்படுத்தப்பட்டபோது, விவசாயிகளுக்கான ஒப்பந்தத்தைச் செய்தபோது, அந்த விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பொறுத்து மாநில முதலமைச்சர்களைக் கலந்து ஆலோசிக்காமல் ஓர் ஒப்பந்தத்தை மத்திய அரசு செய்தது. அப்படிச் செய்தபோது, இந்த இந்திய நாட்டிலே இருக்கின்ற முதல் மந்திரிகளெல்லாம் வாய்மூடி மௌனமாக மத்திய அரசைப் பார்த்து பயந்து கொண்டிருந்த நேரத்தில், இந்திய நாட்டில் ஒரேயொரு முதலமைச்சர், நீங்கள் போடுகின்ற ஒப்பந்தம், மாநில அரசைக் கலந்தாலோசித்துப் போட வேண்டும்; இல்லையென்றால்

[திரு. ஏ.எஸ். கண்ணன்] [2001 ஆகஸ்ட் 31

இது தவறான ஒப்பந்தம் என்று தடுத்து நிறுத்தி குரல் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், சுப்ரீம் கோர்ட்டிலே வழக்குத் தொடுத்த ஒரு முதலமைச்சர் இருக்கிறார் என்றால் இன்றைக்கு தமிழக மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள்தான் என்று இந்த நேரத்திலே அவையில் இருக்கின்ற எதிர்க்கட்சி நண்பர்களுக்கு நான் பணிவன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அன்பார்ந்த நண்பர்களே, இந்தக் கொள்கை விளக்க அறிக்கையில், இன்றைக்கு சிறு குறுந் தொழில்களைக் காப்பதற்காக, தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக, குறைந்தபட்சம் 5 சதவிகித வட்டி என்ற சலுகை இங்கே அறிவிக்கப்பட்டு இருப்பது மட்டுமல்லாமல், 100 சதவிகிதம் தமிழகத்தில் தொழில் நலிகின்றதா அல்லது வாழ்கின்றதா என்பதைக் கண்டறிய ஒரு ஆய்வுக் கமிட்டியை அமைத்து அதன் பிறகு ஒரு சிறு தொழில் கொள்கையை வகுப்பதற்காக இந்த அரசு முற்பட்டு இருக்கிறது என்பதைப் பார்க்கின்றபோது இந்தத் தமிழகத்திலே இருக்கின்ற சிறுதொழில் தொடங்குவோர்மீது எவ்வளவு அக்கறை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. அதற்காக நான் நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்பார்ந்த அமைச்சர் அவர்களையும், முதல்வர் அவர்களையும் நான் பணிவோடு கேட்டுக்கொள்வேன். சிறுதொழில் அங்கமாக, பெரும் அங்கமாக 100-க்கு 90 சதவிகிதம் குறுந்தொழில்கள் இருக்கின்றன. கடந்தமுறை, புரட்சித் தலைவி அவர்கள் ஆண்டபோது, அன்றைக்கு ஊரகத் தொழில் துறை அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய துரை ராமசாமி அவர்கள் குறுந்தொழில்களுக்கு என்று ஒரு சட்டம் வகுக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நான் ஞாபகப்படுத்துகின்ற வகையில் குறுந்தொழில்களுக்கும் ஒரு தனிக் கொள்கை கொண்டுவர வேண்டுமென்று பணிவன்போடு இந்த நேரத்திலே நான் முதல்வர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்பார்ந்த சபையோர்களே, நான் இன்றைக்குப் பேசுகின்றபோது ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நானே ஒரு குறுந்தொழில் நடத்துகின்ற ஒரு குறுந்தொழில் முனைவோர் ஆவேன். அதுமட்டுமல்லாமல் தமிழகத்தில் இருக்கின்ற குறுந்தொழில் முனைவோர் சங்கங்களுக்கு 12 ஆண்டுகாலமாக தலைமைப் பொறுப்பேற்று நடத்திக் கொண்டிருக்கிறேன். தொழிற் சங்கங்களுக்கும், தொழிலாளர்களுக்கும்



2001 ஆகஸ்ட் 31] [திரு. ஏ.எஸ். கண்ணன்]

தலைமைப் பொறுப்பேற்று நடத்திக் கொண்டிருக்கிறேன். இன்றைக்கு நான் சொல்லுகின்ற கருத்துகள் ஆளுகின்றவர்களுக்கு ஆதரவாகவும், எதிரணியிலே இருக்கின்றவர்களைக் குறை சொல்வதற்காகவும் நான் சொல்லவில்லை. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாரதி சொன்னான். இந்த நாட்டின் இரு கண்கள், பொருளாதாரத்தை மீட்டுத் தருகின்ற கண்கள் உழவும் தொழிலும் என்பதை யாரும் மறுக்க முடியாது. நண்பர்களே, இன்றைக்கு இந்தக் கொள்கைக் குறிப்பிலே கொடுத்திருக்கின்ற குறிப்பையே, அரசாங்கம் கொடுத்திருக்கின்ற குறிப்பையே நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சிறு, குறுந் தொழில்கள் தமிழகத்தில் 3,87,597 இருக்கின்றன என்ற கணக்கு இதிலே வருகிறது. அதிலே முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 11,892 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் வேலை செய்கின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 29 இலட்சம் என்று அரசு குறிப்பு தருகின்றது. இந்தக் குறிப்பு சரியோ, தவறோ; ஆனால் இதைவிட அதிகபட்சமான பேர் இதில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்; தொழிற்கூடங்கள் இருக்கின்றன. இது ஒரு மிகப் பெரிய துறை. இந்தத் துறை, தமிழகத்திற்கும் அல்லது மத்திய அரசிற்கும் பொருளாதாரத்தை ஈட்டித் தருகின்ற ஒரு துறை. இந்தத் துறையைப் பற்றி இன்றைக்கு விவாதித்துக் கொண்டிருக்கின்றபோது, அரசியல்வாதிகள் என்ற எண்ணத்தை மனதிலே வைத்துக்கொண்டு பலபேர் இங்கே குறை சொல்லிக்கொண்டு, அவர்களுடைய கொள்கைதான் பெரிது என்று இங்கே கூப்பாடு போடுகிறார்கள். நான் தங்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்வேன். நமக்குத் தேவை, தமிழகத்தை நாம் பாதுகாக்க வேண்டும்; தமிழகத்திலே இருக்கின்ற தொழில்களை, புதிய பொருளாதாரக் கொள்கை என்ற ஒரு மோசமான கொள்கையை அந்த நாசக்காரர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று இந்தச் சபையில் விவாதித்து முடிவெடுப்பதுதான் மிகச் சிறப்பாக இருக்குமென்று நான் பணிவுடன் சொல்லிக்கொள்வேன்.

பிற்பகல் 12—10

முந்தைய ஆட்சியில், புரட்சித் தலைவியின் ஆட்சியில் ஐந்தாவது இடத்தில் இருந்த தொழில், இரண்டாவது இடத்திற்கு வந்துவிட்டது; அதற்குக் காரணம் முந்தைய முதலமைச்சர் அவர்களால்தான் ஒரு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரம் கோடி ரூபாய் அந்நிய முதலீடு இந்த நாட்டில் வந்தது என்று காலையில்கூட இங்கே நான் பணிவோடு அவர்களுக்குச் சொல்வேன்; உங்கள் குறிப்பின்படி நீங்கள்

சொல்வீர்களானால், எனக்குத் தெரிந்த—தொழில் துறையில் நான் தொழில் முனைவோராக இருப்பவன் என்ற வகையில், எனக்குத் தெரிந்த—குறிப்புகளை நான் சொல்கிறேன். தமிழகத்திலே Tamil Nadu Industrial Guidance Bureau என்ற ஒன்று இருக்கிறது. அதில் நீங்கள் சொல்கிற அந்த ஒரு இலட்சத்து 58 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்று பேப்பரிலே எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், தொழிலுக்கு வந்த பணம் எவ்வளவு என்று பார்க்கிறபோது, 19 ஆயிரம் கோடி ரூபாய்தான் என்பதை இங்கே இருக்கிற அன்புச் சகோதரர்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆக கடந்த ஆட்சியில் தொழில் துறை வளர்ந்தது என்பது ஒரு பொய்யான தகவல் என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.

அதேநேரத்தில் நான் உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன்; சாதாரணமாக கிராமப்புறத்திலேயும் சரி, குடும்பங்களிலே இருக்கின்ற நிலையிலேயும் சரி, ஒரு குடும்பத்தில் கஷ்டம் ஏற்பட்டால், அந்தக் குடும்பத்தில் உள்ளவர்களை, மற்ற குடும்பத்தைச் சார்ந்தவர்கள் வந்து பார்த்து, பேசி, பெரியோர்கள் ஆறுதல் சொல்வதுதான் வழக்கம். அப்படிப் பார்க்கின்றபோது, கடந்த ஆட்சியின்போது சிறு குறுந்தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன; நலிந்துவிட்டன; (மணியடிக்கப்பெற்றது) 40 சதவிகிதம் நலிந்திருக்கிறது என்று இந்தக் குறிப்பில் தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அன்பார்ந்த சபைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு குறுந்தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று அன்றைய முதலமைச்சரைப் பார்த்து எங்கள் பிரச்சினையைச் சொல்ல வேண்டுமென்று நாங்கள் கேட்டபோது, 5 வருட காலம் பல கடிதங்கள் எழுதியும், தந்திகள் கொடுத்தும் முயற்சி செய்தபோதும்கூட, முதலமைச்சர் அவர்கள் எங்களைப் பார்க்க மறுத்தார்கள் என்ற மோசமான தகவலை நான் இங்கே அவைக்குச் சொல்லிக் கொள்கிறேன். ஆனால் கடந்த காலத்திலே பொறுப்பேற்ற புரட்சித் தலைவி அவர்கள் 2 மாதத்திற்குள் எங்களை அழைத்து, தொழில் முனைவோர் சங்கங்களை அழைத்து எங்களுடைய பிரச்சினைகளைக் கேட்டு, சரியான திட்டங்கள்ள வகுத்து நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். 1991-96-லே நடந்த தகவலை நான் இங்கே நன்றியறிதலோடு சொல்லிக்கொள்கிறேன். அதேபோல், வருங்காலத்திலேயும் எங்களை அழைத்துப் பேசி, எங்களுடைய பிரச்சினைகளைக் கேட்டு, தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அவர் வழிவகுப்பார் என்று சொல்கிற அதே நேரத்தில் (மணியடிக்கப்பெற்றது) தயவுசெய்து மற்றவர்களைப்போல அல்லாமல் எனக்குக் கூடுதல் நேரம் ஒதுக்கப்பட வேண்டும்...





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல இருக்கிறார்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** ஏனென்றால், இந்தத் துறையில் இருக்கிற உண்மைத் தகவல்களைச் சொல்வதற்கு தயவுசெய்து வழிவிட வேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அன்பார்ந்த துணை அவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** துணைத் தலைவர் என்று சொல்லுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** கடந்த ஆட்சியின்போது சிறு குறுந்தொழில்கள், தொழில் முனைவோர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள் என்பதை இரண்டு மூன்று விவரங்கள் மூலம் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மரியாதைக்குரிய புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரில் கிண்டியிலே, மின்னணு அலுவலகம் ஒன்று கட்டப்பட்டது. அதற்குப் புரட்சித் தலைவி ஆட்சியில், 450 ரூபாய் சதுர மீட்டருக்கு என்று போட்டு அவர்களுக்கு விலை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன்-மரியாதைக்குரிய புரட்சித் தலைவி என்று பெயர் வைத்திருந்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக-அதை இரண்டு மடங்காக விலையை உயர்த்தி cent ஒன்றுக்கு ரூ. 950 என்று விலை நிர்ணயம் செய்து, தொழில் முனைவோர்கள் அந்தக் குறுந்தொழில் கூடங்களை வாங்க முடியாத ஒரு சூழ்நிலையை உருவாக்கினார்கள். எவ்வளவோ முறை மனு கொடுத்து எங்கள் நிலையை எடுத்துக்கூறியபோதும், நீங்கள் அதைக் கொடுத்துத்தான் தீரவேண்டும் என்று பிடிவாதமாக உள்ள நிலையில் இன்றையதினம் வரை அந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

மரியாதைக்குரிய புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரை வைத்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அந்தத் தொழில் முனைவோர்கள் இன்றைக்குத் தொழிலை நடத்த முடியாமல், வாங்கிய அந்தக் குறுந்தொழில் கடன்களைத் திரும்பத் தர வேண்டும் என்கிற ஒரு மோசமான சூழ்நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதை மீட்டுத் தருவதற்கான நடவடிக்கையை மரியாதைக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12—15*

அதேபோல இன்றைக்கு பல்வேறு தொழில்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அன்பார்ந்த நண்பர்களே, இன்றைக்கு பிளாஸ்டிக் பொருட்கள், தயாரிப்பில்-அதுவும் மாசுக் கட்டுப்பாடு என்ற போர்வையில்-ஏறக்குறைய சென்னையில் மட்டும் ஒரு இலட்சம் பேர் பணிபுரிகிறார்கள். அதில் குறைபாடுகள் இருந்தால் அவர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய பிரச்சினையை முடிவிற்குக் கொண்டுவரலாம். அதை விடுத்து, உடனடியாக அந்தக் கம்பெனிகளை இழுத்து மூடவேண்டும் என்று சொன்னால் அந்தத் தொழில்கள் அழிவது மட்டுமல்லாமல் அதிலே பணிபுரிகின்ற இலட்சக்கணக்கான தொழிலாளிகள் சாலைக்கு வருகின்ற நிலைமை உருவாகும்.

உதாரணமாக இன்றைக்கு டெல்லி மாநகரில் ஒரு இலட்சம் தொழில்களை அந்த இடத்திலிருந்து காலி செய்ய வேண்டுமென்று சொன்ன பிறகு அங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் பணிவன்போடு இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, எங்களைப் பொறுத்தவரையிலும், எங்களுக்குக் கடந்த கால ஆட்சியில் மின்சாரச் சலுகை என்று ஒரு G.O. பிறப்பிக்கப்பட்டது. 10 H.P. வரையிலும் 1 ரூபாய் 20 காசு சலுகை விலையில் தர வேண்டுமென்று மரியாதைக்குரிய புரட்சித் தலைவி ஆட்சியில் அன்றைக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஐந்தாண்டு கால ஆட்சியில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொழில்களுடைய நசிவு பற்றிய எங்களுடைய மோசமான நிலையை எடுத்துக்கூறியபோதுகூட தேவையற்ற நிபந்தனைகளைப் போட்டு இன்றையவரையிலும் அந்த 10 H.P.-யை குறுந்தொழிற்கூடங்களுக்கு அனுமதிக்க முடியாத ஒரு மோசமான நிலையை உருவாக்கியவர்கள் எங்கள் அன்பு நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தலைமையும், இவர்களும் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆக-(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ராதாகிருஷ்ணன் (குறுக்கீடு) கண்ணன் சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** கடைசியாக, நான் மரியாதைக்குரிய அவைத் துணைத் தலைவர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இருக்கிற நிலைமையில் சிறு, குறுந்தொழில்கள் மோசமான



நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றன. அழிவின் விளிம்பிற்குச் சென்று கொண்டிருக்கின்றன. உடனடியாக சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி, அவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை எடுப்போம் என்று கவர்னர் உரையிலும், இன்றைக்கு கொள்கைக் குறிப்பிலும் கூறப்பட்டிருக்கிறது. அதை அமல்படுத்த வேண்டுமென்று பணிவோடு கூறி, பேச வாய்ப்பளித்த உங்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எம். ராதாகிருஷ்ணன்.

***திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை திருமயம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த மாமன்றத்திலே நுழைய அனுமதித்த தாயுள்ளம் கொண்ட தங்கமனத் தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிற திசைநோக்கி வணங்கி, அவர்களின் பொற்பாதங்களிலே எனது நன்றியைக் காணிக்கையாக்கி எனது கன்னிப் பேச்சை ஆரம்பிக்கின்றேன்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே வாக்குக் கேட்டபோது நான் சொன்ன ஒரே வாசகம் 'மக்கள் விரோத ஆட்சியை அகற்றவும் தாயுள்ளம் கொண்ட தங்கமனத் தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நாட்டினுடைய முதலமைச்சராக கோட்டையிலே அமரவும் நீங்கள் எல்லாம் எனக்கு இரட்டை இலைச் சின்னத்திலே வாக்களிக்க வேண்டும்' என்று கேட்டேன். நான் பெரிய மிட்டா மிராசுதாரர் அல்ல; பெரிய நிலக்கிழார் அல்ல. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நம்பி எனக்கு வாக்களித்து இருக்கின்றார்கள். இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நானும் எனது குடும்பத்தினரும் எனது சந்ததியினரும் காலமெல்லாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். எனது திருமயம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் மனதார நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்
மீண்டும் தர்மமே வெல்லும்"

என்ற தாரகமந்திரத்திற்கேற்ப தமிழ்நாட்டு மக்கள் தேர்தலிலே தீர்ப்பு வழங்கியிருக்கின்றார்கள். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று எண்ணாமல், நாட்டிலே பலர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் குறை சொல்வதையே தங்களது எண்ணமாகக்

[திரு. எம். ராதாகிருஷ்ணன்] [2001 ஆகஸ்ட் 31

கொண்டிருக்கிறார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிங்கத்தைக் குகையிலே சந்திப்பவர்கள்; அவர்களை எவராலும் வெல்ல முடியாது.

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அளித்த Budget ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு உகந்த Budget-ஆக உள்ளது. விவசாயிகளும் வியாபாரிகளும் அரசியல் வல்லுநர்களும் போற்றுகின்ற Budget-ஆக உள்ளது. நாடு சுதந்திரமடைந்ததற்குப் பிறகு வெள்ளை அறிக்கையுடன் கூடிய Budget இதுவே ஆகும். "தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்று இன்று மக்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். முடியாது என்ற வார்த்தையையே Dictionary-யை விட்டு எடுக்கச் சொன்னவர் மாவீரன் நெப்போலியன். இந்தியத் துணைக் கண்டத்திலே முடியாதது எதுவும் இல்லை என்று நிரூபித்துக் காண்பித்தவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். விவசாயக் குடும்பத்தில் பிறந்து, உங்களால் இந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட நான்கூட தங்கம் அணிந்திருக்கிறேன். செல்வச் செழிப்பிலே வளர்ந்து 6-1/2 கோடி மக்களுக்குத் தாயாக விளங்கிக் கொண்டிருக்கின்ற, புன்னகை முகத்தோடு, கடுகளவு தங்கம்கூட அணியாமல் இருக்கின்ற உங்களைப் பார்க்கின்றபோது எங்களது கண்களிலே நீர் மல்குகிறது.

*பிற்பகல் 12-20*

1991-96, உங்களது ஆட்சியிலே தொழில் துறையின் வளர்ச்சி 6.92 சதவிகிதமாக இருந்தது. அது கடந்த ஆட்சியிலே 4.1 சதவிகிதமாகச் சரிந்துள்ளது. புதிய தொழில் முனைவோருக்குப் பயிற்சி அளிப்பதற்காக ரூ.4 கோடி செலவிலே தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் ஏற்படுத்தி உள்ளீர்கள். இந்தத் திட்டத்தை மனமார வாழ்த்துகிறேன். இந்த நாட்டிலே ஏராளமான மாணவர்கள் பட்டம் பெற்று வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஊரகத் தொழிலில் முனைவதற்கு மானியத்துடன்கூடிய கடன் வழங்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருமயம் தொகுதி, புதுக்கோட்டை மாவட்டத்திலே மிகவும் பின்தங்கிய பகுதியாகும். இங்கு ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தருமாறு இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



2001 ஆகஸ்ட் 31] [திரு. எம். ராதாகிருஷ்ணன்]

எனது தொகுதியான அரிமளம் பகுதியில் ஏராளமான யூகலிப்டஸ் மரங்கள் இருக்கின்றன. இங்கு மக்கள் வேலையில்லாமல் சிரமப்படுகிறார்கள். இங்கு ஒரு பேப்பர் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்துத் தருமாறு இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திருமயம் பகுதி கல்குவாரிகள் அதிகமாக உள்ள பகுதியாகும். 1991-96-ல் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில் மகளிர்க்கென குவாரி நடத்துவதற்கு டோக்ரா திட்டம் இருந்தது. கடந்த ஆட்சியிலே இந்தத் திட்டம் அமல்படுத்தப்படவில்லை. இந்தத் திட்டத்தை மறுபடியும் நடைமுறைப்படுத்துமாறு இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திருமயம் தாலுகா தலைமையிடமாக இருந்தும் இன்னும் கிராமப் பஞ்சாயத்தாகவே உள்ளது. முன்பு பேரூராட்சியாக இருந்து கிராமப் பஞ்சாயத்தாகக் கீழே தள்ளப்பட்டுள்ளது. இப்போது பேரூராட்சிக்குத் தேவையான எல்லா வகையான தகுதிகளும் உள்ளன. மக்கள் தொகை, வருமானம் எல்லாம் தகுதிக்கு மேல் உள்ளது. ஆகவே, தாயுள்ளம் கொண்ட தங்கமனத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருமயத்தைப் பேரூராட்சியாக உயர்த்தித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொன்னமராவதியைத் தனி தாலுகாவாக அறிவிக்கக் கோரி இதற்கு முன்னால் இருந்த சட்டமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும் கோரிக்கை வைத்துள்ளார்கள். இதுநாள்வரையில் பிரிக்கப்படவில்லை. நிர்வாக வசதியைக் கருதியும், பொதுமக்கள் நலனைக் கருதியும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு பொன்னமராவதியைத் தனி தாலுகாவாகப் பிரித்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் நிலத்தடி நீர் வெகு ஆழத்தில் உள்ளது. ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தாலும் இரண்டு, மூன்று வருடங்களில் தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை பொன்னமராவதி, திருமயம் பகுதிக்கு நீட்டித்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருமயம் ஊராட்சி ஒன்றியம், குலமங்களம்-ராஜாபுரம் சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே கடந்த முறை புரட்சித் தலைவியின் ஆட்சிக்

காலத்திலே ஓடுபாலம் கட்டப்பட்டது. மழைக் காலங்களில் வெள்ளம் வரும்போது மக்கள் ஆற்றைக் கடக்க முடியாமல் சிரமப்படுகிறார்கள். இந்தப் பாலத்தைக் குழாய்ப் பாலமாக அமைத்து உயரப்படுத்தித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருமயம், குடவறைக் கோயில்கள் கொண்ட இடமாகும். திருமயத்தில் மலைக் கோட்டை இருக்கிறது. தினமும் வெளி மாநிலங்களிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள். எனவே திருமயத்தை சுற்றுலா மையமாக அறிவிக்குமாறு இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பொன்னமராவதியிலே பாப்பாச்சி ஆச்சி மருத்துவமனை என்ற ஒன்று இருக்கிறது. அதில் ரொம்ப காலமாக பெண் மருத்துவர்கள் இல்லாமல் மகளிர் பிரசவத்திற்குச் சிரமப்படுகிறார்கள். எனவே ஒரு பெண் டாக்டரை நியமிக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அரிமளம், ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிடமாகவும், பேரூராட்சியாகவும் இருந்தும்கூட அங்கு ஆரம்ப சுகாதார நிலையம்தான் இருக்கிறது. அதை 24 மணிநேர அரசு மருத்துவமனையாக மாற்றித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திருமயத்திலே சித்த மருந்துகள் தயாரிக்கும் நிலையம் ஒன்று அமைக்க 1989-ல் கட்டடம் கட்டி இதுநாள் வரையில் இயங்காமல் இருக்கிறது. அதையும் அமைத்துத் தருமாறு இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னை இந்த மாமன்றத்திலே பேச அனுமதித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

*பிற்பகல் 12—25*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர் - கிராமத் தொழில்கள், ஊரகத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு, தொழில்கள் மற்றும் தொழில்



வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகிய ஐந்து மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் சில கருத்துகளை நான் சுருக்கமாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சுருக்கமாக என்று சொல்வதற்குக் காரணம், மானியங்களோ ஐந்து. ஆனால், கொடுக்கப்பட்ட நேரம் குறைவாக இருக்கிற காரணத்தாலே இங்கே சுருக்கமாக நான் பேசிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'செய்யும் தொழிலே தெய்வம்' என்று சொல்வார்கள். 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்றெல்லாம் சொல்லி, ஒரு தனி மனிதனுடைய குடும்ப மேம்பாட்டிற்கும், இந்த நாட்டினுடைய சமூக முன்னேற்றத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழி வகுப்பது தொழில்கள் என்பதை இங்கே சுருக்கமாகக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, நம்முடைய அரசு, தொழில்களை ஊக்குவிக்க வேண்டும் என்று நான் முதலிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கொள்கை விளக்கக் குறிப்புகளைப் படிக்கின்ற நேரத்திலே இதிலே நல்ல அம்சங்கள் எல்லாம் இடம் பெற்றிருப்பதை நான் பார்க்கின்றேன்; மனதார வரவேற்கின்றேன். அதேநேரத்திலே, இப்படிப்பட்ட தொழில்களை ஊக்குவிக்கக்கூடிய வகையிலே இந்த ஐந்து மானியங்களுக்கும் அரசு கூடுதலாக நிதி ஒதுக்கியிருக்கும் என்று சொன்னால், அது இன்னும் சிறப்புடையதாக இருக்கும் என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அந்த அளவிலே முதலிலே இருக்கக்கூடிய கதர் மற்றும் கிராமத் தொழில்களைப் பொறுத்தவரை, கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய ஏழையெளிய மக்களுடைய வறுமை நீங்கிட, பொருளாதாரம் மேம்பாடு கண்டிட, அவர்களை ஊக்குவிக்கக்கூடிய தொழிலாக இது அமைந்திருக்கிறது. இன்னும் கிராமப்புறத்திலே கதர்த் தொழில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதைப்போலவே, அதன் சார்புடைய தொழில்களும், கிராமத் தொழில்கள் என்று சொல்லக்கூடிய பல்வேறு தொழில்களும் நடைபெற்று வருகின்றன. மரபு சாராத் தொழிலாளர்கள் இருக்கின்றார்களே அவர்கள் எல்லாம் ஈடுபடக்கூடிய தொழிலாகவும் இதைக் கருதுகிறோம். ஆகவே, அந்த வகையிலே இந்தத் தொழில் நாளடைவில் நசிந்து வருகின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

1997-98 ஆம் ஆண்டிலே கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்தின்கீழ் சுமார் 1,139 தொழில்கள் நடைபெற்று வந்தன. அதிலே பணியாற்றிய தொழிலாளர்களின் எண்ணிக்கை 49,055 பேர். அதிலே 86.5 இலட்சம் மீட்டர் காதி நூல்களும், 6.6 இலட்சம் மீட்டர் கதர்த் துணிகளும் 3.2 இலட்சம் மீட்டர் சில்க் காதியும், 4.9 இலட்சம் மீட்டர் காதி பாலியஸ்டர் துணியும் உற்பத்தி செய்தார்கள். இந்த விகிதாச்சாரத்தை ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்திலே 1996-ல் இருந்த உற்பத்தியைவிட பாதி மடங்காக இருக்கிறது. ஆகவே, இந்தத் தொழில் 1996-97-க்குப் பிறகு நலிவடைந்து வருவதற்கு இது ஒரு சான்றாகும் என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறேன். ஆகவே, இந்தத் தொழில் நலிவடைந்து வருகின்ற காரணத்தினாலே இதில் ஈடுபட்டவர்கள் எல்லாம் விலகிச் செல்லக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்தத் தொழிலை மீண்டும் தக்க வைத்துக்கொள்வதற்கு, சாதாரணத் தொழிலாளர்கள் தொடர்ந்து இந்தத் தொழிலிலே ஈடுபடுவதற்கு அரசு முனைப்புக் காட்ட வேண்டும், அவர்களுக்கு மானியத்தோடு கூடிய கடன் கொடுக்கப்பட வேண்டும், ஊக்குவிப்புப் பயிற்சிகளும் வழங்கப்பட வேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே ஊரகத் தொழில்கள்; இன்று ஊரகத் தொழிலிலும், கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய சாதாரணத் தொழிலாளர்கள், தொடர்ந்து பரம்பரையாகச் செய்து வந்த தொழில்கள் முதலாக எல்லாத் தொழில்களும் நலிவடைந்து வருகின்றன. உதாரணத்திற்கு ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறேன். 1997-98-லே ஊரகத் தொழில்கள் என்று சொல்லக்கூடிய சிறு தொழிற்சாலைகள் 82,780 இருந்தன. அதிலே 14 இலட்சம் பேர் பணியிலே ஈடுபட்டிருந்தார்கள். இவர்கள் உற்பத்தி செய்த பொருட்களின் மதிப்பு ரூ.367 கோடியே 20 இலட்சம். இந்தத் தொழில், கூட்டுறவுத் துறை மூலமாக, அரசினுடைய நேரடிப் பார்வையிலே, அரசுத் துறைகள் சார்பாகவும் மற்றும் தனி நபர் கைவினைஞர்கள் சார்பாகவும் நடைபெற்று வந்தது. ஆனால், இது நாளடைவிலே மிகவும் நலிவடைந்து இதிலும் ஏறக்குறைய பாதி நபர்களுக்கு மேலாக இந்தத் தொழிலை விட்டு வெளியேறுகின்ற சூழ்நிலை இப்போது உருவாகியிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலையை, இந்தத் தொழிலை மேம்படுத்துவதற்கு மேலும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12—30

அதைப்போலவே பெரும் தொழில்கள். பெரும் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் என்று பார்க்கின்ற நேரத்திலே இப்போது



மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இறக்குமதிக் கொள்கைதான் இந்தப் பாதிப்புக்குக் காரணம். W.T.O.-ஐப் பார்க்கிறோம். இதனால் நம் நாட்டுக்கு எவ்வளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை நான் உண்மையாக உணர்ந்து பேசுகிறேன். ஆகவே நாம் ஏற்றுமதி செய்யக்கூடிய அந்த நிலைக்கு மாறாக, இன்று இறக்குமதிக் கொள்கையினாலே நம்முடைய பொருட்கள் எல்லாம் உற்பத்தி செய்தும் ஏற்றுமதி செய்யமுடியாமல், உலகச் சந்தையிலே நாம் போட்டி போட முடியாமல், குறைந்த விலைக்கு வாங்கக்கூடிய வெளிநாட்டுப் பொருட்கள்மீது நம்முடைய மக்கள் மோகம் கொண்டிருக்கிற காரணத்தினாலேயும், அவற்றை அவர்கள் அதிகமாக வாங்குகிற காரணத்தினாலேயும்தான் நாளுக்கு நாள் நம்முடைய தொழில் நசிந்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். இதற்கு மத்திய அரசும் காரணம் என்று சொல்கிறோம். இருந்தாலும்கூட மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். நம்முடைய மாநில அரசினுடைய பொருளாதார மேம்பாட்டிற்காக இந்த மாமன்றத்திலேகூட ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பலாம் என்பதை இந்த நேரத்திலே என்னுடைய ஆலோசனையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இந்த W.T.O. நமக்கு மிகப் பெரிய பாதிப்பை உண்டாக்குகிறது என்பதை மேலும் மேலும் இங்கே வலியுறுத்துகிறேன்.

அதைப்போலவே இப்போது உலக நாட்டுத் தரத்தோடு ஒப்பிடக்கூடிய வகையிலே நம்முடைய தொழில்கள் மேம்பாடு அடைவதற்கு நவீன தொழில் நுட்பத்தை நாம் புகுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். பழைய தொழிற்சாலைகளை எல்லாம் மூடக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் மூடிய ஆலைகள் திறக்கப்படவே இல்லை. நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே, நிதிநிலை அறிக்கையிலேகூட மூடிய ஆலைகளைத் திறப்பதற்குண்டான அம்சங்கள் எதையுமே சொல்லவில்லை. ஆகவே பஞ்சாலைத் தொழிற்சாலைகள் ஏராளமாக மூடப்பட்டு, வாழ்க்கைக்கு உத்தரவாதம் இல்லாமல் தொழிலாளர்கள் எல்லாம் நீண்ட காலமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மூடிய பஞ்சாலைகளைத் திறப்பதற்கும், வேலையிழந்தவர்கள் மீண்டும் வேலைக்குச் செல்லவும் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். கடந்த ஐந்தாண்டு காலமாக இதையே நாங்கள் வற்புறுத்திப் பேசினோம். எதுவும் நடைபெறவில்லை. ஆனால் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள இந்த அரசு அதிலே முனைப்புக் காட்ட வேண்டுமென்று நான் இங்கே ஆர்வத்தோடு சொல்லிக்கொள்கிறேன்.

அதைப்போலவே இப்போது மிகப் பெரிய பிரச்சினை, ஜெயங்கொண்டம் நிலக்கரித் தொழிற்சாலைப் பிரச்சினை. கடந்த ஐந்தாண்டுக்காலமாக அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் போராடி வருகிறார்கள். அதைப்பற்றிப் பேச வேண்டுமென்று சொன்னால் நீண்ட நேரம் ஆகும். நான் சுருக்கமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகள் இரண்டு, மூன்று தலைமுறையாக, காலம்காலமாக அந்த மேட்டு நிலத்தையே நம்பி வாழக்கூடியவர்கள். அந்த நிலத்திலே கறுப்புத் தங்கம் என்று சொல்லக்கூடிய நிலக்கரி இருக்கிறது. ஆகவே அப்படி விலைமதிப்பில்லாத, கறுப்புத் தங்கம் என்று சொல்லக்கூடிய நிலக்கரியை - பூமியிலே இருக்கக்கூடிய அதையெல்லாம் மனதிலே கொண்டு - நம்முடைய அரசு, தனியாருக்குக் கொடுப்பதற்காக அந்த நிலத்தைக் கையகப்படுத்துகிறது. அப்படிக் கையகப்படுத்துகிற நேரத்திலே முயற்சிகள், போராட்டங்கள், பேச்சுவார்த்தைகள் என்று வந்த நேரத்திலே அந்தப் பகுதியிலே வாழக்கூடிய ஏழை எளிய சாதாரண விவசாயிகள் ஏக்கருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி ஏக்கருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் என்று சொல்லி கோரிக்கை வைத்துப் போராடிக் கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையிலே அரசினுடைய நடவடிக்கை எப்படி இருக்க வேண்டும்? அவர்களுடைய போராட்டத்தைத் தீர்க்கக்கூடிய வகையிலே, உணர்வுகளை மதிக்கக்கூடிய வகையிலே இல்லாமல், இப்போது அரசு ஏக்கருக்கு 25 ஆயிரம், 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீடு செய்து வங்கியிலே deposit செய்துவிட்டது. அதுமாத்திரமல்ல. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய கிராமங்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, பாதை வசதி, தெரு விளக்கு வசதி போன்ற அடிப்படை வசதிகளையெல்லாம்கூடச் செய்து கொடுக்காமல் நிறுத்தி வைத்து அந்த மக்களுக்கு நெருக்கடியைக் கொடுக்கிறது. எப்படியாவது அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களையெல்லாம் அப்புறப்படுத்த வேண்டும், அகற்ற வேண்டும் என்று சொல்லி மறைமுகமாக அச்சுறுத்துகிறது. காவல் துறையை வைத்து மிரட்டவும் செய்கிறார்கள். ஆகவே நம்முடைய அரசு இதிலே அதிகக் கவனம் செலுத்த வேண்டும். அந்த விவசாய நிலங்களை விட்டுவிட்டால் பிழைப்புக்கு அவர்களுக்கு வழி கிடையாது. அரசும் செய்வதில்லை. ஒரு தனியார் கம்பெனிக்குத் தாரை வார்த்துக் கொடுக்க இருக்கிறோம். ஆகவே அங்கே விலை மதிக்க முடியாத நிலக்கரி இருக்கின்ற காரணத்தினாலே அந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் தொகை வழங்க வேண்டும். அதே நேரத்திலே நிலம் கொடுப்பவர்களுக்கு வீட்டுக்கு



ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டும். அங்கே இருக்கக்கூடியவர்கள் எல்லாம் சாதாரண ஏழை மக்கள்; கூரை வீடு, குடிசை வீடுதான். ஆகவே அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது, குடிநீர் வசதி, மருத்துவ வசதி, அவர்கள் குழந்தைகள் படிப்பதற்கு—

*பிற்பகல் 12—35*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலம் கொடுப்பவர்களுக்குத் தனியாக - இரண்டாயிரத்து சொச்சம் குடும்பங்கள் இருக்கின்றன - இடம், சாலை வசதி ஏற்படுத்தவும், கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கவும் நம்முடைய TIDCO-வும் அந்தத் தனியார் நிறுவனமும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. ஆனால் அவர்கள் இடத்திலேயுள்ள variation காரணமாகத்தான் இப்போது பிரச்சினையாக இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு அவர்கள் 5 இலட்சம் ரூபாய் கேட்கிறார்கள். அரசினுடைய மதிப்பீடு 20 ஆயிரம்; 25 ஆயிரம்; 40 ஆயிரம் ரூபாய்தான். அதில் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சுட்டிக்காட்டினேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சகோதரி யசோதா அவர்கள் சொன்னார்கள், இங்கே ரூபாய் 30,000-க்கு விவசாய நிலத்தைப் பிடுங்கி, தனியாருக்கு 12 இலட்சம் ரூபாய்க்குக் கொடுத்ததாகச் சொன்னார்கள். ஆகவே இது தனியாருக்குக் கொடுக்கக்கூடிய, நிலக்கரி இருக்கக்கூடிய நிலம். இதற்கு அரசு கூடுதலாகக் கொடுப்பதற்கு முன்வரவேண்டுமே தவிர, அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி 20 ஆயிரம், 25 ஆயிரம் ரூபாய் என்பது எல்லாம் எந்தக் காலத்திலோ இருந்த நிலை என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

அதுமாத்திரமல்ல. வீடு கட்டிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். இங்கே சேலத்திலே இரும்பாலை இருக்கிறது. உங்களுக்கெல்லாம் தெரியும். அப்பொழுது ஒப்பந்தம் போடப்பட்டது. போடப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆயின? நாங்கள் எல்லாம்கூடப் போராட்டம் செய்தோம். அங்கே வீடு கட்டுவதற்காக நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதே தவிர - நானும் அதிலே போராட்டம் செய்து கைதானேன் - இத்தனை ஆண்டுகள் ஆகியும்கூட அங்கே வீடு கட்டிக் கொடுக்கப்படவில்லை. நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகிற நேரத்திலே அப்படிச் சொல்லப்படுகிறதே தவிர, அது தீர்க்கப்படுவதில்லை. இதிலே முனைப்பாகச் செயலாற்றுவதற்காக அரசு

அக்கறை செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு கூடுதலான தொகையைக் கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர் வேறு சொல்லிக்கொண்டே இருக்கிறார்; இங்கே கோடிட்டுக் காட்டுகிறார்கள். இதைப்போல நாட்டிலே தொழில்களை ஊக்குவிப்பதற்கு, நவீன தொழில் நுட்பத்தைப் புகுத்துவதற்கு, பன்னாட்டு நிறுவனங்களோடு போட்டியிட்டு நம்முடைய நாட்டுத் தொழில்கள் வளருவதற்கு அரசு வல்லுநர் குழு அமைக்க வேண்டும். அந்த வல்லுநர் குழுவின் ஆலோசனைப்படி இந்தத் தொழில்களை மேம்படுத்துவதற்காக அரசு எல்லா ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்றே ஒன்று. தமிழகத்திலேயே மிகப் பின்தங்கிய மாவட்டம் தருமபுரி மாவட்டம். காலையிலே டெல்லிக்கு தொலைபேசியிலே தொடர்பு கொண்டு பேசினேன். டெல்லியிலே மத்திய அரசாங்கம் என்பது 100 மாவட்டங்களை மிக, மிகப் பின்தங்கிய மாவட்டங்களாகத் தேர்வு செய்திருக்கிறது. ஆனால் நம்முடைய தமிழ்நாட்டிலே பின்தங்கிய மாவட்டம் என்று ஒன்றுகூடத் தேர்வு செய்யப்படவில்லை என்ற வருத்தமான செய்தியை காலையிலே கேட்டு அறிந்தேன். தருமபுரி மாவட்டம் மிகப் பின்தங்கிய மாவட்டம்; இராமநாதபுரம் மாவட்டமும் பின்தங்கிய மாவட்டம். இப்படிப் பல்வேறு மாவட்டங்கள் இருக்கின்றன. ஆனால் மத்திய அரசுப் பட்டியலில் நமது பின்தங்கிய மாவட்டங்கள் இல்லாத காரணத்தினால் நம்முடைய தமிழக அரசு தருமபுரி, இராமநாதபுரம் மற்றும் வேலூர் போன்ற பின்தங்கிய மாவட்டங்களைச் சேர்ப்பதற்கு ஆர்வம் காட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஐரோப்பாவின் நோயாளி துருக்கி என்று சொல்வார்கள். அதைப்போல தமிழ்நாட்டினுடைய நோயாளியாக தருமபுரி மாவட்டம் இருக்கிறது. அதிலும் படுத்த படுக்கையாகவே இருக்கக்கூடியது என்னுடைய தொகுதி. மிகமிக நோயாளியாக இருக்கக்கூடியது என்னுடைய தொகுதி. என்னுடைய தொகுதி மலைகள் நிறைந்த, காடுகள், மேடு பள்ளங்கள் நிறைந்த பகுதி; சிறு விவசாயத்தையே நம்பி வாழக்கூடிய பகுதி. அங்கே வாழக்கூடியவர்கள் எல்லாம் கரும்பு அறுவடை செய்வதற்கு, நெல் அறுவடை செய்வற்கு வெளி மாவட்டங்களுக்குச் செல்வார்கள். கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற வட மாநிலங்களைவிட (குறுக்கீடு)



**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் இந்த அவைக்கு, தன்னுடைய சொந்த மாவட்டம் என்பதற்காகத் தவறான தகவலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 1991-லேயிருந்து 1996 வரை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது - 1967-க்குப் பின்பு; 25 ஆண்டுகாலம்; அதுவும் அது தனி மாவட்டமான பின்பு அந்த 5 ஆண்டுகாலத்திற்குள்ளாக - 5 கல்லூரிகளையும், 5 தொழிற் பயிற்சிக் கல்லூரிகளையும் கொடுத்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் பல்வேறு தொழிற்சாலைகள் அந்த மாவட்டத்திற்கு அந்த 5 ஆண்டு காலத்தில் வந்திருக்கின்றன. ஏற்கெனவே, மறைந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பாராளுமன்றத்திலே உறுப்பினராக இருந்தபோதும் பல்வேறு தொழிற்சாலைகள் அங்கே வந்திருக்கின்றன. அது இப்போது நல்ல முறையில் வளர்ந்து கொண்டிருக்கிற மாவட்டமாக இருக்கிறது. எனவே தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகவும், அங்குள்ள மக்களை வேறு வகையிலே திசை திருப்புவதற்காகவும் புரட்சித் தலைவி அரசு செய்த, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு செய்த சாதனைகளை இங்கே இருட்டடிப்புச் செய்யக்கூடாது என்பதை மாண்புமிகு அவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முனுசாமி, அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. இன்னும் வேண்டும் என்பதற்காகத்தான் கேட்கிறார்.

பிற்பகல் 12—40

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இருட்டடிப்புச் செய்யவில்லை. மிகவும் பின்தங்கிய மாவட்டம்; நலிவுற்ற மாவட்டம். நீங்கள் சொல்கிறீர்கள், வளர்ந்துகொண்டிருக்கின்ற மாவட்டம் என்று. உண்மைதான், இல்லையென்று சொல்லவில்லை. அழுத பிள்ளைதான் பால் குடிக்கும். நீங்களும் சேர்ந்து என்னோடு அழ வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டு முன்னேறிய மாவட்டம் என்று சொன்னீர்கள் என்று சொன்னால், அது நிச்சயமாக ஏற்புடையதாக இருக்காது. மத்திய அரசின் பட்டியலிலே சேர்க்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். உங்களுக்கும் சேர்த்துச் சொல்கிறேன். பின்தங்கிய மாவட்டப் பட்டியலிலே சேர்க்க வேண்டும். நீங்கள்கூட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். என்ன செய்திருக்க வேண்டும்! சேர்த்திருக்க வேண்டுமா? வேண்டாமா? ஆகவே,

உங்களுக்கும் சேர்த்துப் பேசுகிறேன். அந்த மாவட்டத்தைப் பின்தங்கிய மாவட்டப் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று நான் மெத்தப் பணிவோடு அவருக்கும் சேர்த்துக் கேட்டு அமர்கிறேனே தவிர, வேறு காரணங்களுக்காக அல்ல என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு) நான் உங்களைக் குறை சொல்லவில்லை. வளர்ந்து கொண்டிருக்கின்ற மாவட்டம் என்று சொன்னீர்கள். அதை ஒத்துக்கொள்கிறேன்.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மத்திய சர்க்கார் சேர்க்க வேண்டுமென்று சொல்கிறார். அதில் ஒன்றும் தவறில்லை.

**திரு. ஜி.கே. மணி:** அவருடைய தொகுதியையும் சேர்த்துச் சொல்கிறேன். அவர்கூடச் சொன்னார், ஓசூர் பகுதியிலே தொழிற்சாலைகள் இருக்கின்றன என்று. நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அங்கே கர்நாடகா, ஆந்திராவிலே இருக்கிறவர்களுக்குத்தான் வேலை; தமிழ்நாட்டிலே இருக்கிறவர்களுக்கு வேலையேயில்லை. அது எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும்கூட, அந்த மாவட்டத்தினுடைய முன்னேற்றத்திலே அக்கறை செலுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நான் கோரிக்கையாக வைக்கிறேன். மத்திய அரசுப் பட்டியலிலே இந்த மாவட்டத்தைச் சேர்க்க வேண்டும் என்பது என்னுடைய முக்கிய நோக்கம். அதையும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே தேசிய நெடுஞ்சாலை வருகிறது; இரயில்வே பாதை வசதியிருக்கிறது; அருகிலேயுள்ள தருமபுரியையொட்டி இருக்கிறது. ஆகவே தொழில் தொடங்குவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. நல்ல பூக்கள் எல்லாம் விளைகின்றன. வாசனைத் திரவியங்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் கொண்டு வரலாம்; நல்ல தரமுள்ள பருத்தி விளைகிறது. நூற்பாலைகள் கொண்டு வரலாம்; இப்படித் தொழில்கள் தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே சொல்கிறேன். படித்த இளைஞர்கள் எல்லாம் வேலையில்லாத் திண்டாட்டத்தினாலே பெங்களூருக்குச் சென்று கட்டுமானப் பணி போன்ற பல்வேறு தொழில்களைச் செய்கிறார்கள். தீவிரவாதம் எல்லாம் வளர்ந்துகொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே அதைப் போக்குவதற்கு என்னுடைய பகுதியிலே தொழிற்சாலைகளைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒரு முக்கியமான பிரச்சினை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். சர்க்கரை ஆலைகளை
எல்லாம் மூடிக்கொண்டிருக்கின்ற அபாய நிலை ஏற்பட்டிருக்கிறது.
ஆகவே மூடப்படாமல் அதையும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க
வேண்டும். இந்தப் பொதுத் துறை நிறுவனங்களில் ஏற்படும் நட்டத்தை
ஈடுகட்டுவதற்காக, இழப்பை ஈடுகட்டுவதற்காக தனியார் துறைக்குக்
கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல்
பொதுத் துறையை ஊக்குவித்து தொடர்ந்து பொதுத் துறை
நிறுவனங்களைத் தனியாருக்குக் கொடுக்காமல் இருக்க வேண்டுமென்று
பாட்டாளி மக்கள் கட்சியின் கருத்துகளை வலியுறுத்தி, இத்தோடு
அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன். ஐந்து
மணித்துளிகளில் பேசி முடித்துவிடுங்கள். இரண்டு அமைச்சர்கள் பதில்
சொல்ல வேண்டும். (குறுக்கீடு) திருமதி டி. யசோதா. திரு. ஜி.கே.
மணியிடம் கேட்க வேண்டுமென்றால், பக்கத்திலேயே இருக்கிறார்
கேளுங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
உங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்களிடத்திலே
நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இப்போது நலிந்த மாவட்டங்கள்
என்று தமிழகத்திலேயிருந்து ஒரு மாவட்டம்கூடத் தேர்ந்தெடுக்கப்
படவில்லை என்ற அவர்களுடைய ஆதங்கத்தை நானும்
ஒத்துக்கொள்கிறேன். மத்திய அரசாங்கம் மாற்றாந்தாய்
மனப்பான்மையுடன் நடந்துகொள்கிறது என்பதற்கு இதைவிட வேறு
உதாரணம் தேவைப்படாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனாலும்கூட,
நீங்களும் அதிலே அங்கம் வகித்திருக்கிறீர்கள். ஆகவே உங்களுடைய
பணியினையும் தமிழகத்தின் சார்பாக நானும் எதிர்பார்க்கிறேன்.
அதேபோல, மேற்கொண்டு இந்தப் பணிகளை ஆற்றுகின்றபோது கட்சிக்
கண்ணோட்டம் பாராமல், தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துக் கட்சி
நாடாளுமன்ற உறுப்பினர்களும், மத்தியிலே இருக்கின்ற
அரசாங்கத்தினிடத்திலே கேட்டு, நலன்களைப் பெறுவதற்கும், நலிந்த
மாவட்டங்களை அறிவதற்கும் ஒருமுனைப்படுவார்களா என்று
தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இதைத்தான் கடந்த வாரம்கூட நான் இந்த மாமன்றத்திலே சொன்னேன்.
தமிழ்நாட்டினுடைய உரிமைகளைப் பாதுகாப்பதை, இந்த

மண்ணினுடைய உரிமைகளை வென்றெடுப்பதை, நாங்கள் மத்தியிலே கூட்டணியிலே இருந்தாலும்கூட ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டோம்; இந்த அரசுக்குத் துணையாக இருப்போம் என்பதை அன்றே வலியுறுத்திச் சொன்னேன். அதுமாத்திரமல்ல, கடந்த 10 ஆண்டுகளாகவும், அதற்கு முன்னாலும்கூட, மத்திய அரசுப் பட்டியலிலே தமிழ்நாட்டிலேயிருந்து ஒரு மாவட்டத்தையாவது சேர்க்க வேண்டுமென்ற எண்ணம் யாருக்கும் வரவில்லை. பாட்டாளி மக்கள் கட்சி மத்திய அமைச்சரவையிலே அங்கம் வகிக்கின்ற காரணத்தினாலேதான் இவற்றையெல்லாம் தெரிந்துகொண்டு தமிழ்நாட்டிலேயிருந்து பல்வேறு மாவட்டங்களைச் சேர்ப்பதற்கு முன்வந்திருக்கிறது. அங்கும் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். Proper channel என்று சொல்லக்கூடிய வகையிலே தமிழக அரசு மூலமாக அந்த மாவட்டங்களைத் தேர்வு செய்து அனுப்ப வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர, உங்களுடைய உரிமைகளையும், உங்களுடைய உணர்வுகளையும் மதித்து உங்களுக்கு நன்றி சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே கலந்துகொள்வதற்கான வாய்ப்பினை வழங்கியதற்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12—45*

தமிழகத்திலே கதர் - கிரா்மத் தொழில்கள் உட்பட அனைத்துத் தொழில்களையும் வளர்ப்பதற்கு பல்வேறு சலுகைகளை வழங்கியிருக்கக்கூடிய தமிழக அரசுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கை முறைக் காகித ஆலைகளைப் பொறுத்தவரையில் 1999 ஆம் ஆண்டுவரை தமிழகத்திலே 20 யூனிட்டுகள் செயல்பட்டுக் கொண்டிருந்தன. 1992 ஆம் ஆண்டு இந்த ஆலைகளில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று அன்றைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அறிவித்திருந்தாலும்கூட, திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அந்த உத்தரவை அமல்படுத்தாததன் விளைவாக, 1998 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்திற்கு அந்தத் தொழிலாளர்கள் சென்றதற்குப் பின்புதான் அந்த 'குறைந்தபட்சக் கூலிச் சட்டம்' என்பது கை முறைக் காகித அலகுகளில் அமலாக்கப்பட்டது. அதற்குப் பின்பு



20 யூனிட்டுகள் செயல்பட்டுக் கொண்டிருந்த தமிழகத்தில் இப்போது 15 யூனிட்டுகள் மூடப்பட்டிருப்பதாக ஒரு தகவல் வந்திருக்கிறது. மூடப்பட்டிருக்கிற 15 யூனிட்டுகளைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல இப்போது கதர், கிராமத் தொழில்களைப் பொறுத்தவரையில் அதிலே உற்பத்தி செய்யக்கூடிய பல்வேறு பொருட்கள் என்பது காதி-கிராப்ட் மூலமாகத்தான் விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதன் மூலம் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வாய்ப்பு என்பது இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையில் அந்தப் பொருட்களை இதர அங்காடிகள் மூலமும் விற்பனை செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று அந்தத் தொழில்களிலே ஈடுபடக்கூடிய தொழிலாளர்களுக்கு இப்போது மாதத்திற்கு ஏழு அல்லது எட்டு நாட்கள்தான் வேலை கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. இதை மாற்றுவதற்கு அனைத்துப் பகுதிகளிலும் அந்த விற்பனையை அதிகப்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அந்தத் தொழிலாளர்களுக்கு 'வருங்கால வைப்பு நிதித் திட்டம்' என்பது அமலாக்கப்பட வேண்டுமென்றும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று இப்போது சிறு தொழில் சம்பந்தமாக பல்வேறு விவரங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, தீப்பெட்டித் தொழில், தேயிலைத் தொழில் சம்பந்தமான விவரங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தமிழகம் ஐந்தாவது இடத்திலிருந்து முதலாவது இடத்திற்கு முன்னேறிவிட்டது, கோடிக்கணக்கான மூலதனம் தமிழகத்திற்கு வந்திருக்கிறது, ஹூண்டாய் தொழிற்சாலை, Ford தொழிற்சாலை, பீங்கான் தொழிற்சாலை வந்திருக்கின்றன என்றெல்லாம் கூறிக்கொண்டிருந்தார்கள். நான் பணிவன்புடன் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். சென்னை மாநகரத்திலேயிருக்கிற பின்னி ஆலை என்பது நூறு ஆண்டுகளுக்கு மேலானது. 1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மூடப்பட்டிருக்கிறது. Standard Motors தொழிற்சாலை என்பது நீண்ட காலமாக சென்னை மாநகரத்தில் மூடப்பட்டிருக்கிறது. Dunlop தொழிற்சாலை என்பது சென்னை மாநகரத்தில் மூடப்பட்டிருக்கிறது. இப்போது Ashok Leyland என்பது lay-off-ஐ நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

சென்னை மாநகரம் மட்டுமல்லாது, இப்போது தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய பல்வேறு இடங்களில இத்தகைய நிலை. இப்போது இன்ஜினியரிங் தொழிலிலே பெயர் பெற்ற கோயம்புத்தூரிலே உள்ள Textool தொழிற்சாலை படிப்படியாக மூடப்படக்கூடிய ஓர் அவல நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இப்போது மத்தியிலே ஆளக்கூடிய B.J.P.-திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டணி ஆட்சி கடைப்பிடிக்கக்கூடிய மக்கள் விரோத, தொழிலாளர் விரோத பொருளாதாரக் கொள்கை, தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு தொழில்கள் நசிவு அடையக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதைப் பணிவன்புடன் நான் சுட்டிக்காட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல 1991 ஆம் ஆண்டு தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியதிகாரத்தில் இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மூடப்பட்டிருந்த Binny ஆலையைத் திறப்பதற்கு இன்றைய முதல்வர் அவர்கள் 1992 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தைப் போடவில்லை, உத்தரவைப் போட்டார்கள், Binny ஆலையைத் திறந்தார்கள்; தொழிலாளர்களைப் பாதுகாத்தார்கள். ஆனால் 1998 ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் அவர்களால் போடப்பட்ட ஒப்பந்தம் இன்றுவரை அமலாக்கப்படவில்லை. 300-க்கும் அதிகமான Binny ஆலையினுடைய தொழிலாளர்கள் இறந்திருக்கிறார்கள் என்பதை நான் மெத்தப் பணிவோடு உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அங்கே பாதிக்கப்பட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சேலம் உருக்காலை சம்பந்தமாக பல்வேறு விவரங்கள் இந்த மாமன்றத்திலே சுட்டிக்காட்டப்பட்டன. இப்போது சேலம் உருக்காலை மட்டுமல்ல, இந்தியாவிலே இருக்கிற எட்டு உருட்டு, உருக்காலைகள் 'S.A.I.L.' என்ற அமைப்பின்கீழ் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏழு ஆலைகளைப் பாதுகாப்பதற்கு இந்தியாவில் இருக்கக்கூடிய பிற மாநில அரசுகள் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கின்றன. அருகிலே இருக்கக்கூடிய ஆந்திர மாநில அரசுகூட மத்திய அரசிலே அங்கம் வகிக்கவில்லை என்றாலும், விசாகப்பட்டினத்தில் இருக்கக்கூடிய உருக்காலையைப் பாதுகாப்பதற்கு 320 கோடி ரூபாயை கடந்த ஆண்டு பெற்றிருக்கிறார்கள். விசாகப்பட்டினம் ஆலை என்பது பாதுகாக்கப்பட்டிருக்கிறது. சேலம் ஆலை பாதுகாக்கப்பட வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் ஒரு தீர்மானம் ஏகமனதாக



நிறைவேற்றப்பட்டும்கூட, அந்த ஆலை பாதுகாக்கப்பட்டதா என்றால், இல்லை என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இதுபோன்று தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எண்ணற்ற தொழில்களை அழிக்கக்கூடிய கொள்கையை, இப்போது மத்தியிலே ஆளக்கூடிய பாரதிய ஜனதா கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் மேற்கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட கொள்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு இப்போது இந்தியாவிலே இருக்கக்கூடிய பல்வேறு அரசுகள் முயற்சிகளை மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலையில் அந்த அரசுகளுடன் இணைந்து, தமிழக அரசும் மத்திய ஆட்சியாளர்களுடைய கொள்கைக்கு எதிரான போராட்டத்திற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

தென் மாவட்டங்களைப் பொறுத்தவரையில் நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் தலைமையிலே அமைக்கப்பட்ட கமிஷன் சம்பந்தமாகப் பேசப்பட்டது. 1997 ஆம் ஆண்டிற்கு முன்பு, தென் மாவட்டங்களிலே சாதியக் கலவரங்கள் ஏற்பட்டபோது நீதியரசர் மோகன் தலைமையிலே ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது. அந்தக் கமிஷன் பரிந்துரைகள் அமலாக்கப்படவில்லை. நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் தலைமையிலே ஒரு கமிஷன் அமைக்கப்பட்டதேயொழிய, தென் மாவட்டங்களிலே தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு முந்தைய ஆட்சியாளர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைப் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நீதியரசர் மோகன் கமிஷனிலே ஒன்று சுட்டிக்காட்டப்பட்டது. தென் மாவட்டங்களிலே நடைபெறக்கூடிய சாதிய மோதல்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்றால், அந்த மாவட்டங்களிலே வாழக்கூடிய தாழ்த்தப்பட்ட இளைஞர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட இளைஞர்களுக்கும் வேலை என்பது வழங்கப்பட வேண்டும்; வேலை வழங்கப்பட வேண்டுமென்றால், புதிய ஆலைகள் உருவாக்கப்பட வேண்டும்; ஆலைகள் உருவாக்கப்பட வேண்டுமென்றால், ஆலைகளுக்கு, தொழிற்சாலைகளுக்கு அடிப்படையாக இருக்கக்கூடிய சேதுசமுத்திரத் திட்டம் அமலாக்கப்பட வேண்டும் என்று நீதியரசர் மோகன் அவர்கள் தனது பரிந்துரையிலே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். 150 ஆண்டுகாலக் கனவாக இருக்கக்கூடிய சேதுசமுத்திரத் திட்டத்தை அமலாக்குவதற்கு தமிழகத்திலேயிருந்து செயலாற்றக்கூடிய ஐந்து மத்திய அமைச்சர்கள் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்களா என்றால், இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை மெத்தப் பணிவன்போடு நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. கே. மகேந்திரன்] [2001 ஆகஸ்ட் 31

புதியதாகத் தமிழகத்திலே பொறுப்பேற்றிருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நீலகிரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய தேயிலைத் தோட்ட விவசாயிகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது போன்று, தமிழகத்திலே இருக்கக்கூடிய பல்வேறு சிறு தொழில்களை, குறிப்பாகத் தென் மாவட்டங்களிலே இருக்கக்கூடிய 7 இலட்சம் மக்கள் வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கக்கூடிய தீப்பெட்டித் தொழிலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு இந்தியாவினுடைய மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் W.T.O.-வில் கையெழுத்திட்ட விளைவுதான் இப்போது தென் மாவட்டங்களிலே தீப்பெட்டித் (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலிலே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய 7 இலட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டு மூன்று மாவட்டங்களிலே இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான தீப்பெட்டித் தொழிலாளர்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட்டத்தை நடத்தியபோது, அப்போது இந்த மாமன்றத்தில் முதல்வராக இருந்தவர், 'கடிதம் எழுதுகிறேன்' என்று சொன்னாரே தவிர, தீப்பெட்டித் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வது, இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் சார்பாகக் கடந்த ஆண்டு, அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய ஓரத்தநாட்டில் தொழில் வளர்ச்சி மாநாடு என்ற ஒன்றை நாங்கள் நடத்தினோம். நானும் கலந்து கொண்டேன்; மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கலந்துகொண்டார்கள். அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய வாய்ப்புகளைப் பயன்படுத்தி, மூலப்பொருட்களைப் பயன்படுத்தி தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும் என்றும் அவரும் பேசினார். நாங்களும் பேசினோம். அப்படிப்பட்ட வாய்ப்புகளை அந்த மாவட்டத்தில் அமலாக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும். இப்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் ஒருவர், 'ஆயிரக்கணக்கில் முதலாளிகள் இருக்கிறார்கள், இலட்சக்கணக்கிலே தொழிலாளர்கள் இருக்கிறார்கள், ஆனால் பயனாளிகள் கோடிக்கணக்கிலே இருக்கிறார்கள், அந்தப் பயனாளிகளினுடைய பயனைக் கணக்கிலே கொண்டுதான்



2001 ஆகஸ்ட் 31] [திரு. கே. மகேந்திரன்]

நாங்கள் திட்டத்தை நிறைவேற்றுகிறோம்' என்று சொல்கிறார்கள். தென் மாவட்டங்களில் தீப்பெட்டித் தொழிலாளர்கள் 7 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுவிட்டார்கள். கோயம்புத்தூரிலே பஞ்சாலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இன்ஜினியரிங் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. நீலகிரி மாவட்டத்திலே தேயிலைத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. மாநிலம் முழுவதும் தொழில்கள் பாதிக்கப்பட்டு, தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு, வேலை இழக்கும்போது பயனாளிகள் என்று சொல்லப்படக்கூடியவர்கள் எந்தப் பணத்தை வைத்து வெளிநாடுகளிலேயிருந்து இறக்குமதி செய்யப்படக்கூடிய பொருட்களை வாங்க முடியும் என்பதுகூட தெரியாமல் இருக்கிறார்கள். பல்வேறு உதாரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது)

இந்தியாவிலே இருக்கும் திட்டக் கமிஷனோ, மற்ற எந்தவோர் அமைப்போ கடந்த கால ஆட்சியாளர்களைப் பாராட்டியிருக்கிறார்களா என்றால் இல்லை. ஏனென்றால் அவர்கள் இந்தியாவிலே இருக்கக்கூடிய, தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்களுக்குச் சாதகமான கொள்கைகளைக் கடைப்பிடிக்காததனால் இந்தியாவிலே இருக்கக்கூடியவர்கள் பாராட்டவில்லை. அமெரிக்காவிற்கு ஆதரவான G-7 நாடுகளுக்கு ஆதரவான கொள்கைகளை மத்திய B.J.P. அரசும், திராவிட முன்னேற்றக் கழக அரசும் மேற்கொண்டதனால்தான் அமெரிக்க நாட்டினர் இவர்களைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்; இப்போது மத்திய ஆட்சியிலே அங்கம் வகித்துக்கொண்டிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகத்திலே இருக்கக்கூடிய தொழில்களைப் பாதுகாப்பதற்கு, சிறிய தொழில்களைப் பாதுகாப்பதற்கு, பெரிய தொழில்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அவையிலே சேலம் உருக்காலையைப் பாதுகாப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியதுபோல் மீண்டும் ஒரு தீர்மானத்தை நாம் வரும் ஆண்டிலேயாவது நிறைவேற்றலாம்.

இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினராக இருக்கும் மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்களும், நானும் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக சென்னையிலே இருக்கக்கூடிய I.C.F. தொழிற்சாலை பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஓர் உண்ணாவிரதப் போராட்டத்தில் சேர்ந்தே கலந்துகொண்டோம். காரணம் என்னவென்றால், இப்போது மத்தியிலே இருக்கக்கூடிய ஆட்சியாளர்கள் I.C.F.-க்குக் கடந்த ஆண்டு

1,200 பெட்டிகளை உற்பத்தி செய்வதற்கான orders வழங்கினார்கள். ஆனால் இந்த ஆண்டு வெறும் 799 பெட்டிகளைச் செய்வதற்கான orders மட்டும்தான் வழங்கியிருக்கிறார்கள். படிப்படியாக அந்த orders குறைக்கப்பட்டால், அந்த ஆலை மூடப்படக்கூடிய நிலைமை உருவாகும். அதற்கு எதிரான ஒரு தீர்மானத்தை நாம் நிறைவேற்றக்கூடிய சூழ்நிலையை உருவாக்காமல் மத்தியில் அங்கம் வகித்துக்கொண்டிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் நண்பர்கள் தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சியைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர். (குறுக்கீடு)

*பிற்பகல் 12—55*

**திரு. எ.வ. வேலு:** தலைவர் அவர்களே, Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஏதோ தொழிலாளர்களுக்கு விரோதமாக நாங்கள் பேசியதைப்போன்று அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். ஆனால் அப்படிப் பேசப்படவில்லை. ஒரு பக்கம் முதலாளிகள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். இன்னொரு பக்கம் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பல கோடி பேர் பயனாளிகள் இருக்கிறார்கள். இவர்கள் மூவரையும காப்பாற்ற வேண்டியது அரசுக்குரிய கடமை. எந்த அளவிலே அவர்கள் காப்பாற்றப்படப் போகிறார்கள் என்கிற வினாவை எழுப்பினேனேயொழிய, ஏதோ நாங்கள் தொழிலாளர்களுக்கு விரோதம் போன்றதொரு பிரமையை உருவாக்குகிறார்கள். அப்படி நான் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் ஓரத்தநாட்டில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, சரித்திர சிறப்புமிக்க இந்தப் பேரவையில் அமர வைத்த என் இதய தெய்வம் அம்மா அவர்களின் மலர்ப்பாதம் பணிகின்றேன். இதய தெய்வம் அம்மா அவர்கள்மீது கொண்ட விசுவாசத்தைத் தவிர எனக்கு வேறு எந்தப் பின்னணியும் இல்லை. தஞ்சை மாவட்டத்தில் பயிர் வைத்த அனுபவம் உண்டு.



இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இட்ட கட்டளையை ஏற்று, சிரமேற்கொண்டு 10 ஆண்டுகாலம் ஒன்றியத் துணைச் செயலாளராகவும, 10 ஆண்டுகாலம் ஒன்றியச் செயலாளராகவும், கிட்டத்தட்ட 20 ஆண்டுகாலம் இந்தக் கழகத்தில் பணியாற்றிய கோடானுகோடி தொண்டர்களில் கடைசித் தொண்டனாகிய என்னை நான் கனவிலேகூட நினைத்துப் பார்க்காத - சட்டமன்ற உறுப்பினர் பதவியைக்கூட நான் கனவிலே எதிர்பார்க்கவில்லை. ஆனால் - என்னைச் சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி, அமைச்சர் ஆக்கியிருக்கின்ற என்னுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை மீண்டும் வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் முதலிடத்தில் இருந்தது என்று சொன்னார்கள். அது தவறான செய்தி. அதாவது, கிட்டத்தட்ட ஏட்டளவில் அது 3-வது இடத்தில் இருந்தது. ஆனால், செயல்வடிவில் அது 6-வது இடத்தில் இருந்தது. ** உண்மைக்கு மாறான தகவலை இங்கே கூற வேண்டாம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தகவலை அவர் இங்கு தெரிவித்ததற்கு வருத்தப்படுகிறேன்.

மேலும், கணினிப் பயிற்சி என்பது இதய தெய்வம் - முன்னர் அண்ணன் நிதியமைச்சர் அவர்கள் இங்கு கூறியதுபோல (மணியடிக்கப்பெற்றது)—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன ** என்பது நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில்தான் Computer Science கல்லூரி மற்றும் Private Engineering கல்லூரிகள் தொடங்க அனுமதி கொடுக்கப்பட்டு, வருடத்திற்கு 25,000, 30,000 மாணவர்கள் படித்து வெளியில் வரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள். அப்படி இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களும், புரட்சித் தலைவி அவர்களும் ஏற்படுத்தியதன் காரணமாகத்தான் இந்த Software, Computer Engineering போன்றவற்றில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. அவ்வாறு இருப்பதற்கு வழிவகுத்தவர்கள் அவர்கள் இரண்டு பேர்களும்தான் என்பதை இந்தச் சபையில் சொல்லிக்கொள்ள நான் விரும்புகின்றேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[திரு. ஆர். வைத்திலிங்கம்] [2001 ஆகஸ்ட் 31

அதேபோல இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டை தொழில் துறையில் முதலிடத்திற்குக் கொண்டுவருவதற்காக வேண்டி மிகவும் பல அரிய திட்டங்களைக் கொண்டு வர இருக்கின்றார்கள். தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையிலே நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பதைப்போல, இந்தியாவிலேயே தமிழ்நாடு மிகவும் தொழில் வளம் மிக்க முதன்மை மாநிலமாகத் திகழ உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றார்கள்.

தமிழ்நாட்டிலே தொழில் வளர்ச்சி மேன்மேலும் பெருக வேண்டும் என்பதற்காக கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், தகவல் தொழில்நுட்பம், மின்சாரம், சாலை வசதிகள், இரயில், துறைமுக வளர்ச்சி, விமானதள வசதி, சுகாதார வசதிகள் போன்றவைகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு உரிய கவனம் செலுத்தும். புதிய தொழில் கொள்கை ஒன்றை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு வகுத்துள்ளது. புதிய தொழில் தொடங்குவதுபற்றி அரசுக்கு ஆலோசனை வழங்க ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படவுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்த்து புதிய தொழில்நுட்ப உத்திகளை இந்த மாநிலத்திற்குக் கொண்டு வருவதற்கும், வெளிநாட்டில் வாழும் இந்தியத் தமிழர்கள் கூட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தவும், மேலும் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கத்திலும் தலைமைச் செயலாளர் தலைமையில் ஏற்றுமதி வளர்ச்சிக் குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

*பிற்பகல் 1—00*

அதுபோல் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையில் வளர்ச்சிக்கான மாநில ஆலோசனைக் குழு மீண்டும் செயல்படும். அதிவேகமாக வளர்ந்துவரும் துறைகளில் ஒன்று தகவல் தொழில்நுட்பத் துறை. அதேபோன்று உயிர் தொழில்நுட்பவியலும் வெகு விரைவாக வளர்ச்சி அடையக்கூடிய வாய்ப்பு உள்ள ஒரு தொழில் பிரிவு ஆகும். எனவே இத்தொழில் பிரிவு தமிழ்நாட்டில் வளர்ச்சி அடைவதில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. இதற்காக இந்தியாவிலேயே முதன்முதலில் டைசன் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், அமெரிக்க நாட்டின் புகழ்பெற்ற கார்னெல் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப உதவியுடன் ரூபாய் 62.5 கோடி முதலீட்டில் சென்னை தரமணியில் அமைக்கவிருக்கிறது. இதற்கான தொழில்நுட்ப ஒப்பந்தத்தில் ஒரு வாரத்திற்கு முன்னால், அதாவது 25-8-2001 அன்று மாண்புமிகு



2001 ஆகஸ்ட் 31] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

முதலமைச்சர் அம்மா அவர்களின் முன்னிலையில் டிட்கோவும், கார்னெல் பல்கலைக்கழகமும் கையெழுத்திட்டுள்ளனர். இப்பூங்காவின் வேலைகள் வரும் செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு, 2002 ஆம் ஆண்டு செப்டம்பரில் கட்டி முடிக்கப்படும். இதில் 18,000 சதுர அடி பரப்பில் உயிரியல் மையம் ஏற்படுத்தவும் மற்றும் 1 இலட்சத்து 20 ஆயிரம் சதுர அடியில் 50 புதிய தொழில் நிறுவனங்களுக்கு இடவசதி அளிக்கவும், மேலும் இத்தொழில்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை மற்றும் கட்டுமான வசதிகளையும், அனைத்துத் தொழில்நுட்பத் தேவைகளையும் ஒரே இடத்தில் பெறவும் வழிவகுக்கும். சுமார் 20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உயிர் தகவலியல் மற்றும் மரபணு மையம் ஒன்றை அமைக்க டிட்கோ நிறுவனம் சக தொழில் முனைவோர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கக் கோரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மேலும் கடல்சார் உயிர் தொழில் நுட்பப் பூங்கா ஒன்று; திண்டுக்கல் அருகே மருந்துவகை தாவரங்கள் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றை சிப்காட் நிறுவனத்துடன் இணைந்து அமைக்க டிட்கோ நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எம்.ஜி.ஆர். திரைப்பட நகரம் எம்.ஜி.ஆர். அறிவுப் பூங்கா எனப் பெயர் மாற்றம் செய்யப்படும் என இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். புதிய அறிவியல் மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றங்களை ஊக்குவிப்பதற்கான ஓர் அமைப்பாக எம்.ஜி.ஆர். அறிவுப் பூங்கா நிச்சயமாகத் திகழும் என்று அம்மா அவர்கள் உறுதிபடக் கூறியிருக்கிறார்கள். தொழில்நுட்பத் துறைக்கு மேலும் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் சென்னையில் TIDEL - 2 பூங்கா அமைக்கப்படும்.

பழைய மகாபலிபுரம் சாலையிலுள்ள சிறுசேரியில் 1,000 ஏக்கருக்குக் கூடுதலாக மேம்படுத்தப்பட்ட நிலத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றினை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் ஏற்படுத்தி வருகிறது. பின்தங்கிய மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி ஏற்பட அரசு உரிய தொழில் திட்டங்களை வகுக்கும். எண்ணெய் சுத்திகரிப்பாலைத் திட்டம்; சுமார் 3,500 கோடி ரூபாய் முதலீட்டில் கடலூருக்கு அருகில் சுமார் 2,000 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராக இருந்தபோது 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அரசு அனுமதி பெறப்பட்டது. முதலில் டிட்கோவும், பென்னார் குழுமமும் இணைந்து கூட்டுத் துறையில் நிறுவ அனுமதி பெறப்பட்டது. பின்னர் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டதாலும் திட்ட முதலீடு உயர்ந்ததாலும் நாகார்ஜுனா

குழுமம் டிட்கோவுடன் இணைந்தது. இந்தத் திட்டப் பணிகளைத் துரிதப்படுத்தாத காரணத்தால் தாமதம் ஏற்பட்டது. இத்திட்டம் 2002-2003 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுவிடும். இத்திட்டத்தின் மூலம் 500 நபர்களுக்கு நேரடியாகவும், 1,500 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலை கிடைக்கும்.

அதேபோல் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதல்வராக இருந்தபோது நாப்தா இராக்கர் மற்றும் பாலிமர் பெட்ரோ கெமிக்கல் இரசாயனப் பொருட்கள் தயாரிப்பதற்கு ஒரு வளாகத்தை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை நிறைவேற்றுவதற்கு டிட்கோ நிறுவனம் மத்திய அரசிற்கு அதற்கான உரிமம் பெற 22-3-1996-ல் அதாவது புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் விண்ணப்பம் செய்தது. ஜூலையில் இத்திட்டத்திற்கான உரிமம் கிடைத்தது. சுமார் 6,000 கோடி மதிப்பீட்டில் ஜப்பானிய நிறுவனமான மிட்சுபிசி நிறுவனத்துடன் டிட்கோ நிறுவனம் கூட்டாகச் செயல்படுவதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. மிட்சுபிசி நிறுவனம் மற்றும் ஒரு முனைவோர் உதவியுடன் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்த முயற்சி மேற்கொண்டுள்ளது. இப்படித் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதற்காக, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 1—0.5*

மேலும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டில் சிமெண்ட் விலை 5 ரூபாய், 10 ரூபாய் குறைந்திருந்தது. நாங்கள் பொறுப்பேற்றவுடன், நான் தொழில் துறை அமைச்சராகி, சிமெண்ட் முதலாளிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி, பயனில்லை என்றவுடன் மீண்டும் சட்டத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் தலைமையில் சிமெண்ட் ஆலை அதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதன் பலனாக இன்றைக்கு சிமெண்ட் மூட்டை விலை கடும் வீழ்ச்சி அடைந்திருக்கிறது என்ற சந்தோஷமான செய்தியைச் சபையில் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு கோயம்புத்தூரில் ஒரு மூட்டை சிமெண்டின் விலை 135 ரூபாய். ஆனால் ஒரு load வாங்கினால் 125 ரூபாய்க்குக் கொடுப்பதற்குத் தயாராக இருப்பதாக இன்றைக்குத் தொலைபேசி மூலம் எனக்குத் தகவல் கிடைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் சென்னையில் சிமெண்ட் மூட்டை விலை இன்றைக்கு



130 ரூபாய்; சேலத்தில் 135 ரூபாய், திருச்சியில் 140 ரூபாய், மதுரையில் 135 ரூபாய். பார்த்தீர்களா, கடந்த ஆட்சியில் ஒரு போலியான விலையேற்றத்தை உருவாக்கி தமிழ்நாட்டு மக்களையும், தமிழ்நாட்டு கட்டடத் தொழிலாளர்களையும் ஏமாற்றிய அரசு போனவுடன், புரட்சித் தலைவி அரசு வந்த மூன்றே மாதங்களில் இன்றைக்கு, (குறுக்கீடு) நான் பேசி முடித்தவுடன் பேசலாம். (குறுக்கீடு) நான் பேசி முடித்தவுடன் பேசலாம். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிமெண்ட் விலையேற்றத்தைப் பற்றி அன்றைக்கு முதலமைச்சர்கூட பதில் சொன்னார்கள். இந்த சிமெண்ட் விலை ஏறுவது, இறங்குவது, இதைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம், குறைக்கிற அதிகாரம், இது அத்தனையும் மத்திய சர்க்காரிடத்திலே இருக்கிறது. நாங்கள் மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறோம். ஆகையினால் இப்போது சிமெண்ட் விலை குறைந்திருந்தால் மத்திய சர்க்காருக்குத்தான் அந்த credit போகுமே தவிர, குறைந்தால் நாங்கள், ஏறினால் அவர்கள் என்று சொன்னால் அது என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரே அதற்கு பதில் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களோடு சேர்ந்து சிமெண்ட் ஆலை அதிபர்களையெல்லாம் அழைத்துப் பேசி முடிவு செய்திருக்கிறோம் என்று அமைச்சர் சொன்னார்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** பேரவைத் தலைவர் அவர்களே, நிதி மற்றும் சட்ட அமைச்சர் தலைமையில் சிமெண்ட் ஆலை அதிபர்களை அழைத்துப் பேசியிருக்கிறோம். அதனால்தான் குறைந்திருக்கிறது. நாங்கள் எழுதியதன் காரணமாக, புரட்சித் தலைவி அவர்கள் எழுதியதன் காரணமாகத்தான் சிமெண்ட் விலை குறைந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, 3 வருடங்களாக ஏழைகளை, கட்டடத் தொழிலாளர்களைத் துன்பத்திற்கு ஆளாக்கி, ஒரு போலியான விலையேற்றத்தை உருவாக்கி, இன்றைக்கு கிட்டத்தட்ட 1,000 2,000 கோடி ரூபாயை இந்தியாவிலேயே ஒரு நல்ல பொறுப்பில் இருக்கின்றவர், இருக்கின்ற சிமெண்ட் ஆலைகளையெல்லாம் வாங்கி ஒரு போலியான விலையேற்றத்தை ஏற்படுத்தினார் என்று அன்றே சொன்னார் அண்ணன் நிதியமைச்சர் அவர்கள். அது உண்மை என்று நிரூபிக்கின்ற வகையில் அன்றைக்கு

நாங்கள் சிமெண்ட் ஆலை அதிபர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாகத்தான் இப்போது சிமெண்ட் விலை குறைந்திருக்கிறது. ஏனென்றால் தமிழ்நாடு அரசினுடைய உதவி அவர்களுக்குத் தேவை. தமிழ்நாட்டில் இருக்கின்ற சிமெண்ட் ஆலைகள், நமது ஆதரவு இல்லாமல் நிச்சயமாக இயங்க முடியாது. இந்த பயத்தில்தான் அவர்கள் குறைத்திருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், தமிழ்நாடு பேப்பர் தொழிற்சாலை, வெடி மருந்துத் தொழிற்சாலை மற்றும் டாமின் தொழிற்சாலை போன்றவையெல்லாம் இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் மணி அவர்கள், இங்கே ஜெயங்கொண்டம் நிலக்கரி ஆலையைப் பற்றிப் பேசினார்கள். நான் இரண்டு நாட்களுக்கு முன்னால் அதைப் பற்றி விசாரித்தேன். அங்கே இருக்கின்ற இரண்டாயிரத்து சொச்சம் குடும்பங்களுக்கு, தனியாக இடம் தேர்வு செய்து, சாலை வசதியுடன், பள்ளிக்கூடம், கான்கிரீட் வீடு, மின்சார வசதி, குடிநீர் வசதி எல்லாம் அந்தத் தொழிற்சாலை அதிபர்களும், டிட்கோவும் சேர்ந்து செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். மேலும் அங்கே ஒரு ஏக்கர் நிலத்தின் அரசாங்க மதிப்பு 25,000 ரூபாய். இப்போது அவர்கள் 40 ஆயிரம் ரூபாய்கூடக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை அளிப்பதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அங்கே உள்ள விவசாயிகளிடத்திலும், குடியிருப்பவர்களிடத்திலும் பேசி சாதகமான ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கி, நிச்சயமாக அங்கு தொழிற்சாலை கூடிய விரைவில் கொண்டுவரப்படும் என்பதை அண்ணன் அவர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—10

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 40 ஆயிரத்திற்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் ஒத்துக்கொள்ளவில்லை. 40 ஆயிரம் ரூபாய் என்பதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதை தயவுசெய்து கூடுதலாக்க வேண்டும். அதைவிட்டால் வேறு வழியில்லை.

**மாண்புமிகு திரு. ஆர் வைத்திலிங்கம்:** அங்கே குடியிருப்பவர்களிடம் பேசி ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்து, இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர் மகேந்திரன் அவர்கள், மூடிய ஆலைகளைத் திறக்க வேண்டும் என்று சொன்னார்கள். புரட்சித் தலைவி ஆட்சியில்தான் பின்னி மில் திறக்கப்பட்டது என்று அவரே சொன்னார். ஆனால், கடந்த 5 ஆண்டு காலம் ஆண்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏதாவது ஒரு மில் திறக்கப்பட்டதா என்று அவர்கள் சொன்னால் நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன். ஏதாவது ஒரு மில்லைக் கோடிட்டுக் காட்டுங்கள் என்று நான் அறைகூவல் விடுகின்றேன். யாரும் பதில் சொல்லத் தயாராக இல்லை. அந்த அளவுக்கு இருந்தது அவர்களுடைய தொழில் வளர்ச்சி, தொழில் கொள்கை. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் சர்க்கரை ஆலை அமைப்பது பற்றியும், ஒவ்வொரு தொகுதியிலும் தொழிற்சாலை அமைப்பது பற்றியும் இங்கே பேசியவர்கள் கூறினார்கள். தனியாகத் தொழிற்சாலை அமைப்பதற்கு அரசாங்கத்திடம் பணமில்லை. தொழில் முனைவர்கள் முன்வந்தால், டிட்கோ அவர்களுக்கு வேண்டிய வசதிகளை, இடம், மின்சாரம், சாலை வசதி, கட்டட வசதி போன்றவற்றைச் செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறது. எந்தத் தொகுதியில் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்றாலும் தொழில் முனைவர்கள் தேவைப்படுகிறார்கள். அதற்காகத்தான் ஒரு வழிகாட்டுதல் குழு இப்போது தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி புரட்சித் தலைவி அவர்கள், தமிழ்நாட்டைத் தொழில்மயமாக்கி, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக நிச்சயமாகக் கொண்டு வருவார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் 17 கோடியே 9 இலட்சத்து 33 ஆயிரத்திற்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று தொழில் பற்றிய மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பதிலுரையிலே நல்ல திருப்தி ஏற்பட்டிருக்கிறது. அதனால் நீங்கள் கவலைப்பட வேண்டாம், அமருங்கள். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெண்தாடி சிங்கம், ஈரோட்டுத் தங்கம், பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியார் அவர்களுடைய வேகத்தையும், தென்னகத்தின் காந்தியாகத் திகழ்ந்து வருகின்ற பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களுடைய அறிவையும், அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய விடிவெள்ளியாக விளங்கிக்கொண்டிருக்கின்ற, இந்திய அரசியல் சாசனத்தை உருவாக்கித் தந்த அண்ணல் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களுடைய சட்ட நுணுக்கத்தையும், அன்னை சத்தியா அவர்கள் ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வனாக விளங்கிக்கொண்டிருக்கின்ற, ராமாவரம் தோட்டத்து ரோஜாவாக என்றென்றும் திகழ்ந்து வருகின்ற, சத்துணவு தந்த சரித்திர நாயகனாக விளங்கிக்கொண்டிருக்கின்ற, துப்பாக்கித் தோட்டாக்களுக்குக்கூட தன்னுடைய தொண்டையில் இடம் வழங்கி, கடையேழு வள்ளல்களில் 8-வது வள்ளலாகச் சிறப்பை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்ற, மறைந்தும், மறையாமல் நம்முடைய இல்லங்களில் மாணிக்கத் தலைவராக, மக்கள் தலைவராக வாழ்ந்து வருகின்ற என் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தாயுள்ளத்தையும் ஒருங்கே பெற்ற, ஒப்பற்ற தலைவியாக, அலைமகளாகவும், கலைமகளாகவும், மலைமகளாகவும் எங்களது குடும்பத்தினுடைய குலமகளாகவும் விளங்கிக்கொண்டிருக்கின்ற, கடமையின் வடிவாகவும், கண்ணியத்தின் உயிராகவும், கட்டுப்பாட்டின் பிறப்பிடமாகவும், அன்பு, அறிவு, துணிவு ஆகியவற்றின் இலக்கணமாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற சமூக நீதி காத்த வீராங்கனை, தமிழக முதலமைச்சர், எங்களது குடும்பத்தினுடைய குலவிளக்கு, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிவன்போடு வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நல்லதொரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த, உருவாக்கித் தந்த, அந்த அன்னையினுடைய காலடிகளுக்கு, பொற்பாதங்களுக்குக் கோடானுகோடி நன்றி கூறுவதிலே மட்ட மகிழ்ச்சியடைகிறேன்.

*பிற்பகல் 1—15*

மாமன்றத்தினுடைய உறுப்பினர்கள் பேசுகின்றபோது, கடந்த நாட்களிலே சிறுதொழில் வளர்ச்சிக்காகவும், குறுந்தொழில் வளர்ச்சிக்காகவும் எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகளைப் பற்றியும், அ



நடவடிக்கைகளின் மூலமாக எந்த அளவிற்கு இன்றைக்கு இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்களாலும், பத்திரிகைத் துறை நண்பர்களாலும், தொலைக்காட்சி நண்பர்களாலும், வானொலி நண்பர்களாலும், ஏன், இன்னும் சொல்லப்போனால் மாற்றுக் கருத்துடைய மாற்றுக் கட்சிகளுக்குச் சொந்தமான தலைவர்கள் மத்தியிலேயும் இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நடவடிக்கைகளைத் துரித செயல்பாடுகளைப் பாராட்டுகின்ற காட்சியையும், மாட்சியையும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். தூங்குபவர்களை வேண்டுமானால் எழுப்பலாம்; ஆனால், தூங்குபவர்கள் போன்று நடித்துக்கொண்டிருக்கின்ற நண்பர்களை என்றைக்குமே எழுப்ப முடியாது, (மேசையைத் தட்டும் ஒலி) என்பது கிராமங்களிலே கூறப்படுகின்ற சான்றோர்களுடைய பழமொழியாகும். ஆனால், அந்தப் பழமொழியைக்கூடப் பொய்ப்பிக்கின்ற வகையிலே, அந்த நண்பர்கள் தூங்குவதுபோன்று பாசாங்கைக் காட்டிக் கொண்டிருந்தாலும்கூட, அவர்கள் தங்களையும் அறியாமல், இந்த ஆட்சியைப் பாராட்டிக்கொண்டு, முணுமுணுத்துக்கொண்டு இருக்கின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த அளவிலே நேரத்தினுடைய அருமையைக் கருதி, இன்றைக்கு சிறு மற்றும் குறுந்தொழில்கள் நலனிலே, இந்த அளவிற்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்தித் தந்திருக்கின்ற இந்த அரசுக்கு, ஒரு பானை சோற்றுக்கு, ஒரு சோறு பதம் என்பதைப்போல அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள், சிறு மற்றும் குறுந்தொழில்கள் பணியிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள், அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலதிபர்கள், தொழிலதிபர்கள் மட்டுமல்லாமல், அந்தத் தொழிற்சங்கங்களுடைய, தொழிலாளர்களுடைய அதிபர்கள், தொழிற்சங்கங்களுடைய உரிமையாளர்கள் எல்லாம், தமிழகத்தினுடைய தானைத் தலைவியாக, தங்கத் தலைவியாக, அழகுமிக்க தலைவியாக, அறிவுமிக்க தலைவியாக, முழு முதல் தலைவியாக விளங்குகின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக, 20-8-2001 நாளிட்ட 'இந்து' நாளிதழிலே பாராட்டிக்கொண்டிருக்கின்ற ஒருசில செய்திகளை மட்டும் நான் இந்த நேரத்திலே உங்களுடைய மத்தியிலே சொல்லிக்கொள்வதிலே மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

திருமுல்லைவாயிலில் தொழிற்பேட்டை அமைக்க எடுக்கப்பட்ட முடிவு, அரசாணை எண் 75-ஐத் திரும்பப் பெற எடுக்கப்பட்ட

நடவடிக்கை, விலை மற்றும் கொள்முதல் முன்னுரிமையை மீண்டும் கொண்டு வந்தது, மகளிருக்கான தொழிற்பூங்கா அமைத்தல் ஆகிய முடிவுகளைத் தொழில் முனைவோர் சங்கங்கள் பாராட்டியுள்ளன. தமிழ்நாடு சிறு தொழில்கள் சங்கத் தலைவர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையை, சிறு தொழில் சார்பு நிதிநிலை அறிக்கை என்று வர்ணனை செய்துள்ளார்; பர்ராட்டியுள்ளார்.

பிற்பகல் 1—20

மேலும், அரசு சிறப்பான அளவிலே சிந்தனை செய்து, சிறந்த நிறுவனங்கள் எதிர்பார்க்கும் வகையிலே சிறு தொழில்களுக்கான சிறப்புத் திட்டத்தை உருவாக்கியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

கிண்டி தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் அவர்கள் 'இந்த நிதிநிலை அறிக்கையில் கொள்முதலில் முன்னுரிமை; தொழிற்பூங்கா அமைப்பு; அயல்நாட்டில் வாழும் இந்தியர்களின் கூட்டமைப்பு ஆகியவை சிறு தொழில் நிறுவனங்களுக்கு உபயோகமாக அமைவதோடு, வேலையின்மைப் பிரச்சினையைச் சமாளிக்க உதவிகரமாக இருக்கும்' எனக் கருத்துத் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு சிறு மற்றும் குறுந்தொழில் சங்கத் தலைவரும், இந்த மாமன்றத்திலே உறுப்பினராகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்றவருமான வணக்கத்திற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்கள், 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் தொழில் முனைவோர்களுக்கென அறிவித்தத் திட்டங்கள் அனைத்தையும் மிகக் குறுகிய காலத்திலே நிறைவேற்றுவதாக நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது' எனப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய வணக்கத்திற்குரிய மாமன்றத்தினுடைய உறுப்பினர் அண்ணன் எ.வ. வேலு அவர்கள், ஏதோ மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே சிறு மற்றும் குறுந்தொழில்கள் பாதிக்கப்பட்டன என்றும், ஆனால், கடந்த ஐந்தாண்டு கால, முந்தைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே, சிறு தொழில் பாதிக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்கள். நான் அவருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், முந்தைய ஐந்தாண்டு கால ஆட்சியிலேதான் சிறு மற்றும் குறுந்தொழில்கள் அடக்கப்பட்டன; ஒடுக்கப்பட்டன; நசுக்கப்பட்டன என்பதை ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத்



தட்டும் ஒலி) அந்த வகையிலே மாண்புமிகு அண்ணன், நிதிநிலை அறிக்கையிலேகூட, நம்முடைய தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சி 1991 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரை 6.92 சதவிகிதமாக இருந்ததையும், மக்கள் விரோத நடவடிக்கை மேற்கொண்ட முந்தைய அரசில் 4.14 சதவிகிதமாக அந்தத் தொழில் வளர்ச்சி குறைந்தது என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். அதனுடைய அடிப்படையிலே சிறு தொழில் மற்றும் குறுந்தொழில் வளர்ச்சி, தமிழகத்தினுடைய காவல் தெய்வமாக விளங்கிக்கொண்டிருக்கின்ற எங்களது குடும்பத்தினுடைய குலவிளக்கு, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, 1991-96-லே 13.03 விழுக்காடாக இருந்தது; மக்கள் விரோத நடவடிக்கையை மேற்கொண்டு இருந்த முந்தைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே சிறு மற்றும் குறுந்தொழில்கள் வளர்ச்சி 1996-2000 வரை 10.94 விழுக்காடாக வீழ்ச்சியடைந்திருந்தது என்பதை நான் ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் சிறு தொழில் உற்பத்தியைப் பொறுத்தமட்டில், 1991-96-லே 15.66 விழுக்காடாக இருந்தது; இது 1996-2000-ல் 10.41 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இதேபோல, சிறு தொழில் வேலைவாய்ப்புப் பெருக்கம் 1991-96-ல் 11.18 விழுக்காடாக இருந்தது; இது 1996-2000-ல் 8.32 விழுக்காடாகக் குறைந்துள்ளது என்பதை மாண்புமிகு மன்றத்தினுடைய உறுப்பினர்கள் அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். மனசாட்சி உள்ளவர்கள் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும்; நினைவு கூறவேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அரசாணை எண் 75 மூலம் கொள்முதல் கொள்கையில் கொள்ளையடித்து, கோடிகோடியாய்க் குவித்த நிலை மாற்றி– (குறுக்கீடு) I am not yielding. தயவுசெய்து அமர வேண்டும். I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, அமைச்சர் சொல்லி முடித்தவுடன் வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடு) அமைச்சர் பதிலுரை சொன்னபின் உங்களுக்கு வாய்ப்பினை உறுதியாகத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** கொள்முதல் கொள்கையில் கொள்ளை அடித்து, கோடிகோடியாய்க் குவித்த நிலை மாற்றி, அரசாணை எண் 75-ஐ இரத்து செய்து, தமிழ்நாட்டிலேயே கொள்முதல் செய்து, சிறு மற்றும் குறுந்தொழில் அதிபர்களின் மனப்புழக்கத்தைப் போக்கி, நாட்டில் பணப் புழக்கத்தை ஏற்படுத்தியவரே, தமிழகம் தழைக்க தன் சொந்த

வாழ்க்கையை அர்ப்பணித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அணிகலன்களையெல்லாம் அகற்றி, ஆண்டவர்களின் அகம்பாவங்களையெல்லாம் அகில உலகமும் அறிய வைத்து, ஏழை எளியவர், பாட்டாளி, சிறு மற்றும் குறுந்தொழில் அதிபர்களின் நலனைக் காக்க, அவர்தம் வாழ்க்கைத்தரம் உயர, தொழில் அளித்து, நிற்க வழி செய்துள்ள தலைவி; என் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும்கூடச் சொல்லப்போனால், அகில உலகத்திலேயிருந்து இன்றைக்கு நம்முடைய நாட்டிற்குச் சுற்றுலாப் பயணிகளாக வரவேண்டுமென்றால், ஒன்று, ஊட்டிக்கு வர வேண்டும், நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே. ஆனால், ஊட்டியிலே இருக்கின்ற சிறு மற்றும் விவசாயக் குடும்பங்கள் எந்த அளவிற்குக் கடந்த கால ஆட்சியிலே நசுக்கப்பட்டனர்; எந்த அளவிற்கு ஒடுக்கப்பட்டனர்; எந்த அளவிற்கு அவர்கள் போராடினார்கள் என்பதையெல்லாம் இந்த மாமன்றத்தினுடைய பெருமக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த அளவிலே ஏழைகளின் காஷ்மீர் என்று அழைக்கப்படுகின்ற ஊட்டியில், அங்கே வாழ்கின்ற-மன்னிக்கவும், அங்கே வாழவில்லை. கடந்த கால ஆட்சியிலே தேயிலைத் தோட்ட விவசாயிகள் வாடினார்கள்; வதங்கினார்கள்; வேருக்கு வெந்நீரும், விவசாயிக்குக் கண்ணீரும்தான் திராவிட முன்னேற்றக் கழகம் தந்த பரிசு-தேயிலைத் தோட்ட விவசாயிகள் கடந்த கால ஆட்சியில் பசியாலும், வறுமையாலும் வாடினார்கள். ஆனால் அவர்களது கோரிக்கைகளுக்கும், குரலுக்கும், கண்ணீருக்கும், துக்கத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்தப் பதிலும் சொல்லவில்லை. தேயிலைக்கு விலை இல்லை. கூலி உயர்வு கேட்டான் அத்தான்; குண்டடிபட்டு செத்தான் அத்தான் என்று கதை வசனம் எழுதியவர்கள், வியர்வை சிந்தி, தான் உற்பத்தி செய்த தேயிலைக்கு விலை கேட்டபோது, தடியடியைப் பரிசாகத் தந்து சித்திரவதை செய்த காட்சியை மாமன்றத்தினுடைய உறுப்பினர்கள் அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். இதுதான் ஏழை மக்களிடம் அவர்கள் காட்டிய அணுகுண்டு முறை. மலை உயரத்தில் வாழ்ந்தவர்கள் தாழ்ந்தார்கள்; வீழ்ந்தார்கள். கண்ணீரோடு வீதியிலே நின்ற தேயிலை விவசாயிகளுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாசக்கரம் நீட்டினார்கள், நேசக்கரம் நீட்டினார்கள், அன்புக்கரம் நீட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1—25

அநீதியை இழைத்து, நீதிமன்றத்தில் பொய்யாகப் போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற்று நீதி வழங்கி, நிதிப் பற்றாக்குறையிலும்



பாதிக்கப்பட்ட 20 நபர்களை சென்னைக்கு அழைத்து ரூபாய் 31 இலட்சத்து 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டு வழங்கியிருக்கின்ற நீதி தேவதை எங்கள் தாய், தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகள், பட்டினி கிடக்கக் கூடாது; பாதிக்கப்படக் கூடாது; நலிவுற்று, நசிவுற்று இருக்கக் கூடாது; துன்பத்தோடும், துயரத்தோடும், வறுமையோடும் வருத்தத்தோடும் வாழக் கூடாது. வீழ்ச்சியுற்ற தேயிலை விவசாயிகளுக்கு எழுச்சியூட்ட, துன்பம் வருகின்றபோது இறகுகளால் தன் குஞ்சுகளைப் பாதுகாக்கும் தாய்ப் பறவைகளைப் போல, அரசே ஏலத்தின் மூலம் தேயிலையைக் கொள்முதல் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) ஊட்டி என்கின்ற பெயரிலே தமிழ்நாடு பட்டிதொட்டியெல்லாம் நியாய விலைக் கடைகள் மூலமும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமும் விற்பனை செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அம்மா அவர்கள் ஆணை வழங்கிய உடனே வீழ்ச்சியுற்ற பச்சைத் தேயிலையின் விலை தற்போது கூடியிருக்கின்றது என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் 28-8-2001 அன்று தன்னுடைய திருக்கரங்களாலே விற்பனையைத் தொடங்கி வைத்து, வாடிய, வதங்கிய நெஞ்சங்களைக் குளிர வைத்தார். தேயிலையைக் கடந்த காலத்திலே 'தூள்' என்று எள்ளி நகையாடியவர்கள் வியக்கும்வண்ணம் சாதனை படைத்து, அன்று காய்ந்த சருகாக வாடியவர்கள், இன்று பசுந்தளிர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்; அன்னையை வாழ்த்துகின்றார்கள்.

இன்றைக்கு எனக்கு முன்னாலே பேசிய மன்றத்தினுடைய உறுப்பினர்கள் எல்லாம் நேரத்தினுடைய அருமையைக் கருதி பேசாமல்கூட இருந்திருக்கலாம். அருமை அண்ணன் சுந்தரம் போன்றவர்கள், அருமை அண்ணன் வெங்கடாசலம் போன்றவர்கள் எல்லாம் பல்வேறு நிலைகளிலே கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நாட்டிற்குத் தெரிந்தது, தமிழகத்திற்குத் தெரிந்தது ஏதோ நீலகிரி மாவட்டத்தினுடைய விவசாயப் பெருமக்கள்தான் இன்றைக்கு அல்லல்பட்டார்கள், கடந்த 5 ஆண்டு காலத்திலே அவலப்பட்டார்கள், அந்த 5 ஆண்டு காலத்திலே அவர்கள் ஒடுக்கப்பட்டார்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். ஆனால், இன்னோர் உண்மையையும் நான் இந்த நேரத்திலே இந்த மாமன்றத்திற்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சேலம் மாவட்டம், நாமக்கல் மாவட்டம், ஈரோடு மாவட்டம், கோவை மாவட்டம், தருமபுரி மாவட்டம், வேலூர் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் போன்ற பல்வேறு மாவட்டங்களிலே இருக்கின்ற, வறுமைக் கோட்டிற்குக் கீழேயிருக்கின்ற ஏழையெளிய விவசாயப் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற மரவள்ளிக் கிழங்கிற்கு முறையான விலை கிடைத்ததா? அந்த முறையான விலை கிடைப்பதற்காகத்தான் புரட்சித் தலைவர், என் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'சேகோசெர்வ்' என்ற ஒரு சங்கத்தை ஆரம்பித்தார்கள். அந்தச் சங்கத்தினுடைய நோக்கம் நிறைவேற, அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருளை, அந்த மரவள்ளிக் கிழங்கை வைத்து அங்கேயிருக்கின்ற சிறு தொழிற்சாலைகளிலே ஜவ்வரிசியாகவும், மாவாகவும் உற்பத்தி செய்து, நாடு முழுவதும் விற்பனை செய்வதற்குண்டான வாய்ப்பினை உருவாக்கித் தந்தார்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

நான் ஒன்றை இந்த நேரத்திலே இந்த மாமன்றத்திலே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நண்பர்களைப் பார்த்துக் கேட்கின்றேன். கடந்த காலத்திலே அந்த நிறுவனத்திற்கு, அந்தச் சங்கத்திற்குக் கூடுதல் விற்பனை வரிக்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சலுகைகள் வழங்கினார்கள்; மானியம் வழங்கினார்கள். நான் இந்த நிர்வாகத் திறமையற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சுட்டிக்காட்டுவதெல்லாம், கடந்த 5 ஆண்டு காலமாக அந்த மாவட்ட மக்களைப் புறக்கணித்தீர்கள். அப்படிப் புறக்கணித்ததனுடைய காரணத்தினாலேதான் அந்த மாவட்டத்தினுடைய மக்கள் இப்போது மக்கள் விரோத நடவடிக்கைகளை மேற்கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசைப் புறக்கணித்திருக்கின்றார்கள் என்பதைப் பகிரங்கமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஏதோ இதை ஒட்டுமொத்தமாகச் சொல்லவில்லை. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அவர் ஆட்சி இருந்தவரை கூடுதல் விற்பனை வரிக்காக ரூ. 280.87 இலட்சத்தை மானியமாகக் கொடுத்தார்கள், என் தலைவி, தாய் உள்ளம் கொண்ட தானைத் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். ஆனால் 1996 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்ந்து வருகின்ற அந்த ஏழை விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கின்ற, மரவள்ளிக் கிழங்கு மூலம் செய்யப்படுகின்ற ஜவ்வரிசிக்கும், அந்த மாவிற்கும் கூடுதலான விற்பனைக்காக அவர்களுக்கு மானியமாக



வழங்க வேண்டிய தொகை 5 கோடி ரூபாய்- ஒன்று அல்ல, இரண்டு அல்ல, 5 கோடி ரூபாய் - அந்தச் சங்கத்திற்கு இன்னமும் நிலுவையில் வைத்திருக்கின்றீர்களே, இது மக்கள் விரோத அரசு அல்லவா? உங்களை மக்கள் புறக்கணித்ததிலே என்ன தவறு? அந்தக் காரணத்தினாலேதானே இன்றைக்கு எங்கள் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை இன்று அரியணையிலே அமர்த்தியிருக்கின்றார்கள். நான் எண்ணிப் பார்க்கின்றேன். அந்தக் காலக்கட்டத்திலே என்ன பொய்ப் பிரச்சாரங்கள், தொலைக்காட்சிகள்கூட ஏற்றுக்கொள்ளவில்லை, பத்திரிகைகள்கூட ஏற்றுக்கொள்ளவில்லை, வானொலிகூட ஏற்றுக்கொள்ளவில்லை. கணிப்பு என்ற பெயராலே திணித்தார்கள். என் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மக்கள் மன்றத்திற்குச் சென்று வாக்குகள் பெற முயன்றபோதுகூட, அந்த மனுக்களைத் தள்ளுபடி செய்த மகாபாதகர்கள் நீங்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1—30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், அஞ்ச வேண்டாம். பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. வீரபாண்டியக் கட்டபொம்மனைப்போல கம்பீரமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள், தொடருங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** அந்த அடிப்படையிலேதான் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை மக்களாகப் பார்த்து, மக்களுக்காக, மக்கள் தலைவியாக விளங்கிக்கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை இன்றைக்கு மாமன்றத்திலே, அரியணையிலே அமர்த்தியிருக்கின்ற காட்சியை, மாட்சியை நீங்கள் அனைவரும் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நான் இன்னும்கூட ஒரு படி மேலே போய்ச் சொல்ல வேண்டுமானால், இந்தக் குறுகிய காலத்திலே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலே ஏறக்குறைய நூறு நாட்களிலே இவ்வளவு சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். அதைத்தான் மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள்கூட தன்னையும் அறியாமல் சொன்னார்கள். நூறு ஆண்டு கால ஆட்சியில் சாதிக்க வேண்டியதையெல்லாம் நூறு நாட்களிலே சாதித்து இருக்கிறார்கள் என்று தன்னையும் அறியாமல் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் அதைப் பாராட்டுகிறேன். நான் அதை வரவேற்கிறேன். ஆனால்,

இந்த ஆட்சிக்கு இடையூறு விளைவிக்க வேண்டும், இந்த ஆட்சிக்கு எப்படியாவது தொந்தரவு கொடுக்க வேண்டுமென்று, கொல்லைப்புற வழியாகச் சென்று மத்தியில் ஆண்டு கொண்டிருக்கிற அந்த ஆட்சியின் மூலமாக இந்த ஆட்சிக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டுமென்று நினைக்கின்ற அந்த இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், சகுனிகளின் சாமர்த்திய நாடகத்தால் சாம்ராஜ்யங்கள் சரிந்துவிடும் என்பது பழைய கதை; ஆனால் அந்தச் சகுனிகளுக்குச் சரியான பாடம் புகட்டுவது என்பது புதிய கதை; சகுனிகள் உருட்டி விளையாடுவதற்கு, தமிழக அரசு ஒன்றும் பகடைக்காய்கள் அல்ல; ஓடி ஒளிந்து விளையாடுவதற்கு இது ஒன்றும் குறுக்குத் தெருக்களல்ல; எண்ணிப் பார்க்க வேண்டும். ஆக இன்றைக்கு மக்களுக்காக நடக்கின்ற அரசு, மக்களுக்காகச் செயல்படுகின்ற அரசு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மகளிர் நலனில் பற்று கொண்டுள்ள மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மகளிருக்கு சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற அடிப்படையிலே, ஐந்தாண்டுகளுக்குள் ஐந்து இலட்சம் பெண்களுக்கு பல்வேறு துறைகளின் மூலம் பயிற்சியளித்து சுயதொழில் தொடங்க திட்டமிட்டுள்ளார்கள். அந்த வகையிலே, ஊரகத் தொழில் துறையின் தலைமையில் இயங்கும் தொழில் வணிகத் துறை மூலம் வருடத்திற்கு 25 ஆயிரம் மகளிர் வீதம் ஐந்து ஆண்டுகளில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் மகளிருக்கு மாவட்டத் தொழில் மையத்தின் மூலமாகப் பயிற்சி அளித்து, சுயதொழில் தொடங்க நிதியுதவி பெற்றிட டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த வகையில் இன்றைக்கு யார் யாரோ சொன்னார்கள். தமிழகம் தொழில் வளர்ச்சியில் முதன்மையாக இருக்கிறது என்று. அருமை அண்ணன் வைத்திலிங்கம் அவர்கள் சொன்னார்கள். ஆறாவது இடமா, அறுபதாவது இடமா, அதுவே தெரியாது. சரியான புள்ளிவிவரங்களைப் பெற்றால் ஆறாவது இடமாகக்கூட இருக்காது. இந்தியாவிலேயே தமிழகம் தொழில் துறையிலே முதன்மை மாநிலமாக விளங்க வேண்டுமென்றால், அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். தொழில் அதிபர்களுக்கு, தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சி மட்டுமல்லாமல் அந்தத்



தொழிலதிபர்களுக்கும் கடனுதவியைப் பெற்றுத் தர வேண்டும். அந்த அடிப்படை வசதி, அந்தப் பயிற்சி மையம் இதுவரையில் தமிழகத்தில் இல்லாத நிலையை உணர்ந்து, தாயுள்ளம் கொண்ட தானைத் தலைவி, தங்கத் தலைவி, எங்கள் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நம்முடைய தமிழகத்தில் முதன்முதலாகத் தமிழ்நாட்டிலே உள்ள தொழில் முனைவோர் போதுமான அளவில் பயிற்சி இல்லாமல் இருப்பதால், உலக நாடுகளிடையே வியாபார ரீதியில் போட்டியிட முடியாத நிலைமையைக் கண்டு, தமிழக முதல்வர் அவர்கள், தலைசிறந்த தொழில் முனைவோர் பயிற்சி மையம் ஒன்றைத் தமிழகத்தில் 4 கோடி ரூபாய் செலவில் அமைக்க உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, அந்தப் பயிற்சி மையம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரையின் பேரிலே தென் இந்தியாவிலேயே முதன்மை மையமாக அமையும் என்பதை நான் உறுதியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் முன்பேகூடச் சொன்னேன். கடந்த 5 ஆண்டுகளாக ஆட்சி செய்த அரசு மக்கள் விரோத அரசு. நான் ஆதாரத்தோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு தமிழகத்திலே கயிறு உற்பத்தி செய்யும் சங்கங்கள் இருக்கின்றன. அந்தக் கயிறு உற்பத்தியாளர் சங்கங்களுக்கு வரவேண்டிய மானியத் தொகையான 60 இலட்சத்து 13 ஆயிரம் வரவில்லை. இங்கே சொன்னார்கள். State-ம் நானே, Central-ம் நானே என்று. அதாவது மத்தியிலும் நானே, மாநிலத்திலும் நானே என்று. நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், மத்தியிலும் நாங்கள், மாநிலத்திலும் நாங்களே என்று சொல்கின்ற தி.மு.க.-வினுடைய நண்பர்களே ஏன் அந்தக் கயிறு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்தியிலிருந்து பெற்றுத் தர வேண்டிய அந்த மானியத் தொகை 60 இலட்சத்து 13 ஆயிரத்தை ஏன் பெற்றுத் தரவில்லை? இதுதான் நீங்கள் தமிழ் மக்கள்மீது காட்டுகின்ற அன்பா? இதுதான் நீங்கள் வறுமைக் கோட்டுக்குக்கீழே உள்ள ஏழை மக்களிடம் காட்டும் அன்பா? டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தில் இருக்கிற 36 துறைகளையும் ஆய்வு செய்தபோது, எங்களுடைய துறையையும் ஆய்வு செய்து எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார்கள். 1997-98, 1998-99 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டுகளிலே அந்தச் சங்கங்களுக்கு மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய மானியத் தொகை 60 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் வரவில்லை என்று உடனடியாக எங்களுக்குக் கோடிட்டுக் காட்டி எங்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். உடனடியாக மத்திய

[திரு. கே. பாண்டுரங்கன்] [2001 ஆகஸ்ட் 31

அமைச்சரோடு நீங்கள் தொடர்புகொள்ளுங்கள். கடிதம் எழுதுங்கள் என்று சொன்னார்கள். அவர் கூறிய அறிவுரையின் பேரிலே 25-7-2001 அன்று நாங்கள் மத்திய அமைச்சராகப் பணியாற்றுகின்ற மாண்புமிகு வசுந்தரா ராஜ் அவர்களுக்குக் கடிதம் எழுதினோம். அவர்கள் என்ன எழுதினார்கள் தெரியுமா? 20-8-2001 ஆம் தேதி அன்று அந்தக் கடிதம் வருகிறது. என்னவென்று வருகிறது தெரியுமா? கொள்கை முடிவு மாறிவிட்டது; ஆதலாலே இந்தத் தொகையை நாங்கள் கொடுக்க முடியாது என்று கையை விரித்துவிட்டார்கள். உரிய காலத்திலே நீங்கள் கேட்கவில்லை; உரிய காலத்திலே பெறப்படவில்லை; நான் சொல்கின்றேன், மத்தியிலே நீங்கள், மாநிலத்திலே நீங்கள் என்று மார் தட்டுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நண்பர்களே, அந்த 60,13,000 ரூபாயை ஏன் வாங்க மறந்தீர்கள்? ஏன் அந்தத் தொகையைப் பெற மறந்தீர்கள்? அந்தத் தொகையைப் பெறுவதற்கு அந்தக் காலத்திலே இருந்த நீங்கள் என்ன முயற்சி மேற்கொண்டீர்கள் என்பதை நான் பணிவோடு இந்த மாமன்றத்தின் வாயிலாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனுடைய அடிப்படையிலே இன்றைக்கு சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோருக்கு வழங்கப்படும் மானியத்தைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். பின்தங்கிய வட்டாரங்களிலே அமைந்துள்ள சிறு தொழில் பிரிவினர்களுக்கு ரூ.15 இலட்சத்திற்கு உட்பட்டு 15% மாநில முதலீட்டு உதவித் தொகையும், மிகவும் பின்தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு ரூ.20 இலட்சத்திற்குட்பட்டு 20% மூலதன முதலீட்டு உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. மேலும், மொத்தத் தொழிலாளர்களில் 30%-க்கு மேல் மகளிரைக் கொண்டுள்ள சிறு தொழிலுக்குக் கூடுதல் மூலதன முதலீட்டு மானியமாக அதிகபட்சமாக ரூபாய் 5 இலட்சத்திற்கு உட்பட்டு 5 சதவிகிதம் மூலதன முதலீட்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது என்கின்ற செய்தியை நான் இந்த மாமன்றத்திற்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். சிறு தொழில் பிரிவுகள் அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்ப குறைந்த அழுத்த மின் இணைப்புகளுக்குப் பயன்படுத்திய கட்டணத்தில் முதல் 3 ஆண்டுகளுக்கு முறையே 40, 30, 20% என்கின்ற அளவிலே மின் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1—35*

படித்த இளைஞர்கள் இன்றைக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அப்படி வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற



2001 ஆகஸ்ட் 31] [திரு. கே. பாண்டுரங்கன்]

இளைஞர்களைத் தமிழகத்திலே நன்முறையிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற சீரிய நோக்கத்தினுடைய அடிப்படையிலே இந்த ஆண்டு மட்டும் 20,000 படித்த மாணவ, மாணவிகளுக்கு நாங்கள் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாகக் கடன் உதவி கொடுக்க முடிவு எடுத்துள்ளோம் என்று டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்றுதான் இன்றைக்கு டான்சியைப் பொறுத்தமட்டிலே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நலிவுற்ற தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகின்றார்கள். முதல் கட்டமாக தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளில் கொள்முதல் செய்யப்படும் பொருட்களை தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் மூலமாகக் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டு சுமார் 11.11 கோடி அளவில் உத்தரவுகள் இந்நிறுவனத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.

மேலும் 2001-2002 ஆம் ஆண்டுக்கு மேம்பட்ட உற்பத்தி இலக்காக ரூ.5,370 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. டான்சி நிறுவனத்தின் அதிகபட்ச நலிவிற்கு முக்கியக் காரணம் முந்தைய அரசால் வெளியிடப்பட்ட நிதித் துறையின் 19-2-1997 நாளிட்ட அரசு ஆணை எண் 75 ஆகும். இந்த ஆணையின்படி அரசுத் துறை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அரசுக் கொள்முதல் முன்னுரிமை மற்றும் விலை முன்னுரிமை போன்ற எல்லாச் சலுகைகளும் விலக்கிக்கொள்ளப்பட்டன. அதனுடைய அடிப்படையிலே, கடந்த ஆட்சிக் காலத்திலே, அந்த உற்பத்திக் கூடங்கள் மூடப்பட்டதால் செஸ்காட் நிறுவனத்தில்கூட 170 தொழிலாளர் குடும்பங்களை வேதனை அடையச் செய்துள்ளார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவிலே நான் இன்னொன்றையும் கோடிட்டுக் காட்ட வேண்டுமென்றால், தமிழகத்தில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் 1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரை சிறு தொழில் எந்த அளவுக்கு சீர்தூக்கி இருந்தது, எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்திருந்தது என்பதையும் 1996 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை எந்த அளவுக்குப் பின்தங்கியிருந்தது என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் வளர்ச்சியிலே புரட்சி கண்டோம் என்று சொல்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நண்பர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம் 5 ஆண்டு காலத்திலே சிட்கோவிற்காக

[திரு. கே. பாண்டுரங்கன்] [2001 ஆகஸ்ட் 31

ஒரே ஒரு தொழில் கூடத்தையாவது நீங்கள் ஏற்படுத்தியது உண்டா? ஆனால் என் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே 19 தொழிற்பேட்டைகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த முறை ஆட்சி செய்தபோது 1991 முதல் 1996 வரை உள்ள காலத்தில் மட்டும் 681 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு வழங்கப்பட்டன. அதே வேளையில் கடந்த ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே வழங்கப்பட்ட தொழிற்கூடங்கள் 377. அந்த 377-ம் அவர்கள் கட்டியவையா என்றால் கிடையாது. நாங்கள் கட்டி வைத்திருந்ததை அவர்கள் விற்றிருக்கிறார்கள். இதுதான் உண்மை. ஆக, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஒரே ஒரு தொழிற்பேட்டைகூட தொடங்கப்படவில்லை தமிழ்நாடு முழுவதும். ஆனால், என் தலைவி, தானைத் தலைவியாக விளங்கிக்கொண்டிருக்கின்ற, அறிவுமிக்க தலைவியாக விளங்கிக்கொண்டிருக்கின்ற, அழகுள்ள தலைவியாக விளங்கிக்கொண்டிருக்கின்ற, அன்புள்ளம் கொண்ட தாயாக விளங்கிக்கொண்டிருக்கின்ற, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, 19 தொழிற்கூடங்களைத் திறந்து வைத்திருக்கின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று இன்றைக்கு மிகப் பெரிய புரட்சி தொழில் புரட்சி; சிறு மற்றும் குறுந்தொழிலதிபர்களுக்கு உதவுகின்ற அளவிலே, ஆளுநர் உரையிலே அதற்குப் பிறகு மாண்புமிகு அண்ணன் நிதி மற்றும் சட்ட அமைச்சருடைய நிதிநிலை அறிக்கையிலே மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே எந்த அளவிற்கு போர்க்கால அடிப்படையிலே செயல்பாடுகள் நடந்துகொண்டு இருக்கின்றன என்பதற்கு இது ஓர் உதாரணம். தமிழ்நாட்டை எல்லாத் துறைகளிலும் முன்னணியிலே நிறுத்த வேண்டுமென்று உறுதிபூண்டு கடமையாற்றிவரும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அறிவிப்புப்படி திருமுல்லைவாயிலிலே சிட்கோ மூலமாக 1,000 ஏக்கரிலே புதிய தொழிற்பேட்டை அமைப்பதில் முதற்கட்டமாக 290 ஏக்கர் நிலத்தை உரிமைப்படுத்தி, அதில் 15 சதவிகிதம் குறுந்தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்திடவும், மகளிர் தொழில் முனைவோருக்கு இடம் ஒதுக்கீடு செய்திடவும் நடவடிக்கை மேற்கொண்டு உள்ளார்கள். இத்திட்டத்தின்



2001 ஆகஸ்ட் 31] [திரு. கே. பாண்டுரங்கன்]

மூலம் தற்சமயம் சுமார் 30 ஆயிரம் நபர்களுக்கு மேலாக வேலைவாய்ப்புக் கிடைத்திட வாய்ப்பு உள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1—40

"பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினி லாணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!"

என்ற பாரதியாரின் பாடலுக்கு ஏற்ப, பெண்கள் என்பவர்கள் வீட்டிலே முடங்கிக் கிடக்கும் வெறும் இல்லாள் மட்டும் அல்ல; தனக்கும் ஆணுக்கும் நிகரான சக்தி உண்டு என நிரூபிக்கும் வல்லமை படைத்தவர்கள்தான் பெண்கள். அவர்கள்தம் நலம் காக்க சென்னைக்கு அருகே பள்ளிக்கரணையிலே, மகளிருக்கென ஒரு தொழிற் பூங்காவை ஏற்படுத்த முனைப்போடு செயல்பட்டு வருகின்றார்கள் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். மேலும், தமிழகத்தில் மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் மகளிருக்கான தொழிற் பூங்கா அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேரத்தினுடைய அருமையை நானும் உணருகின்றேன். கடந்த காலத்திலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் எந்த அளவிற்கு நசுக்கப்பட்டது; எந்த அளவிற்கு முடக்கப்பட்டது; எந்த அளவிற்கு ஒடுக்கப்பட்டது என்பது குறித்து நேரத்தின் அருமையைக் கருதி, இரண்டு கருத்துகளை மட்டும் உங்கள் மத்தியிலே, மாமன்றத்தின் முன்பாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள்கூடச் சொன்னார்கள். கடந்த ஐந்தாண்டு காலகட்டத்திலே கதர்த் துணியினுடைய உற்பத்தி குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆமாம். கடந்த ஐந்தாண்டு காலத்திலே மட்டும் விற்காமல் இருக்கின்ற கதர்த் துணிகளுடைய மதிப்பு ஏறக்குறைய ரூ.42 கோடி. ஒன்றல்ல, இரண்டல்ல நண்பர்களே, ஐந்தாண்டுகளில் விற்காமல் இருக்கின்ற கதர்த் துணிகளுடைய மதிப்பு மட்டும் 42 கோடி. அந்தத் துணிகளை விற்பதற்கு ஏதாவது முயற்சி செய்தீர்களா? பாமர மக்களுக்கு வேறு ஏதாவது வகையிலே கிடைப்பதற்கு உண்டான வாய்ப்பினை உருவாக்கித் தந்தார்களா? கிடையாது. நீங்கள் இதை எண்ணிப் பார்க்க

[திரு. கே. பாண்டுரங்கன்] [2001 ஆகஸ்ட் 31

வேண்டும். எல்லோருமே, பெருமளவிற்கு, கிராமப் புறங்களிலே இருக்கின்ற, வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கின்ற, அன்றாடம் காய்ச்சிக்கொண்டு இருக்கின்றவர்களை நம்முடைய பண்பாளர்கள், நம்முடைய மன்றத்தினுடைய உறுப்பினர்கள் எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு கதர்த் துணி 5 வருட காலமாக விற்காமல் இருந்தால், அந்தத் துணி அடுத்த முறைக்குப் பயன்படுமா? அந்தத் துணிக்கு அந்த அளவிற்கு வலிமை உள்ளதா என்பதையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால், கடந்த ஐந்தாண்டு காலமாக விற்காமல் இருக்கின்ற அந்தக் கதர்த் துணிகளுடைய மதிப்பு மட்டும் ஏறக்குறைய ரூ.42 கோடிக்கு இருக்கிறது என்பதை நம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றபோது, உடனடியாக, சிறப்புத் தள்ளுபடித் திட்டத்தின் மூலமாக அந்தத் துணிகள் ஏதாவது ஒரு வகையிலே பாமர மக்களையாவது போய்ச் சேரவேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மன்றத்திலேயிருந்து டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு அந்த வறுமையினுடைய நிலைமையை எண்ணிப் பார்க்கின்றார்; பசியினுடைய கொடுமையை எண்ணிப் பார்க்கின்றார். துணியில்லாமல் இருக்கின்ற ஏழையெளிய மக்கள் எவ்வளவு பேர் இருக்கின்றார்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்றார். தமிழகத்தினுடைய வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கின்றவர்களுடைய எண்ணிக்கையைப் பார்ப்போமேயானால், ஏறக்குறைய 33 சதவிகிதம் இருக்கும் என்று சொல்கின்றார்கள் புள்ளியியல் வல்லுநர்கள். ஆனால், அதைத்தான் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அந்தத் துணி வீணாகப் போவதைக்காட்டிலும் சிறப்புத் தள்ளுபடித் திட்டத்தின்மூலம் அந்தத் துணிகளையெல்லாம் பாமர மக்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்கு, அடித்தட்டு மக்களாக வாழ்ந்து வருகின்ற ஆதிதிராவிட மக்களுக்கு, விற்பனை செய்ய வேண்டுமென்று மாபெரும் தாயுள்ளத்தோடு ஆணை பிறப்பித்து இருக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அந்தத் துணிகளெல்லாம் தேங்கிக்கொண்டு இருக்கின்ற நிலையைக் கருத்திலேகொண்டு அந்த நெசவாளர்களுக்கு, அந்த நூற்பாளர்களுக்கு மேலும் படிப்படியாக வேலை கொடுக்க வேண்டுமென்று நினைத்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அந்த நெசவாளர்களுக்கு, அந்த நூற்பாளர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க துரித நடவடிக்கையை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று எங்களுக்கும் துறையினுடைய அலுவலர்களுக்கும் ஆணை வழங்கி இருக்கின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2001 ஆகஸ்ட் 31] [திரு. கே. பாண்டுரங்கன்]

பிற்பகல் 1—45

அதோடுமட்டுமின்றி, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வருகின்ற ஏழையெளிய நெசவாளர்கள், நூற்பாளர்கள் இன்றைக்கு-எங்கள் பகுதியிலேகூட குடியாத்தத்திலே பெருமளவு நெசவாளர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இன்றைக்கு-நெசவுக்கு நூல் இல்லை; நெய்வதற்கு நூல் இல்லை என்ற காரணத்தைக் காட்டி, அவர்களுக்கு வேறு தொழில் தெரியாது, அவர்கள் கூலி வேலைக்குப் போகிறார்கள். அப்படிக் கூலி வேலைக்குப் போகின்ற அந்த நிலையை எண்ணிப் பார்க்கின்றபோது உள்ளபடியே மனசாட்சி உள்ள ஒவ்வொருவரும் கண்ணீர்விட்டு அழுவார்கள் என்பதை மட்டும் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நிலையை உணர்ந்து இன்றைக்குத் தமிழகத்திலே உற்பத்தியாகின்ற கதர் மற்றும் பாலியஸ்டர் துணிகளுக்கெல்லாம் வருடம் முழுவதும்-365 நாட்களும்-தள்ளுபடி செய்து ஆணை வழங்கியவர்தான் எங்கள் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிலே மட்டும் இன்றைக்கு 4 கோடி ரூபாய் செலவு-700 கோடி ரூபாய் நிதிப் பற்றாக்குறை உள்ள நிலையில்-இருந்தாலும் பரவாயில்லை; நான் பார்த்துக்கொள்கிறேன்; நெசவாளர்கள் மற்றும் நூற்பாளர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக் கூடாது என்று சொல்லி, நெசவாளர்கள் பயன்பெற, நூற்பாளர்கள் பயன் பெறுவதற்காக, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்காக, அதேநேரத்திலே, தமிழகத்திலே இருக்கிற பெருமக்கள் 365 நாட்களிலும் தள்ளுபடித் தொகையிலே கதர் மற்றும் பாலியஸ்டர் துணிகளைப் பெறுவதற்காக, கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்திற்கு மட்டும் 4 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள்.

அதேபோன்று தமிழகத்திலே இருக்கின்ற கதர் வஸ்திராலயங்கள் 76. அவற்றில் 10 ஏதோ ஒரு காரணத்திற்காக கறுப்புப் பட்டியலிலே வைக்கப்பட்டிருக்கின்றன. அது வேறு விஷயம். அந்த 66 சர்வோதய சங்கங்களுக்கும், அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு, அவர்கள் உற்பத்தி செய்த பொருட்களின் விற்பனைக்கு, எவ்வளவோ நிதி நெருக்கடி இருந்தாலும்கூட, மொத்தம் 9 கோடி ரூபாய் மானியமாக கதருக்கு, பாலியஸ்டருக்கு மற்றும் பட்டுக்கு வழங்கி, இன்றைக்கு நம் முன்பாக இருக்கிறாரே நம் நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த அண்ணல் மகாத்மா, அந்த மகாத்மாவினுடைய ஆத்மா சாந்தி அடைவதற்காக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சிறப்பான திட்டத்தை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்றுதான் பனைப் பொருள் வளர்ச்சி வாரியம். இப்போது நம்முடைய இந்திய நாட்டிலே 9 கோடிக்கு மேலாக பனை மரங்கள் இருக்கின்றன. அதிலே குறிப்பாக நம்முடைய தமிழகத்திலே மட்டும்தான் 6 கோடி பனை மரங்கள் இருக்கின்றன. மூன்றிலே இரண்டு பங்கு பனை மரங்கள் நம்முடைய தமிழகத்திலே இருக்கின்றன. ஆனால், அந்தப் பனை மரங்களையெல்லாம் நாம் முறையாகப் பயன்படுத்துகிறோமா என்றால் இல்லை. அவற்றைப் பயன்படுத்துவதற்காக, முறைப்படுத்துவதற்காக முழுமையாக அதன்மூலம் கிடைக்கக்கூடிய, அந்தப் பனை ஓலையிலே இருந்து செய்யப்படுகின்ற பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக, நல்ல அறிவுரைகளையெல்லாம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். 1991 ஆம் ஆண்டிலிருந்தே பனை மரங்களுக்காக வாரியத்தை அமைத்துத் தந்தவர், தாயுள்ளம் கொண்ட தலைவி, எங்கள் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தாய்தான் 1991 ஆம் ஆண்டிலேயிருந்து 1996 ஆம் ஆண்டுவரை ஆட்சியிலே பொறுப்பேற்றிருந்தபோது, அன்றைய காலகட்டத்திலே வெளிநாடுகளில் பனை உற்பத்திப் பொருட்களை ரூ.5,71,39,000 அளவுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறார்கள். ஆனால், 1996 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டு வரை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எவ்வளவு தெரியுமா ஏற்றுமதி செய்த பொருள்கள்? ரூ.2,82,48,000/-. வித்தியாசத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். ரூ.2,82,91,000/- வித்தியாசத்தை, அவர்கள் செய்த அந்த விற்பனையிலே பாதித்திருக்கிறார்கள் என்பதையும் புரட்சித் தலைவி அவர்கள் எந்த அளவுக்கு விற்பனையை உயர்த்தியிருக்கிறார்கள் என்பதையும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எந்த அளவுக்கு விற்பனையைக் குறைத்திருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்றுதான் தமிழ்நாடு கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகத்தைப் பற்றி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அறிவுரைகளின் பேரிலே எப்படி உள்ளது என்பதை நேரத்தின் அருமை கருதி சுருக்கமாகக் கூறி முடித்துக்கொள்கிறேன். டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அறிவுரையின்பேரிலே, இப்போது அந்தத் துறை மிகவும் சீரோடும், சிறப்போடும், ஏற்றத்தோடும், எழுச்சியோடும் வியாபாரம் நடைபெறுவதற்குண்டான வாய்ப்புகளை அறிவுரைகளாக வழங்கியிருக்கிறார்கள் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக்கொண்டு, இந்த 100 நாட்களுக்குள்ளாகவே டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எந்த அளவுக்கு சிறு மற்றும் குறுந்தொழில் அதிபர்களுக்காக, கதர் மற்றும் கிராமத் தொழில் வளர்ச்சிக்காக, பட்டு வளர்ச்சிக்காக, வறுமைக்



கோட்டிற்குக் கீழே இருக்கின்ற ஏழையெளிய விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்வதற்காக, எப்பேர்ப்பட்ட திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வெற்றிச் சங்கு எட்டுத் திக்கும் முழங்குகிறது; தமிழகத்தின் முன்னேற்றம், புரட்சித் தலைவியின் பொற்கரங்களில் உள்ளது. தொழில் மேம்பாடு அடைவதற்காக, தொழில் தொடங்க முனைவோர்க்கு புரட்சித் தலைவி அவர்கள் அரசு தோள் கொடுக்கத் தயாராக இருக்கின்ற நிலையில் இந்நல்ல நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, மத்திய அரசு சிறு தொழில்களின் தொழில் நுட்ப மேம்பாட்டிற்குக் கடனுடன் இணைந்த முதலீட்டு மானிய திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டம் மேலும் சிறப்பாக நடைபெற வங்கியாளர்களுக்கு, ஆர்வத்துடன் சிறுதொழில் நிறுவனங்களை மேலும் ஈடுபடுத்துவதற்காக, ஊக்கப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட கடன் தொகைக்கான பட்டியலில் தமிழக அரசு 5 விழுக்காடு வட்டி மானியமாக-விவசாயிகளுக்கு 311 கோடி ரூபாய் மானியம்; பேருந்துக்கு ஏராளமாக மானியம்; மின்சாரத்திற்கு பல கோடி ரூபாய் மானியம்; ஆக, அந்தச் சிறுதொழில் அதிபர்களுக்குக்கூட 5 விழுக்காடு வட்டி-வழங்குகிற திட்டத்தை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், பல்வேறு சாதனைகளையும், சகாப்தங்களையும் படைக்க வீறுநடை போட்டு, ஏறுநடைச் சிங்கமாய், தமிழகத்தை முதலிடமாகவும், சிறிய முதலீட்டை வைத்துக்கொண்டு, பெரிய நம்பிக்கையை மூலதனமாகக் கொண்டு, வறுமைக்கோட்டைத் தாண்ட உழைக்கின்ற தொழிலாளர்கள், வசதிக் கோட்டையை எட்டிப் பிடிக்க கதவைத் திறந்து வைக்கிற அளவிலே, 'எவரும் இங்கு தாழ்ந்தவர்கள் இல்லை; எல்லோரும் உழைக்கலாம்; எல்லோரும் உயரலாம்' என்கிற அடிப்படையில் செயல்பட, உலக வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில், தாராளமயமாக்கல் கொள்கைச்சூழலில் சிக்கித் தவிக்கும் சிறுதொழில் உற்பத்தியாளர்கள், தங்கள் பொருட்களை உலகறியச் செய்யவும், விற்பனை வாய்ப்பைப் பெருக்கி, ஏற்றுமதியை அதிகரிக்கவும், இணையதளம் தொடங்கி உருவாக்கி, சிறுதொழில் மற்றும் உற்பத்திப் பொருட்கள் என்கின்ற புள்ளிவிவரங்களைச் சேகரித்து ஒரு தகவல் தொகுப்பை உருவாக்கிட மட்டும் 'சிட்கோ'விற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடாக வழங்கியிருக்கிறார்கள் என்பதைப்

பெருமகிழ்ச்சியுடன் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1—50

சரித்திரத்திற்கே ஒரு சகாப்தத்தைக் கற்றுத்தந்த அம்மா, திசைகளுக்கே திசைகளைக் கற்றுத்தந்த அம்மா, இசைகளுக்கே ஒரு இன்னிசையைக் கற்றுத்தந்த அம்மா இன்று காக்களூர் மென்பொருள் மைய பரிசோதனை ஆய்வுக் கூடத்தை நவீனமயமாக்கி ரூ.9.75 இலட்சம் ஒதுக்கீடு செய்து மின் ஆய்வு சோதனைக் கூடம் செம்மையாகச் செயல்பட வைத்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்டாம்பூச்சிகளுக்குக்கூட ஒரு பட்டா உண்டு. இறக்கைகள் விரித்து ஆகாயத்தில் சுதந்திரமாக வானத்தில் பறக்கும். குருவிகளுக்குக்கூட ஒரு கூடு உண்டு. ஆனால், இராமநாதபுரம் மாவட்டத் தொழில் மையத்திற்கு ஒரு கட்டடம் இல்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.47.15 இலட்ச மதிப்பீட்டில் இராமநாதபுர மாவட்டத் தொழில் மையக் கூடத்திற்குக் கட்டடம் கட்ட முதல் கட்டமாக ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்து தமிழ்நாட்டில் தொழில் மையங்கள் கட்டடங்கள் இல்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காக உத்தரவு வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். காஞ்சிபுரம், ஈரோடு மாவட்டத் தொழில் மையங்களில் எல்லாம் - எல்லாம் அம்மா, எல்லாம் அம்மாதான் - ஆழ்துளைக் கிணறு நீரேற்று இயந்திரம் அமைக்கப்படுவதற்காக ரூ.3.35 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். புதியதாய் மலர்ந்த ஒரு மாவட்டத்தை வளர்ந்த மாவட்டமாக மாற்ற சிறந்த தொழில் முனைவோரை உருவாக்கும் தொழில் மையங்கள் அவசியம் என்பதனை அறிந்த கருணைத் தாய், தாயன்போடு புதிய மாவட்டமான அரியலூரில் மாவட்டத் தொழில் மையத்தை ஏற்படுத்துவதற்காக ரூ.6.5 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடலூரில் முந்திரி விவசாயிகள் நலன் பாதுகாக்க, முந்திரிப் பதப்படுத்தும் முந்திரி எண்ணெய் தொழிற் கூட்டுறவுச் சங்கம் தொடங்க அரசு உத்தேசித்துள்ளது. இதனால் வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும்; முந்திரிக் காடுகளில் தீவிரவாதம் தீர்ந்துபோகும்; எளிய எண்ணற்ற மக்கள் வசந்தம் பெறுவார்கள்; வாழ்க்கை வசதி பெறுவார்கள்; 12 ஆயிரம் விவசாயிகள் வாழ்க்கைத்தரம் பெரிதும்



மேம்படும். இதனால் 25 ஆயிரம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் பெருமளவில் பயன்பெறும். மின் கட்டணத்தைக் குறைக்கச் சொன்ன விவசாயிகள்மீது குண்டு மழை பொழிந்தது முந்தைய அரசு. எங்கள் மாண்புமிகு அம்மாவின் அரசு கடலூரில் முந்திரி மற்றும் முந்திரி எண்ணெய் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்துவதற்காக ரூ.22.12 இலட்சத்தைப் பங்கு மூலதனமாக அளித்து விவசாயிகளுக்கு அன்பு மழை பொழிந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் தோல் ஆட்டோ லைனர் தொழிற் கூட்டுறவுச் சங்கத்திற்கு பிளாஸ்டிக் ஒட்டும் இயந்திரம் வாங்க ரூ.1.50 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அதேபோன்று, ஆலத்தூரிலே சிட்கோ மருந்தாக்கியல் வளாகத்தில் மருந்துப் பொருட்கள் பரிசோதனை ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் அமைக்க ரூ.7.50 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதேபோன்று, தருமபுரி, கரூர் ஆகிய மாவட்டங்களுக்கு - எனக்கு முன்னாலே பேசிய அண்ணன் மணி அவர்கள் சொன்னார்கள் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்று கேட்காமலேயே கொடுக்கின்ற தாய் எங்கள் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். நீங்கள் கேட்கவில்லை. ஆனால், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தருமபுரி மாவட்டத்திற்கு - தாய்கோ வங்கி கொடுக்கின்றார்கள். நீங்கள் கேட்டீர்களா? நீங்கள் கேட்காமலே கொடுக்கின்ற தாய்தான் எங்கள் தாய், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, கரூருக்கு தாய்கோ வங்கி.

வறுமை ஒழிந்தால்தான் நாட்டிற்கு விடுதலை, நாட்டு மக்களுக்கு விடுதலை என்று கூறினார் சுவாமி விவேகானந்தர். அவர்களின் எண்ணம் நிறைவேற விவசாயம் பெருக வேண்டும், வளர வேண்டும். புதிய நுட்பங்களை, தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்த வேண்டும். பட்டு விவசாயத்தில் ஈடுபட்டுள்ள 3 ஆயிரம் விவசாயிகளுக்குப் புதிய தொழில் நுட்பங்களை வழங்க ரூ.15 இலட்சத்தை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று சொன்னார் வள்ளலார். எங்கள் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டில் எவரும் வாடக் கூடாது, வறுமையில் உழலக் கூடாது, வளமையில் செழித்திட வேண்டும், வறுமையை ஒழித்திடுவதுதான் எங்கள் இலட்சியம் என்று போர் முரசு முழங்கி நடப்பாண்டில் பட்டு விவசாயிகள் பயன்பெற 500 பேருக்கு 425 ஹெக்டேர் நிலத்திலே சொட்டு நீர்ப் பாசனத்திற்காக ரூ.5.94 இலட்சம் வழங்கியிருக்கிறார்கள்.

[திரு. கே. பாண்டுரங்கன்] [2001 ஆகஸ்ட் 31

அதேபோன்று கதர் கிராமத் தொழில் வாரியப் பொருட்களை விற்பதற்காக ஆண்டு முழுவதும் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதைப்போன்று கதர் அங்காடி மேம்பாட்டிற்காக ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். பவானிசாகரிலே மேம்பாடு செய்வதற்காக ரூ.6 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். நவீன முறையில் பனை நுங்கு பதப்படுத்துதல் மற்றும் பனம் பழச்சாறு தயாரிக்கும் பிரிவு ஏற்படுத்துவதற்கு அம்மா அவர்கள் ரூ.1.25 இலட்சம் வழங்கியிருக்கிறார்கள்.

அதேபோன்று பல்வேறு வகைகளிலே வழங்கியிருக்கிறவர்கள் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். நான் முன்னரே கூறியதைப் போன்று, கேட்காமலே கொடுக்கின்ற தாய்தான் நம் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். எப்படி விவசாயப் பெருமக்கள் கேட்காமலேயே அந்த வட்டிக் கடன் 311 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்தாரோ, எப்படி அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழையெளிய மாணவர்களுக்கு, மலைவாழ் பெண்களுக்கு கேட்காமலேயே இலவச சைக்கிள் வழங்கினாரோ அதைப்போன்று - இன்றைக்கு "ஆடையில்லா மனிதன் அரை மனிதன்" என்பது பழமொழி, ஆனால் ஆடை நெய்கின்ற மனிதனோ அரை மனிதனாய் வாழக்கூடாது. ஒரு மனிதன் தள்ளாத வயதில் எவ்வித வேலையும் செய்ய உடல் ஒத்துழைக்காது. அந்தத் தள்ளாத மனிதனை இந்த உலகம் தள்ளி வைக்கின்றது. - உழைக்கின்ற மனிதன் வயதானபோது ஓய்வெடுக்க முடியாமல் வறுமையால் வாடி, பட்டினிக்கு இரையாகக் கூடாது என்பதற்காக நூற்பாளர் மற்றும் நெசவாளர் நலன் கருதி 60 வயது பூர்த்தி அடைந்த கதர் வாரியத்தைச் சார்ந்த நூற்பாளர் மற்றும் நெசவாளர்களுக்கு மாத ஓய்வூதியம் 200 ரூபாய் வழங்க இதய தெய்வம்- டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1—55

இன்றைக்கு சென்னைப் பட்டினத்தை செங்கோலோச்சிய செம்படையின் கொட்டகை பாரிமுனை. ஆடை அலங்காரத்தின் அரங்கமும் பாரிமுனை. அம்முனையின் முக்கூட்டில் அமைந்திருப்பது குறளகம். குறளகத்தின் உயிர்நாடி கதர் அங்காடி. கண்ணிற்குக் கவர்ச்சி கலை அழகு. கதர் அங்காடிக்குக் கவர்ச்சி கலை வண்ணம். அக்கதர்



2001 ஆகஸ்ட் 31] [திரு. கே. பாண்டுரங்கன்]

அங்காடியை மேம்படுத்துவதற்காக, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 25 இலட்ச ரூபாயை ஒதுக்கிட ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) ஒன்றே ஒன்றுதான். இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து தமிழகம் இந்தியாவிலேயே சிறுதொழில் துறையில் முன்னோடியாகவும், முதன்மையான மாநிலமாகவும் விளங்கி வந்தது. கடந்த ஆட்சியின் தவறான அணுகுமுறையின் காரணமாக சிறுதொழில்கள் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, முடக்கப்பட்டன. அந்த நிலையைச் சீர்படுத்தி, மேம்படுத்த சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோர் வாழ்வில் ஒளியேற்றிட, தொழிலாளர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றிட, உற்பத்தி பெருக பல சீரான முயற்சிகள் எடுக்கப்பட்டு, அதற்கு முத்தாய்ப்பாக இன்றைக்கு சிறு மற்றும் குறுந்தொழில்கள் வருங்காலத்திலே முன்னேற, பயனடைய, வளர தனிக் கொள்கை, S.S.I. Policy என்று சொல்லப்படுகிற அந்தத் தனிக் கொள்கையை ஏற்படுத்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் .என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகம் என்றால் புரட்சித் தலைவி, புரட்சித் தலைவி என்றால் தமிழகம். ஒரு இனத்திற்கு என்று ஒரு வரலாறு உண்டு. ஒரு மொழிக்கு என்று ஒரு வரலாறு உண்டு. ஒரு சமுதாயத்திற்கு என்று ஒரு வரலாறு உண்டு. ஆனால், எங்கள் தங்கத் தலைவியோ வாழும் காலத்து வரலாறாய், வளர் தமிழ் காக்கும் வரலாற்றுப் பெண்மணியாய், திராவிட ஜோதியாய், தென்னகத்துப் பேரரசியாய், சமூக நீதி காத்த வீராங்கனையாய் வாழ்பவர். இனி இங்கு எளியோர் இல்லை; ஏற்றம் பெறுபவர்களே உண்டு. இனி இங்கு வறியோர் இல்லை, வளமுற்றவர்களே உண்டு என்பதை மெய்ப்பிக்கும் வகையில் சிறு மற்றும் குறுந்தொழில்கள், கதர் கிராமத் தொழில் தொடங்க முனைபவர்களுக்குப் புரட்சித் தலைவி அவர்கள் தோள் கொடுத்து ஊரகத் தொழில் துறை, கதர் கிராமத் தொழில் துறை மேம்பாடு அடைய வழிவகை செய்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆர்வத்திற்கேற்ற கல்வி, கல்விக்கேற்ற திறமை, திறமைக்கேற்ற வாய்ப்பு, வாய்ப்புக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம், ஊதியத்திற்கேற்ற வாழ்வு எல்லோரும் பெறுகின்ற சூழ்நிலையை உருவாக்க இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இரவு பகல் பாராது அயராமல் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த நேரத்தில் நான் மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு,

[திரு. கே. பாண்டுரங்கன்] [2001 ஆகஸ்ட் 31

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய பதிலுரையில் நான் அளித்த விளக்கங்களை ஏற்று மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல் - பசி வேறு எல்லோருக்கும் - திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும், நான் மானியக் கோரிக்கையில் கேட்டுக்கொண்ட தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென்றும் பணிவோடு, கனிவோடு, பாசத்தோடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு விளக்கங்கள். மாண்புமிகு அமைச்சர் உரையாற்றுகிறபோது காதிகளுக்கு எல்லாம் சிறப்புத் தள்ளுபடி செய்திருப்பதாகச் சொன்னார்கள். கடந்த ஆட்சியிலே ஆண்டுதோறும் கதர்த் துணிகளுக்கு, பருத்தி, பாலிவஸ்த்ரா துணிகளுக்கு 30 சதவிகிதமும், பட்டுத் துணிகளுக்கு 20 சதவிகிதமும் ஆண்டுதோறும், ஆண்டு முழுமையும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. நீங்கள் சொல்கிற சிறப்புத் தள்ளுபடி இதற்குக் கூடுதலாகவா? அல்லது இதேதானா? இதற்கு அதிகமாகவா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) மற்றொன்று, இன்னொரு விளக்கம். இங்கே நிதி அமைச்சர் இருப்பார் என்று கருதினேன். நிதி அமைச்சரும் மற்ற அமைச்சர்களும் இந்த நிதிநிலை அறிக்கையிலே முழுமையாகப் பேசிக் கொண்டிருப்பது இந்த G.O.75-ஐப் பற்றி. இந்த G.O.75 என்பது கொள்கை அளவிலே எடுக்கப்பட்ட ஒரு முடிவு. பொருளாதாரம் படித்தவர்களுக்குத் தெரியும், seller's market, buyer's market என்பது பற்றி. (குறுக்கீடு) சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, நிதி அமைச்சர் அவையிலே இருக்கிறபோது அந்த விளக்கத்தைக் கேட்டுக்கொள்ளலாம்.

**டாக்டர் க. பொன்முடி:** மற்ற அமைச்சர்கள் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஊரகத் தொழில் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டியதை மட்டும் கேளுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** நான் சொல்வதைச் சொல்லிவிடுகிறேன். பின்னர் வாய்ப்புக் கிடைக்குமோ, கிடைக்காதோ? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, G.O.75 என்பது தமிழகத்திலே இருக்கிற பொருட்களை வாங்கக்கூடாது, மற்ற மாநிலங்களிலே இருக்கிற பொருட்களை வாங்க வேண்டும் என்ற அடிப்படையிலே போடப்பட்டதல்ல.



2001 ஆகஸ்ட் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, அதுபற்றி ஏற்கெனவே நிதி அமைச்சர்.. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். அதுபற்றி ஏற்கெனவே நிதி அமைச்சர் சொல்லி, பேராசிரியர் அவர்கள் அதுபற்றி விளக்கம் சொல்லி, அந்த விவாதம் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. நீங்கள் ஊரகத் தொழில் துறை அமைச்சரிடத்திலே இப்போது கேட்க வேண்டிய அந்த விளக்கத்தை மட்டும் கேளுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் எங்களைப் பேச விடுங்கள். அவர்கள் சொன்னார்கள், 75 G.O.-வைப் பயன்படுத்தி கொள்ளை அடித்தோம் என்ற வார்த்தையைச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு நாங்கள் விளக்கம் தரவேண்டும் அல்லவா? அதற்காகச் சொல்கிறேன். It is buyer's market, seller's market, வாங்குவோர், 2 ரூபாய் குறைவாக இருக்கிற பொருளை வாங்க வேண்டும் என்று நினைப்பது மனிதனுடைய இயல்பு. அதுபோல, open market. எந்தப் பொருளை வாங்குவதாக இருந்தாலும் எல்லோரும் போட்டியிடலாம் என்று அந்த G.O.-வில் இருக்கிறது. Open Market, transparency. அதுமட்டுமல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, நான் அதற்காகத்தான் சொல்கிறேன். அந்த G.O. பற்றி ஏற்கெனவே பேராசிரியர் அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) பேச விடாமல் இல்லை. நிதி அமைச்சரும், பேராசிரியர் அவர்களும் அதுபற்றி ஏற்கெனவே பேசியிருக்கிறார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** நான் முதலில் சொல்லிவிடுகிறேன். தயவுசெய்து என்னைப் பேச விடுங்கள். அதற்குப் பிறகு விளக்கம் சொல்லுங்கள். குறிப்பாக இந்த இரண்டையும் சேர்த்துத்தான் கொள்கை ரீதியாக எடுக்கப்பட்டது முடிவு. அதுவும் குறிப்பாகச் சொல்கிறபோது, இருவருக்குமே அதிலே கலந்துகொள்கிற வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Clarification மட்டும் கேளுங்கள். இது உரை இல்லை.

**டாக்டர் க. பொன்முடி:** இந்த G.O.-வைப் பொறுத்தவரையிலே தமிழகத்திலே இருக்கிற தொழில்களைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்கிறபோது, L-1 அதாவது குறைந்த விலையினை மற்ற மாநிலங்களிலே இருப்பவர்கள் குறிப்பார்கள் என்று சொன்னால், தமிழகத்திலே

இருப்பவர்களிடம் 50 சதவிகிதம் வாங்கலாம் என்று அந்த G.O. -வில் இருக்கிறது.

ஆகவே, தமிழகத்தினுடைய தொழிலை நசுக்க வேண்டும் என்றல்ல. ஆகவே, ** (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 2—00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது clarification அல்ல. திரு. பொன்முடி அவர்களே, இது clarification அல்ல. இது அரசை நோக்கித் தெரிவிக்கப்படக்கூடிய குற்றச்சாட்டு. நான் இதை அவைக்குறிப்பிலே ஏற்ற அனுமதிக்கமாட்டேன். ** என்று பொன்முடி சொன்ன அந்தக் கருத்து அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. G.O. 75-ஐப் பற்றி நீங்கள் விளக்கம் கேளுங்கள். அதைப்பற்றி ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) அது முறையல்ல. (குறுக்கீடு) மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

**திரு. கோ.சி. மணி:** கொள்ளையடித்தார்கள் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். அதையும் நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைத் தலைவருடைய அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. மாண்புமிகு மின் துறை அமைச்சர். (குறுக்கீடு)

**திரு. கோ.சி. மணி:** அதை நீக்கவில்லை என்றால் என்ன அர்த்தம்? ஆளுங்கட்சிக்கு ஒரு நியாயம், எதிர்க்கட்சிக்கு ஒரு நியாயமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை 75-ஐப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அந்த ஆணையை வைத்து கொள்ளையடிக்கப்பட்டது என்பதுதான் உண்மையான நிலைமை. (குறுக்கீடுகள்)

**திரு. கோ.சி. மணி:** இது நியாயமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால்தான் சொன்னேன், ஏற்கெனவே அந்த G.O. 75-ஐப் பற்றிப் பேசப்பட்டிருக்கிறது, அதை நீங்கள் கிளப்ப வேண்டிய அவசியமில்லை என்று.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. கோ.சி. மணி:** அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** புள்ளிவிவரம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்கிற விளக்கம் அதுதான். திரு. கோ.சி. மணி உட்காருங்கள். இதுபற்றி விளக்கம் சொல்ல வேண்டுமானால் விளக்கம் நீண்டதாக இருக்கும். மாண்புமிகு மின் துறை அமைச்சர் அமருங்கள் (குறுக்கீடுகள்) மின் துறை அமைச்சர் அமருங்கள். நான் முடித்துவிடுகிறேன். அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** ஆதாரம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி கேட்டார். அதற்கு அமைச்சர் பதில் சொல்லப் போகிறார். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. கோ.சி. மணி:** கொள்ளையடிக்கப்பட்டது என்று சொல்வதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களே, 30 சதவிகிதம் தள்ளுபடி செய்வதாகச் சொல்கிறார்களே, அதற்கு விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, உட்காருங்கள். 30 சதவிகிதம் எப்படி என்று திரு. பொன்முடி கேட்டதற்கு மட்டும் விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமருங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு முழுவதும்...

**திரு. கோ.சி. மணி:** கொள்ளையடித்தார்கள் என்று எந்த ஆதாரத்தின் அடிப்படையில் சொல்லுகிறார்கள்?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** ஆதாரம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர், அமருங்கள். நான் அவரைப் பேச அனுமதிக்கவில்லை. நீங்கள் அமருங்கள். அவரைப் பேச அனுமதித்தால்தானே நீங்கள் விளக்கம் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் அமருங்கள். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள், திரு. பொன்முடி அவர்கள் கேட்ட முதல் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது கவனமாக மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கவனித்திருக்க வேண்டும். நான் பேசியது, ஆண்டு முழுவதும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 365 நாட்களுக்கும் சலுகை வழங்கியிருக்கிறார்கள், தள்ளுபடித் தொகை வழங்கியிருக்கிறார்கள் என்று. அதிலே எந்த மாற்றமும் இல்லை; தடுமாற்றமும் இல்லை. ஆனால், முந்தைய ஆட்சி, அந்த உத்தரவை, காலம் கடந்து, செப்டம்பர் மாதத்திலேதான் போட்டிருக்கிறார்கள். அப்படி செப்டம்பர் மாதத்திலே போட்டால், ஏப்ரல் மாதத்திலிருந்து அடுத்த மார்ச் 31 ஆம் தேதி வரையில்தான் ஒரு நிதி ஆண்டு. எப்படி ஆண்டு முழுவதும் வரும்? அதைத்தான் நான் தெரிவித்துக்கொண்டேனே தவிர வேறல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் 365 நாட்களுக்கும் தள்ளுபடித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடுகள்)

## (அ) கோரிக்கை எண் 26 - கதர்-கிராமத் தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 26, கதர்-கிராமத் தொழில்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம்.ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய *26 ஆம் எண்* மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.31,90,31,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 47 - ஊரகத் தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 47 - ஊரகத் தொழில்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

பிற்பகல் 2-05

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.82,73,86,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(இ) கோரிக்கை எண் 59 - ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 59 - ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. புகழேந்தி.



**திரு. இ. புகழேந்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1,08,47,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஈ) கோரிக்கை எண் 24 – தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 24 - தொழில்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.17,09,33,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"என்னும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



## (உ) கோரிக்கை எண் 53 - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 53- தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஒவ்வொருவராக அவையை விட்டு வெளியேறினர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன வெளிநடப்பா, பசி நேரமா, காரணம் சொல்லாமல் போகிறீர்கள்.

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.51,02,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1-9-2001) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

40. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் இணக்கக் குழு விதிகளில் திருத்தம் செய்தது குறித்து சிறுதொழில்கள் துறையின் 12-1-2001 ஆம் நாளிட்ட கடித எண் 14806/Dev.1/2000-2ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1993 ஆம் ஆண்டு சிறுதொழில் மற்றும் துணைத் தொழில் நிறுவனங்களுக்குத் தாமதமாக அளிக்கப்பட்ட தொகைக்கு வட்டி அளித்தல் குறித்த சட்டத்தின் (மத்தியச் சட்டம் 32/1993) 7C பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

41. சென்னை-3, அரசு பொது மருத்துவமனை, சென்னை மருத்துவக் கல்லூரி - ஆராய்ச்சி நிறுவனம், இதய நோயியல் நிறுவனம், எத்திலின் ஆக்ஸைட் ஸ்டெரிலைசர் வாங்குவதன் (Ethylene Oxide) மீது 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரிக்கு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 16-02-2001 ஆம் நாளிட்ட 24 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

42. வேலூர் மாவட்டம் (வழி) கந்திலி, பெரிய காசி நாயக்கன்பட்டி அஞ்சல் என்னுமிடத்தில் உள்ள டி. அருள்செல்வி சமூக மறுவாழ்வு மையத்திற்கு அவசரச் சிகிச்சை வண்டி, சாதனம், ஒலி - ஒளி சாதனம், மருந்துகள் விற்பனைக்கு 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ஒரு வணிகர் செலுத்தத்தக்க வரிக்கு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 19-02-2001 ஆம் நாளிட்ட 26 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

43. சென்னை - 20, அடையாறிலுள்ள மத்திய அரசின் புற்றுநோய் ஆராய்ச்சி - சிகிச்சை வட்டார மையமான புற்றுநோய் மருத்துவமனைக்கு (WIA) செய்யப்படும் நைட்ரஸ் ஆக்ஸைடு IP, கரியமில வாயு, திரவ நைட்ரஜன் மற்றும் சுத்த நைட்ரஜன் ஆகியவற்றின் விற்பனை குறித்து யாதொரு வணிகரும் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரிக்கு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 27-03-2001 ஆம் நாளிட்ட 43 ஆம் எண்

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

44. குன்னூர் மற்றும் கோயம்புத்தூரிலுள்ள ஏல மையங்களில் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் பகுதி 'சி' ஐச் சார்ந்த 45 ஆம் இனத்தின் (i) துணை இனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேயிலை விற்பனைமீது செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரையில், வரி வீதத்தை எட்டு சதவீதத்திலிருந்து நான்கு சதவீதமாகக் குறைப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 30-5-2001 ஆம் நாளிட்ட 54 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

45. 1999-2000 ஆம் ஆண்டிற்கான ஈரோடு மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

46. 1999-2000 ஆம் ஆண்டிற்கான நாகப்பட்டினம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

47. 1999-2000 ஆம் ஆண்டிற்கான புதுக்கோட்டை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

48. 1999-2000 ஆம் ஆண்டிற்கான விருதுநகர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

49. 1999-2000 ஆம் ஆண்டிற்கான காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)



## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

36. மானியக் கோரிக்கை எண் 26 - தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

37. மானியக் கோரிக்கை எண் 47-ன்கீழ் பட்டு வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

38. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய சாதனைத் திட்டம், 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

39. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் ஆகியவற்றின் மக்கள் சாசனம் என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

40. பட்டு வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மக்கள் சாசனம் என்ற புத்தகம், 2001, (தமிழ், ஆங்கிலம்)

41. மானியக் கோரிக்கை எண் 47 மற்றும் 59 - ஊரகத் தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்கள் மீதான மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

42. சிறுதொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

-----

# இணைப்பு I

*(346 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 26

## கதர் கிராமத் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய சட்டத்தின்கீழ் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவப்பட்டது. ஊரக வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள மற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கிராமப் பகுதிகளில் கதர் மற்றும் கிராமத் தொழில்களை ஊக்குவிக்கவும், அமைத்திடவும் மற்றும் மேம்படுத்துவதற்கும், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் தொடங்கப்பட்டது.

2. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழ்வருமாறு:

(i) நலிவுற்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தலும், வேலை வாய்ப்புகளை அதிகரித்தலும்;

(ii) உள்ளூரிலேயே கிடைக்கும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி விற்பனையாகக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்ய வழி வகுத்தல்; மற்றும்

(iii) கிராமப்புற ஏழை மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தி, தன்னம்பிக்கை நிலையினை அடைந்திட உதவுதலும் ஆகும்.

3. மும்பையிலுள்ள கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட 119 கிராமத் தொழில்களில் 59 கிராமத் தொழில்களையும் மற்றும் இதர கதர் தொழில்களையும் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மூன்று வகைகளில் பின்வருமாறு செயல்படுத்துகிறது:

| | எண்ணிக்கை |
|---|---|
| (i) வாரியத்தின் சொந்த அலகுகள் | 945 |
| (ii) வாரியத்தால் பதிவு செய்யப்பட்ட தொழில் கூட்டுறவு சங்கங்கள் | 1,613 |
| (iii) கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையத்தின் நிதியுதவிக்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி நிதியுதவி அளிக்கப்பட்ட கைவினைஞர்கள் | 88,116 |

அதுமட்டுமின்றி, அரசின் திட்டங்களான ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களை ஆங்காங்கே மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையுடன் இணைந்து கிராமப்புற மக்களின் வேலைவாய்ப்பினை அதிகரித்து, சமுதாயத்தில் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடும் வகையில் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

4. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் செயல்பாடுகள் கதரையே மையமாகக் கொண்டு, அதிலும் குறிப்பாக, கதர் பருத்தி, பாலிவஸ்திரா மற்றும் கதர் பட்டு ஆகியவைகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளன. கிராமத் தொழில்களிடையே கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் தனது உற்பத்திப் பொருட்களான தேன், பல இரக சோப்புகள், சலவைத்தூள், தோல் பொருட்கள், மரம் மற்றும் இரும்பு தளவாடங்கள் ஆகியவற்றால் பெருமளவில் பெயர் பெற்று விளங்குகிறது. இத்துடன் ஊரக மக்களின் தேவைகளை நிறைவு செய்யவும் மற்றும் உள்ளூரிலேயே கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி, ஊரக ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்திடவும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பல தொழிற் கூட்டுறவு சங்கங்கள் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றன.



**கதர்**

5. வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் வாரிய அலகுகளின் மூலம் கதர் மற்றும் பாலியஸ்டர் கதர் உற்பத்தி செய்யப்படுகின்றன. 358 கிராமிய நூற்பு நிலையங்கள் நூல் உற்பத்திக்காக இயங்கி வருகின்றன. இந்த நிலையங்களில் நூற்புப் பணியில் பெண்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நூலைக் கொண்டு 86 கதர் உபகிளைகள் மற்றும் 46 நேபாளி தறி அலகுகளின் மூலம் நெய்யப்படுகின்றன. மேலும், ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் சாய, சலவை மற்றும் அச்சு அலகு ஒன்றும் இயங்கி வருகிறது.

6. இந்த அலகுகளில் 20,662 கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டு வருகிறது. அவர்களில் 12,589 பேர் பெண்களாவர். கடந்த கால அனுபவங்களையும், தற்போதைய கொள்கையையும் ஆராய்ந்து, அதனடிப்படையில் பொதுமக்கள் விருப்பத்திற்கேற்ப என்றும் விற்பனையாகக்கூடிய நேர்த்தியான பாலியஸ்டர் மற்றும் கதர் இரகங்களையும் உற்பத்தி செய்ய வாரியம் திட்டமிட்டுள்ளது. இதற்கிணங்க, கதர் இரகங்கள் ரூ.8.00 கோடி மதிப்பிற்கும், பாலியஸ்டர் இரகங்கள் ரூ.10.00 கோடி மதிப்பிற்கும் உற்பத்தி செய்ய 2001-2002 ஆம் ஆண்டுக்கு உற்பத்தி குறியீடு வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**கதர் பட்டு**

7. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் இயங்கிவரும் தொழில்களில் கதர் பட்டுத் தொழில் முதன்மை வாய்ந்ததாகும். தற்பொழுது 33 கதர் பட்டு உற்பத்தி மையங்களும், 5 பட்டு முறுக்காலைகளும் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டிலும் மற்றும் அண்டை மாநிலங்களிலும் உள்ள வாடிக்கையாளர்களின் தேவையினைப் பூர்த்தி செய்ய கறை ஒட்டாத மற்றும் சுருக்கம் இல்லாத பட்டுச் சேலைகளை அறிமுகப்படுத்தி பலராலும் விரும்பத்தக்க வண்ணம் ஒப்பற்ற பட்டுப்புடவைகளை உற்பத்தி செய்வதுடன், வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புடவைகளுக்கு சர்வதேச அளவில் உள்ள மக்களுக்கு விழிப்புணர்ச்சியை தூண்டும் வகையில் இணையதளம் (Internet) மூலம் விளம்பரப்படுத்தப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டுக்கு கதர் பட்டு உற்பத்திக் குறியீடு ரூ.27.00 கோடி என வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், பட்டு நெசவாளர்களை ஊக்குவிக்கும் விதத்தில் 10 விழுக்காடாக வழங்கப்பட்டுவரும் கைவினைஞர்களுக்கான நலநிதி 12 விழுக்காடாக உயர்த்தப்பட்டு கடந்த 1-4-2001-லிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

[2001 ஆகஸ்ட் 31

**பொது வசதி மையம், காட்டாம்பட்டி**

8. பட்டு நூலின் சலவை மற்றும் சாயப்பணிகள் அந்தந்த பட்டு உபகிளைகளில் தற்போது செய்யப்பட்டு வருகிறது. பட்டு நூலின் சாயப்பணிகள் ஒரே சீராக அமைய வேண்டியும், தூய்மைக்கேட்டினைத் தவிர்ப்பதற்கும் ரூபாய் 14.00 இலட்சம் செலவினத்தில் 50 கிலோ திறன் கொண்ட ஒரு பொது வசதி மையத்தை சேலம் மாவட்டம் காட்டாம்பட்டியில் நிறுவிட மத்திய பட்டு வாரியம் அனுமதித்துள்ளது. இந்த செலவினத் தொகையில் 85 விழுக்காடு மானியத் தொகையாக இருக்கும்.

**நூற்போர், நெசவாளர் மற்றும் கைவினைஞர்களுக்கான நலத் திட்டம்**

9. வாரியம் கைவினைஞர்களுக்கான நலநிதித்திட்ட நிதியினை செயல்படுத்தி வருகிறது. அவர்களது கூலியிலிருந்து 12 விழுக்காடுகள் நல நிதிக்கு வழங்குவதுடன் வாரியம் அதற்கு ஈடான பங்குத்தொகையை நலநிதியாக வழங்குகிறது. இவ்வகையில் தோற்றுவிக்கப்பட்ட நிதி நூற்போர் மற்றும் நெசவாளர்களது நலத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்துடன், நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு கூலியுடன் 10 விழுக்காடு தொகையினை ஊக்குவிப்புத் தொகையாக வாரியம் வழங்கி வருகிறது.

10. நூற்பாளர் மற்றும் நெசவாளர் மரணமுற்றால் அவரது வாரிசு தாரர்களுக்கு கருணைத் தொகையாக ரூ.20,000/- குடும்ப நலநிதித் திட்டத்திலிருந்து வழங்கும் திட்டத்தை வாரியம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

11. 60 வயதை அடைந்த கதர் நெசவாளர்கள்/நூற்பாளர்களுக்கு மாதம் ரூபாய் 200 ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**கதர் மற்றும் பட்டு இரக விற்பனைக்கான தள்ளுபடி**

12. கதர் நெசவாளர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பினை பெருக்குவதற்காக தமிழகத்தில் கதர் நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கதர் பருத்தி மற்றும் பாலியஸ்டர் இரகங்களுக்கு 30 விழுக்காடு தள்ளுபடியும், கதர் பட்டுக்கு 20 விழுக்காடு தள்ளுபடியும் ஆண்டு முழுவதும் வழங்கும் வகையில் கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையம் வழங்கும் தள்ளுபடியுடன் தமிழக அரசு 10 முதல் 20 விழுக்காடு வரை தள்ளுபடி வழங்குகிறது.



2001 ஆகஸ்ட் 31]

**விற்பனை**

13. வாரிய அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனைக்காக 233 கதர் அங்காடிகளும், 16 கிராம சில்பாக்களும், 11 தோல் விற்பனை நிலையங்களும் வாரியத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

14. கண்காட்சிகள் நடத்துவதன் மூலமாகவும், கிராமப்புறங்களில் சிறப்பு விற்பனை நிலையங்களைத் தொடங்குவதன் மூலமாகவும், விளம்பரங்களுக்கு மின்னணு சாதனங்களைப் பயன்படுத்தியும் கதர் கிராம உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திட வாரியம் முனைந்து செயல்படுகிறது. வெளி நாடுகளிடமிருந்து ஏற்றுமதி ஆணை கிடைத்திட கணினி இணையம் website-w.w.w.Khadi Kraft com. உருவாக்கப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.55.00 கோடி கதர் இரகங்கள் மற்றும் ரூ.292.17 கோடி கிராமத் தொழில்கள் என்ற அளவிற்கு விற்பனை செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

15. கதரங்காடிகளின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்துடன் மாநில அரசு சார்ந்த நிறுவனங்களின் பொருட்களான ஆவின், டாம்ப்கால், டான்டி மற்றும் இண்ட்கோசர்வ் பொருட்கள் வாரிய கதரங்காடிகளில் வைத்து விற்பனை செய்யப்படுகிறது.

16. மேலும், தற்போது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின்கீழ் செயல்படும் மகளிர் குழுக்களுக்கு அதிகமான விற்பனைத் தரகு வழங்கி அவர்கள் மூலமாக வாரியம் ஊரக சந்தையிலும் இடம் பிடித்து வருகிறது.

**கிராமத் தொழில்கள்**

17. முறையாகப் பயன் படுத்தப்பட்டால் ஏதும் வீணாவதில்லை என்ற நடைமுறைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு கிராமத் தொழிலில் அனைத்து திட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன. கிராமத் தொழில் திட்டங்கள் கிராமப் பகுதியில் வேளாண்மை சார்ந்த தொழில்கள் மற்றும் இதர பாரம்பரிய குடிசைத் தொழில்களைச் சார்ந்த ஊரகத் தொழில்களை முன்னேற்ற வடிவமைக்கப்பட்டு, கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்கி கிராமக் கைவினைஞர்களின் திறமையை ஊக்குவித்து, உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு நுகர்வோர் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. தமிழக அரசு, தனது பண்டகப் பொருட்கள் கொள்முதல் கொள்கை மூலம் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் சொந்த அலகுகளில்

[2001 ஆகஸ்ட் 31

தயாரிக்கப்படும் இனங்களுக்கு முன்னுரிமை அளித்து அதற்கான ஆணைக்கு நீட்டிப்பு வழங்கியுள்ளது. கிராமப்புறங்களில் அதிக அளவு வேலைவாய்ப்புகளை உருவாக்கி கணிசமான அளவில் வறுமையை அகற்றுவதற்கு இது பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

18. வாரியத்தின் 193 சொந்த அலகுகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் குறிப்பாகவும், முதன்மையாகவும், பெருமளவில் விரும்பப்படும் பொருட்கள் தேன், குளியல் சோப்பு, சலவை சோப்பு, சலவைத் தூள், ஷூக்கள் மற்றும் காலணிகள், தோல் பொருட்கள், கைமுறைக் காகிதம் ஆகியவகைகளாகும். தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் 1,613 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, கிராமப்புறங்களில் பல்வேறு நடவடிக்கைகளில் பெருமளவில் ஈடுபட்டு வருகின்றன. கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையத்தின் வரம்பிற்குள் வரும் 88,116 தனிப்பட்டக் கைவினைஞர்களுக்கு சொந்தமாகத் தொழில் தொடங்கிட வாரியத்தினால் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

## தச்சு மற்றும் கருமார் தொழில்

19. கிராமப்புறங்களில் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரும் பொருட்டு தச்சு மற்றும் கருமாரத் தொழில் உற்பத்தி மையங்கள் வாரியத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. மூன்று பெரும் தச்சு மற்றும் கருமாரத் தொழில் அலகுகளை சென்னை கிண்டி தொழிற்பேட்டையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் பேட்டையிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருப்பூரிலும், இதர மாவட்டங்களில் 6 சிறு அலகுகளையும் வாரியம் இயக்கி வருகின்றது. தமிழ்நாட்டில் பெரும்பாலான அரசுத் துறைகளின் மரத்தளவாடத் தேவைகள் இவ்வலகுகளால் நிறைவேற்றப் படுகின்றன.

## தோல் தொழில்

20. வாரியம் 26 காலணிகள் தயாரிக்கும் அலகுகளை தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் நிறுவியுள்ளது. இவ்வலகுகளில் காலணிகள், ஷூக்கள், நடத்துனர் பைகள், பொதுமக்களின் தேவைக்கும் காவல் துறை, சிறைத் துறை, தமிழ்நாடு சிமெண்ட் கழகம், சென்னை துறைமுக பொறுப்பாட்சி குழுமம், போக்குவரத்துக் கழகங்கள், நகராட்சிகள் போன்ற அரசுத் துறைகள் / நிறுவனங்களுக்கும் தமிழ்நாட்டில் உள்ள கதர் அங்காடிகள் மூலமாக விநியோகம் செய்யப்படுகிறது.



2001 ஆகஸ்ட் 31]

## உண்ணா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில்

21. தமிழகத்தில் கிராமப்புறங்களில் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளித்திடும் தொழில்களில் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தினால் செயல்படுத்தப்படும் உண்ணா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில் முக்கியமான ஒன்றாகும். வாரியத்தின் கீழ் 37 சோப்பு உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

22. வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் மேம்படுத்தப்பட்ட குளியல் சோப்புகளான வேம்பு, சந்தனம், கார்பாலிக் சோப்பு மற்றும் நீலநிற சலவைத்தூள் ஆகியவை பொது மக்களால் நல்ல முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு பொதுச்சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. நிலையான தரத்தைப் பெற்றுள்ளதாலும், வெளிச்சந்தையில் உள்ள சோப்பு இரகங்களைவிட வாரியம் உற்பத்தி செய்யும் சோப்பு இரகங்கள் பொது மக்களுக்கு உகந்தவிலையில் கிடைக்கப் பெறுவதினாலும்தான் பொது மக்களிடையே வாரியத்தினால் தயாரிக்கப்படும் சோப்பு இரகங்களுக்கு தொடர்ந்து ஆதரவு கிடைத்து வருகிறது.

இவை தவிர, சற்றே விலை கூடுதலான சந்தன சோப்பு வகை தயார் செய்யப்பட்டு, பொது மக்களின் வரவேற்பினை அறியும் பொருட்டு சென்னை கதரங்காடியில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

துணிகளிலுள்ள கறைகளை நீக்கத் தக்க வகையில் 'என்சைம்' பயன்படுத்தி டிடர்ஜெண்ட் பவுடர் வகை ஒன்று வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

வாரியமானது கைகழுவும் திரவம் மற்றும் சாம்பு ஆகிய இரு மூலிகைகளிலான பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யவுள்ளது.

## தேனீ வளர்ப்புத் தொழில்

23. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜம்னாமருதூர் ஆகிய இடங்களில் தேன் கொள்முதல் செய்து மார்த்தாண்டம் மற்றும் ஜவ்வாது மலையிலுள்ள தேன் பதப்படுத்தும் மையங்களில் பதப்படுத்தி, வாரிய மைய அலுவலகத்தில் அமைந்துள்ள பரிசோதனைக் கூடத்தில் தரம் சரிபார்க்கப்பட்டு, பின் கதர் அங்காடிகள்

மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கதர் அங்காடிகளில் விற்பனை செய்யப்படும் தேன் நல்ல வரவேற்பினை பெற்றுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அம்சியில் புதியதாக நிறுவப்பட்டுள்ள தேன் பதப்படுத்தும் மையம் முதல் இரகத் (ஏ-கிரேடு) தேனை உற்பத்தி செய்திட தற்பொழுது தயார் நிலையில் உள்ளது.

## கைமுறைக் காகிதத் தொழில்கள்

*24.* கந்தல் துணி, பயனற்ற காகிதங்கள் மற்றும் பயனற்ற வேளாண் நார்ப்பொருட்கள் ஆகிய மூலப்பொருட்களைக் கொண்டு சுழற்சி முறையில் மீண்டும் பயன்படுத்துதல் முறையினால் கைமுறை காகித அலகுகளில் பல்வேறு விதமான கைமுறை காகிதங்கள் உற்பத்திச் செய்யப்பட்டு வருகிறது.

*25.* தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தில் முக்கியமாக செயல்பட்டு வரும் தொழில்களில் கைமுறை காகித உற்பத்தியும் ஒன்றாகும். கைமுறை காகிதத் தொழில் “கழிவிலிருந்து செல்வம்” (Wealth from waste) என்ற கொள்கையின் அடிப்படையில் கதர் மற்றும் கிராமத்தொழில் ஆணையத்தின் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள கிராமத் தொழிலாகும்.

*26.* பிடாகம் கைமுறை காகித அலகினை நவீனப்படுத்தும் வகையில் உருளை வார்ப்பட இயந்திரம் சுமார் ரூபாய் 10.00 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட்டு தரம் வாய்ந்த அட்டைகள் மற்றும் கோப்பு அட்டைகள் தயாரிக்கப்படுகின்றன.

*27.* பெருவாரியான தேவைக்கேற்ப கைமுறை காகித அலகின் உற்பத்தியினைப் பல்வேறு வழிகளில் மாற்றி அமைத்திட வாரியம் முயன்று வருகிறது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பேப்பர் பை மற்றும் பேப்பர் உறை உற்பத்தி அலகு ஒன்றும் மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு நெளி நெளியான அட்டைப்பெட்டி தயாரிக்கும் அலகு ஒன்றினையும் நிறுவி வருகிறது.

## மட்பாண்டத் தொழில்

*28.* வாரியக் கட்டுப்பாட்டின்கீழ் 4 மட்பாண்ட அலகுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வலகுகளில் மெருகு மட்பாண்டங்கள், மட்பாண்ட பொருட்கள் தயாரிக்கப்பட்டு அவை அனைத்தும் சந்தையில் நல்ல இடத்தைப் பெற்றுள்ளன. இந்த அலகுகளில் தயாரிக்கப்படும் அழகு வண்ண மட்பாண்டப் பொருட்கள் மாநிலம் முழுவதும் உள்ள கதர் அங்காடிகள் மூலம் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.



## புதிய திட்டங்கள்

*29. 2001-2002* ஆம் ஆண்டில் அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், கீழ்க்காணும் புதிய திட்டங்களை பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.22.24 இலட்சம் செலவில் செயல்படுத்திட திட்டமிட்டுள்ளது:

**(i) மாவட்ட அலுவலகங்கள் மற்றும் முக்கிய கதர் விற்பனை நிலையங்களில் கணினி அமைத்தல்:**

திட்டங்களைத் திறமையாகச் செயல்படுத்துவதற்காக மற்றும் வாரிய அலகுகளின் பொருள் விவரப் பட்டியல்களை மதிப்பீடு செய்து திறமையான விற்பனை முடிவுகளை கதரங்காடிகளில் மேற்கொள்ள மாவட்ட அலுவலகங்கள் மற்றும் முக்கிய கதரங்காடிகளை ரூபாய் 10.00 இலட்சம் மதிப்பில் கணிப்பொறி மயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**(ii) பவானிசாகரிலுள்ள சாய, சலவை மற்றும் அச்சு அலகினை நவீனப்படுத்துதல்:**

துணிகள் அச்சிடும்பொழுது ஏற்படும் மண்ணெண்ணெய் வாசனையைத் தவிர்க்கும் பொருட்டும், அச்சிடும்பொழுது துணிகளின் தரத்தினை உயர்த்திடும் வகையிலும், பவானி சாகரிலுள்ள சாய, சலவை மற்றும் அச்சு அலகில் ரூபாய் 6.00 இலட்சம் மதிப்பில் ஒரு மித உலர் அறைகலன் நிறுவிட திட்டமிடப்பட்டுள்ளது.

**(iii) ஆண்டு முழுவதும் கண்காட்சி நடத்த நிரந்தர அமைப்பு ஏற்படுத்துதல் மற்றும் விற்பனைப் பிரிவுகளை வடிவமைத்தல்:**

பொம்மை, மரச்சாமான்கள், தோல் பொருட்கள், கைமுறை காகிதம், கைவினைப்பொருட்கள், பாய், சணல் மற்றும் கதர் பொருட்கள் ஆகியவைகளை ஆண்டு முழுவதும் பொருட்காட்சியாக அமைக்கப்படவுள்ளது. இந்த பொருட்காட்சி நடத்திட படிமேடை, அடுக்கம் மற்றும் காட்சிப்பெட்டி போன்ற நிரந்தரமான அமைப்புகளை ரூபாய் 3.64 இலட்சத்தில் நிறுவவும், குறளகம் கதர் அங்காடியில் உள்ள மூன்று கதர் விற்பனைப் பிரிவுகளை ரூபாய் 2.60 இலட்சம் மதிப்பில் புதியதாக வடிவமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம்

*30.* பழங்குடியினர் தொன்று தொட்டு செய்து வரும் அவர்களுடைய வேளாண் பருவகாலத்திற்கேற்ற தொழில் முறையிலிருந்து அவர்களை

விடுவித்து, அவர்களுக்கு வேறு பல தொழில்களை உருவாக்கித்தர இந்த வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. பழங்குடியினரின் பொருளாதார நிலையினை உயர்த்த அவர்கள் பயனடையும் வகையில் சில கிராமத் தொழில் திட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளது. பழங்குடியினர் குடும்பங்களுக்கு தேனீ வாளர்ப்புத் தொழில் நல்ல வருவாய் ஈட்டக் கூடிய தொழிலாக உள்ளது.

அறிவியல் முறையில் தேன் பதனிடும் முறையை நடைமுறைப்படுத்தும் வகையில் ஜவ்வாது மலையில் ஒரு தேன் பதப்படுத்தும் அலகு ரூ.7.25 இலட்சத்தில் நிறுவிட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

மேலும், ரூ.29.05 இலட்சத்தில் 350 தேன் பெட்டிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் திட்டம் ஒன்று செயல்படுத்திட வாரியம் உத்தேசித்துள்ளது. இத்திட்டம் ஆரம்பத்திலிருந்து இதுவரை ரூ.553.14 இலட்சம் முதலீட்டில் 8397 பழங்குடியினருக்கு உதவியுள்ளது.

**மைய அரசு ஏற்கும் திட்டங்கள்:**

**மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்**

31. இத்திட்டத்தின்கீழ், தேனீ வளர்ப்பு, நீலகிரித் தைலம் மற்றும் எலுமிச்சைப் புல் தைலம் வடிகட்டுதல் போன்றவை செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் ரூ.116.36 இலட்சம் நிதியுதவி மூலம் 5796 நபர்கள் பயன் அடையும் வகையில் வடிகலன்கள், தேனீப் பெட்டிகள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

32. 1975-76 ஆம் ஆண்டு முதல் நீலகிரி மாவட்டத்தில் இயற்கை வளத்தை நம்பியிருக்கும் மலைவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்புக்களை வாரியம் உருவாக்கி தந்திருக்கிறது. வாரியம் 6,107 நபர்கள் பயனடையும் வகையில் ரூ.213.36 இலட்சம் செலவில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது.

**சிறப்பு மைய நிதியுதவி**

33. ஆதிதிராவிடர் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு தோல், பிரம்பு மற்றும் மூங்கில், தச்சு மற்றும் கருமார் போன்ற



தொழில்களில் பல்வேறு திட்டங்கள் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 37,317 ஆதிதிராவிடக் கைவினைஞர்கள் ரூ.27.07 கோடி மதிப்பீட்டுத் தொகையில் சிறப்பு மைய நிதி உதவியின்கீழ் பயனடைந்துள்ளனர்.

**கிராமப்புற வேலைவாய்ப்பு செயல்பாட்டுத் திட்டம் (விளிம்புத் தொகை திட்டம்)**

34. மும்பை கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையம் 1996 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் கிராமப்புறங்களில் வாழ்கின்ற கைவினைஞர்களுக்கு சிறப்பு வேலைவாய்ப்புகளை அளிப்பதற்காக விளிம்புத் தொகை திட்டம் என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் சாத்தியக்கூறுள்ள அனைத்து கிராமப்புற தொழில்களுக்கும் பொருந்துமாறு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வங்கிகள் மூலம் நிதி உதவி பெறலாம். திட்ட மதிப்பீட்டில் 25 விழுக்காடு விளிம்புத் தொகை பின் புல மான்யமாக மும்பை கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையத்தினால் அளிக்கப்படும். இதற்கான பயனாளிகளின் பங்கு 10 விழுக்காடு ஆகும். ஆதி திராவிடர்/ பழங்குடியினர் மற்றும் மகளிர் முனைவோர்களுக்கு 30 விழுக்காடு விளிம்புத் தொகை ஒதுக்கப்படும். 5 விழுக்காடு மட்டுமே அவர்களின் பங்காக அமையும். வாரியம் இதுவரையில் 212 தனி நபர்களுக்கும், ஒரு கூட்டுறவு சங்கத்திற்கும் விளிம்புத் தொகை திட்டத்தின்கீழ் ரூ.77.00 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது. கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையம் தற்பொழுது கூட்டுறவு வங்கிகள் மூலம் பெறப்படும் கடன்களுக்கும் திரும்பப் பெறும் அடிப்படையில் விளிம்புத் தொகை வழங்கவேண்டும் என்று அறிவுரை வழங்கியுள்ளது. கூட்டுறவு வங்கிகளையும் இத்திட்டத்தின் கீழ் சேர்ப்பதற்கு தற்பொழுது வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு விளிம்புத்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

**வாரியத்தின் நிதி நிலை**

35. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் கீழ்க்காணும் இருவகைத் தலைப்பின் கீழ் வரவு-செலவுத் திட்டங்களை தயாரிக்கிறது:

(i) கதர் நிதி; மற்றும்

(ii) கிராமத் தொழில் நிதி

36. பல்வேறு கதர் மற்றும் கிராமத் தொழில் திட்டங்களை செயல்படுத்த நிதியுதவியினை மும்பை கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையம் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதியுதவிக் கொள்கையின்படி அனுமதித்து வருகிறது.

37. மேலும், மாநில அரசால் ஒப்படைக்கப்படும் பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி நிறைவேற்ற மாநில அரசிடமிருந்து வாரியம் நிதியுதவி பெற்று வருகிறது.

38. மாநில அரசால் வழங்கப்பட்ட நிதியுதவி பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | விவரம் | திருத்திய மதிப்பீடு 2000—2001 | திருத்திய வரவு—செலவு திட்ட மதிப்பீடு 2001—2002 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (i) | நிகரச்செலவு மானியம் | 2528.87 | 2,000.00 |
| (ii) | தணிக்கைக் கட்டணம் | 317.78 | 260.00 |
| (iii) | கதர் விற்பனை தள்ளுபடி | | |
| | (அ) கதர் வாரியம் | 400.00 | 400.00 |
| | (ஆ) சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் | 500.00 | 500.00 |
| (iv) | சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக | 86.77 | 30.31 |
| | மொத்தம் | 3833.42 | 3190.31 |

## தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம்

## 2001–2002 ஆம் ஆண்டிற்கான கொள்கையும் திட்டங்களும்

39. தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம், 6-1-1995 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. நலிவுற்ற ஏழைப் பனைத் தொழிலாளர்களுக்கு சுயவேலைவாய்ப்பு அளித்து, அவர்களது பொருளாதார நிலையை உயரச் செய்வதே இவ்வாரியத்தின் முக்கிய நோக்கமாகும். மாநில மற்றும் மாவட்ட சம்மேளனங்கள், பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை மூலம் பனைத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு திட்டங்களின்கீழ் சுயதொழில் தொடங்க நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பனைத் தொழிலில் ஆறு இலட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். கிராமப் பகுதியில் உள்ள பனைத்



தொழிலாளர்கள் முன்னேற்றம் அடைய, பல்வேறு திட்டங்களின்கீழ் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பனைத் தொழிலில் மேம்படுத்தப்பட்ட நவீனத் தொழில் நுணுக்கங்களைப் புகுத்தி பொருட்கள் உற்பத்தி செய்ய பனைத் தொழிலாளர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

40. இவ்வாரியத்தின்கீழ் ஒரு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையமும், 8 மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனங்களும், 996 ஆரம்ப பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள், பனைப்பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றன. மேலும், மாவட்ட சம்மேளனங்கள் மற்றும் மாநில சம்மேளனம் ஆகியவை நேரிடையாக தனது அலகுகள் மூலம் பனைப் பொருட்களை உற்பத்தி செய்கின்றன. இந்த அமைப்புகள் மூலமாகவும், மாநிலமெங்கும் உள்ள கதர் அங்காடிகள் மூலமாகவும், பனைப்பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

41. தமிழ்நாட்டில், பனைத்தொழிலில் தற்போது பல்வேறு வகையான உண்ணும் பனைப்பொருட்களான பதநீர், பனைவெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு மற்றும் பனஞ்சர்க்கரையைக் கொண்டு தயாரிக்கப்படும் பான வகைகள், இனிப்பு சாக்லெட் வகைகள் மற்றும் உண்ணாப் பொருட்களான பனை ஓலைப் பொருட்கள், பனை நார்ப் பொருட்கள், பனந்தும்பு, பனந்தும்பினால் செய்யப்பட்ட தூரிகைகள், பல்வேறு வகையான ஈச்சங்கூடைகள் மற்றும் இதர வகையான கைவினைப் பொருட்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. அரசின் பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளுக்கு விதைப்பிற்காகப் பனை விதைகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

### உற்பத்தி

42. 2001-2002 ஆம் ஆண்டிற்கு இணையம்/சம்மேளனங்களின் அலகுகளுக்கு பனைப் பொருட்கள் உற்பத்தி குறியீடாக ரூ.1120.00 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### விற்பனை

43. பனைப் பொருட்களை உரிய காலத்தில் விற்பனை செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2001-2002

ஆம் ஆண்டிற்கு ரூ.1,300.00 இலட்சம் மதிப்புள்ள பனைப் பொருட்களை விற்பனை செய்திடக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு**

44. பனைத் தொழிலில் முன்னிலை வகிக்கும் மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். இத்தொழிலில் ஆறு இலட்சம் கைவினைஞர்கள் ஈடுபட்டுள்ளனர்.

**பனந்தும்பு மற்றும் பனை ஓலைப் பொருட்கள் ஏற்றுமதி**

45. தூத்துக்குடியிலுள்ள பனந்தும்பு ஏற்றுமதி அலகின் மூலம் பெல்ஜியம், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற அயல்நாடுகளுக்கு பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.200.00 இலட்சம் மதிப்புள்ள பனந்தும்பினை ஏற்றுமதி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. முகவர்கள் மூலமாக பனை ஓலைப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

**பனைத் தொழிலில் பயிற்சிகள்**

46. கடலூரில் தென்மண்டல பனைப் பொருட்கள் பயிற்சி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி மையத்தின் மூலம் கிராமப்புற தொழிலாளர்களுக்கு பனைத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

47. கிராமப்புறங்களில் உள்ள பனைத் தொழில் கைவினைஞர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி கொடுப்பதுதான் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் திட்டமாகும். சிறிய அளவு மூலதனத்துடன், உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்களை பயன்படுத்தி, நாள்தோறும் மக்கள் வாங்கி பயன்படுத்தும் மற்றும் இலகுவாக விற்பனையாகும் பொருட்களை உற்பத்தி செய்து அதன் மூலம் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இத்திட்டங்கள் வகை செய்கின்றன.

.....



# இணைப்பு II

*(346 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 47 மற்றும் 59

## ஊரகத் தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

## கொள்கை விளக்கக் குறிப்பு 2001–2002

### ஊரக மற்றும் சிறுதொழில்கள்

எந்த ஒரு நாட்டிலும் தொழிலுக்கு சிறுதொழில்கள் அடித்தளமாகவும், பெருந்தொழில்கள் அதனைச் சார்ந்த மேல்நிலையிலும் அமைந்துள்ளன. எனவே, மொத்த நுகர்பொருள், வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதிகள் ஆகியவற்றில் சிறுதொழில்களின் பங்கு மகத்தானது. சிறுதொழில்கள் விரிந்து சீராகப் பரவலாக்கப்படவேண்டுமென்பதே மாநிலத்தின் தொழில் கொள்கையாகும். சிறுதொழில்களின் வளர்ச்சியினால் மட்டுமே ஊரக மற்றும் புறநகர் பகுதியின் தனிநபர் வருமானம், வேலைவாய்ப்பு மற்றும் பொது மனிதனின் வாங்கும் திறன் ஆகியவற்றை பரவலாக்க முடியும்.

மாநிலத்தின் பொருளாதாரத்தில் தமிழ்நாட்டிலுள்ள சிறு மற்றும் குறுந் தொழில்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. கடந்த ஆண்டுகளில் சுமார், ரூ. 11,892 கோடி முதலீட்டைப் பெற்றுள்ள 3,87,597 சிறு தொழிலகங்கள், சுமார் 29 இலட்சம் பேருக்கு வேலையளிக்கின்றன. ஒரு சிறுதொழில் என்பது அதன் இயந்திர மற்றும் தளவாடங்களின் மதிப்பு ரூ.100 இலட்சம் வரை இருக்க வேண்டும். ரூ.25 இலட்சம் வரை உள்ள தொழில்கள் குறுந்தொழில்களாகும். நாட்டின் தொழில் துறையில், சிறுதொழில்கள் 30 விழுக்காடு, தயாரிப்பு 35 விழுக்காடு ஏற்றுமதி மற்றும் 80 விழுக்காடு வேலைவாய்ப்பு ஆகியவற்றில் பங்கு வகிக்கின்றன. இந்திய அரசு, தயாரிப்புத் துறையில் 797 இனங்களை சிறுதொழில்களுக்கென்றே ஒதுக்கியுள்ளது. மேலும் கொள்முதல் முன்னுரிமையின் கீழ் 350 இனங்களையும் சிறுதொழில்களுக்கென்றே ஒதுக்கியுள்ளது. 13.7.93 முதல் சிறுதொழில்களுக்கென தனியாக ஒரு துறை தலைமைச் செயலகத்தில் செயல்பட்டுவருகிறது. தொழில்வணிக இயக்ககம் சிறுதொழில் துறையின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும் முகவரமைப்பாக உள்ளது. 1990 முதல் தாராளமயமாக்கப்பட்ட கொள்கையின் விளைவாக இந்த

இயக்ககத்தின் சட்டம் மற்றும் ஒழுங்குமுறை நடைமுறைப் பணிகள், வளர்ச்சிப் பணிகளாக மாறியுள்ளன.

**1.1 மாவட்டத் தொழில் மையங்கள்**

தற்போது மாநிலத்தில் மாவட்டத் தொழில் மையங்கள் அரியலூார் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றன. நடப்பு 2001-2002ஆம் ஆண்டில் அரியலூார் மாவட்டத்தில் மாவட்டத் தொழில் மையம் ஒன்று நிறுவப்படும். மாவட்டத் தொழில் மையங்கள் பொது மேலாளர் தலைமையின் கீழ் மற்ற நிர்வாக அலுவலர்கள் மற்றும் தொழில் நுட்ப களப் பணியாளர்கள் உதவியுடன் செயல்படுகிறது. புதிய தொழில்கள் நிறுவ விரைவான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டி பொது மேலாளர் அவர்களுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**1.2 தொழில் வணிக இயக்ககத்தின் பல்வேறு நடவடிக்கைகள் பின்வருமாறு:**

1. சிறுதொழில், குறுந்தொழில் மற்றும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வது மற்றும் மேம்படுத்துவது.

2. சிறுதொழில்களுக்கான மாநில மூலதன ஊக்குதவித் தொகை, மின்னாக்கி (ஜெனரேட்டர்) ஊக்குதவித்தொகை, மின் கட்டண ஊக்குதவித் தொகை போன்ற பல்வேறு ஊக்க உதவித் தொகைகள் மற்றும் உதவித் தொகைகளை ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதல்.

3. இரசாயனம், உலோகம், உலோகப் பொருட்கள், மின்சாதனம், மின்னணுப் பொருட்கள் போன்ற பல்வேறு பொருட்களுக்கும் பரிசோதனை வசதிகளை அளித்தல்.

4. பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

5. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

6. கருத்தரங்குகள் மற்றும் தகவல் கூட்டங்கள் நடத்துவதன் மூலம் அரசின் பல்வேறு கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றை மக்களிடையே பரப்பி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்.



7. தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டியாக, அதாவது திட்டங்களைக் கண்டறிதல் மற்றும் தயாரித்தல், நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுடன் இணைப்பை ஏற்படுத்துதல் மற்றும் உற்பத்தி தொடங்கும் வரை இயந்திரங்களைத் தேர்ந்தெடுத்தல், கொள்முதல் செய்தல் மற்றும் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஏற்றுமதி அமைப்பேடு பெற்றுத் தருதல்.

8. மின்சார மற்றும் மின்னணு தொழில்களுக்காக அமைக்கப்பட்ட தொழிற்பேட்டைகளைப் பராமரித்தல்.

9. தகவல் வங்கி, பல்வேறு மாவட்டத் தொழில் மையங்களுடன் இணைக்கப்பட்ட தகவல் மையம் மற்றும் தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள் மூலமாகத் தொழில் முனைவோருக்கு வழிகாட்டுதல்.

10. தொழில் மேம்பாட்டு வாய்ப்புள்ள புதிய பகுதிகளைக் கண்டறிதல், தொழில் முனைவோருக்கு தொழில் பிரபலமடைதல் மற்றும் காப்பக வசதிகளுக்கு வகை செய்தல்.

11. தொழில் நுட்பப் பொருளாதார கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

12. மாதிரி மற்றும் ஒட்டுமொத்தமான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

13. குடிசைத் தொழில் மற்றும் கைவினைத் தொழில்களை மேம்படுத்துதல்.

14. இலேசான ரக பொறியியல் தொழில்கள், கருவி மற்றும் அச்சு வடிவமைப்பு ஆகிய தொழில்களில் பயிற்சி வசதிகள் அளித்தல்.

15. நலிந்த தொழில் பிரிவுகளைக் கண்டறிந்து அறிவித்து நிதியுதவி செய்தல்.

16. மூலதனப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் கிடைத்தற்கரிய மூலப் பொருட்களை இறக்குமதி செய்ய உதவி செய்தல்.

17. வீட்டுப் பயனுக்கான மின்சாதனங்களுக்குரிய தரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.

18. 100% ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களுக்கு பரிசுகள் அளிப்பது மற்றும் 100% ஏற்றுமதி சார்ந்த நிறுவனமாக பதிவு செய்வதன் வாயிலாக ஏற்றுமதியை மேம்படுத்துதல்.

19. சிறிய மற்றும் குறுந்தொழில் பிரிவுகளுக்காக அரசு அறிவித்த

சிறப்பு நிதியுதவித் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடுதல்.

இத்துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளைப் பற்றிய விபரங்களை அறியும் பொருட்டு தொழில் முனைவோர்களின் வசதிக்காக இன்டர்நெட் வெப்சைட் கீழ்க்கண்ட கணிப்பொறி குறியீடுகளில் அறிய வசதி செய்யப்பட்டுள்ளது.

அ. tndic.org

ஆ. tamilnaduindcom.org

## 1.3 கொள்முதல் மற்றும் விலை முன்னுரிமை

சிறுதொழில்களுக்கென கிடைத்துவந்த "கொள்முதல் மற்றும் விலை முன்னுரிமை" ரத்து செய்யப்பட்ட காரணத்தால் கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாட்டிலுள்ள சிறுதொழில்கள் கடும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளன. 1958 ஆம் ஆண்டு முதல் கொள்முதல் மற்றும் விலை முன்னுரிமை நடைமுறையில் இருந்து வந்தது. இதனால் தமிழ்நாடு சிறந்து விளங்கியது. அரசாணை (நிலை) எண் 75 நிதித் துறை (பொ.நி.) நாள் 19-2-1997-ல் இம்முன்னுரிமைகள் திரும்பப் பெறப்பட்டபொழுது சிறுதொழில்களைச் சார்ந்த அனைவரும் அதிர்ச்சிக்குள்ளாயினர். இவ்வாசு, இந்த ஆணையை திரும்பப் பெறலாமென கொள்கை முடிவு எடுத்துள்ளது. அரசு ஆதரவின் அடிப்படையில் நடைபெறும் சிறுதொழில் பிரிவினர் மீண்டும் முழு அளவில் செயல்படத் தொடங்கியுள்ளதன் மூலம் சிறுதொழில் பிரிவின் முன்னேற்றம் கண்கூடாகத் தெரியத் தொடங்கியுள்ளது.

## 1.4 நலிவுற்ற தொழில்கள்

இந்தியா கையெழுத்திட்டுள்ள உலக வர்த்தக அமைப்புக் காலகட்டத்தில் அளவுக் கட்டுப்பாட்டுத் தடைகளை நீக்கியதன் விளைவாக அண்மையில், உற்பத்தி விலை மதிப்பு மற்றும் தரமேம்பாடு ஆகியவற்றில் சிறு மற்றும் குறுந்தொழில்களுக்கு பெருமளவில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதனால், இதர நாடுகளிலிருந்து பொருள்கள் தயாரிப்பவர்கள் மற்றும் வழங்குபவர்கள் மூலம், நம் நாட்டிலுள்ள உற்பத்தியாளர்கள் கடும் போட்டியை சந்திக்கின்ற நிலை ஏற்படுகிறது. எனவே, தொழில்கள் நலிவுறுதலின் நிலை மேலும் வேகமாகிறது. நலிவுறுதலின் தன்மைக்கேற்ப 20 முதல் 40 விழுக்காடு வரை நலிவுறுதல்





ஏற்படுகிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர, அனேக சிறுதொழில் அலகுகள் உற்பத்தி செய்யும் பொருட்களின் தேவை, பொருளாதார இறக்கத்தினால் குறைந்து காணப்படுகிறது என்பது உலகளாவிய உண்மை.

## 1.5 தீப்பெட்டித் தொழில்

மரபு வழியான தீப்பெட்டித் தொழில், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் சுமார் 7 இலட்சம் பேருக்கு, குறிப்பாக மகளிர்க்கு வேலை வாய்ப்பளிக்கிறது. இவை தற்பொழுது, இத்துறையில் இயந்திர முறையிலான தொழில்களை அமைப்பதை அனுமதிப்பதன் மூலம் கடும் போட்டி பிரச்சனைகளை சந்திக்கின்றன. இயந்திரமயமாக்கலைத் தடை செய்யவும், இயந்திரம் மூலம் தயாரிக்கும் தீப்பெட்டி மீதான சுங்க வரியை உயர்த்தவும் தமிழ்நாடு அரசு, மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

## 1.6 தேயிலை

இதைப்போலவே, தமிழ்நாட்டிலுள்ள தேயிலைத் தொழிலுக்கு சந்தை வாய்ப்பு மற்றும் பச்சைத் தேயிலை தயாரிப்பாளர்களுக்கு குறைந்த விலை ஆகியவற்றுள் பிரச்சினை ஏற்பட்டுள்ளது, ருசியா (Russia) சந்தையினால் ஏற்படுகிற இழப்பும் இப்பிரச்சின்னயை மேலும் அதிகரிக்கிறது. நிவாரண நடவடிக்கையாக, ஏலச்சந்தையில் கலந்து கொள்வது மற்றும் தேயிலைத் தூளினை பொது விநியோக முறை மூலம் விற்பதற்கு தமிழ்நாடு அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. தேயிலை விவசாயிகளுக்கு கிலோ ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 வீதம் கிடைப்பதற்கு வழிவகை கிடைக்கக்கூடிய அளவிற்கு மானியத்தை மீண்டும் வழங்க வேண்டுமென தமிழ்நாடு அரசு இந்திய அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளது. தேயிலை மீதான விற்பனை வரியினை 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகவும், மைய விற்பனை வரியினை 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகவும் குறைக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் தேயிலை விவசாயிகளிடையே நல்ல நம்பிக்கைய்யை ஏற்படுத்தியுள்ளது. ஏலச்சந்தையில் தேயிலையின் விலை அதிகரித்துள்ளது. தமிழ்நாடு அரசு, இறக்குமதிக்குரிய சுங்க வரியினை தற்போதைய 70 விழுக்காட்டிற்கும் அதிகமாக உச்சகட்ட அளவிற்கு உயர்த்த வேண்டுமென மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. நவம்பர் 2000-த்திலிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.2 மானியம் வழங்கியதை இந்திய அரசு நிறுத்திவிட்டது என்பதை இத்தருணத்தில் குறிப்பிடுவது அவசியமாகும்.

## 1.7 தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு வட்டிச் சலுகை

சிறுதொழில்கள் மற்றும் குறுந்தொழில்கட்கு தற்போது ஏற்பட்டுள்ள சிரமங்களிலிருந்து விடுபடுவதற்கு தமிழ்நாடு அரசு அனைத்து வசதிகளையும் உதவிகளையும் அளிப்பதை உணர்ந்துள்ளது. ஆகஸ்ட் 2000 ஆம் ஆண்டில் மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து தொழில் நுட்ப மேம்பாட்டிற்காக கடன் வசதியுடன் இணைந்த மூலதன சலுகைத் திட்டத்தின்கீழ் உதவி அளிப்பதற்கு நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்திய அரசு அறிவித்த கடன் உதவியுடன் இணைந்த மூலதனச் சலுகைத் திட்டத்தில் துணைபுரியும் வகையில் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு 5 விழுக்காடு வட்டிச் சலுகை அளிப்பதற்கு தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது. வர்த்தக வங்கிகள் மற்றும் மாநில நிதி நிறுவனங்களை இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலின்படி பொருத்தமான மாற்றங்களுடன் நடைமுறைக்கு ஏதுவான மற்றும் செயல்படுத்தக்கூடிய விதத்தில் சிறுதொழில்களுக்கு உதவி அளிக்க வேண்டுமென தமிழ்நாடு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

## 1.8 தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (தொ.மு.மே.நி.)

i.) மாநில பொருளாதாரத்திற்கான தொழிற்கூட்டமைப்பிற்கு சிறுதொழில்கள் அடித்தளமாக அமைகின்றன. உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குவதில் இதன் பங்களிப்பு அதிகமாக உள்ளது. தொழில் வளர்ச்சிக்கு அவசியமாக தொழில் மேம்பாட்டுத் திட்டம் வலியுறுத்தப்படுகிறது. இதுவரை எண்ணற்ற தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் இத்துறையால் நடத்தப்பட்டுள்ளன.

ii.) சிறுதொழில்களின் நலன் மற்றும் வளர்ச்சி குறித்த அவசியம் நீண்ட காலமாக உணரப்பட்டது. அதாவது தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் மூலம் புதியவர்களுக்கு தொழில் முனைவோர்க்கு தேர்ச்சியான பயிற்சி அளிப்பது ஒன்று. ஆனால், அவ்வாறு புதியதாக தொடங்கப்பட்ட தொழில்கள் அனைத்தும் வெற்றிகரமாக இயங்குதல் என்பது மற்றொன்று. சிறுதொழில்களின் வளர்ச்சியினைக் கண்காணிக்க தற்பொழுது சரியான ஏற்பாடு ஏதுமில்லை. இது தொழில் மேம்பாட்டில் செயல் எல்லைக்குள் உள்ளது. ஒரு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தை நிறுவுவதன் மூலம் இரட்டை நோக்கங்களான உயர்நிலை தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி மற்றும் தொழில் மேம்பாடு,



தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மையை மேம்படுத்தும் திட்டங்கள் ஆகியவற்றை அமைப்பு முறைக்கு உட்படுத்துதல் ஆகியவற்றை மெய்யாக்க இயலும்.

iii.) சிறுதொழில்/குறுந்தொழில் நிறுவனங்கள் தங்களது தொழில்நுட்பத் திறன் மற்றும் நுண்ணறிவைப் பெருக்க அமைப்பு முறையிலான நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தவும், உலகளாவிய அளவில் எழும் போட்டியினை சந்திக்கவும், சென்னையில் ரூ.4.00 கோடி செலவில் தொழில் முனைவோர் வளர்ச்சி நிறுவனம் ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக மைய அரசிடம் இருந்து ரூ.50.00 இலட்சமும், இதற்கு இணை மானியமாக ரூ.50.00 இலட்சமும் பெற திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் மாநிலத்தில் முதன்மையான தொழில் முனைவோர் மையமாகவும், சிறுதொழில் நிறுவனங்களின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காகவும் செயல்படும் மையமாகவும் விளங்கும்.

## 1.9 மின்னணு வணிகம் (E-Commerce)

தமிழ்நாட்டிலுள்ள சிறு மற்றும் குறுந்தொழில்களின் உண்மையான எண்ணிக்கை, அவை தொடர்புடைய உற்பத்திகள் இதர விபரங்கள் குறித்த நம்பகமான அடிப்படை விவரம் ஏதுமில்லை. சிறுதொழில் பகுதியிலுள்ள தொழிற் பிரிவுகளின் முறையான வளர்ச்சியை எய்துவதற்கு அம்மாதிரியான அடிப்படை விவரம் தேவைப்படுகிறது. அவ்வாறு மின்னணு அடிப்படை விவரக்குறிப்பினை உருவாக்குவதற்கு தற்பொழுது இயங்கிவரும் பதிவுபெற்ற மற்றும் பதிவுபெறாத ஆகிய இருவகை தொழிற் பிரிவுகளைப்பற்றி 100 விழுக்காடு, அலகுகளின் கணக்கு மற்றும் நில அளவை விவரங்களைத் தொகுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) இப்பணியை மேற்கொள்ளும். சிறு மற்றும் குறுந்தொழில்களுக்கு மின்னணு வணிகம் (ஈ-காமர்ஸ்) திட்டங்களையும் மற்றும் சந்தை உதவியையும் எளிதாக்க மேற்கூறிய தொழில்களின் அடிப்படை விவரங்களை சேகரிக்க ரூ.40 இலட்சம் செலவில் திட்டமிடப்பட்டுள்ளது.

## 1.10 தமிழ்நாட்டில் சிறுதொழில் கொள்கை

இந்த உலக வர்த்தக நிறுவன காலகட்டத்தில் மற்றும் தொடர்ந்து தாரளமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தால் சிறுதொழில்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை பல்வேறு கொள்கைகளைக் கொண்டு தணிப்பது அவசியமாகிறது. அரசு கடந்த வருடங்களில் இந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை முற்றிலும் தெரிந்திருந்தும் உறுதியான எந்த

[2001 ஆகஸ்ட் 31

நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. எனவே தமிழ்நாட்டிலுள்ள சிறுதொழில்களை சீரமைக்க பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவெடுத்துள்ளது. பல்வேறு சிறுதொழில் சங்கங்கள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்தும், சிறுதொழில் கொள்கைகள் இதுவரை வகுக்கப்படவில்லை. இதுதொடர்பாக ஆய்வு செய்து ஒரு வருடத்திற்குள் தமிழ்நாட்டிற்கு ஒட்டுமொத்தமான சிறுதொழில் கொள்கையினை கொண்டுவரக் கருதியுள்ளோம். இந்தத் தொகுதியில் பங்கீடு (STAKE) உள்ள அனைவருடனும் இப்பணி மேற்கொள்ளப்படும்பொழுது தொடர்பு கொள்ளப்படும்.

**1.11 பயிற்சி**

தற்போது இவ்வியக்ககம், திறமை வாய்ந்த தொழில் முனைவோர்க்கு பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்பு திட்டம் மற்றும் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழும் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 5 இலட்சம் மகளிர் தொழில் முனைவோர்களுக்கு பயிற்சியளிக்கும் திட்டத்தை நிறைவேற்ற இத்துறை உறுதி பூண்டுள்ளது மற்றும் ஐந்தாண்டுகளில் 1 இலட்சம் மகளிர் தொழில் முனைவோர் என இலக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**1.12 நிறுவனங்கள்**

கிண்டி, திண்டுக்கல், விருத்தாசலத்தில் உள்ள நிறுவனங்கள், கருவிப் பொறியியல், குளிர்பதனம், கண்ணாடி மற்றும் பீங்கான் போன்ற சிறப்பு தொழில்களுக்கு பயிற்சி அளித்துக்கொண்டு இருக்கின்றது.

**1.13 மானியங்கள்**

மாநிலத்தில் உள்ள சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களின் நலனுக்காக அரசால் அறிவிக்கப்பட்ட மானியங்கள் பின்வருமாறு:

1. மாநில மூலதன மானியம்
2. சிறப்பு மூலதன மானியம்
3. மகளிர்க்கான கூடுதல் மானியம்
4. குறைந்த அழுத்த மின் மானியச் சலுகை
5. மின்னாக்கி மானியம்



2001 ஆகஸ்ட் 31]

**1.14 சிறுதொழில் வாரியம்**

மைய அரசில் உள்ளவாறு, தமிழ்நாட்டில் சிறுதொழில் வாரியம் ஒன்று, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ், சிறுதொழில் சங்கங்கள் மற்றும் உரிய துறை உறுப்பினர்களுடன் செயல்பட்டுவருகிறது. இது சிறுதொழில் தொடர்பான கொள்கை மற்றும் அவைகளின் குறைகளை விவாதித்து அரசுக்கு அதன் பரிந்துரைகளை அனுப்புகிறது.

**1.15 காலந்தாழ்த்திய செலுத்துச் சட்டம்**

கோவை, திருச்சி, மதுரை மற்றும் சென்னையில் நான்கு மண்டல வசதி மன்றங்கள் அமைக்கப்பட்டு காலந்தாழ்த்திய செலுத்துச் சட்டத்தின்படி சிறுதொழில் நிறுவனங்களின் தாமதமான செலுத்துதல்களுக்கு தீர்ப்பு அளிக்கிறது.

**1.16 அமைப்பு ரீதியிலான தொழில் பேட்டைகள்**

எட்டு அமைப்பு ரீதியிலான தொழில் பேட்டைகள் மின் மற்றும் மின்னணுத் தொழில்களுக்காக தொழில் வணிக இயக்குநரகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**1.17 சோதனை வசதிகள்**

மின் மற்றும் மின்னணு, இரசாயன சிறுதொழில் நிறுவனங்களுக்காக சோதனை மற்றும் சேவை வசதிகளை செய்து தொழில் வணிக இயக்குநரகம் உறுதுணையாக இருக்கிறது.

**1.18 மின் மற்றும் மின்னணு**

மின் சோதனை வசதிகள் காக்களூர், கோவை, ஓசூர் மற்றும் மதுரையில் உள்ளன.

**1.19 இரசாயன சோதனை மற்றும் பகுப்பாய்வு மையம்**

இரசாயன சோதனை சேவை மையங்கள் சென்னை, மதுரை, கோவை, சேலம் மற்றும் தூத்துக்குடியில் நிறுவப்பட்டுள்ளன.

223444. சென்னை-600 008

53-163—12a

**1.20 மின் மருத்துவக் கருவிகள் சேவை மையம்**

கிண்டி, மதுரை, கோவை, தஞ்சாவூர் மற்றும் ஒசூரில் உள்ள மின் மருத்துவக் கருவிகள் சேவை மையங்கள் அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவக் கருவிகள் செயல்பாடு மற்றும் பழுது நீக்குதல் சேவையை செய்கின்றன.

**1.21 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்**

தொழிற்கூட்டுறவு பிரிவு கூட்டுறவு அமைப்பைக் கொண்டுள்ள தொழில்களுக்கு முன்னேற்றமளிக்கிறது. இது அதன் உறுப்பினர்களுக்கு, உற்பத்தி கொள்முதல் மற்றும் மூலப்பொருள்கள் வழங்குதல், உற்பத்தி பொருட்களின் விற்பனை மற்றும் இதர சேவைகளை அளிக்கின்றது. தற்போது 318 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் 63990 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. அதன் மொத்த விற்பனை ரூ.368.57 கோடி ஆகும்.

**அ. சேகோ**

சேகோசர்வ் நிறுவனம் நமது மாநிலத்தில் இவ்வியககத்தின்கீழ் வரும் தொழில் கூட்டுறவு சங்கங்களில் மிகச் சிறந்த உதாரணமாக திகழ்கிறது. இது 233.47 கோடி விற்பனையுடன் ஆசியாவிலேயே மிகப் பெரிய நிறுவனமாக உள்ளது. இது 800 முதல் 1000 சிறு மற்றும் நடுத்தர மாவுப்பொருள்கள் மற்றும் சவ்வரி தொழில் அலகுகளுக்கு உதவுகிறது. இவை நாட்டின் 80% தேவையை நிறைவு செய்கின்றது.

**ஆ. கயிறு**

5000 உறுப்பினர்களைக்கொண்டு 66 கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவை கயிறு, நூலிழை, நூல் மற்றும் இதர கயிறு பொருட்கள் தயாரிப்பதில் ஈடுபட்டு ரூ8.70 கோடி மொத்த விற்பனையுடன் உள்ளன. இவ்வியக்ககம் கயிறு தொழிற்கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள வசதிகளை மேம்படுத்துவதற்காக கயிறு வாரியத்தின் இணைப்போடு ஒருங்கிணைந்த கயிறு வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்துகிறது.

**இ. தேயிலை**

இண்ட்கோசர்வ்-ல் 16 தேயிலைக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவை நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறுதேயிலை உற்பத்தியாளர்களுக்கு உற்ற



துணையாக உள்ளது. இது 20793 உறுப்பினர்களையும், ரூபாய் 51.23 கோடி விற்பனையையும் கொண்டுள்ளது. தவிர பச்சைத் தேயிலை விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்க ஏதுவாக தயாரிக்கப்பட்ட தேயிலையை விற்பனை செய்யும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளது. மேலும் தேயிலை உற்பத்தியில் தரத்தினை இடுபொருள்கள் மூலம் அதிகரிக்கவும் மற்றும் நவீன முறைகளில் தேயிலை அறுவடை மற்றும் உற்பத்தி செய்யும் பயிற்சியினையும் அளிக்கின்றது. தற்போதுள்ள தேயிலை பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இண்ட்கோசர்வ் தேயிலையைக் கொள்முதல் செய்து கலவை செய்து பொட்டலங்களாக்கி அவற்றை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு, அதன் பொது விற்பனை மையங்கள் மூலம் விற்பனை செய்யும் பணியை மேற்கொண்டுள்ளது. இதன்படி தேயிலை ஏலத்தில் இண்ட்கோசர்வ் கலந்துகொள்ளத் தொடங்கியதை அடுத்து தேயிலையின் விலை உயரத் தொடங்கியுள்ளது.

இது தவிர, கைவினைஞர்கள் மற்றும் உற்பத்தி மற்றும் சந்தையிடுதலில் உள்ள பணியாளர்களுக்கு உற்ற துணையாக இருக்கக்கூடிய கைவினைப் பொருட்கள், உற்பத்திப் பொருட்கள் மற்றும் இதர சேவை சங்கங்கள் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் வருகின்றன.

மேற்கூறப்பட்ட திட்டங்களின் விளக்கங்கள் யாவும் இணைப்பு 1-ல் தரப்பட்டுள்ளன. பகுதி 2 திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட உள்ள அரசின் ஒப்புதலுக்காக உள்ள திட்டங்கள் இணைப்பு 2-ல் தரப்பட்டுள்ளன.

## இணைப்பு - 1

### ஊக்கத் தொகைகளும் உதவித் தொகைகளும்

**மானியங்கள் மற்றும் சலுகைகளின் அளவு**

குறுந்தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு இம்மாநிலத்தில் உள்ள 287 வட்டாரங்கள் தொழிலில் பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. அப்பகுதிகளில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகள் மாநில மூலதன மானியம், குறைந்தழுத்த மின் மானியச் சலுகை மற்றும் ஏனைய மானியங்கள் பெறத் தகுதியுடையவையாகும். இந்த மானியங்கள் அரசு நிறுவனங்களின் ஆதரவு பெற்ற தொழிற்பேட்டைகளுக்கும், தொழில் வளாகங்களுக்கும் கிடைக்கின்றன.

[2001 ஆகஸ்ட் 31

பல்வேறு மானியங்கள் மற்றும் சலுகைகள் பின்வருமாறு:

1. பின்தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகள், அதிகபட்சமாக ரூ.15.00 இலட்சம் என்பதற்குட்பட்டு, 15 சதவீத மாநில மூலதன முதலீட்டு மானியம் பெறத் தகுதியுடையனவாகும்.

2. மிகவும் பின்தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகள், அதிகபட்சமாக ரூ. 20.00 இலட்சம் என்பதற்குட்பட்டு, 20 சதவீத மூலதன முதலீட்டு மானியம் பெறத் தகுதியுடையனவாகும்.

3. முக்கிய தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு அதாவது மின்னணுத் தொழில்கள், தோல் தொழில்கள் ஆகியவற்றிற்கு உயரளவாக ரூ.20.00 இலட்சம் என்பதற்குட்பட்ட நிலையான சொத்துக்கள் மீது 20 சதவீத சிறப்பு முதலீட்டு மானியம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பகுதிகளுக்கும் கிடைக்கிறது.

4. தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலும் பின்வரும் தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு உயரளவாக ரூ.15.00 இலட்சம் என்பதற்குட்பட்டு நிலையான சொத்துக்கள் மீது 20 சதவீத சிறப்பு மூலதன முதலீட்டு மானியம் கிடைக்கிறது.

1. தானியங்கி துணைப் பாகங்கள்

2. மருந்து மற்றும் மருந்தகப் பொருட்கள்

3. உணவுப் பொருள் பதப்படுத்தும் தொழில்கள்\

4. சூரிய எரிசக்தி சாதனங்கள்

5. ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள் மட்டும்

6. சணல் பதப்படுத்தும் தொழில்கள் (தெரிவு செய்யப்பட்ட 6 வட்டங்களில் மட்டும்)

7. மாசுக்கட்டுப்பாட்டு சாதனங்கள்

8. விளையாட்டுப் பொருள்கள் மற்றும் உதிரி பாகங்கள்

9. அலுமினியம் போன்ற செலவு சிக்கனமான கட்டடப் பொருட்கள்



2001 ஆகஸ்ட் 31]

5. 30 சதவீதத்திற்கு மேலான பெண் தொழிலாளர்களைக் கொண்டுள்ள, புதிய சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கூடுதல் மூலதன முதலீட்டு மானியமாக அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சத்திற்குட்பட்டு, 5% அளிக்கப்படுகிறது.

6. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துள்ள சிறுதொழில் நிறுவனங்கள், சுத்திகரிப்பு நிலையத்தின் இயந்திர முதலீட்டில், அதிகபட்சமாக ரூ.2.00 இலட்சத்திற்குட்பட்டு 10 சதவீத மானியத்திற்குத் தகுதியுடையவையாகின்றன.

7. சிறுதொழில் பிரிவுகள், 15% மின்னாக்கி மானியமாக தங்களிடமுள்ள மின்னாக்கியின் விலையில் அதிகபட்சமாக ரூ. 5.00 இலட்சத்திற்குட்பட்டு, சதவீதம் பெறத் தகுதியுடையனவாகும்.

8. சிறுதொழில் பிரிவுகள், அவற்றின் அமைவிடங்களுக்கேற்ப குறைந்தழுத்த மின் இணைப்புகளுக்கு உள்ளபடியாக பயன்படுத்திய மின்கட்டணத்தில் முதல் மூன்று ஆண்டுகளுக்கு முறையே 40%, 30%, 20% என்ற அளவில் மின்கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது.

அரசு நிதிகளை விடுவிப்பதன்பேரில் இந்த உதவித் தொகை திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. வெவ்வேறு உதவித் தொகைக் கணக்குத் தலைப்புகளின் கீழ் எய்திய சாதனைகள் குறித்து, பின்வரும் அட்டவணை தெளிவாகக் காட்டுகிறது.

**உதவித் தொகை குறித்த வெவ்வேறு கணக்குத் தலைப்புகளின்கீழ் ஏற்பட்ட பணி முன்னேற்றம்**

(31.3.2001 அன்றுள்ளபடி)

| திட்டத்தின் பெயர் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | விநியோகிக்கப் பட்டது (ரூபாய் இலட்சத்தில்) | பயன்பெற்ற சிறுதொழில் நிறுவனங்கள் |
|---|---|---|---|
| மூலதன முதலீட்டு மானியம் | 1000.00 | 952.59 | 324 |
| குறைந்த மின் அழுத்த மானியம் | 800.00 | 797.03 | 2733 |
| மின்னாக்கி மானியம் | 70.01 | 70.01 | 159 |
| வட்டியில்லா விற்பனை வரி மானியம் 31.3.2001 வரை | 3578.80 இலட்சத்திற்கான தகுதிச் சான்றிதழ் | — | 130 |

[2001 ஆகஸ்ட் 31

## 1.22 பரிசோதனை வசதிகள்

### அ. மின்பயன் பொருட்கள் பரிசோதனை வசதிகள்

தரமுள்ள உற்பத்திப் பொருட்களைத் தயாரிப்பதில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் பொருட்டு திருவள்ளூருக்கு அருகில் உள்ள காக்களூர் மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் பரிசோதனை வசதிகள் அளிக்கப்படுகின்றன.

காக்களூரிலுள்ள மத்திய மின் ஆவுக்கூடம், இந்திய தர நிர்ணய நிறுவனம், இரயில்வே மற்றும் பொருள் வழங்கல் விற்பனைத் துறையின் தலைமை இயக்குநரகம் ஆகியவற்றினால், பல மின்சாரப் பொருட்களுக்கு பரிசோதனை வசதியளிக்க அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசு நிறுவனங்களுக்கு தரக்கட்டுப்பாடு பற்றிய ஆலோசனை வழங்கும் நிலையமாக இந்த ஆய்வுக்கூடம் விளங்குகிறது. மின்சாரப் பொருட்கள், குறிப்பாக வீட்டு உபயோக மின் சாதனங்களுக்கு, புதுடில்லியிலுள்ள தேசியப் பரிசோதனைக் கூடங்களின் அங்கீகாரக் குழுமத்தினர் (நாபில்) அங்கீகாரம் பெற்ற நிலையங்களில் இதுவும் ஒன்றாகும்.

### ஆ. தரக்கட்டுப்பாட்டு ஆணை அமலாக்க மையம்

மின்சார வீட்டு உபயோகப் பொருட்களுக்காக மைய அரசால் இடப்பட்ட தரக் கட்டுப்பாட்டு ஆணையை நடைமுறைப்படுத்துவதற்காக தரக்கட்டுப்பாட்டு ஆணை அமலாக்க மையங்கள் சென்னை, கோவை மற்றும் மதுரையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### இ. மின் மருத்துவக் கருவிகள் செப்பனிடும் நிலையங்கள்

தொழில் வணிகத் துறை, மின் மருத்துவக் கருவிகள் செப்பனிடும் நிலையங்களை கிண்டி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நடத்தி வருகிறது. இந்த நிலையங்கள் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் இதர அரசு மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றிலுள்ள குறைந்த நவீன நுட்பத் திறம்கொண்ட மின் மருத்துவ சாதனங்களைப் பழுது பார்க்கும் பணியை மேற்கொள்ளுமளவிற்கு வசதிகளைப் பெற்றுள்ளன.

### ஈ. இரசாயனப் பரிசோதனை வசதிகள்

பல்வேறுவகைத் தொழில்களுக்குத் தேவையான பலதரப்பட்ட பரிசோதனை வசதிகளை வழங்கும் பொருட்டு தொழில் வணிக



2001 ஆகஸ்ட் 31]

இயக்ககம், சென்னை, மதுரை, கோயம்பத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஆய்வுக்கூடங்களை அமைத்துள்ளது. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் கிண்டியில் அமைக்கப்பட்ட இரசாயன பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக் கூடம் பொது மக்கள், தொழில் முனைவோர்கள், குறிப்பாக சிறுதொழில் முனைவோர்கள் ஆகியோருக்கு உடனடியாக விற்பனையாகக்கூடிய தரமான பொருட்கள் தயாரிப்பதில் குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பரிசோதனை வசதிகளை அளிக்கிறது.

இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக் கூடம் பின்வருகின்ற இரசாயன மற்றும் இயற்பியல் பரிசோதனையில் ஈடுபட்டுள்ளது:

1. இரும்பாலான உலோகம், மென் உருக்கு, கலவை உருக்கு, கருவி தயாரிப்பு, உருக்கு போன்ற உலோகக் கலவை

2. தாமிரம், அலுமினியம், துத்தநாகம், டின், ஈயம் போன்ற இரும்பு கலவா உலோகங்கள் மற்றும் பித்தளை, வெண்கலம், கலவை உலோகம் போன்ற உலோகக் கலவைகளும் இதுபோன்ற வேறு உலோகங்களும்

3. வண்ணப் பொருட்கள்

4. சிமிட்டி, செங்கல், உருக்குக் கம்பி, கட்டுமானப் பணிக்கு தேவைப்படும் நீர், மணல் மற்றும் இதுபோன்ற சிமிட்டி கற்கலவையாலான கன சதுரங்கள்

5. பெட்ரோல், டீசல், மின்மாற்றி எண்ணெய் மற்றும் இதுபோன்ற பெட்ரோலியப் பொருட்கள்

6. தாதுப் பொருள் மற்றும் அனைத்துவகைக் கனிமங்கள்

7. அனைத்துவகை உரங்கள் (இரசாயனம் மற்றும் இயற்கை)

8. பயிர்ப் பூச்சிக்கொல்லிகள், பூச்சிக் கொல்லி மருந்துகள்

### உ. பீங்கான் தொழிலுதவி மையம், விருத்தாசலம்

விருத்தாசலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறு அளவில் பீங்கான் தயாரிக்கும் சுமார் 100 தொழில் பிரிவுகளுக்குத் தேவைப்படும் பொருட்களைத் (பாடி சிலிப்) தயாரிக்கும் பணியில்

இம்மையம் ஈடுபட்டுள்ளது. பீங்கான் தயாரிப்புப் பிரிவுகளுக்கு வழங்குவதற்காக, மாதந்தோறும் இம்மையம் சராசரியாக சுமார் 120 மெட்ரிக் டன் அளவில் பீங்கான் தொழிலுக்குத் தேவைப்படும் பொருட்களைத் (பாடி சிலிப்) தயாரிக்கிறது. இம்மையம் சுரங்க வடிவுக்குழாய் சூளை வழியாக பீங்கானைத் தீயினால் சுடுகின்ற வசதிகளையும் அளிக்கிறது. இச்சூளை 24 மணி நேரமும் இயங்குகிறது. இவ்வாறாக விருத்தாசலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலுள்ள பீங்கான் தயாரிப்புப் பிரிவுகளுக்கு, மூலப் பொருட்களும், சூளை வசதிகளும் அளிக்கப்படுகின்றன. தயாரிக்கப்படும் பீங்கான் வகையில் குறைந்தழுத்த மின்காப்புப் பொருட்கள், கலைப் பொருட்கள் மற்றும் பீங்கான் பொருட்கள் முதலியன அடங்கும்.

## 1.23 சுய வேலைவாய்ப்புத் திட்டம்

### பிரதமரின் ரோஜ்கர் யோஜனாத் திட்டம்

மத்திய அரசின் ஆணைப்படி படித்த, வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கு பிரதமரின் ரோஜ்கர் யோஜனாத் திட்டம், 1993 அக்டோபர் 2 ஆம் நாள் தொடங்கப்பட்டது. 18 முதல் 35 வரையிலான வயது வரம்பைச் சேர்ந்த படித்த வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கு இத்திட்டம் பயனளிக்கிறது. ஆதிதிராவிடர்கள் / பழங்குடியினர் / முன்னாள் இராணுவத்தினர் / உடல் ஊனமுற்றோர் / மகளிர் ஆகியோருக்கு வயது உச்ச வரம்பு, 1.4.1999 முதல் 45 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் எட்டாம் வகுப்பு தேறிய வேலையற்ற இளைஞர்களுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படும். மேலும், குறைந்தபட்சம் ஆறு மாதக் காலத்திற்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஆண்டு வருமானம் ரூ.40,000க்கு மிகையாக இருக்கக் கூடாது. குறைந்தது மூன்றாண்டுகள் ஒரே இடத்தில் குடியிருப்பவர்களாக இருத்தல் வேண்டும். இத்திட்டம் ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு 22.5 சதவீதம் இட ஒதுக்கீடும், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு 27 சதவீத இட ஒதுக்கீடும் அளிக்கிறது.

2000-01 ஆண்டில், நம் மாநிலத்தில் 18,500 பேருக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 2000-01 ஆண்டில் மொத்தம் 56,663 விண்ணப்பங்கள் (முந்தைய ஆண்டில் எஞ்சியவை உட்பட) வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டன. 2000-01 ஆண்டில் 31.3.2001 வரை 17,974 பேருக்கு ரூ.9207.42 இலட்சம் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.





1999-2000 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 15,490 இனங்களில், 14,782 நபர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு, அதில் 14,047 இனங்களுக்குக் கடன் வழங்கப்பட்டுவிட்டது. நடப்பு ஆண்டு 2001-2002க்கு இலக்காக 20000 மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## 1.24 ஒற்றைச் சாளர முறை

ஒரு தொழில் தொடங்க பல்வேறு துறைகளான மாசு கட்டுப்பாட்டு வாரியம், உள்ளாட்சி அமைப்புகள், நகர்ப்புற வளர்ச்சித் துறை, தீயணைப்புத் துறை, சுகாதாரத் துறை, தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் ஏனைய துறைகளிடமிருந்து பல்வேறு அனுமதிகளைப் பெற வேண்டியுள்ளது. ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சென்று இவ்வனுமதிகளைப் பெறும் கால விரயத்தைத் தொழில் முனைவோர்களுக்கே சேமிக்கும்வகையில், அரசு, மாவட்டத் தொழில் மையங்களைத் தொழில் வளர்ச்சிக்கு ஒற்றைச் சாளர முகமை அமைப்புகளாக நியமித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் தொழில் முனைவோர் தங்கள் விண்ணப்பப் படிவங்களை மாவட்டத்தில் அமைந்துள்ள மாவட்டத் தொழில் மையத்தில் கொடுக்கும்பட்சத்தில், மாவட்டத் தொழில் மையம் தேவையான அனுமதிகளை உரிய துறைகளிடமிருந்து பெற்றுத் தரும்.

பொதுவாக, மாவட்டத் தொழில் மையம் இவ்வனுமதிகளை 30 நாட்களுக்குள் பெற்றுத் தரும். தாமதிக்கப்பட்ட இனங்கள், மாவட்ட ஆட்சியாளரைத் தலைவராகவும் மற்றும் ஏனைய துறைகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட, மாதம் ஒருமுறை கூடும் மாவட்ட ஒற்றைச் சாளரக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும்.

தற்போது, 2000-2001 ஆம் ஆண்டில் 31-3-2001 முடிய பெறப்பட்ட 1173 விண்ணப்பங்களில், இக்குழு 1151 விண்ணப்பங்களை முடிவு செய்துள்ளது. இது இலக்கில் 98 விழுக்காடு ஆகும்.

31–3–2001 முடிய 194 ஒற்றைச் சாளரக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

நடப்பு ஆண்டு, மே 2001 முடிய 313 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 240 விண்ணப்பங்கள் நிறைவு செய்யப்பட்டு, 25 ஒற்றைச் சாளரக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

[2001 ஆகஸ்ட் 31

அனைத்து மாவட்டத் தொழில் மையத்தின் பொது மேலாளர்களும், தங்கள் முழு ஒத்துழைப்பை அளித்து இத்திட்டத்தினை நிறைவேற்ற வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

### 1.25 சிறுதொழில்களுக்கு விருதுகள்

தமிழ்நாடு அரசு, ஒவ்வோர் ஆண்டும் நன்கு செயல்படுகின்ற சிறுதொழில்கள், நடுத்தர மற்றும் பெருந்தொழில்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

#### அ. சிறுதொழில்களுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலான விருதுகள்

சிறப்புத் தகுதிச் சான்றிதழுடன் ரூ.10,000/- ரொக்கப் பரிசும், ரூ.3,000/- மதிப்புள்ள நினைவுப் பரிசும் மாநில அளவிலான விருது அளிக்கப்படும். மாவட்ட அளவிலான விருது பெறுபவர், ஒவ்வொருவருக்கும் நற்சான்றிதழுடன் கூடிய ரூ.3,000/- மதிப்புள்ள நினைவுப் பரிசு வழங்கப்படும்.

#### ஆ. மகளிர் தொழில் முனைவோருக்கு மாநில அளவிலான பரிசு

நற்சான்றிதழ் மற்றும் ரூ.3,000/- மதிப்புள்ள நினைவுப் பரிசுடன் முதலாவது பரிசுக்கு ரூ.25,000/-, இரண்டாவது பரிசுக்கு ரூ.15,000/- மற்றும் மூன்றாவது பரிசுக்கு ரூ.10,000/-மும் ரொக்கமாக வழங்கப்படும்.

#### இ. தரமிக்க பொருள்களுக்குரிய பரிசுகள்

சிறுதொழில்கள், நடுத்தர மற்றும் பெரிய தொழில்களில், தரமிக்க பொருட்களை வெற்றிகரமாகத் தயாரிக்கும் தொழிலதிபர்களுக்கு நற்சான்றிதழ் மற்றும் ரூ.3,000/- மதிப்புள்ள நினைவுப் பரிசுடன், முதல், இரண்டு மற்றும் மூன்றாவது பரிசுகளாக முறையே ரூ.25,000/-, ரூ.15,000/- மற்றும் ரூ.10,000/- ரொக்கமாக அளிக்கப்படும்.

#### ஈ. ஏற்றுமதிக்கான விருதுகள்

பின்வருகின்ற மூன்று வகைகளின் கீழுள்ள, தேர்ந்த தொழில் முனைவோர்களுக்குரிய ஏற்றுமதி விருது:

1. 100 சதவீத ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழில்கள்



2001 ஆகஸ்ட் 31]

2. தொடர்ந்து இரண்டாண்டுகளாக ஏற்றுமதியில் புதிய பொருட்கள் மற்றும் புதிய சந்தையிடுதலில் கணிசமான முறையில் முன்னேற்றம் காணும் தொழில் பிரிவுகள்

3. முந்தைய இரண்டாண்டுகளுக்குள் ஏற்றுமதியைத் தொடங்கியிருக்கும் தொழில் பிரிவுகள். சிறு, நடுத்தர மற்றும் பெருந்தொழில்களின்கீழ் தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு ஏற்றுமதியாளர்களுக்கும் நற்சான்றிதழுடன்கூடிய ரூ3,000/- மதிப்புள்ள நினைவுப் பரிசு வழங்கப்படும்

### 1.26 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஊரக மற்றும் சிறு தொழில்களை மேம்படுத்துதல்

#### அ. சேலம் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்பாளர்கள் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம்

சேகோசர்வ் என்றழைக்கப்படும் சேலம் மாவுப்பொருள் மற்றும் சவ்வரிசி தயாரிப்பாளர்கள் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்புப் பணியை மேற்கொள்கிறது. இச்சங்கத்தின் உறுப்பினர்கள், மரவள்ளிக் கிழங்கிலிருந்து சவ்வரிசி மற்றும் மாவுப் பொருட்களைத் தயாரிப்பவர்களாவர்.

மாவுப் பொருள் மற்றும் சவ்வரிசி தொழில் கடந்த 40 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகின்றபோதிலும், மேற்சொன்ன பொருள்களின் தயாரிப்பாளர்கள் மற்றும் பயனீட்டாளர்களின் நலனைப் பாதுகாக்கக்கூடியவகையில் அமைப்பு ரீதியிலான விற்பனை முறை ஏதும் இல்லாமலிருந்தது. இத்தகைய உற்பத்திப் பொருள்களுக்கான நுகர்வோர் மையங்கள் தமிழ்நாட்டிற்கு வெளியே அமைந்துள்ளதால், விரிவான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் சூழலையும் அவ்வப்போது ஏற்படக்கூடிய நுகர்வோரின் தேவையளவைக் கண்காணித்து வருதல் போன்றவற்றை சிறு அளவு உற்பத்தியாளர் செய்ய இயலாத காரணத்தால், அவர்களால் நேரடியாக விற்பனை செய்ய இயலவில்லை. நிதி வரையறைகள், மொழி அறியாமையால் ஏற்படும் தடை, இறுதி முறை விற்பனை அங்காடிகளை நிறுவுவதில் உள்ள இடையூறு, அலுவலக வசதியின்மை போன்ற இடர்ப்பாடுகளைத் தயாரிப்பாளர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இது இடைத்தரகர்கள், தரகர்கள் வளர்ச்சிக்கு வழிகோலுவதன் மூலம் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் விற்பனை நடைமுறையில் அவர்களுடைய ஆதிக்கத்தைத் தோற்றுவிக்கிறது.

செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ.7.62 இலட்சத்துடன் 168 உறுப்பினர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கமானது, தற்பொழுது செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ.5.91 கோடி மற்றும் 737 உறுப்பினர்கள் கொண்டதாக வளர்ந்துள்ளது. இச்சங்கம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் சவ்வரிசி, மாவுப் பொருள் மற்றும் மரவள்ளிக் கிழங்கு ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளது. விவசாயிகளும், செய்முறையாளர்களும், நியாயவிலை பெறுகின்றனர். இம்மாநிலத்திலுள்ள சவ்வரிசி, மாவுப் பொருள் தயாரிப்புப் பிரிவுகள் மூலம் சுமார் ஒரு இலட்சம் நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், சுமார் ஐந்து இலட்சம் நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கின்றன.

ஏனையோருக்கு விதிக்கப்படும் 4 சதவீத விற்பனை வரிக்கு பதிலாக சேகோசர்வ் மூலம் விற்பனை செய்யப்படும் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்களுக்கு தமிழ்நாடு பொது விற்பனை வரியின்கீழ் சலுகை வீதத்திலான 2 சதவீத விற்பனை வரியை தமிழ்நாடு அரசு விதிக்கிறது. இதைத் தவிர பங்கு மூலதனத்தில் பங்கேற்பதுடன் கூடுதல் விற்பனை வரிச் சுமையைக் குறைக்கும்வகையில் உதவித் தொகைக்கும் அனுமதி வழங்கியுள்ளது. சேகோசர்வின் நேரடி வியாபாரத்தை அதிகரிப்பதற்காக 11-11-1999 அன்று ஓர் இணையதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**ஆ. பாலிதின் பணித் தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கம்**

தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த பெண் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்தல் மற்றும் அவர்களுக்கு உயர்ந்த அளவு ஊதியங்கள் வழங்குதல் போன்றவற்றிற்காக பாலிதின் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. தற்போது பாலிதின் பைகள் மற்றும் சிப்பமிடும் பொருட்கள் தயாரிப்புப் பணியில் 17 பாலிதின் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. இச்சங்கங்கள் காட்டு இலாக்கா, கூட்டுறவுச் சிறப்பங்காடிகள், வேளாண் தொழில் கழகம், ஆவின் போன்ற பல அரசுத் துறைகளின் தேவைகளையும், இதர வியாபாரிகளின் தேவைகளையும் நிறைவு செய்து வருகின்றன. பாலிதின் சங்கங்களுக்கான தலைமையகம் சென்னையில் உள்ளது. அது தமிழ்நாடு பிளாஸ்டிக் தொழிற் கூட்டுறவுச் சங்கக் கூட்டமைப்பு என்ற பெயரில் இயங்கி வருகிறது. மூலப்பொருட்களை வாங்குதல், சேமித்து வைத்தல்,வ விநியோகம் செய்தல், உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் தொழில் நுட்ப



உத்திகளைத் தெரிவித்தல் போன்ற பணி வழிகளை இச்சங்கம் செய்து வருகிறது. உறுப்பினர் சங்கங்களிலிருந்து கிடைக்கக்கூடிய பாலிதின் கழிவுப் பொருட்களை, செய்முறைப்படுத்தி அவற்றைச் சிறு சிறு மணிகளாக மாற்றும் மறு செய்முறைப் பிரிவு ஒன்றையும் இச்சங்கம் வைத்துள்ளது.

**இ. குடிசைத் தொழில் தீப்பெட்டி தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

தமிழ்நாட்டில் கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளின் உற்பத்தியளவு நாட்டின் மொத்தத் தேவையில் சுமார் 85 சதவீதத்தை நிறைவு செய்கிறது. ஊரகப் பகுதிகளில் உள்ள பொருளாதார வகையில் நலிவடைந்த பிரிவினர்க்கு குறிப்பாக திருநெல்வேலி, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி போன்ற வறட்சிப்பாங்கான மாவட்டங்களில் வாழும் வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள மகளிருக்கு வேலைவாய்ப்பளிப்பதில் இத்துறை மிக முக்கியப் பங்காற்றுகிறது.

தரமுள்ள மூலப்பொருட்களைப் போட்டி விலைவீதத்தில் வாங்கி அவற்றை 'டி' பிரிவு உறுப்பினர்களாகவுள்ள தீப்பெட்டி தொழில்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்குதல் போன்ற பணிகளை ஆற்றுவதன் மூலம் தீப்பெட்டி சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தலையாய பங்கை ஆற்றுகின்றன. உறுப்பினர் தொழில் பிரிவுகள் தயாரிக்கும் தீப்பெட்டிகளின் தரத்தைக் கட்டுப்பாட்டுடன் வைப்பதோடு அவற்றை இந்தியாவில் உள்ள ஏனைய பகுதிகளில் விற்பனை செய்யும் பணியையும், இச்சங்கங்கள் மேற்கொள்கின்றன. 31-3-2001 அன்றுள்ள நிலவரப்படி 9 சிறு அளவிலான தீப்பெட்டி தயாரிப்பு சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அடங்கிய தமிழ்நாடு மாநிலத் தீப்பெட்டி உற்பத்தியாளர் மற்றும் சேவைத் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட் என்ற பெயரில் ஒரு தலைமையகம் சாத்தூரில் 600 உறுப்பினர்கள் கொண்ட 'டி' பிரிவு தீப்பெட்டி தொழிற் பிரிவுகளுக்காக பணியாற்றி வருகின்றது.

**ஈ. செங்கல் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்**

செங்கல் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், குறிப்பாக ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன. 13 செங்கல் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு

செய்யப்பட்டுள்ளன. மத்திய சிறப்பு நிதியுதவி தொகையளிக்கும் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் (தாட்கோ), உதவித் தொகை, தொடக்க நிதியுதவி, கடன் போன்றவகையில் மேற்சொன்ன செங்கல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவியை விரிவுபடுத்தியுள்ளது. 31.3.2001 வரை அனுமதிக்கப்பட்ட/வழங்கப்பட்ட தொகை பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**சிறப்பு உதவித் திட்டம்**

(ரூபாய் இலட்சத்தில்)

| திட்டம் | அனுமதிக்கப்பட்டவை | வழங்கப்பட்டவை |
|---|---|---|
| மானியங்கள் | 93.62 | 66.55 |
| தொடக்க நிதியுதவி | 54.20 | 6.44 |

மேற்சொன்ன செங்கல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தரமான சூளை செங்கற்களைத் தயாரித்து வழங்குகின்றன.

பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை — 2,350 தொழிலாளர்கள்

விற்பனை 31.3.2001 வரை — ரூ.65.48 லட்சம்

**உ. கயிறு தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுகள்**

பழுப்பு நிற நார் தயாரிப்பதில் தமிழ்நாடு மாநிலம், இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது. இம்மாநிலத்தில் கிட்டத்தட்ட 85,000 டன் நார் தயாரிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 69 கயிறு தயாரிப்புத் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை கயிறு நூலிழை மற்றும் கயிறுப் பொருள்களைத் தயாரிக்கின்றன. இவற்றின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.560.62 இலட்சம் ஆகும். மேலும் 10,453 உறுப்பினர்கள் இச்சங்கங்கள் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

மேற்சொன்ன கயிறு தயாரிப்புத் தொழிற்கூட்டுறவுகளின் நடவடிக்கைகளை நவீனப்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த கயிறு தொழில் வளர்ச்சித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதல் கட்டத்தின்கீழ் ரூ.461.94 இலட்சம் செலவில் 21 கயிறு தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கயிறு விற்பனைக்குத் தள்ளுபடி வழங்கும் திட்டத்தின்கீழ் 20 சதவீதம் தள்ளுபடி வழங்குவதற்கு இயலும்வகையில் 2000-01 ஆண்டில் ரூ. 50.00



இலட்சம் மானியத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கயிறு வாரியம் வழங்கக்கூடிய மானியத் தொகையைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டம் மாநிலத்தில் மும்முரமாக செயல்படுத்தப்படுகிறது. இந்த வருடம், 20 சதவீத கயிறு தள்ளுபடி திட்டத்திற்குப் பதிலாக, 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மீதமுள்ள காலங்களுக்கு அதாவது 2001-2002 வரை சந்தை மேம்பாட்டு வளர்ச்சி உதவித் திட்டம் மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ஏற்படும் செலவுகளை மத்திய அரசும், மாநில அரசும் 1:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும். இத்திட்டத்தின்படி, வருடாந்திர விற்பனையில் 10 சதவீதம் சந்தை மேம்பாட்டு வளர்ச்சி உதவி நிதியாக அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, அனைத்து உற்பத்திப் பொருட்களும் வருடம் முழுவதும் இவ்வுதவியைப் பெறுகின்றன.

சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநிலக் கயிறு தொழிற் கூட்டுறவு விற்பனை இணையம், (டான்கோபெட்) கயிறு தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்வதோடு, கயிறு தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களால் தயாரிக்கப்படும் கயிறுப் பொருள்களின் விற்பனையை உயர்த்தும் பொருட்டு இந்தியா முழுவதிலும் நடைபெறும் பல்வேறு தொழில் பொருட்காட்சிகளில் பங்கேற்கிறது. இம்மாநிலத்தில் கயிறு தயாரிப்புத் தொழிலை மேம்படுத்துவதற்காக, கயிறு தயாரிப்பு மேம்பாட்டு ஒருங்கிணைப்பு திட்டத்திற்காக அனுமதி வழங்கும்/செயல்படுத்தும் முகவரமைப்பாக இந்த இணையம் செயல்படுகிறது.

**ஊ. தேயிலைத் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்**

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 40,000 ஏக்கர் பயிரிடும் நிலப்பரப்பைக் கொண்ட சிறு அளவில் தேயிலை பயிரிடுவோர் சுமார் 30,000 உறுப்பினர்கள் உள்ளனர். 35,541 ஏக்கர் பரப்பளவு தேயிலை பயிரிடும் நிலப்பரப்பையும், சிறு அளவில் தேயிலைப் பயிரிடுவோர் 21,767 உறுப்பினர்களையும் கொண்ட 16 தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள், முறையாக உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றன. இக்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற் சாலைகளின் மொத்த உற்பத்தி 161 இலட்சம் கிலோ கிராமுக்கு அதிகமாகும்.

இன்ட்கோ தேயிலைத் தொழிற்சாலைகள் பின்வரும் முக்கிய குறிக்கோளுடன் அமைக்கப்பட்டன:

1. சிறிய அளவில் தேயிலை பயிரிடுவோருக்கு, பறித்த தேயிலைக்கு நல்ல விலை பெற்றுத் தருதல்

2. தேவையான இடுபொருள்கள் வழங்குவதன்மூலம் தேயிலைத் தோட்டங்களின் விளைச்சல் திறனை மேம்படுத்துதல்

3. தேயிலை உற்பத்தியை அதிகரிக்கும்பொருட்டு நவீன முறைகளில் பயிற்சி அளித்தல்

**எ. திண்டுக்கல் பூட்டுத் தொழிலாளர்கள் சங்கம்**

திண்டுக்கல் பூட்டுக்கள், பாரம்பரியமாகப் புகழ் பெற்றவையாகும். இச்சங்கம், பூட்டுகள் தயாரிப்பதற்காக மாநிலத்தில் உள்ள ஒரே தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஆகும். இச்சங்கத்தில் 50 தொழிலாளர்கள் உறுப்பினர்களாக இருக்கின்றனர். உறுப்பினர்கள் தயாரிக்கும் பூட்டுகளை விற்பனை செய்வதில் இச்சங்கம் முக்கியமாக ஈடுபட்டுள்ளது. இச்சங்கம் இரயில்வே, துறைமுகப் பொறுப்புக் கழகம், மருத்துவமனைகள், உள்ளாட்சி அமைப்புகள் முதலிய அரசு அமைப்புகளுக்கு பூட்டுகளை வழங்கி வருகிறது. தயாரிப்புப் பணிகளின் தரத்தை உயர்த்துவதற்காக பூட்டிற்குத் தேவையான உதிரி பாகங்களை தயார் செய்யவும், உற்பத்தியை நவீனமயமாக்குவதற்கும் ரூ.29.50 இலட்சம் செலவில் சங்கமானது நவீனப்படுத்தப்பட்டுள்ளது. இச்சங்கத்தை நவீனப்படுத்துவதற்காக கீ பிட்டிங் எந்திரம், கீ ஸ்லாட்டிங் எந்திரம், சாக்கில் எந்திரம், பாலிசிங் எந்திரம் போன்ற பிற எந்திரங்கள் வாங்கப்பட்டு, தற்போதுள்ள வசதிகளுடன் கூடுதலாக நிறுவப்பட்டுள்ளது. இவை வெவ்வேறு வகை பூட்டுகளைத் தயாரிப்பதற்காக, தன் உற்பத்தித் திறனை அதிகரிக்க இச்சங்கத்திற்கு உதவி புரியும்.

**ஏ. ஏனைய தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

**(i) சிற்பி (SIRPI):**

கைவினைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனையில் உதவி செய்ய, சென்னையில் தமிழ்நாடு கைவினைத் தொழில் கூட்டுறவு விற்பனை இணையம் என்ற தலைமை அமைப்பு செயல்பட்டு வருகிறது.

சிற்பி என்ற பெயரில் பிரபலமான இந்தச் சங்கம் சுமார் 23 கைவினைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்கிறது.





தமிழ்நாட்டில் கைவினைப் பொருள்களின் விற்பனையை உயர்த்தும் நோக்குடன் இந்தியாவிலுள்ள முக்கியமான இடங்களில இந்த இணையம் பொருட்காட்சிகளை நடத்துகிறது.. கைவினைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 1000 கைவினைஞர்கள் இச்சங்கத்தின் மூலம் பெரும் பயனைப் பெறுகின்றனர்.

**(ii) சென்னை தொழில் கூட்டுறவுச் சங்கப் பகுப்பாய்வுக் கூடம்: (CICAL)**

தமிழ்நாடு அரசு மருந்துக் கட்டுப்பாடு ஒழுங்குமுறை வாரியம், சென்னை தொழில் கூட்டுறவுச் சங்கப் பகுப்பாய்வுக் கூடத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இச்சங்கத்தில் சுமார் 283 உறுப்பினர்கள் உள்ளனர். இச்சங்கம் சுமார் 31 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 1,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கிறது. ஐ.பி., பி.பி. மற்றும் யூஎஸ்.பி. ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட தரங்களின்படி மூலப்பொருட்களையும், உற்பத்தி செய்த மருந்துப் பொருட்களையும் பகுப்பாய்வு செய்வதே இச்சங்கத்தின் நோக்கமாகும்.

பகுப்பாய்வுக் கூடத்தின் தரத்தை உயர்த்தும் பொருட்டு, இச்சங்கம் ரூ.40.00 இலட்சம் செலவில் நவீனப்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டு உள்ளது. இதில் தமிழ்நாடு அரசு தனது பங்குத் தொகைக்கு ரூ.10.00 இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. ரூ.30.00 இலட்சத்தை தாய்கோ வங்கி குறித்தகால கடனாக அளிக்கும்.

**1.27 செயற்கை வைரத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டல்**

திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் செயற்கை வைரத் தொழில்களைப் புதுப்பிக்கும்பொருட்டு, விற்பனை மத்திய சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் ஒன்றை அமைக்கவும், ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் பயிற்சி மையம் ஒன்றை நிறுவவும், அரசு, ரூ.123.50 இலட்சம் செலவிலான திட்டம் ஒன்றுக்கு 1998-99ல் ஒப்புதலளித்தது. இத்திட்டத்தின் குறிக்கோள், நிலைய ஆதரவு அளித்தல், தொழில்நுட்பத் தனித்திறம் பெறல், சந்தை வியாபார ஆதரவளித்தல், பயிற்சி வசதியளித்து தொழில்நுட்ப மேம்பாடு அடைதல், கச்சாப்பொருட்களை இறக்குமதி செய்தல், செயற்கை வைரம் ஏற்றுமதி செய்தல், தொழிலாளியை சுயநலத்திற்காக பயன்படுத்துபவரை நீக்குதல் மற்றும் லாபகரமான வேலைவாய்ப்பினை அதிகப்படுத்துதல் முதலியவையாகும். முதற்கட்டமாக திருச்சியில் விற்பனை மத்திய சேவை தொழிற்கூட்டுறவுச் சங்கம் 15-10-98ல் ஆரம்பிக்கப்பட்டது.

இச்சங்கத்தில் 317 கைவினைஞர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இச்சங்க உறுப்பினர்களிடமிருந்து முடிக்கப்பட்ட செயற்கை வைரங்களை வாங்கி நல்ல லாபகரமான விலையில் சந்தையில் அறிமுகப்படுத்துகிறது.

### 1.28 தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி

1961 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியில் தற்போது 477 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களாக உள்ளன. இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.409 இலட்சமாகும். இதில் தமிழ்நாடு அரசின் பங்கு ரூ.268.30 இலட்சமாகும். ரூ.500.00 இலட்சம் அளவுக்கு இவ்வங்கியிடமுள்ள குறித்தகால வைப்பீடுகளைத் திருப்பித்தர தமிழ்நாடு அரசு உத்திரவாதம் அளித்துள்ளது. அரசிடமிருந்து தாராளமான நிதியுதவி பெறுவதால் இவ்வங்கி 31-3-2001 ஆம் நாள் நிலவரப்படி ரூ.4948.41 இலட்சம் அளவுக்கு பல்வேறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், சிறுதொழில் நிறுவனங்களுக்கும், நிதியுதவி அளித்துள்ளது.

இவ்வங்கி தேயிலை, தீப்பெட்டி, நார், தோல், உலோகம், கைவினைப் பொருட்கள் மற்றும் ஊர்தி இயக்குதல் முதலிய வெவ்வேறு வகை தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது.

சென்னை, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், நீலகிரி, கரூர், பெரம்பலூார் ஆகிய பத்து மாவட்டங்களைப் பொறுத்தவரையில், தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நீண்ட காலக் கடன் வசதி அளிப்பதற்காக வேளாண்மை கிராம வளர்ச்சி தேசிய வங்கியின் மறு நிதியுதவி திட்டத்திற்காக இந்திய ரிசர்வ் வங்கி, இவ்வங்கியை அங்கீகரித்துள்ளது. தற்பொழுது இந்த வங்கி குறைந்த வட்டி விகிதத்தில் தொழில் கூட்டுறவுப் பிரிவில் புதிய திட்டங்களுக்கு தாராளமாக நிதி உதவி அளிக்கும் நிலையிலுள்ளது.

### 1.29 சிறு தொழில்களுக்கு நிதியுதவி

இம்மாநிலம் முழுவதிலும் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கிக்கு 22 கிளைகள் உள்ளன. இக்கிளைகள், உறுப்பினர் சங்கங்களுக்கு நிதியுதவி மற்றும் நகைக் கடனும் அளிக்கின்றன. இவ்வங்கி, சிறிய மற்றும் குறுந்தொழிற்சாலைகளுக்கும் நிதியுதவி அளிக்கிறது. இவ்வங்கி தற்பொழுது அதன் பணியாளர்களுக்கு



நுகர்வோர் கடன் மற்றும் தனிநபர்க் கடனும் அளிக்கின்றது. தொழில் வணிகத் துறை அரசு பணியாளர்களுக்கும் கடன் உதவி அளிக்கின்றது.

## இணைப்பு - II

### 2001-2002க்கான புதிய திட்டங்கள்

### 2001-2002க்கான பகுதி - II திட்டத்தின்கீழ் திட்டமிடப்பட்டவை

| வ. எண் | திட்டத்தின் பெயர் | 2001—2002க்கான மொத்த அடக்கம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மத்திய மின்பொருள் பரிசோதனைக் கூடம், சாக்களூர் நவீனமயமாக்குதல் | 9.75 |
| 2 | இராமநாதபுரம் மாவட்டத் தொழில் மையத்திற்கு கட்டிடம் கட்டுதல் | 10.00 |
| 3 | காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு மாவட்டத் தொழில் மையங்களுக்கு ஆழ்துளை கிணறு, பம்ப் அறை மற்றும் பம்ப் செட்களுக்கான திட்டம் | 3.35 |
| 4 | புதிய அரியலூார் மாவட்டத் தொழில் மையத்தினை உருவாக்குதல் | 6.50 |
| 5 | பண்ருட்டியில் முந்திரி பதப்படுத்தும், முந்திரி எண்ணெய் எடுக்கும் தொழிற்கூட்டுறவு சங்கம் துவங்குதல் | 22.12 |
| 6 | தஞ்சாவூர் தோல் மற்றும் ஆட்டோ லைனர்கள் தொழிற் கூட்டுறவு சங்கத்திற்கு பங்கு மூலதன உதவி | 1.50 |
| 7 | மருந்துபொருட்கள் சோதனை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம்,சிட்கோ, ஆலத்தூர் | 7.50 |
| 8 | சிறுதொழில் பிரிவுகளில் உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்வதற்காக தமிழ்நாடு சிறுதொழில் நுட்பப் பிரிவை விரிவுபடுத்துதல் | 40.00 |
| | மொத்தம் | 100.72 |

[2001 ஆகஸ்ட் 31

## 2. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

தமிழகத்தில் சிறுதொழில்களை ஊக்குவித்து வளர்ப்பதிலும், பின் தங்கிய/மிகவும் பின்தங்கிய பகுதிகளிலும் மற்றும் வளர்ந்துவரும் பகுதிகளிலும் அவற்றைப் பரவலாக்க வேண்டும் என்ற குறிப்பான நோக்கத்துடன் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் அக்டோபர் 1970ல் தொடங்கி விரிவான திட்டங்களுடன் மிகச் சிறப்பாக பணியாற்றி வருகிறது.

தமிழ்நாட்டின் சிறுதொழில் வளர்ச்சியில் ஆர்வம் காட்டும் படித்த வேலையில்லா பட்டதாரிகள், தொழில் நுட்பவியலார், சிறுதொழில் துவங்க ஆர்வமுடைய தொழில் முனைவோர் குறிப்பாக பெண் தொழில்முனைவோர் பயன் பெறும் வகையிலும், மேலும் சிறுதொழில்கள் துவங்கப்பட்டு வளர்வதால் ஒவ்வொரு ஆண்டும் நேர்முக மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் நமது நாட்டில் பெருகி நம்மிடையே தேங்கிக் கிடக்கும் மனித வளத்தினை முனைப்போடு செயலாக்க சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் பங்காற்றி வருகின்றது.

கீழ்க்காணும் முக்கிய தொழில் முன்னேற்ற செயல்களை சிட்கோ செயலாற்றி வருகிறது.

### 2.1. தொழிற்கூடம் அமைத்தல் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

சிறுதொழில்கள் வளர்ச்சி அடைவதற்கு தேவைப்படும் அடிப்படை வசதிகளான சாலைகள் அமைத்தல், வடிகால் வசதி, கழிவுநீர் அகற்றுதல், மின் இணைப்பு பெற்றுத்தருதல் மற்றும் குடிநீர் வழங்கல் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி சிறப்பான முறையில் தொழிற்பேட்டைகளை உருவாக்கித் தருவதையே சிட்கோ மிகப்பெரிய நடவடிக்கைகளுள் ஒன்றாகக் கொண்டுள்ளது.

சிட்கோ முக்கியமாக சிறுதொழில் தொடங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு எல்லாவித அடிப்படை வசதிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட மனைகளுடன் பல்வேறுபட்ட தொழிற்கூடங்களைக் கட்டியும் சுலபத் தவணை முறையிலும்/உடனடி விற்பனை அடிப்படையிலும் வழங்கி வருகிறது.

இத்திட்டம் நான்காம் ஐந்தாண்டு திட்டக்காலத்திலிருந்து நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது.

தொழிற்கூட கட்டுமான பணிகளை துவங்குவதற்கு முன்னர் இந்நிறுவனம் தொழில் முனைவோரின் தொழிற்கூடம், மனைகள் இவற்றின்



2001 ஆகஸ்ட் 31]

தேவையை விளம்பரம் மற்றும் கணக்கெடுப்பு மூலம் கவனிக்கின்றது.

இத்திட்டத்தின் செயல்பாடு பின்வருமாறு:

(மதிப்பு ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | விபரங்கள் | 2000—2001 ஆண்டுக்கான இலக்கு | | ஏப்ரல் 2000 முதல் மார்ச் 2001 வரையிலான சாதனைகளை | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | மதிப்பு | எண்ணிக்கை | மதிப்பு |
| 1. | தொழிற்கூடங்கள் கட்டுமானம் | 75 | 156.00 | - | - |
| 2. | மேம்படுத்தப்பட்ட மனைகள் அமைத்தல் | 409 | 453.00 | - | 0.35 |
| 3. | மேம்படுத்தப்பட்ட மனைகள் விற்பனை | 250 | 950.00 | 113 | 461.30 |
| 4. | தொழிற்கூடங்கள் விற்பனை | 100 | 750.00 | 54 | 594.20 |

### 2.2 மூலப்பொருட்கள் வழங்குதல்

சிறுதொழில் பிரிவுகளுக்குத் தேவைப்படும் மூலப்பொருட்கள் இந்நிறுவனத்தின் பல விற்பனை நிலையங்களில் கட்டுப்பாட்டு விலையில் கிடைக்கச்செய்ய நடவடிக்கை எடுக்கிறது. இந்நிறுவனத்தின் விற்பனை நிலையங்களில் பல்வேறு வகையான மூலப்பொருட்கள் கிடைக்கச் செய்வதுடன் மேலும் பல விற்பனை நிலையங்களை அமைக்க வேண்டும் என்ற நோக்கமும் இந்நிறுவனத்தின் கொள்கையாகும்.

கீழ்க்காணும் மூலப்பொருள்களை இந்நிறுவனம் விநியோகம் செய்து வருகின்றது:

1. இரும்பு மற்றும் எஃகு
2. மெழுகு
3. பொட்டாசியம் குளோரேட்
4. துத்தநாகம்
5. ஈயம்
6. அச்சடிக்கும் காகிதம்
7. ஐ.பி.சி.எல் பொருட்கள்
8. அலுமினிய கம்பிகள்
9. கல்கரி

இத்திட்டத்தின் செயல்பாடு பின்வருமாறு:

[2001 ஆகஸ்ட் 31

(மதிப்பு ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | விபரங்கள் | 2000—2001 ஆண்டுக்கான இலக்கு | | ஏப்ரல் 2000 முதல் மார்ச் 2001 வரையிலான சாதனைகளை | |
|---|---|---|---|---|---|
| | | மெட்ரிக் டன் | மதிப்பு | மெட்ரிக் டன் | மதிப்பு |
| 1. | இரும்பு மற்றும் எஃகு | 10000 | 2000.00 | 5032.195 | 998.85 |
| 2. | மெழுகு | 6000 | 1800.00 | 425.925 | 156.90 |
| 3. | பொட்டாசியம் குளோரேட் | — | — | 26.500 | 8.25 |
| 4. | துத்தநாகம் | 750 | 565.00 | 174.500 | 161.65 |
| 5. | ஈயம் | 100 | 45.00 | 84.860 | 36.45 |
| 6. | அச்சடிக்கும் காகிதங்கள் | 600 | 207.00 | 682.495 | 262.15 |
| 7. | ஐபிசினல் பொருட்கள் | 100 | 50.00 | — | — |
| 8. | அலுமினியம் சுருள் கம்பிகள் | — | — | — | — |
| 9. | கல்கரி | — | — | — | — |

## 2.3. விற்பனை உதவித் திட்டம்

சிட்கோ சிறுதொழில் கூடங்களின் சார்பாக அரசுத்துறை மற்றும் அரசு சார்பு நிறுவனங்களின் ஒப்பந்த புள்ளிகளில் பங்கு பெற்று, சிறுதொழிற்கூடங்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பதற்கு ஆணைகளை பெற்றுத் தருகின்றது. மேலும் விற்பனை உதவியால் அரசின் சாதனைகள் அனைத்தும் சிறுதொழில் முனைவோர்க்கு கிடைத்திட சிட்கோ வழிசெய்கிறது. 2001-2002 ஆம் ஆண்டில் சுமார் ரூபாய் 500.00 இலட்சம் மதிப்புள்ள ஆணைகளை பெற்றுத்தர சிட்கோ இலக்காக கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் செயல்பாடு பின்வருமாறு



2001 ஆகஸ்ட் 31]

(மதிப்பு ரூபாய் இலட்சத்தில்)

| வ எண் | விபரங்கள் | 2000—2001 ஆண்டுக்கான இலக்கு | | ஏப்ரல் 2000 முதல் மார்ச் 2001 வரையிலான சாதனைகளை | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | மதிப்பு | எண்ணிக்கை | மதிப்பு |
| 1. | உதவி பெற்ற அலகுகளின் எண்ணிக்கை மற்றும் நிறைவேற்றப்பட்ட ஆணைகளின் மதிப்பு | 100 | 500.00 | 43 | 111.30 |

சிறுதொழில்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விநியோகம் செய்ய சிட்கோ, வாங்குவோர், விற்போர் சந்திப்பினை அடிக்கடி ஏற்படுத்தித் தருகிறது.

## 2.4 பட்டியல் தள்ளுபடித் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் அரசுத்துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு தேவைப்படும் பொருட்களை வழங்கிய பின்னர் பணப்பட்டுவாடா செய்ய ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்க பயன்படுகின்றது. இது கொள்முதல் செய்யப்படும் காலத்திலிருந்து 45 முதல் 90 நாட்களுக்குள் நடைபெற உதவிபுரிகிறது. பொருட்கள் வழங்குபவருக்கு 80 சதவிகித பணத்தை உடனடியாக வழங்கி மிகுதித் தொகையை சம்மந்தப்பட்ட துறையின் உறுதிநிலை பெற்றவுடன் கிடைக்கச் செய்கிறது. இதனால் சிட்கோவுக்கு தரகாக ஒரு சிறுதொகை கிடைக்கிறது.

இத்திட்டம் சிறுதொழில்புரியும் கூடங்களுக்கு ஏற்படும் நடைமுறை மூலதன சிக்கல்களை தீர்த்து வைக்கிறது.

## 2.5 ஏற்றுமதி விற்பனைத் திட்டம்

சிட்கோ நிறுவனம், டான்சியா மற்றும் எப்.என்.எப். போன்ற நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு தன்னைச் சுற்றியுள்ள சிறுதொழில் அலகுகள் உற்பத்தி செய்யும் தரமான பொருட்களை விநியோகம் செய்ய உதவிபுரிகிறது. இந்த சேவை தொழில்நுட்ப ரீதியில் தனியாருக்கும் தேவைப்படுவதுடன் சிட்கோ "பொது ஏற்றுமதி நிர்வாகி"யாக நடந்து சிறுதொழில்களின் உற்பத்திப் பொருள்கள் உலக அளவில் வாணிபம் செய்ய பல்வேறு தொண்டுகளை செய்து வருகிறது. மேலும் 85 சிறுதொழில்புரியும் நிறுவனத்தினர்கள், இத்திட்டத்தில் செயல்பட பதிவு

[2001 ஆகஸ்ட் 31

செய்துள்ளனர். நிறுவனத்தைப் பற்றிய விவரக் குறிப்பு மற்றும் பதிவு செய்யப்பட்ட அலகுகள் அளித்துள்ள இதர விவரங்கள் ``சிட்கோவின்'' இணைய தளத்தில் பார்வைக்கு வைக்கப்படுகின்றன.

**2.6 வருங்காலத் திட்டங்கள்**

***1) அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்***

இந்நிறுவனம் 9 ஆம் ஐந்தாண்டு திட்டப்படி ஆண்டொன்றுக்கு குறைந்தது 200 தொழிற்கூடங்கள் கட்டிமுடிக்க திட்டமிட்டது. அதன்படி 2000-2001 ஆம் ஆண்டில் சிட்கோ 75 தொழிற்கூடங்கள் மற்றும் 400 மேம்படுத்தப்பட்ட மனைகளையும் கட்டிமுடித்துள்ளது. இந்நிறுவனம், சிறுதொழில் அலகுகளின் தேவைகளை கருத்தில் கொண்டு, 2001-2002 ஆம் ஆண்டில், கீழ்க்கண்டவாறு கூடுதலாக தொழிற்கூடங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகள் கட்ட திட்டமிட்டுள்ளது.

*2001-2002 ஆம் ஆண்டிற்கான உத்தேச திட்ட மதிப்பீடு*

| வ. எண் | தொழிற்பேட்டை | நில அளவு ஏக்கரில் | மனையின் எண்ணிக்கை | மதிப்பு (ரூபாய் லட்சத்தில்) | தொழிற் கூடங்களின் எண்ணிக்கை | மதிப்பு (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | விச்சூர் (பிரிவு 2) | 12.00 | 40 | 60.00 | - | - |
| 2. | திருமுடிவாக்கம் (பிரிவு 2) | 11.00 | 60 | 80.00 | 10 | 80.00 |
| 3. | வாழவந்தான் கோட்டை (பிரிவு 1) | 27.00 | 56 | 147.50 | - | - |
| 4. | சுவாமிமலை | 3.00 | 16 | 13.50 | 50 | 46.00 |
| 5. | ஆலத்தூர் (பிரிவு 2) | 4.00 | 4 | 20.00 | - | - |

***2) மூலப்பொருட்கள் வினியோகம்***

2001-2002 ஆம் ஆண்டில் 9000 மெட்ரிக் டன் எடையுள்ள மூலப்பொருட்களை ரூ.1845.00 இலட்சம் மதிப்பீட்டில் விநியோகம் செய்ய திட்டமிட்டு செயலாற்றி வருகின்றது.

***3) விற்பனை உதவித்திட்டம்***

இந்நிறுவனம் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.0.300 இலட்சம் மதிப்புள்ள ஆணைகளை நிறைவேற்ற திட்டமிட்டு சிறப்பாக செயலாற்றி வருகின்றது. மேலும் இந்நிறுவனம் வாங்குவோர் - விற்போர் மையம் நடத்துவதன் மூலம் சிறுதொழில் அலகுகளுக்கு தேவைப்படும் ஆணைகளை அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெற்று தருவதை கூடுதல் திட்டமாக கொண்டுள்ளது.



2001 ஆகஸ்ட் 31]

***4) மேற்கூறிய திட்டங்களைத் தவிர கீழ்க்காணும் திட்டங்களையும் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது***

i. திருவள்ளூர் மாவட்டம், திருமுல்லைவாயிலில் 290 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதொழில் நிறுவனங்களுக்காக தொழிற்பேட்டை ஒன்றினை முதற்கட்டமாக நிறுவுதல்.

ii. காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், பள்ளிக்கரணை கிராமத்தில் மகளிர்க்கு பிரத்யேகமாக 27 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழிற்பேட்டையினை அமைத்தல்.

iii. மகளிர்க்கென கீழ்க்காணும் மேலும் நான்கு தொழிற்பேட்டைகளை அமைத்தல்.

அ) காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பாக்கம் கிராமத்தில் 101 ஏக்கர் நிலப்பரப்பு.

ஆ) வேலூர் மாவட்டத்தில் தக்க இடம் கண்டறிய ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இ) சேலம் மாவட்டம், ஓமலூர் தாலுகா, கருப்பூர் கிராமத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பு.

ஈ) மதுரை மாவட்டம், தல்லாகுளம் கிராமத்தில் 47.35 ஏக்கர் நிலப்பரப்பு.

**3. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)**

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) பல சிறு தொழிற்கூடங்களைக் கொண்டு, ஆரம்ப ஐந்து ஆண்டு திட்ட காலத்தில் தமிழ்நாடு முழுவதும் பரவலாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமாகும். இந்த நிறுவனம் தமிழ் நாட்டின் தலைநகரம் மற்றும் பிற நகரங்களில் விற்பனை நிலையங்களைக் கொண்டுள்ள பல்பொருள் உற்பத்தி நிறுவனமாகும். மாநில/மத்திய அரசுத் துறைகள், அரசு சார்ந்த பொது நிறுவனங்கள் மற்றும் பொது மக்களுக்குத் தேவையான பொருட்களை டான்சி உற்பத்தி செய்து வழங்கி வருவதுடன் பிற சேவைகளையும் செய்து வருகிறது.

தற்பொழுது டான்சியில் 26 உற்பத்தி கூடங்கள், 3 திட்ட மையங்கள், 6 விற்பனை நிலையங்கள் உள்ளன. இது தவிர, தமிழ்நாடு வர்ணங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும்

[2001 ஆகஸ்ட் 31

'டாப்பாப்' என்ற ஒரு துணை நிறுவனமும் உள்ளது.

**3.1 உற்பத்தி பொருட்களின் வகைகள்:**

டான்சியின் உற்பத்திப் பொருட்களை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

| வகைகள் | உற்பத்தி பொருட்களின் விபரம் |
|---|---|
| 1. கட்டுமானங்கள் | சர்க்கரை ஆலைகளுக்கும், சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கும் மற்றும் அனல் மின் உற்பத்தி நிலையங்களுக்கும் தேவையான உயர் கட்டுமான பொருட்கள், நுண் அலை கோபுரங்கள் மற்றும் உயர் அழுத்த மின் கடத்தி கோபுரங்களுக்கு தேவையான துத்தநாகம் பூசிய கோபுரப் பாகங்கள். |
| 2. பொறியியல் | தொழிற்கூடங்கள், சினிமா அரங்குகள், பள்ளிக் கூடங்கள் மற்றும் கிடங்குகளுக்கு தேவையான சிறுகட்டுமானங்கள், மின் வாரியத்திற்கு தேவையான மின் கடத்தி பொருட்கள், உலோகத் தகடுகளாலான சிறு கடைகள். |
| 3. அறைகலன் | மரம் மற்றும் எஃகுப் பொருள்களாலான அறைகலன்கள் தடுப்பு மற்றும் உள்ளறை வேலைப்பாடுகள், வீடு, அலுவலகம், மருத்துவமனைகளுக்குத் தேவையான அறைகலன்கள். |
| 4. பலவகைகள் | ஆழ்குழாய் பம்புகள் மற்றும் கை பம்புகள், காஸ்கெட்ஷெல்லாக், பிக்சர் வார்னிஷ் போன்ற சாராவியை (ஸ்பிரிட்) மூலப் பொருளாகக் கொண்ட பொருட்கள், டைடான் நிறுவனத்திற்கு கடிகாரக் கருவிகள் இணைத்துக் கொடுப்பது, கேஸ் அடுப்புகள். |



2001 ஆகஸ்ட் 31]

**3.2 செயல்பாடு**

இந்நிறுவனத்தின் ஆரம்ப ஆண்டுகளிலிருந்து செயல்பாட்டுத் திறன் விபரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

**3.3 நடப்பு ஆண்டின் செயல்பாடு:**

*நடப்பு 2001-2002 ஆம் ஆண்டிற்கு அரசு, உற்பத்தி இலக்காக ரூ.40.35 கோடி நிர்ணயித்துள்ளது.*

*2001-2002 ஆம் நிதியாண்டு 31-7-2001 வரையிலான செயல்பாடுகள் அதன் இலக்குகளை மிஞ்சியும் கடந்த ஆண்டு செயல்பாடுகளை ஒப்பிடும் போது அதிக முன்னேற்றத்தைக் காட்டுகிறது.*

(ரூபாய் இலட்சத்தில்)

| செயல்பாடுகள் | 31.7.2001 வரை | 31.7.2000 வரை |
|---|---|---|
| விற்பனை | 1,692.85 | 1,121.06 |
| உற்பத்தி | 1,685.85 | 1,085.92 |
| மொத்த இலாபம் | 385.61 | 263.45 |

*2000-2001 ஆம் நிதியாண்டில் அரசு நிர்ணயித்த இலக்குகள் அடையப்பட்டு நிகர இலாபமாக ரூ.238.60 இலட்சங்கள் ஈட்டப்பட்டது. கடந்த ஆண்டில் கீழ்க்கண்ட பெரிய அளவிலான பணி ஆணைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.*

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| (அ) | சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதிக்கான உள்ளறை வேலைப்பாடு அமைத்து அறைகலன்களை செய்து வழங்கியது. | 122.00 |
| (ஆ) | கல்வி இலாகாவிற்கு எஃகாலான அறைகலன்களை செய்து வழங்கியது. | 62.50 |
| (இ) | தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்கடத்திப் பொருட்களை உற்பத்தி செய்து வழங்கிறது. | 1,627.43 |
| (ஈ) | தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்கல பெட்டிகள் உற்பத்தி செய்து வழங்கியது. | 145.00 |

[2001 ஆகஸ்ட் 31

கடந்த நிதியாண்டின் கடைசி மூன்று மாத காலத்தில் பெறப்பட்ட பெரிய அளவிலான பணி ஆணைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| (அ) | சென்னை மாநகராட்சிக்கு உள்ளறை வேலைப்பாடு அமைத்து அறைகலன்கள் செய்து கொடுத்தல் | 40.00 |
| (ஆ) | தொடக்கக் கல்வி துறைக்கு எஃகிலான அறைகலன்கள் | 196.00 |
| (இ) | சென்னை மாநகர குடிநீர் வாரியத்திற்கு தண்ணீர் தொட்டிகள் மற்றும் கை பம்புகள் செய்து கொடுத்தல் | 49.50 |
| (ஈ) | சென்னை மாநகர குடிநீர் வாரியத்திற்கு கை பம்புகள் உற்பத்தி செய்து அவற்றை சென்னை நகரில் பல்வேறு இடங்களில் அமைத்துக் கொடுத்தல். | 160.00 |

நிர்வாகச் சீரமைப்பின்கீழ், சில நலிவடைந்த தொழிலகங்கள் மூடப்பட்ட பிறகு தன்னிச்சை ஓய்வுத் திட்டத்தின்கீழ் ஊழியர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது.

**3.4 2001-2002 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி வாய்ப்பு:**

2001-2002 ஆம் ஆண்டிற்கு உற்பத்தி இலக்காக ரூ.40.35 கோடி திட்டமிடப்பட்டுள்ளது.

**3.5 தொழில் உறவுகள்:**

தொழிலாளர்களையும் சேர்த்து தற்போது 850 பணியாளர்கள் பணி புரிகிறார்கள். சுமூகமான தொழில் உறவுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**3.6 டான்சியின் துணை நிறுவனம்:**

**தமிழ்நாடு வர்ணங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் (டாபாப்)**

இத்துணை நிறுவனம் 1985-ம் ஆண்டு நிறுவப்பட்டு 1-4-1986 முதல் உற்பத்தியைத் தொடங்கியது. இந்நிறுவனம் சிவப்பு ஆக்ஸைடு வர்ணம், சாலைகளில் போக்குவரத்து அடையாளக் குறி இடுகின்ற இரப்பர் கலந்த வர்ணம், மெழுகுத் தன்மை கொண்ட வர்ணம் மற்றும் இது



2001 ஆகஸ்ட் 31]

போன்ற வர்ணங்களை உற்பத்தி செய்து வருகிறது. இந்த வர்ணங்களை காவல் துறை, சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத் துறை, தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் போன்ற அரசுத் துறை நிறுவனங்கள் வாங்கி உபயோகித்து வருகின்றன. அதோடு டான்சியில் உற்பத்தியாகும் பொருட்களுக்கும் உபயோகப்படுத்தப்படுகிறது.

இத்துணை நிறுவனத்தின் உற்பத்தி, விற்பனை மற்றும் செயல் விளைவுகள் ஆரம்ப ஆண்டுகளிலிருந்து பின்வருமாறு:-

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | உற்பத்தி | விற்பனை | செயல் விளைவு இலாபம் (+) நட்டம் (-) |
|---|---|---|---|
| 1986-87 | 8.40 | 8.07 | (-) 0.44 |
| 1987-88 | 13.97 | 13.97 | (+) 0.10 |
| 1988-89 | 19.13 | 19.24 | (+) 0.11 |
| 1989-90 | 20.86 | 19.96 | (+) 0.11 |
| 1990-91 | 35.59 | 29.41 | (+) 1.06 |
| 1991-92 | 44.18 | 42.08 | (+) 0.19 |
| 1992-93 | 48.22 | 46.52 | (+) 0.24 |
| 1993-94 | 77.71 | 82.23 | (-) 0.41 |
| 1994-95 | 87.50 | 89.94 | (-) 0.36 |
| 1995-96 | 105.57 | 102.36 | (+) 0.08 |
| 1996-97 | 114.50 | 106.50 | (+) 0.10 |
| 1997-98 | 111.95 | 113.19 | (+) 0.28 |
| 1998-99 | 127.27 | 125.72 | (+) 0.82 |
| 1999-2000 | 169.42 | 168.39 | (+) 1.06 |
| 2000-2001 | 175.58 | 175.58 | (+) 0.41 |

நடப்பு நிதியாண்டான 2001-2002 ஆம் ஆண்டிற்கு உற்பத்தி இலக்காக ரூ.200.00 இலட்சங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு

டான்சியின் செயல்பாடு, உற்பத்தி, விற்பனை மற்றும் செயல் விளைவுகள் ஆரம்ப ஆண்டிலிருந்து பின்வருமாறு:-

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | உற்பத்தி | விற்பனை | செயல் விளைவு இலாபம் (+) நட்டம் (-) |
|---|---|---|---|
| 1965-66 | 389 | 342 | (+) 7.04 |
| 1966-67 | 479 | 417 | (+) 12.88 |
| 1967-68 | 493 | 419 | (-) 30.33 |
| 1968-69 | 562 | 483 | (-) 22.41 |
| 1969-70 | 662 | 661 | (-) 18.80 |
| 1970-71 | 757 | 746 | (+) 3.30 |
| 1971-72 | 818 | 828 | (+) 11.52 |
| 1972-73 | 814 | 833 | (+) 18.58 |
| 1973-74 | 919 | 904 | (+) 26.78 |
| 1974-75 | 1,022 | 969 | (+) 1.03 |
| 1975-76 | 1,029 | 947 | (-) 45.28 |
| 1976-77 | 1,062 | 1,022 | (-) 81.98 |
| 1977-78 | 1,187 | 1,121 | (-) 100.28 |
| 1978-79 | 1,537 | 1,497 | (-) 37.66 |
| 1979-80 | 1,835 | 1,661 | (+) 17.53 |
| 1980-81 | 2,065 | 2,016 | (+) 31.60 |
| 1981-82 | 2,333 | 2,339 | (-) 106.26 |
| 1982-83 | 2,216 | 2,985 | (-) 183.58 |





| வருடம் | உற்பத்தி | விற்பனை | செயல் விளைவு இலாபம் (+) நட்டம் (-) |
|---|---|---|---|
| 1983-84 | 2,514 | 2,342 | (-) 227.94 |
| 1984-85 | 2,368 | 2,392 | (-) 459.30 |
| 1985-86 | 2,479 | 2,420 | (-) 437.63 |
| 1986-87 | 2,389 | 2,774 | (-) 293.39 |
| 1987-88 | 2,492 | 2,472 | (-) 316.05 |
| 1988-89 | 2,919 | 3,106 | (-) 233.60 |
| 1989-90 | 2,815 | 3,033 | (-) 273.08 |
| 1990-91 | 2,340 | 2,659 | (-) 691.62 |
| 1991-92 | 2,396 | 2,524 | (-) 970.33 |
| 1992-93 | 2,485 | 2,551 | (-) 248.02 |
| 1993-94 | 3,664 | 3,704 | (-) 196.63 |
| 1994-95 | 3,263 | 3,514 | (-) 236.65 |
| 1995-96 | 3,871 | 5,114 | (-) 4.23 |
| 1996-97 | 3,074 | 2,959 | (-) 147.47 |
| 1997-98 | 3,667 | 3,906 | (-) 334.10 |
| 1998-99 | 3,591 | 3,535 | (-) 319.22 |
| 1999-2000 | 3,528 | 3,594 | (-) 585.68 |
| 2000-2001 | 4,381 | 4,412 | (+) 238.60 |

[2001 ஆகஸ்ட் 31

ஊரகத் தொழிலுக்கான நிதி ஒதுக்கீடு

அட்டவணை - (அ)

கோரிக்கை எண் 47

(ரூபாய் இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | 2000—2001க்கான வரவு செலவு மதிப்பீடு | 2000—2001க்கான திருத்தப்பட்ட மதிப்பீடு | 2001—2002க்கான வரவு செலவு மதிப்பீடு |
|---|---|---|---|
| 2551 மலைப்பகுதிகள் விரிவாக்கத் திட்டம் | 0.02 | — | — |
| 2851 கிராமம் மற்றும் சிறு தொழில்கள் | 3211.27 | 4548.30 | 3217.41 |
| 2852 தொழில்கள் | 501.35 | 529.55 | 498.74 |
| 2885 இதர தொழில்கள் மற்றும் கனிமங்கள் | 1000.01 | 1000.01 | 1000.01 |
| மொத்தம் | 4712.65 | 6077.86 | 4716.16 |

அட்டவணை - (ஆ)

கோரிக்கை எண் 59

(ரூபாய் இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | 2000—2001க்கான வரவு செலவு மதிப்பீடு | 2000—2001க்கான திருத்தப்பட்ட மதிப்பீடு | 2001—2002க்கான வரவு செலவு மதிப்பீடு |
|---|---|---|---|
| 4425 முதலீட்டுச் செலவு | 0.04 | 5.00 | 7.50 |
| 4551 மலைப்பகுதிகளில் குறித்த முதலீட்டுச் செலவு | 0.03 | 13.00 | 20.00 |
| 4851 கிராமம் மற்றும் சிறு தொழில் முதலீட்டுச் செலவு | 0.13 | 49.71 | 80.97 |
| மொத்தம் | 0.20 | 67.71 | 108.47 |



2001 ஆகஸ்ட் 31]

## கோரிக்கை எண் 47–பட்டு வளர்ச்சித் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002

**1.01.** நமது நாட்டில் பட்டு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாக பாரம்பரிய பெருமை பெற்று விளங்குகிறது. இதற்கு காஞ்சிபுரம், கும்பகோணம், ஆரணி, ராசிபுரம் மற்றும் பல இடங்களில் உற்பத்தி செய்யப்படும் கண்கவர் வண்ணக் கைத்தறி பட்டுத் துணிகளே காரணமாகும். கிராமிய சிறு தொழில்களுக்கு ஊக்கமளித்து, பின்தங்கிய கிராமப்புற பகுதிகளில் உள்ள எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தருவதே தமிழக அரசின் முக்கிய கொள்கையாகும். இதைக் கருத்தில் கொண்டு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட, அதிக அளவு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தரக்கூடிய பட்டுத் தொழிலின் வளர்ச்சிக்காக அரசு முனைப்புடன் ஈடுபாடு காட்டி வருகிறது. குறைந்த முதலீடு, குறுகிய காலத்தில் வருவாய் பெற வாய்ப்பு என்ற அளவில் பட்டுத் தொழிலானது சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மிகவும் ஏற்றதொரு விவசாயத் தொழிலாகும். குறிப்பாக, பெருமளவு மகளிர் பங்குபெறும் வாய்ப்பும், ஆண்டுக்கு பலமுறை வருவாய் பெறும் வாய்ப்பும் உள்ளதொரு கிராமிய தொழிலாகும்.

**1.02.** இம்மாநிலத்தில் பட்டு தொழிலின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை பட்டு வளர்ச்சித் துறை செயல்படுத்தி வருகிறது. இதற்கான துறையின் செயல்பாடுகள் பின்வருமாறு:

i) விவசாயிகள் பட்டு வளர்ச்சித் தொழிலை மேற்கொண்டு உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை பயிரிட ஊக்குவித்தல்.

ii) மல்பரி சாகுபடி, பட்டுப் புழு வளர்ப்பு, பட்டு நூற்பு, தரமான பட்டு முட்டை தயாரிப்பு போன்ற பணிகளில் பயிற்சியளித்தல்.

iii) பட்டுப்புழு வளர்ப்பதற்கு தேவையான தளவாடங்கள் கொள்முதல் செய்யவும், புழு வளர்ப்புக்காக தனியாக புழு வளர்ப்பு மனை கட்டுவதற்கும் உதவியளித்தல்.

iv) புழு வளர்ப்புக்கு நோயற்ற தரமான பட்டு முட்டைகளை உற்பத்தி செய்து விநியோகித்தல்.

v) பட்டு விவசாயிகள் தரமான பட்டுக்கூடுகளை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

[2001 ஆகஸ்ட் 31

மேலும் பட்டுப்புழு வளர்ப்பில் கையாளவேண்டிய நோய்த்தடுப்பு முறைகள் பற்றி எடுத்துரைத்தல்.

vi) தனியார் மற்றும் கூட்டுறவு அமைப்பில் பட்டு நூற்பு விற்பனைக்கு சந்தை வசதிகளை ஏற்படுத்தி உரிய விலை கிடைக்க உதவுதல்.

vii) உற்பத்தி செய்யப்படும் பட்டுக் கூடுகள் மற்றும் பட்டுநூல் விற்பனைக்கு சந்தை வசதிகளை ஏற்படுத்தி உரிய விலை கிடைக்க உதவுதல்.

**1.03.** தீவிர மல்பரி சாகுபடி திட்டத்தினை செயல்படுத்தியதனால் ஏற்பட்ட வளர்ச்சியினைக் கண்டு ஊக்கமடைந்தும், கிராமப் பொருளாதார மேம்பாட்டில் பட்டுத் தொழிலின் முக்கியத்துவம் கருதியும், தொழில் வணிகத் துறையிலிருந்து தனியாக பட்டு வளர்ச்சித் துறை பிரிக்கப்பட்டு, 1979 ஆம் ஆண்டு முதல் சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. துறைத் தலைவராக பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் செயல்பட்டு வருகிறார். இயக்குநர் தமது கடமையை செவ்வனே ஆற்றுவதற்கு உதவியாக பல்வேறு நிலைகளில் அலுவலர்கள் தலைமையிடத்தில் பணியாற்றுகின்றனர். மண்டல அளவில் இணை இயக்குநர்களும், துணை இயக்குநர்களும் மாவட்ட அளவில் உதவி இயக்குநர்களும் பணியாற்றி வருகின்றனர். தலைமை அலுவலகத்தில் இயக்குநருக்கு உதவியாக உள்ள ஓர் இணை இயக்குநர் ஒட்டுமொத்த அலுவலக நிர்வாகத்தையும், மூன்று துணை இயக்குநர்கள் முறையே பட்டு நூற்புக்கு முந்தைய நிலையான தொழில் நுட்பம், பட்டு நூற்பு பற்றிய தொழில் நுட்பம், மற்றும் திட்டப் பணிகள் தொடர்பான அலுவல்களை கவனித்து வருகின்றனர். மேலும், இரண்டு கணக்கு அலுவலர்கள் முறையே துறையின் வரவு-செலவுத் திட்டத்தினையும், துறைக் கணக்குகளின் உட்தணிக்கையையும் கவனித்து வருகின்றனர். உதவி இயக்குநர் பணியிடத்தில் ஒருவர் துறை செயல்பாடுகள் பற்றிய தகவல் மேலாண்மை பொறுப்பிலும் மற்றொருவர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள் பற்றிய பொறுப்பிலும் உள்ளனர். துணை இயக்குநர் அந்தஸ்தில் துறை நிர்வாகப் பணிகளைக் கவனித்துக்கொள்ள ஓர் அலுவலர் செயல்பட்டு வருகிறார். மேலும், களத்தில் 2 மண்டல இணை இயக்குநர்களும், மூன்று துணை இயக்குநர்களும் செயல்பட்டு வருகின்றனர். துணை இயக்குநர் அந்தஸ்தில் பட்டுப் பயிற்சிப் பள்ளி முதல்வர் ஒருவரும், அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் ஒருவரும், விதை ஒருங்கிணைப்பில் ஒருவரும் பணியாற்றி வருகின்றனர். 30 உதவி இயக்குநர்கள் மாவட்ட அளவில் இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் பணியாற்றி வருகின்றனர்.



2001 ஆகஸ்ட் 31]

துறை செயல்படுத்தும் அனைத்து வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்துவது தொடர்பாக திட்டமிடுதலும், நிர்வகித்தலும் இயக்குநரின் பொறுப்பாகும். இயக்குநரின் உத்தரவின்படி செயலாற்றி, அரசின் கொள்கைகளை மண்டல அலுவலர்களும், உதவி இயக்குநர்களும் நடைமுறைபடுத்துவர். காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு பட்டு கூட்டுறவு உற்பத்தியாளர்கள் இணையத்தின் பணிகளையும் இயக்குநர் மேற்பார்வையிடுவார்.

**1.04.** 1979 ஆம் ஆண்டில் தனியாக பட்டு வளர்ச்சித் துறை செயல்பட ஆரம்பித்த பின்னர் பரவலாக பட்டு விதை ப்பண்ணைகள், வித்தகங்கள், பட்டுக்கூடு அங்காடிகள், தொழில்நுட்ப சேவை மையங்கள், பட்டு நூற்பகங்கள், விவசாய பயிற்சி மையங்கள், பட்டு பரிமாற்றகம் முதலிய கட்டமைப்பு வசதிகள் பட்டுத் தொழில் நிலைத்து வளர்ச்சியடைய ஏற்படுத்தப்பட்டன. பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் தீட்டப்பட்டு, உலக வங்கி, சுவிஸ் அபிவிருத்திக் கழகம், போர்டு நிறுவனம் மற்றும் பன்னாட்டு தொழிலாளர் நிறுவனம் முதலியவற்றின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டன. குறிப்பிட்ட பகுதிகளில் நிலவும் இடர்பாடுகளை சமாளிக்கவும், நலிவடைந்த பிரிவினர்க்கு போதிய வருவாய் கிடைக்கவும் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டம், ஆதிதிராவிடர் நலத் திட்டம் மற்றும் மத்திய பட்டு வாரிய நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் கிரியா ஊக்கித் திட்டம் முதலிய பகுதி மேம்பாட்டுத் திட்டங்களும், பயனாளிகள் நலத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**1.05.** 2001-2002 ஆம் ஆண்டில், மாநிலத்தில் பட்டுத் தொழில் வளர்ச்சிக்கு சாதகமாக உள்ள வசதிகளை பயன்படுத்தி. பெருமளவுக்கு இத்தொழிலை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. விபரம் வருமாறு:

- கூடுதலாக 4000 ஏக்கர் பரப்பில் மல்பரி நடவு செய்தல்.
- 160 இலட்சம் பட்டு முட்டைகள் உற்பத்தி செய்தல்.
- உயர் ரக மல்பரி ரகங்களை பயிரிட்டும் புதிய பட்டுப்புழு இனங்களை வளர்த்தும், 7200 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்தல்.
- 800 மெட்ரிக் டன் அளவுக்கு கச்சாப் பட்டினை உற்பத்தி செய்தல்.

❖ கிராமப்புறங்களில் 20000 நபர்களுக்கு கூடுதலாக வேலை வாய்ப்பளித்தல்.

**2.01.** இந்த இலக்கினை அடைய கீழ்க்காணும் உள்கட்டமைப்பு வசதிகள் பட்டு வளர்ச்சித் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன:

**2.02. தொழில்நுட்ப சேவை மையங்கள்**

விவசாயிகளுக்குத் தேவைப்படும் விபரங்கள் குறித்து வழிகாட்டவும், வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் 103 தொழில்நுட்ப சேவை மையங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

**2.03.** இம்மையங்கள் கீழ்க்காணும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன:

அ) புதிய விவசாயிகளைத் தேர்வு செய்து மல்பரி நடவு மேற்கொள்ள ஊக்குவித்தல்.

ஆ) விவசாயிகள் புழு வளர்ப்பு மேற்கொள்ளவும், நோய்த் தடுப்பு முறைகளைக் கையாளவும் உதவுதல்.

இ) பட்டு விவசாயிகளுககு தொழில்நுட்ப உதவி அளித்தல்.

ஈ) விவசாயிகள் பட்டுத் தொழிலில் ஈடுபடுவதற்குத் தேவையான வங்கிக் கடனுதவி கிடைக்க உதவுதல்.

உ) விவசாயிகளுக்கு பட்டுப்புழு வளர்ப்பு, மல்பரி தோட்டப் பராமரிப்பு முறைகள் பற்றி பயிற்சியளித்தல்.

ஊ) உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளின் விற்பனைக்கு உதவுதல்.

**3.01. ஆதார பட்டு விதைப் பண்ணைகள்**

பட்டு விவசாயிகள் புழு வளர்ப்பு மேற்கொள்வதற்கு தேவையான பட்டு முட்டைகளை உற்பத்தி செய்வதற்கு பி3, பி2, பி1 ஆகிய மூன்று நிலைகளில் பட்டுப்புழுக்களின் இனப் பண்புகளை பராமரித்தல் அவசியமாகும். இதற்காக பட்டுப்புழுக்கள் இனம் வாரியாக, குறிப்பிட்ட சில பண்ணைகளில் மட்டும் வளர்க்கப்படுகின்றன. ஒவ்வொரு கட்டத்திலும், இனப் பெருக்கம் செய்யத் தேவையான பட்டுக்கூடுகளை தேர்வு செய்து பயன்படுத்துவதற்கு சில தர வரையறைகள் உள்ளன.



அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டுக்கூடுகள் மட்டுமே, அடுத்த நிலையில் பட்டு முட்டைகள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றன.

**3.02.** இத்துறையில் மொத்தம் 22 பட்டு விதைப்பண்ணைகள் நிறுவப்பட்டு, உள்நாட்டின மற்றும் இருசுழற்சியின பட்டுப்புழுக்களின் இனப் பண்புகள் பராமரிக்கப்படுகின்றன.

**3.03.** இந்த பட்டு விதைப்பண்ணைகள் 2001-2002 ஆம் ஆண்டில் புழு வளர்ப்பு மேற்கொள்ள தேவையான ஆதார வித்துக்களை உற்பத்தி செய்யும், 2.50 இலட்சம் உள்நாட்டின பி1 பட்டு முட்டைகள் விதைப் பகுதியைச் சார்ந்த பட்டு விவசாயிகளுக்கு 500.00 இலட்சம் பட்டு விதைக்கூடுகளை உற்பத்திச் செய்வதற்காக வழங்கப்படும். இதுபோலவே, 1.00 இலட்சம் பி1 இருசுழற்சியின பட்டு முட்டைகள் 190.00 இலட்சம் இருசுழற்சியின பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்வதற்காக வழங்கப்படும். இப்பட்டு விதைக்கூடுகள் அரசு வித்தகங்களுக்கும், தனியார் வித்தகங்களுக்கும் விவசாயிகள் புழு வளர்ப்புக்குத் தேவையான 155.20 இலட்சம் பட்டு முட்டைகள் உற்பத்தி செய்வதற்கு வழங்கப்படும்.

**4.01. பட்டு வித்தகங்கள்**

மாநிலத்தில் துறை கட்டுப்பாட்டில் உள்ள பட்டு வித்தகங்கள், தனியார் வித்தகங்கள் மற்றும் மத்திய பட்டு வாரிய பட்டு வித்தகங்களில் மொத்தம் 155.20 இலட்சம் பட்டு முட்டைகளை 2001-2002 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் 14 அரசு வித்தகங்களும், 22 தனியார் வித்தகங்களும் செயல்பட்டு வருகின்றன.

**5.01 பட்டுக்கூடு அங்காடிகள்**

**விதைக்கூடு அங்காடிகள்**

தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ஏற்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கூடுதல் உபகரண வசதிகளைக் கொண்டு ஒசூர், தேன்கனிக்கோட்டை, கோவையில் விதைக்கூடு அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்காடிகள் பட்டுத் தொழில் வளர்ச்சிக்கு உதவும் ஆதார மையங்களாக தொடர்ந்து செயல்படும்.

[2001 ஆகஸ்ட் 31

**5.02. வணிக பட்டுக்கூடு அங்காடிகள்**

மாநிலத்தில் 21 இடங்களில் வணிக பட்டுக்கூடு அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன.

**5.03.** 2001-2002 ஆம் ஆண்டில் இப்பட்டுக்கூடு அங்காடிகள் 35.605 இலட்சம் கிலோகிராம் பட்டுக்கூடுகளைக் கொள்முதல் செய்யும். இதன் மதிப்பு ரூ.39.166 கோடிக்கும் கூடுதலாகும்.

**6.01. பட்டு நூற்பு நிலையங்கள்**

பட்டு விவசாயிகளுக்கு உதவும் வண்ணம் 14 பட்டு நூற்பு மையங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது.

**6.02.** 2001-2002 ஆம் ஆண்டில் இந்நூற்பு நிலையங்களில் 11.17 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்படும். இந்நூற்பு நிலையங்களில் நன்கு பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

**7.01. பட்டு முறுக்கேற்றும் நிலையங்கள்**

நான்கு பட்டு முறுக்கேற்றும் நிலையங்கள் கீழ்க்காணும் இடங்களில் போதுமான உள்கட்டமைப்பு வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன.

| வ.எண் | அமைவிடம் | வட்டம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | ஓசூர் | ஓசூர் | தருமபுரி |
| 2. | நாட்றாம்பள்ளி | திருப்பத்தூர் | வேலூர் |
| 3. | சேலம் | சேலம் | சேலம் |
| 4. | நன்னகரம் | தென்காசி | திருநெல்வேலி |

**7.02.** 2001-2002 ஆம் ஆண்டில் இந்நிலையங்களில் 7.70 மெட்ரிக் டன் முறுக்கேற்றிய பட்டு உற்பத்தி செய்யப்படவுள்ளது.

**8.01. விவசாயிகள் பயிற்சி மையங்கள்**

புதிய பட்டு விவசாயிகளுக்கு மல்பரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு பற்றிய பயிற்சி வழங்குவதற்காக கீழ்க்காணும் இடங்களில் விவசாயிகள் பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.



2001 ஆகஸ்ட் 31]

| வ.எண் | அமைவிடம் | வட்டம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | சோகத்தூர் | தருமபுரி | தருமபுரி |
| 2. | நத்தக்கரை | ஆத்தூர் | சேலம் |
| 3. | மைவாடி | உடுமலைப்பேட்டை | கோவை |
| 4. | தாளவாடி | சத்தியமங்கலம் | ஈரோடு |
| 5. | மின்னூர் | வாணியம்பாடி | வேலூர் |
| 6. | விச்சந்தாங்கல் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 7. | நெய்வேலி | பண்ருட்டி | கடலூர் |
| 8. | நாஞ்சிக்கோட்டை | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 9. | மணிகண்டம் | திருச்சி | திருச்சி |
| 10. | திருவில்லிபுத்தூர் | திருவில்லிபுத்தூர் | விருதுநகர் |

**9.01. பட்டுப் பண்ணைகள்**

தமிழகத்தில் 11 பட்டுப் பண்ணைகளும், 9 செயல் விளக்க பயிற்சி நிலையங்களும், 13 மாதிரி பட்டுப் பண்ணைகளும், 8 இளம்புழு வளர்ப்பு மையங்களும் செயல்படுகின்றன. மல்பரி நாற்றுகளும், கலப்பின பட்டுக்கூடுகளும் இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும் புதிய பட்டு விவசாயிகளுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

**10.01. பட்டுநூற்பு பயிற்சி நிலையங்கள்**

தரமான பட்டு நூலை உற்பத்தி செய்வதற்காக நூற்பு பயிற்சி கீழ்க்காணும் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படுகின்றன.

| வ.எண் | அமைவிடம் | வட்டம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | ஈரோடு | ஈரோடு | ஈரோடு |
| 2. | கோவை | கோவை | கோவை |
| 3. | சேலம் | சேலம் | சேலம் |
| 4. | மதுரை | மதுரை | மதுரை |
| 5. | தென்காசி | தென்காசி | திருநெல்வேலி |
| 6. | திண்டுக்கல் | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 7. | தருமபுரி | தருமபுரி | தருமபுரி |
| 8. | பென்னாகரம் | பென்னாகரம் | தருமபுரி |
| 9. | ஓசூர் | ஓசூர் | தருமபுரி |
| 10. | வாணியம்பாடி | வாணியம்பாடி | வேலூர் |

[2001 ஆகஸ்ட் 31

**11.01. பட்டுப் பயிற்சிப் பள்ளி**

இத்துறையில் பணியாற்றும் களப்பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்குவதற்காக ஓசூரில் பட்டு பயிற்சிப் பள்ளி ஒன்று செயல்பட்டு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் இத்துறையில் பல்வேறு பதவிகளில் பணிபுரியும் களப்பணியாளர்கள், விவசாயிகள், பட்டு வித்தகங்களில் பணிபுரிவோர் ஆகிய நபர்களுக்கும், இளம்புழு வளர்ப்பு மற்றும் இரு சுழற்சியின புழுவளர்ப்பு பற்றிய பயிற்சி விவசாயிகளுக்கும் ஆக 1342 நபர்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**12.01. அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம்**

உற்பத்தி செய்யப்படும் கச்சாப் பட்டிற்கு உரிய விலை கிடைப்பதற்காக காஞ்சிபுரத்தில் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம் செயல்பட்டு வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.24.60 கோடி மதிப்புள்ள 192.00 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு பரிமாற்றகத்தில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ரூ.24.00 கோடி மதிப்புள்ள 200.00 மெட்ரிக் டன் கச்சாப் பட்டினை 2001-2002 ஆம் ஆண்டில் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**12.02.** தரமான கச்சாப் பட்டினை உற்பத்தி செய்வது தொடர்பாக நூற்பாளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த காஞ்சிபுரத்தில் பட்டுத் தர ஆய்வு சோதனைக் கூடம் ஒன்று மத்திய பட்டு வாரியத்தால் நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக் கூடத்தில் இலவசமாக பட்டுநூல் தரம் குறித்து பரிசோதனை செய்யப்படுகிறது.

**13.01. பகுதி வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டங்கள்**

தமிழகத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு பகுதி வளர்ச்சி மேம்பாட்டுத் திட்ட செயல்பாடுகளில் பட்டுத் தொழில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. இதுவரை பகுதி வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அடைந்த சாதனை விவரம் மற்றும் 2001-2002 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ள திட்ட விபரம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்படுகிறது.

**14.01. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

1981-82 ஆம் ஆண்டு முதல் நீலகிரி மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு இத்திட்டத்தின்கீழ் பின்வரும் உதவிகள் வழங்கப்படுகின்றன.



2001 ஆகஸ்ட் 31]

(1) உயர்விளைச்சல் தரும் மல்பரி நாற்றுக்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்தல்.

(2) அடிப்படைப் புழுவளர்ப்புத் தளவாடங்களை விநியோகித்தல்.

**14.02.** 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் அடையப்பட்ட இயல்பு மற்றும் நிதிச் சாதனை விபரம் வருமாறு:

| வ. எண் | திட்ட விபரம் | இயல்பு | | நிதி | |
|---|---|---|---|---|---|
| | | குறியீடு | சாதனை | ஒதுக்கீடு | செலவினம் |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | மல்பரி விரிவாக்கம் (ஏக்கரில்) | 10.00 | 10.00 | - | - |
| 2. | மல்பரி நாற்றுக்கள் விநியோகம் (விவசாயிகள் எண்ணிக்கை) | 40 | 40 | 0.500 | 0.500 |
| 3. | அடிப்படை புழுவளர்ப்புத் தளவாடங்கள்<br>1. மூங்கில் தட்டுக்கள் (விவசாயிகள் எண்ணிக்கை) | 40 | 40 | 0.390 | 0.390 |
| | 2. பாலிமர் சந்திரிக்கைகள் (விவசாயிகள் எண்ணிக்கை) | 40 | 40 | 1.260 | 1.260 |
| 4. | மசினகுடி, மசக்கல் மற்றும் குன்னூரில் உள்ள பட்டுப் பண்ணைகள் பராமரித்தல் | 3 | 3 | 6.000 | 6.000 |
| | மொத்தம் | | | 8.150 | 8.150 |

**14.03.** 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் 40 பயனாளிகளுக்கு திட்ட உதவிகள் வழங்கவும் மற்றும் பண்ணைப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

[2001 ஆகஸ்ட் 31

**15.01. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், பின்வரும் மாவட்டங்களில் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்:

(அ) கோயம்புத்தூர்
(ஆ) திண்டுக்கல்
(இ) தேனி
(ஈ) விருதுநகர்
(உ) திருநெல்வேலி
(ஊ) ஈரோடு

**15.02.** புதிய பட்டு விவசாயிகளுக்கு இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவிகள் பின்வருமாறு:

(அ) புதிய பட்டு விவசாயிகளுக்கு மல்பரி நாற்றுக்கள் விநியோகம்.

(ஆ) மல்பரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் நோய் தடுப்பு மேலாண்மை பற்றி விவசாயிகளுக்கு பயிற்சியளித்தல்.

(இ) பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி உபகரணங்களை இலவசமாக வழங்குதல்.

(ஈ) புழு வளர்ப்புக்குத் தேவையான அடிப்படை தளவாடங்களை விநியோகித்தல்.

15.03 2000—2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் அடைந்த இயல்பு மற்றும் நிதிச் சாதனை விபரம் வருமாறு:

| வ. எண் | திட்ட விபரம் | இயல்பு | | நிதி | |
|---|---|---|---|---|---|
| | | குறியீடு | சாதனை | ஒதுக்கீடு | செலவினம் |
| | | | | (ரூபாய் இலட்சத்தில் | |
| 1. | மல்பரி நாற்றுகள் விநியோகம்(இலட்சத்தில்) | 9.720 | 9.720 | 1.944 | 1.922 |
| 2. | விவசாயிகளுக்கு பயிற்சியளித்தல் (எண்ணிக்கை) | 720 | 720 | 3.600 | 3.600 |
| 3. | பயிற்சித் தளவாடங்கள் இலவசமாக விநியோகம் செய்தல் (விவசாயிகள் எண்ணிக்கை) | 720 | 720 | 3.600 | 3.434 |
| 4. | அடிப்படை புழுவளர்ப்புத் தளவாடங்கள் விநியோகம் (விவசாயிகள் எண்ணிக்கை) | 720 | 720 | 17.280 | 17.082 |
| | மொத்தம் | | | 26.424 | 26.038 |



2001 ஆகஸ்ட் 31]

**15.04.** 2001-2002 ஆம் ஆண்டில் 605 பயனாளிகளுக்கு உதவியளிக்க ரூ.25.484 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**16.01. பழங்குடியினர் நல துணைத் திட்டம்**

ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் கீழ்க்காணும் மலைப்பகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றன.

1. நாமக்கல் மாவட்டத்திலுள்ள கொல்லிமலை
2. சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலை
3. திருச்சி மற்றும் சேலம் மாவட்டத்திலுள்ள பச்சமலை
4. திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள சவ்வாது மலை
5. வேலூர் மாவட்டத்திலுள்ள சவ்வாது மற்றும் ஏலகிரி மலை
6. சேலம் மாவட்டத்திலுள்ள அருநூத்து மலை

**16.02.** இத்திட்டத்தின்கீழ் புதிதாக மல்பரி நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு கீழ்க்காணும் உதவிகள் வழங்கப்படும்:

அ) மானிய விலையில் மல்பரி நாற்றுகள் விநியோகம்.

ஆ) பட்டு விவசாயிகளுக்கு மல்பரி நாற்றுகள் நடவு மேற்கொள்ள மானிய உதவியளித்தல்.

இ) புதிய பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி உதவித் தொகை வழங்குதல்.

ஈ) பயிற்சி உபகரணங்கள் இலவசமாக வழங்குதல்.

உ) அடிப்படைப் புழுவளர்ப்புத் தளவாடங்கள் விநியோகம் செய்தல்.

**16.03.** 2001-2002 ஆம் ஆண்டில், நாமக்கல் மாவட்டத்திலுள்ள கொல்லிமலைப் பகுதியிலும், திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள சவ்வாது மலைப் பகுதியிலும் ரூ.8.075 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின்கீழ் 190 பழங்குடியின பயனாளிகள் பயனடைவர்.

[2001 ஆகஸ்ட் 31

**17.01. பட்டு 2000:**

பட்டுத் தொழில் பற்றிய நவீன தொழில் நுட்பங்களை விவசாயிகளிடம் பரப்புவதற்காக, 8-10 விவசாயிகள் அடங்கிய பட்டு தர மேம்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள், புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகள் நடைமுறைப்படுத்துவதற்கான செயல் விளக்கத்துடன் கூடிய பயிற்சி வழங்குகின்றன. பட்டுத் தொழிலில் கூடுதல் வருவாய் பெறுவதற்காக தர மேம்பாட்டுக் குழு உறுப்பினர்கள், சுய உதவிக் குழுக்களாக செயல்பட ஊக்குவிக்கப்பட்டு, தொழில்நுட்ப விவரங்களை பரிமாரிக்கொள்வது, சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது, கடனுதவி அளிப்பது போன்றவற்றில் ஆர்வம் செலுத்துகின்றனர். இத்துறை அலுவலர்கள் பட்டுத் தொழிலில் அறிமுகப்படுத்தும் புதிய தொழில்நுட்ப விவரங்களை தர மேம்பாட்டுக் குழு உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்து அதன் மூலமாக பிற விவசாயிகளும் தொழில்நுட்ப விவரங்களை அறிந்துகொள்ள உதவுவர். இதுவரை 140 பட்டு தர மேம்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 80 குழுக்கள் நடப்பாண்டில் ரூ.19.08 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும். தவிரவும் பட்டுத் தொழில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து 100 விவசாயிகள் பாரம்பரியமாக பட்டுத் தொழிலில் சிறந்து விளங்கும் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, மேம்படுத்தப்பட்ட பட்டுத் தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி பெறுவர். ரூ.4.26 இலட்சம் செலவினத்தில் இப்பயிற்சி வழங்கப்படும். பட்டு நூற்புத் தொழில் மேலாண்மை பற்றிய பயிற்சி ரூ.9.45 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ளப்படும்.

**18.01. மத்திய பட்டு வாரிய நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் கிரியா ஊக்கித் திட்டம்:**

ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மல்பரி, டசார் மற்றும் ஈரி பட்டு வளர்ச்சிக்காக மத்திய பட்டு வாரியம் 36 பட்டு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இவற்றில் 12 திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்துவதற்கு ரூ.492.562 இலட்சம் மதிப்பீட்டில் கருத்துருக்கள் மத்திய பட்டு வாரியத்திற்கு அனுப்பப்பட்டன. மொத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.323.975 இலட்சம் மத்திய பட்டு வாரியம் ஏற்கும். மாநில அரசு தனது பங்காக ரூ.137.085 இலட்சம் தொகையினை வழங்கும். மீதமுள்ள ரூ.31.502 இலட்சம் பயனாளிகளின் பங்காகும். கடந்த மூன்றாண்டுக் காலமாக மாநிலத்தில் கிரியா ஊக்கித் திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



2001 ஆகஸ்ட் 31]

**18.02** *2000—2001* ஆம் ஆண்டில் தமிழகத்தில் கீழ்க்காணும் விவரப்படி கிரியா ஊக்கித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன:

| வ எண் | திட்ட விவரம் | இலக்கு | | நிதி | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஒதுக்கீடு | | செலவினம் | |
| | | குறியீடு | சாதனை | மாநில அரசின் பங்கு | மத்திய பட்டு வாரிய பங்கு | மாநில அரசின் பங்கு | மத்திய பட்டு வாரிய பங்கு |
| | | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1 | பட்டு நூற்பில் எரிபொருள் சிக்கன அடுப்பு அமைப்பதற்கு உதவுதல் | 20 | 17 | - | 0.160 | - | 0.136 |
| 2 | புதிய பட்டு விவசாயிகளுக்கு பயிற்சியளித்தல் மற்றும் புழு வளர்ப்புத் தளவாடங்கள் விநியோகித்தல் | 1000 | 1000 | - | 14.000 | - | 14.000 |
| 3 | தமிழ் மொழியில் பட்டுத் தொழில் பற்றிய தொழில் நுட்ப கையேடுகள் தயாரித்தல் | 4000 | 4000 | 1.250 | 1.250 | 0.750 | 0.750 |
| 4 | பட்டு விவசாயிகளுக்கு தரமான நோய் தடுப்பு மருந்துப் பொருட்களை விநியோகம் செய்தல் | — | — | 5.000 | 5.000 | 5.000 | 5.000 |
| 5 | தரமான பட்டுநூல் உற்பத்திற்கு பலமுனை பட்டுநூற்பு ஏனங்கள் நிறுவுவதற்கு உதவுதல் | 46 ஏனங்கள் | 46 ஏனங்கள் | 4.480 | 4.480 | 4.480 | 4.480 |

[2001 ஆகஸ்ட் 31

| வ எண் | திட்ட விவரம் | இலக்கு | | நிதி | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | குறியீடு | சாதனை | ஒதுக்கீடு | | செலவினம் | |
| | | | | மாநில அரசின் பங்கு | மத்திய பட்டு வாரிய பங்கு | மாநில அரசின் பங்கு | மத்திய பட்டு வாரிய பங்கு |
| | | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 6 | பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்துவதற்கு சொட்டுநீர் பாசன அமைப்பு நிறுவுதல் | 585 | 379.20 ஏக்கர் | 7.730 ஏக்கர் | 69.600 | 5.058 | 45.500 |
| 7. | தண்டு அறுவடை மூலம் புழுவளர்ப்பு மேற்கொள்ள உதவியளித்தல் | 734 எண்ணிக்கை | 731 எண்ணிக்கை | 9.725 | 9.725 | 6.805 | 6.805 |
| 8 | கூடுதல் பட்டுக் கூடுகள் உற்பத்திக்கு தனியாக புழு வளர்ப்பு மனை கட்டுவதற்கு உதவுதல் | 224 எண்ணிக்கை | 153 எண்ணிக்கை | 11.200 | 11.300 | 7.650 | 7.650 |
| | மொத்தம் | | | 39.385 | 115.515 | 29.743 | 84.321 |

**18.03.** 2001-2002 ஆம் ஆண்டில் மத்திய பட்டு வாரிய நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் கிரியா ஊக்கித் திட்டத்தின்கீழ் ரூ.200.96 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.



2001 ஆகஸ்ட் 31]

| வ எண் | திட்ட விவரம் | இலக்கு குறியீடு | நிதி | |
|---|---|---|---|---|
| | | | மாநில அரசின் பங்கு | மத்திய பட்டு வாரிய பங்கு |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1 | தமிழ் மொழியில் பட்டு தொழில் பற்றிய தொழில்நுட்ப கையேடுகள் தயாரித்தல் | - | 1.250 | 1.250 |
| 2 | பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்துவதற்கு சொட்டுநீர் பாசன அமைப்பு நிறுவுதல் | 425.00 ஏக்கர் | - | 53.460 |
| 3 | இரு சுழற்சியின பட்டு உற்பத்தி திட்டம் செயல்படுத்துதல் | 10.00 இலட்சம் முட்டைகள் | 72.500 | 72.500 |
| | | மொத்தம் | 73.750 | 127.210 |

## 19.01. தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், காஞ்சிபுரம்

தமிழகத்தில், கச்சாப் பட்டுநூல் மற்றும் முறுக்கேற்றிய பட்டுநூல் வியாபாரத்திற்காக அமைக்கப்பட்டுள்ள தலைமை கூட்டுறவு இணையம் டான்சில்க் என்பதாகும். பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்திற்கும் தேவைப்படும் பட்டுநூலை "டான்சில்க்" இணையம் விற்பனை செய்கிறது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.57.32 கோடி மதிப்புள்ள 382.00 மெட்ரிக் டன் பட்டுநூலை இணையம் கொள்முதல் செய்துள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.70.00 கோடி மதிப்புள்ள 500 மெட்ரிக் டன் பட்டுநூலை கொள்முதல் செய்து உறுப்பினர்களுக்கு விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 20.01. இரு சுழற்சியின பட்டு உற்பத்தித் திட்டம்

1999-2000 ஆம் ஆண்டில், இரு சுழற்சியின பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் நுட்பத்தை பிரபலபடுத்தும் திட்டத்தின்கீழ் 12000 சி.எஸ்.ஆர். இன பட்டு முட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இவ்வின புழு வளர்ப்பின் மூலம் கிடைக்கப்பட்ட சாதகமான பலன்கள் ஊக்கமளிப்பதாக உள்ளன.

[2001 ஆகஸ்ட் 31

**20.02.** இதன் காரணமாக 2000-2001 ஆம் ஆண்டில் மத்திய பட்டு வாரிய வித்தகங்களிலிருந்து 1.50 இலட்சம் சி.எஸ்.ஆர். இன பட்டு முட்டைகள் பெற்று, வசதி வாய்ப்புள்ள விவசாயிகளுக்கு புழு வளர்ப்பு செய்வதற்காக விநியோகிக்க இத்துறை திட்டமிட்டது. விவசாயிகள் இப்புழு வளர்ப்பு மேற்கொள்வதற்கு காட்டிய ஆர்வம், வரவேற்பு மற்றும் கூடுதலாக பட்டு முட்டைத் தொகுதிகளை விநியோகிக்கவுள்ள பெங்களூர் மத்திய பட்டு வாரிய வித்தகங்களின் திறன் ஆகியவற்றால் திட்டமிட்டதைக் காட்டிலும் கூடுதலாக பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டில் 2.09 இலட்சம் சி.எஸ்.ஆர். இன பட்டு முட்டைகள் வளர்க்கப்பட்டு 94,000 கிலோ கிராம் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டன. இதிலிருந்து 13.442 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டது.

**20.03.** இரு சுழற்சியின பட்டுப்புழு வளர்ப்புத் தொழில்நுட்பத்தை பிரபலபடுத்தும் திட்டம் ஜப்பானிய தொழில்நுட்ப உதவியுடன் செயல்படுத்தப்படும் "ஜெய்க்கா" செயலாக்கத்தில் கிடைத்த வெற்றியின் காரணமாக 2001-2002 ஆம் ஆண்டில் 10.00 இலட்சம் சி.எஸ்.ஆர். இன பட்டு முட்டைகள் வளர்த்து 60 மெட்ரிக் டன் இரு சுழற்சியின கச்சாப்பட்டு உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**21.01** 2001-2002 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் (பகுதி-2 திட்டம்) பகுதி-2 திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

| வ. எண் | திட்ட விவரம் | இயல்பு | | நிதி | |
|---|---|---|---|---|---|
| | | குறியீடு | சாதனை | ஒதுக்கீடு | செலவினம் |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | ஆராய்ச்சி பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பட்டினை பட்டு நெசவு விசைத் தறியில் பயன்படுத்துவதற்கு உதவியளித்தல் | 16 தறிகள் | 16 தறிகள் | 2.400 | 2.400 |
| 2. | வீரிய ரக மல்பரி நடவுக்கு ஊக்கத் தொகை அளித்தல் | 3000 பயனாளிகள் 1020.00 ஏக்கர் | 3000 பயனாளிகள் 1609.38 ஏக்கர் | 5.100 | 5.069 |
| | மொத்தம் | | | 7.500 | 7.469 |



2001 ஆகஸ்ட் 31]

**21.02** 2001—2002 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் புதிய திட்டங்களை ரூ.20.94 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது:

| வ. எண் | திட்ட விவரம் | இயல்பு குறியீடு | நிதி ஒதுக்கீடு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | புதிய தொழில்நுட்ப உத்திகளை விவசாயிகள் நடைமுறைப்படுத்துவதற்கு உதவியளித்தல். வீரிய மல்பரி ரகங்களை சாகுபடி செய்தல், இளம்புழு வளர்ப்புக்குத் தனியாக மல்பரித் தோட்டம் பராமரித்தல், இளம் பட்டுப்புழு வளர்ப்பதற்கு நீல நிற பாலித்தின் தாள்களை பயன்படுத்துதல், மல்பரி தோட்டங்களுக்கு உயிர் உரங்களையும் நுண்ணூட்டச் சத்துக்களையும் இடுதல் | 1500 ஏக்கர் 3000 விவசாயிகள் | 15.000 |
| 2. | மல்பரித் தோட்டங்களில் சொட்டுநீர் பாசன அமைப்பினை நிறுவுவதற்கு உதவியளித்தல் | 425.00 ஏக்கர் | 5.940 |
| | | மொத்தம் | 20.940 |

**22.01.** மேற்காணும் பல்வேறு திட்டங்கள் 2001-2002 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படுவதால் தமிழகத்தில் பட்டு உற்பத்தி 800 மெட்ரிக் டன் அளவுக்கு அதிகரிக்கும். 20,000 நபர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**23.01.** 2001-2002 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் தொடர், தொடரா திட்டங்கள் மற்றும் புதிய பட்டு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்கு மொத்தம் ரூ.2604.239 இலட்சம் கீழ்க்காணும் விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| வ. எண் | திட்ட விவரம் | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திட்டப் பணிகள் | |
| | அ) பகுதி — 1 | 188.340 |
| | ஆ) பகுதி — 2 | 20.940 |
| 2. | திட்டம் சாராப் பணிகள் | 2244.670 |
| 3. | பழங்குடியினர் துணைத் திட்டம் | 8.075 |
| 4. | மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | |
| | அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 8.000 |
| | ஆ) மேற்கு தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டம் | 25.484 |
| 5. | தன்னாட்சி அமைப்புகள் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 2.190 |
| 6 | பட்டு—2000 திட்டம் | |
| | அ) பட்டுத் தரமேம்பாட்டுக் குழுக்கள் அமைத்தல் | 19.080 |
| | ஆ) விவசாயிகளுக்கு நவீன தொழில் நுட்பம் பற்றிய பயிற்சியளித்தல் | 4.260 |
| | இ) தொழில் முனைவோர்களுக்கான பயிற்சி | 9.450 |
| 7. | மத்திய பட்டு வாரிய நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் கிரியா ஊக்கித் திட்டம் | 73.750 |
| | மொத்தம் | 2604.239 |



## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

**1.00.** "பூம்புகார்" என்ற பெயரில் புகழ் பெற்றுள்ள தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக 26-7-1973 அன்று நிறுவப்பட்டது. தொழில் மற்றும் வணிகத் துறையிடமிருந்து விற்பனை நிலையங்கள், பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு 1-8-1973 முதல் தனது விற்பனையைத் தொடங்கியது.

### 2.00. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள்

(அ) தமிழ்நாட்டில் கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் கைத்திறன் பொருட்களுக்குத் தொடர்ந்து சந்தை வாய்ப்பினை உருவாக்கித் தருதல்.

(ஆ) முறையான பயிற்சியின் வாயிலாக கைவினைஞர்களின் பாரம்பரியத் திறனை மேம்படுத்துதல்.

(இ) கைவினைப் பொருட்களின் உற்பத்தித் திறனையும், தரத்தினையும் மேம்படுத்துவதற்குத் தேவையான உரிய தொழில்நுட்பத்தினை வளர்த்திடும் அதேநேரத்தில், அத்தொழிலில் உள்ள உற்சாகமற்ற கடின உழைப்பை குறைத்து தொழில்முறை இடர்பாடுகளைக் களைய முற்படுதல்.

(ஈ) புதிய வடிவமைப்புகளை ஊக்குவித்தல் மற்றும்

(உ) கைவினைஞர்களுக்கு சமூகப் பொருளாதார பாதுகாப்பு அளித்தல்.

### 3.00. செயல்பாடுகள்

**(அ) சந்தை வாய்ப்பு**

**3.01. விற்பனை**

இந்த நிறுவனம் தமிழ்நாடு முழுவதும் மற்றும் பாண்டிச்சேரி, பெங்களூர், கொல்கத்தா, புதுடெல்லி மற்றும் மும்பை ஆகிய இடங்களில் பூம்புகார் என்ற பெயரில் இயங்கிவரும் தனது 20 விற்பனை நிலையங்கள் வாயிலாக கைவினைஞர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதை தனது முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

[2001 ஆகஸ்ட் 31

**3.02.** கைத்திறப் பொருட்களைப் பிரபலப்படுத்தவும், சந்தை வாய்ப்பை மேம்படுத்தும் ஒரு வழிமுறையாகவும் இந்நிறுவனம் பெருநகரங்களான ஹைதராபாத், மும்பை, பூனே, இந்தூர், போபால், சண்டிகார் போன்ற இடங்களில் உள்ளூர் பண்டிகைக் காலங்களுக்கேற்ப கண்காட்சிகளை நடத்தி வருகிறது. இக்கண்காட்சியில் சிலவற்றை அபிவிருத்தி ஆணையர் (கைத்திறன்) அவர்களின் நிதியுதவியுடனும் மற்றவற்றை தனது சொந்த நிதியிலிருந்தும் நடத்தி வருகிறது.

**3.03.** 2001-2002 ஆம் ஆண்டில் அபிவிருத்தி ஆணையர் (கைத்திறன்) அவர்களின் நிதியுதவியுடன் இந்நிறுவனம் கைவினைப் பொருட்கள் சந்தை ஒன்றினை சென்னையில் நடத்த உள்ளது.

**3.04.** 1973-74 ஆம் ஆண்டில் ரூ.50.00 இலட்சங்கள் விற்பனை என்ற சிறிய அளவில் விற்பனையைத் தொடங்கிய இந்நிறுவனம் படிப்படியாக வளர்ச்சியடைந்து 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.1370.65 இலட்சங்கள் என்ற விற்பனையை எட்டி உள்ளது.

**3.05.** கடந்த 3 ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் விற்பனை பின்வருமாறு :

| ஆண்டு | விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1998-1999 | 1139.41 |
| 1999-2000 | 1280.95 |
| 2000-2001 | 1370.65 |
| | (தணிக்கை செய்யப்படாதது) |

2001-2002 ஆம் ஆண்டில் ரூ.1575.00 இலட்சத்திற்கு விற்பனை செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது.

**3.06. ஏற்றுமதி**

இந்நிறுவனத்தின் விற்பனை நிலையங்களுக்கு பெருமளவில் வெளிநாட்டினரும், சுற்றுலாப் பயணிகளும் தமிழ்நாட்டு பாரம்பரிய பொருட்களால் கவரப்பட்டு வருகை தந்தாலும் ஏற்றுமதியைப் பொறுத்தளவில் இந்நிறுவனத்தால் கடந்த ஆண்டுகளில் பெருமளவில் ஏதும் செய்திட முடியவில்லை. இதன் தற்போதைய ஏற்றுமதி விற்பனை நிலவரம் என்னவெனில், தன் விற்பனை நிலையங்களுக்கு வருகை தரும்



2001 ஆகஸ்ட் 31]

வாடிக்கையாளர்களுக்கு அந்நிய செலாவணியில் விற்பனை செய்யும் மறைமுக ஏற்றுமதியே எனலாம்.

இத்தகைய ஏற்றுமதி விற்பனை கடந்த 3 ஆண்டுகளில் பின்வருமாறு

| ஆண்டு | விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1998-1999 | 54.16 |
| 1999-2000 | 63 54 |
| 2000-2001 | 55.12 |
| | (தணிக்கை செய்யப்படாதது) |

இந்நிறுவனம் தனது ஏற்றுமதியை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, தமிழக அரசு நிதியுதவியுடன், ஒரு மேலாண்மை கலந்தறிதற்குரியர் ஒருவர் மூலம், ஆய்வு மேற்கொண்டதில், ஏற்றுமதி செயல்பாடு சார்ந்த வினைமுறைத்திறம் குறித்த ஓர் அறிக்கையினை அவர் அளித்தார். கலந்தறிதற்குரியரின் பரிந்துரைகளில் ஒன்று, பன்னாட்டு வணிகக் கண்காட்சிகளில் கலந்துகொண்டு தன் உற்பத்திப் பொருட்களுக்கு கொள்முதல் ஆணைகளைப் பெறுதல் ஆகும். அபிவிருத்தி ஆணையர் (கைத்திறன்) அவர்கள் 2001 ஆம் ஆண்டில் இங்கிலாந்து, பர்மிங்ஹாம் நகரில் செப்டம்பர் 3 முதல் 6 வரை நடைபெறவுள்ள "பரிசுப் பொருட்கள்" கண்காட்சியில் பங்குபெற இந்நிறுவனத்திற்கு ஓர் இடம் ஒதுக்கீடு செய்துள்ளார்.

**3.07.** இது தவிர, அபிவிருத்தி ஆணையர் (கைத்திறன்) அவர்கள் நிறுவியுள்ள மின்னணு வணிகவலைத் தளத்தின் உறுப்பினராவதன் வாயிலாக இந்நிறுவனம் தனக்கென ஒரு மின் வணிகவலைத் தளத்தை அபிவிருத்தி செய்துகொள்ள முடியும்.

**3.08. சென்னை விற்பனை நிலைய திட்டம்.**

இந்நிறுவனத்தின் 20 விற்பனை நிலையங்களில் முதன்மையானது சென்னை விற்பனை நிலையமாகும். இது அமைந்துள்ள இடம் நினைவுச் சின்னக் கட்டடமும், 100 ஆண்டுகள் பழமையானதும், 1973-ல் இந்நிறுவன உருவாக்கத்தின்போது அரசினரால் இதற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டதுமாகும்.

[2001 ஆகஸ்ட் 31

**3.09.** இந்நிறுவனம், விற்பனை நிலையத்தை அண்மையில் புதுப்பித்தல் பணிகள் செய்து, அண்ணா சாலையில் பெருமிதம் கொள்ளத்தக்க வகையிலான விற்பனை நிலையமாக ஆக்கியுள்ளது. இது முழுவதுமாக குளிர்சாதன வசதி செய்யப்பட்டு, வாடிக்கையாளர் விரும்பும் சூழ்நிலையில் அமைந்துள்ளது. மொத்தப் பணிகள் பொதுப்பணித் துறையினர் மூலம் மேற்கொள்ளப்பட்டு, பணி முடிவு பெற்று 2001 ஆம் ஆண்டு மே திங்கள் இரண்டாவது வாரத்தில் முழு விற்பனை நிலையமும் வியாபாரத்திற்கென திறக்கப்பட்டுள்ளது.

**3.10.** புதுப்பித்தல் பணி முடிவு பெற்ற பின்னர், தற்போது விற்பனை நிலையப்பகுதி கிட்டத்தட்ட 12000 சதுர அடிகள் ஆகியுள்ளது. முன்பு இருந்த அளவைக் காட்டிலும் இது சுமார் 5000 சதுர அடிகள் கூடுதலாகும். இக்கூடுதல் பரப்பளவு மட்டுமின்றி உள் அலங்கார அமைப்பு புதுமுறையில் வடிவமைக்கப்பட்ட குளிர் சாதன வசதி மற்றும் நவீன காட்சி மேடை ஆகியவற்றை பெற்றுத் திகழ்கிறது.

## 3.11. விற்பனை நிலையங்களை புதுப்பித்தல்

கைவினைப் பொருட்கள் கலை நுணுக்கமான பொருட்களாதலால், அவற்றின் விற்பனைக்கு பொருத்தமான சூழ்நிலையினை ஏற்படுத்தித் தர வேண்டியது அவசியமானதாகும். மேலும் பொருட்களை அறிமுகப்படுத்தும் விதம் விற்பனை முன்னேற்றமடையச் செய்வதில் பெரும் பங்கு வகிக்கிறது. இதனை கருத்திற்கொண்டு மத்திய அரசின் உதவியுடன் விற்பனை நிலையங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்மாதிரி பணியினை இந்த ஆண்டில் திருநெல்வேலி, சேலம், பெங்களூர், புதுடெல்லி ஆகிய இடங்களில் உள்ள விற்பனை நிலையங்களில் உள் அலங்கார வேலைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.12. புதிய விற்பனை நிலையங்கள் தொடங்குதல்/சொத்துக்களை கையகப்படுத்துதல்

ஈரோட்டில் உள்ள பரந்த இட வசதியுடன் கூடிய சொந்த விற்பனை நிலையத்தை அமைக்க இந்நிறுவனம் அங்கு ஒரு சிறு நிலத்தினை தமிழக அரசிடமிருந்து உரிமை மாற்று மூலம் பெற்று அதில் ரூ.20 இலட்சங்கள் மதிப்பில் பொதுப்பணித் துறையின் மூலம் இரண்டடுக்கு கட்டடம் ஒன்றைக் கட்டி வருகிறது.



2001 ஆகஸ்ட் 31]

**3.13.** இவற்றுடன்கூட மேலும் இந்நிறுவனம் சுவாமிமலையில் மாநில மற்றும் மத்திய அரசுகளின் உதவியுடன் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் இடம் பெறச் செய்யும்பொருட்டு பன்னோக்கு கட்டடம் ஒன்றைக் கட்டத் தீர்மானித்துள்ளது:

(அ) கைவினைப் பொருட்களின் சந்தை வாய்ப்பிற்கான விற்பனை நிலையம்;

(ஆ) உலோக சிற்பக் கலைக்கான வடிவமைப்பு மற்றும் பயிற்சி நிலையம்; அங்கு உலோக சிற்பக் கலையில் 3 ஆண்டு சான்றிதழ் பயிற்சி பயிற்றுவிக்கப்படும்;

(இ) உலோக சிற்பக் கலைப் பொருட்கள் உற்பத்திக்கான உற்பத்தி நிலையம் மற்றும்

(ஈ) கூடுதலான பொருட்கள் சேர்த்து வைப்பதற்கான வசதிகள்.

இந்நோக்கத்திற்காக இந்நிறுவனம் சமீபத்தில் நிலம் கையகப்படுத்தியுள்ளது அதில் பொதுப்பணித் துறையினரால் மேற்கூறப்பட்ட கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படும்.

## 3.14. அ) உற்பத்தி

வணிக ரீதியிலான நடவடிக்கைகளுடன் கூடுதலாக இந்நிறுவனம் தனக்குரிய உற்பத்தி நிலையங்கள் வாயிலாக உற்பத்தியிலும் ஈடுபட்டுள்ளது. கைத்திறத் துறையிலேயே, தனக்கென சொந்த உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ள ஒரு சில நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகும். 1973 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் உருவாக்கப்பட்டவுடன் தொழில் மற்றும் வணிகத் துறையின்கீழ் இயங்கி வந்த பயிற்சி நிலையங்களும், பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் 1-11-1974 அன்று இந்நிறுவனத்திற்கு மாற்றம் செய்யப்பட்டன. இவை நீங்கலாக, இந்நிறுவனம் தானும் ஒரு சில உற்பத்தி நிலையங்களை ஆரம்பித்தது. தற்போது 8 உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

**3.15.** இவ்வுற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், தமிழ்நாட்டில் மட்டுமின்றி வெளிமாநிலங்களில் பல முக்கியமான இடங்களில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையங்கள் வாயிலாக விற்பனை செய்யப்படுகின்றன. 1974-75-ல் ரூ.4.80 இலட்சம் என்ற மிகக் குறைந்த அளவிலான உற்பத்தி துவங்கிய இந்நிறுவனம், 2000-2001 ஆம் ஆண்டில் 8 உற்பத்தி நிலையங்கள் மூலமாக ரூ.263.00 இலட்சங்களுக்கு உற்பத்தியினை உயர்த்தியுள்ளது. மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர்

இயக்குநரகம் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இயக்குநரகங்கள் ஆகியோருக்கு பித்தளை தேய்ப்புப் பெட்டிகளை இந்நிறுவனம் கடந்த பல ஆண்டுகளாக உற்பத்தி செய்து விநியோகித்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக இந்த நிறுவனம், கோயில்களுக்குத் தேவைப்படும் பித்தளை வேலைப்பாட்டு வரிசைக் கிராதிகள், உண்டியல், விளக்குகள், கடவுள் சிலைகள், மணிகள், கோவில் கதவுகள், மரம், வெள்ளி, தங்கத்தால் ஆன தேர்கள் இவற்றைச் செய்து கொடுக்கும் பணியையும் செய்து வருகிறது. உற்பத்தி நிலையங்களின் உற்பத்தி மதிப்பு கடந்த மூன்று ஆண்டுகள் பின்வருமாறு:

| ஆண்டு | உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1998-1999 | 224.24 |
| 1999-2000 | 235.50 |
| 2000-2001 | 263.21 |
| | (தணிக்கை செய்யப்படாதது) |

இந்நிறுவனம் *2001-2002* ஆம் ஆண்டில் ரூ.*280.00* இலட்சத்திற்கு உற்பத்தியை எட்ட இலக்கு நிர்ணயித்துள்ளது.

**3.16.** உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரத்தினைப் பராமரிப்பதற்காக இந்நிறுவனம் தனது உற்பத்தி தேவைக்கான தரமான உலோகங்களை அரசுத் துறைகளின் மூலம் பெற்றுவருகிறது. முக்கிய மூலப் பொருட்களான பித்தளை, செம்பு, துத்தநாகம், வெள்ளீயம், காரீயம் போன்றவை காவல் துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு வெடிமருந்துப் பொருட்கள் நிறுவனம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, கனிம உலோக விற்பனை நிறுவனம் ஆகிய அரசுத் துறை நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்து வருகிறது. தேவைப்படும் வெள்ளி ( கலைத் தட்டு உற்பத்தி நிலையத் தேவைக்கு) சுங்கத் துறையிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. சந்தன மரம் தேவைக்கேற்ப வனத் துறையிடமிருந்து அவ்வப்போது பெறப்பட்டு வருகிறது.

**4.00. பயிற்சி**

இந்நிறுவனத்தின் 8 உற்பத்தி நிலையங்களும், விற்பனை நிலையங்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்வது மட்டுமின்றி முக்கிய கைத்திறப் பொருட்களை உற்பத்தி செய்வதில்



பயிற்சியும் அளிக்கின்றன. கைத்திறன் பொருட்களின் தேவை அதிகரித்து வந்தபோதிலும் அதைச் செய்வதற்கு போதிய கைவினைஞர்கள் கிடைப்பது குறைந்துள்ளதற்கு காரணம் என்னவெனில், கைத்திறன் சார்ந்த துறைகளில் வருமானம் குறைவு என்ற கருத்து கைவினைஞர்களிடையே ஏற்பட்டுள்ளதால் தமது இளைய தலைமுறையினரை இந்தப் பாரம்பரிய கலைத் துறைக்கு வரவிடாமல் தடுத்து வேறு இலாபகரமான தொழிலுக்கு திசை திருப்பிவிடுவதுதான் ஆகும். போதுமான கைவினைஞர்கள் இல்லாமையால் சில கைத்திற கலைகள் நலிவுறும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு ஏற்பட்டுள்ள நலிவு நிலையினை மாற்ற, இந்நிறுவனம் கைவினைப் பொருட்களில் ஓராண்டு பயிற்சித் திட்டத்தை தனது உற்பத்தி நிலையங்கள் மூலம் நடத்தி வருகிறது. இதன் மூலம் அவர்களை ஊக்குவிக்கவும், வாழ்க்கை வருமானத்திற்கு வகை செய்யவும் வழி ஏற்படுகிறது. இந்நிறுவனத்தின் இம்முயற்சிகள் ஊக்குவிக்கும் அளவில் பயனுள்ளவையாக உள்ளது. இப்பயிற்சினை முடித்த பயிற்சி மாணவர்கள் சுயதொழில் தொடங்குவதிலோ அல்லது கைத்திறன் உற்பத்தி நிறுவனங்களிலேயே துண்டுக்கூலி பணியாளர்களாக இணைந்துள்ளனர். தற்போது இந்நிறுவனத்தின் 8 உற்பத்தி நிலையங்களிலும் பணிபுரியும் 140 துண்டுக்கூலி பணியாளர்களில் பெரும்பாலோர் இத்தகைய பயிற்சிப்பெற்றோரே ஆவர். இத்தகைய பயிற்சிகளை இந்நிறுவனம், மாநில அரசு அல்லது மத்திய அரசு நிதியுதவியுடன் நடத்துகிறது. ஓராண்டு பயிற்சிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.300/- என பயிற்சித் தொகையாக வழங்கி வருகிறது. மத்திய அரசு நிதி ஒதுக்கீடு அதிக அளவில் இல்லாததினால், பயிற்சி மானியத்தைக் குறைக்க ஆரம்பித்தது. ஆகவே எல்லாவிதமான பொருட்கள் உற்பத்தி செய்யும் பயிற்சிக் காலம் ஓராண்டு என குறைக்கப்பட்டது. இந்நிறுவனமும், அதனையே பின்பற்ற ஆரம்பித்தது. முக்கியமாக பஞ்சலோக சிலைகளைச் செய்வதில் ஓராண்டு பயிற்சி போதுமானதாக இல்லாத நிலையில் பயிற்சி மாணவர்கள் தொழிலை முறையாக, முழுமையாகத் தெரிந்துகொள்ளவும், பயிற்சி முடிவுற்றவுடன், தரமான பொருட்களைத் தயார் செய்யும் நிலைமையை எட்டுவதற்கும், ஒரு மூன்றாண்டு பயிற்சித் திட்டத்தை தொடங்க இந்நிறுவனம் திட்டமிட்டது. இம்மூன்றாண்டு, பயிற்சி அரசாணை எண் 76 கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர் துறை நாள் 28-04-2000 மூலமாக சான்றிதழ் பயிற்சியாக அங்கீகரித்தது. தற்போது இந்த மூன்றாண்டு சான்றிதழ் பயிற்சியில் 14 மாணவர்கள் 12-7-2000 முதல் பயின்று வருகின்றனர். அந்த மாணவர்களுக்கு மாதந்தோறும் கீழ்க்கண்ட பயிற்சித் தொகை வழங்கப்பட்டு வருகிறது:

| வருடம் | தொகை (ரூ. மாதமொன்றுக்கு) |
|---|---|
| முதல் வருடம் | 500.00 |
| இரண்டாம் வருடம் | 750.00 |
| மூன்றாம் வருடம் | 1000.00 |

இந்த உதவித் தொகையின் ஒரு பகுதியை தமிழக அரசிடமிருந்து பெற்ற மானியத்தின் மூலமாகவும், மீதமுள்ளவற்றை நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்தும் வழங்கப்பட்டு வருகிறது.

### 5.00 சிறப்புத் திட்டங்கள்

தொடர்ந்து ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பின்னடைவு காரணமாக இந்நிறுவனத்தின் விற்பனை செயல்பாடுகளில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்நிறுவனம் இந்நிலையைச் சமாளிக்கவும் மாறிவரும் சூழலுக்கேற்ப தன் செயல்பாடுகளை மாற்றிக் கொள்ளவேண்டியது அவசியமாக உள்ளது. இந்நிறுவனம் தனது செயல்பாடுகளில் ஒரு மாற்று ஏற்பாடாக கோவில் சிறப்புத் திட்டத்தின்கீழ் சில பணிகளை மேற்கொள்வதன் மூலம் தனது நோக்கத்தின் இலக்கை நோக்கிச் செல்ல முடியும் என்றறிந்தது. போதுமான பட்டறிவின் மூலமும், வல்லுனர் உதவியுடனும், கோவில்களுக்குத் தேவையான பணிகளைச் செய்து தரும் பணியில் தனது கவனத்தைத் திருப்பி அதில் ஈடுபட ஆரம்பித்தது. இதை அடுத்து தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் போன்ற இடங்களிலுள்ள கோவில்களிலிருந்து மரம், வெள்ளி, தங்கம் இவற்றாலான தேர்கள், மரத் தேர்கள், கொடி மரங்கள், கோவில் மற்றும் கிருத்துவ தேவாலயங்களுக்கு வெண்கல மணிகள், மர வாகனங்கள், வெள்ளி மற்றும் தங்கத் தகடு போர்த்துதல், அலங்கார பித்தளை வரிசை கிராதிகள் போன்றவற்றுக்கான ஆணைகள் இந்நிறுவனத்திற்குக் கிடைக்கப் பெற்றன. 1995 ஆம் ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு 21' உயர தங்கத் தேர் ஒன்றைத் திருமலையில் செய்து கொடுத்தது இந்நிறுவனத்தின் ஒரு பெருமைமிக்க சிறப்புப் பணியாகும். இப்பணியின் மொத்த மதிப்பீடு ரூ.2.50 கோடிகளாகும். இவற்றில் இந்நிறுவனம் ரூ.25.74 இலட்சத்தை சேவைக் கட்டணமாகப் பெற்றது. கடந்த மூன்று ஆண்டுகளில் சிறப்புத் திட்ட விற்பனை மற்றும் சேவைக் கட்டணமாக இந்நிறுவனம் பெற்ற தொகை பின்வருமாறு:



| ஆண்டு | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 1998-1999 | 86.42 |
| 1999-2000 | 176.39 |
| 2000-2001 | 216.03 |

**5.01.** பின்வரும் அட்டவணையில் சிறப்புத் திட்டங்கள் மூலம் மேற்கொண்டு செய்த பணிகள், தற்போது செய்து வரும் பணிகள் குறித்த விவரங்கள் தரப்பட்டுள்ளன:

| வ எண் | சிறப்புத் திட்டத்தின் பெயர் | பணி ஆணை கிடைத்த நாள் | பணியின் மொத்த மதிப்பு | சேவைக் கட்டணமாக நிறுவனம் பெற்ற தொகை | சிறப்புத் திட்டப் பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|
| தமிழ்நாட்டிற்குள் | | | (ரூபாய் இலட்சங்களில்) | | |
| 1. | மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்கு 14' 7" உயரத்தில் தங்கத்தேர் செய்து தருதல் | 23-12-92 | 75.00 | 9.70 | பணி 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிக்கப்பட்டது |
| 2. | ஈரோடு மாவட்டம் சிவன் மலையில் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு 98 7/8 உயரத்தில் தங்கத்தேர் செய்து தருதல் | 8-12-99 | 50.00 | 11.25 | செப்டம்பர் 2000ல் பணி முடிக்கப்பட்டது |

[2001 ஆகஸ்ட் 31

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | சென்னை மாங்காட்டில் உள்ள அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோயிலுக்கு 16' 7/8' உயரத்தில் தங்கத்தேர் செய்து தருதல் | 26-10-96 | 125.00 | 24.00 | ஏப்ரல் 2001இல் பணி முடிக்கப் பட்டது |
| 4. | திருவாலங்காடு வடாரண்யேஸ்வரர்திருக்கோயிலுக்கு 35' உயரத்தில் மரத்தேவைப் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் | 10-11-99 | 15.65 | 15.65 | டிசம்பர் 2000இல் பணி முடிக்கப்பட்டது |
| 5. | விருத்தாச்சலம், மணவாள நல்லூர், கொளஞ்சியப்பர் திருக்கோயிலுக்கு 10'6' உயரத்தில் வெள்ளித்தேர் செய்து தருதல் | 14-12-99 | 45.00 | 10.16 | மர வேலை முடிவு பெற்றுள்ளது. வெள்ளி வேலை தொடங்க உள்ளது |
| 6. | கோவை மாவட்டம் மருத மலையிலுள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு 16'6 7/8' உயரத்தில் தங்கத்தேர் செய்து தருதல் | 19-11-92 | 108.00 | 15.85 | மர வேலை செம்பு, வெள்ளி வேலைகள் முடிந்துவிட்டன. தங்க வேலை தொடங்க உள்ளது |
| 7. | ஈரோடு மாவட்டம் சிவன் மலையில் உள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு ஒரு மரத்தேர் செய்து தருதல் | 17-5-2000 | 17.76 | 17.76 | பணி நடைபெற்று வருகிறது. |
| ஆந்திரப்பிரதேசத்தில் | | | | | |
| 1. | காளஹஸ்தியில் உள்ள அருள்மிகு காளஹஸ்தீஸ்வர சுவாமி திருக்கோயிலுக்கு அலங்கார பித்தளை வரிசை கிராதிகள் செய்து தருதல் | 19—2—1999<br>9—5—2000 | 33.00<br>37.00 | 33.00<br>37.00 | செப்டம்பர் 1999ல் பணி முடிக்கப் பட்டது<br>ஜனவரி 2001ல் பணி முடிக்கப்பட்டது. |



2001 ஆகஸ்ட் 31]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | யாதகிரி குட்டாவில் உள்ள அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக் கோயிலுக்கு அலங்கார பித்தளை வரிசை கிராதிகள் செய்து தருதல் | 25-10-99 | 25.00 | 25.00 | மார்ச் 2000ல் பணி முடிக்கப் பட்டது |
| 3. | கரீம்நகர் மாவட்டத்தில் மேமுலவாடாவில் உள்ள இராஜ இராஜேஸ்வர சுவாமி திருக்கோயிலுக்கு வேலைப்பாடுடைய பித்தளை கிராதிகள் செய்து தருதல் | 14-6-2000 | 27.00 | 27.00 | டிசம்பர் 2000ல் பணி முடிக்கப் பட்டது |
| 4. | திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு பித்தளை ஊஞ்சல் சங்கிலிகள், உண்டியல் செய்து தருதல் | 11-4-2000 | 4.00 | 4.00 | ஆகஸ்ட் 2000ல் பணி முடிக்கப் பட்டது |

**5.02,** மேற்சொன்ன பணிகளைத் தவிர, வேறு பல கோவில்களிலிருந்தும், வேலைப்பாடுடைய பித்தளை வரிசைக் கிராதிகள் செய்து தருவதற்கான பணி ஆணைகள் வந்தவண்ணம் உள்ளன. ஸ்ரீசைலம், பிரும்மாரம்ப மல்லிகார்சுன சுவாமி திருக்கோயில், குண்டக்கல், நெட்டிக் காந்தி ஆஞ்சனேய சுவாமி திருக்கோயில் ஆகியவற்றில் அலங்காரப் பித்தளை வரிசைக் கிராதிகள் சில, காளஹஸ்தீசுவர சுவாமி சன்னதி முன் முகப்பில் வெள்ளித் தகடு போர்த்துதல் ஆகியவற்றிற்கான பணி ஆணைகள், இந்நிறுவனத்தால் பெறப்பட்டுள்ளன. இந்நிறுவனம் மேன்மேலும் கோயில் சம்பந்தப்பட்ட பணிகளில் சிறப்பு ஆணைகளைப் பெறுவதில் முழு முயற்சியுடன் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனத்திடம் தற்போது கையில் உள்ள சிறப்புத் திட்ட ஆணைகளின் மதிப்பு சுமார் ரூ.100 கோடியாகும். மேலும் இந்நிறுவனம் 2001-2002-ல் கோவில் நிர்வாகம் மற்றும் சமய அறநிலையத் துறை ஆகியவற்றின் பரிசீலனையில் உள்ள பல பணி ஆணைகளைப் பெறுவதில் உறுதியாக உள்ளது.

[2001 ஆகஸ்ட் 31

## 6.00. கைவினைஞர்களுக்கு உதவி

1. இந்நிறுவனம் கைவினைஞர்களுக்கு, தன் உற்பத்தி நிலையங்களில், துண்டுக்கூலி என்ற முறையில் நேரடி வேலைவாய்ப்பு அளிக்கிறது.

2. இவை தவிர கோயில் சிறப்புத் திட்டப் பணிகள் மூலம் பல கைவினைஞர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கிறது.

3. சந்தை ஆதரவு

இந்நிறுவனம் கைவினைஞர்களிடமிருந்து கைத்திறப் பொருட்களை முடிந்த அளவு நேரடியாகக் கொள்முதல் செய்வதன் வாயிலாக அவர்களுக்குச் சந்தை வாய்ப்பு உதவியும், நிதி ஆதார உதவியும் செய்து வருகிறது. இத்துடன் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தும் கைவினைப் பொருட்காட்சிகளில் கைவினைஞர்கள் நேரடியாக பங்கு பெறுவதனால் அவர்களது படைப்புகளுக்கு ஒரு புதிய சந்தை வாய்ப்பினையும் ஏற்படுத்த வழிவகை செய்கிறது.

## 7.00. பூம்புகார் விருது

கைவினைஞர்களின் புதிய செயல்திறன், வடிவமைப்புத் திறமையை வெளிக்கொணர்தல் போன்றவற்றை ஊக்குவிக்கும் நோக்குடன் ஒவ்வொரு ஆண்டும் 'பூம்புகார்' விருதுப்போட்டி என்ற பெயரில் போட்டி ஒன்றினை இந்நிறுவனம் நடத்தி வருகிறது. இப்போட்டியில் சிறந்த ஐந்து கைவினைப் பொருட்கள், கலை மற்றும் கைத்தொழில்களில் முதிர்வு பெற்ற சிறந்த நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொரு பெற்றியாளருக்கும் தலா ரூ.5000/- பரிசு, 40 கிராம் எடையுள்ள ஒரு வெள்ளிப் பதக்கமும், ஒரு சான்றிதழும் வழங்கப்படுகிறது. இத்துடன் ஒவ்வொரு ஆண்டும் புதுடெல்லியில் பங்கு பெறுவதற்கான பூர்வாங்கத் தேர்வினை மாநில அளவில் நடத்துவதால் இந்நிறுவனம் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

## 8.00. பங்கு மூலதன அமைப்பு

அரசாணை நிலை எண் 263 கைத்தறி, கைத்திறப் பொருட்கள், துணி நூல் மற்றும் கதர்த் துறை நாள் 16-10-1998-ல் இந்த நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.4.00 கோடிக்கு உயர்த்தப்பட்டது.



2001 ஆகஸ்ட் 31]

**8.01.** 31—3—2001 வரையிலான இந்நிறுவனத்தின் பங்கு மூலதன அமைப்பு வருமாறு:

| வ.எண் | விவரம் | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு அரசு | 176.693 |
| 2. | மத்திய அரசு | 116.000 |
| 3. | தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கைவினைஞர்கள் | 0.704 |
| | மொத்தம் | 293.397 |

## 9.0.0 மத்திய அரசு நிதி உதவி

2000-2001 ஆம் ஆண்டிற்காக மத்திய அரசு ரூ.19.85 இலட்சங்களை கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அனுமதித்துள்ளது:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த தொகை | இந்திய அரசின் பங்கு | சத வீதம் | நிறுவன பங்கு | சத வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஹைதராபாத்/மும்பை புனே/இந்தூர்/போபால் சண்டிகர் ஆகிய ஆறு இடங்களில் கண்காட்சிகள் | 9.00 | 7.20 | 75% | 2.40 | 25% |
| 2. | ஈரோடு விற்பனை நிலையம் கட்டுமான பணி | 25.30 | 12.65 | 50% | 12.65 | 50% |

இதைத் தவிர, இந்திய கைவினைப் பொருட்கள் கண்காட்சி ஒன்றை 2000-2001-ல் புதுதில்லியில் நடத்த அனுமதி அளிக்கப்பட்டது.

**9.01.** மேலும் இந்நிறுவனம் 20021-2002-ல் பல திட்டங்களை நடைமுறைப்படுத்த புதுதில்லியில் உள்ள அபிவிருத்தி ஆணையர் (கைத்திறன்) அவர்களின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் மொத்த மதிப்பீடு ரூ.107.83 இலட்சங்கள் ஆகும்.

## 10.00. எதிர்கால வாய்ப்புகள்

**10.01.** சங்க அமைப்பு விதிக் குறிப்புகள் மற்றும் விதிகளில் உள்ள உரிமை ஆவணங்களின் பார்வை குறிப்புகளுடன் கணிப்பாய்வு

செய்யும்போது இந்நிறுவனம், அடிப்படையில் பழமையான தமிழக கலை மற்றும் கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு உற்பத்தி மற்றும் வகை செய்து கொடுத்தல் போன்ற நலத் திட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால் இந்நிறுவனத்தை இலாப நட்ட நோக்கில் மட்டுமே கணக்கிட முடியாது.

**10.02.** மற்றொரு முக்கியமான குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் இது ஒரு அரசு சார்ந்த நிறுவனமாக இருப்பதால் எல்லா பணியாளர் நடவடிக்கைகளும் சட்ட முறை விதிகளின்படி எவ்விதத் தடைகளுமின்றி செயல்படுத்தப்பட வேண்டி உள்ளதால் இந்நிறுவனத்தின் வணிக செயல்பாடு நிர்வாகச் செலவினங்கள் கணிசமாக உயர்ந்துள்ளன.

**10.03.** இந்த ஆண்டில் குறுகிய காலத்திற்குள் நிலங்கள் கையகப்படுத்தல் புதிய/கூடுதல் கட்டடங்கள் கட்டுதல் போன்றவற்றின் மூலம் அதிக சொத்துக்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்தத் தேவைக்காக இதற்குமுன் சேமிக்கப்பட்டிருந்த ரொக்க ஆதாரங்களை உபயோகப்படுத்தியது மட்டுமல்லாமல், நிறுவனம் வணிக வங்கியிடமிருந்து நீண்ட காலக் கடன் தொகை பெற்றுள்ளது. எனினும் இத்திட்டத்தினால் இந்நிறுவனத்தின் விற்பனை மற்றும் லாபம் கூடுவதுடன் இந்நிறுவனத்தை மிகக் குறுகிய காலத்தில் ஒரு உண்மையான நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதை கருத்தில் கொள்ளலாம்.

**10.04.** இதுவரை கைத்தறி துறை போன்று, கைத்திறப் பொருட்கள் துறை சலுகை வட்டியில் மறு நிதி திட்டம் உதவியை தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி (நபார்டு) வங்கியின் மூலம் அளிக்க பரிசீலிக்கப்படவில்லை. இந்நிறுவனம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இதனை கைத்திறப் பொருட்கள் துறைக்கும் விரிவாக்கம் செய்ய கேட்டுக்கொண்டுள்ளது. தற்சமயம் நபார்டு, கைத்திறன் பிரிவிற்கு மறு நிதித் திட்டத்தின்கீழ் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்க கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளது.

**10.05.** ஏற்றுமதித் துறையிலும் மற்றும் சிறப்புக் கோயில் திட்டங்களிலும் வருங்கால வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது. ஆயினும் இதற்காக வெளியூர் மற்றும் உள்ளூர் சந்தைகளில் தொடர் விற்பனை நடவடிக்கை மற்றும் தேசிய அளவிலான சந்தை வாய்ப்பு நிறுவனங்களுடன் வியாபாரத் தொடர்பு ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.





# இணைப்பு - III

*(354 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 24 மற்றும் 53

## தொழில்கள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு குறித்த

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002

### முன்னுரை

வலிமையான அடித்தளத்துடன் கூடிய பல்வகைத் தொழில்கள் இயற்கையாகவே அமையப் பெற்றிருத்தல், திறமையான மனித ஆற்றலை அதிக அளவில் பெற்றிருத்தல், போதுமான மின்வசதி, தலைசிறந்த தொழில்நுட்பக் கல்வி நிலையங்கள் மூலம் பெருமளவில் கிடைக்கும் தொழில்நுட்பவியலாளர்கள், தொழில் அமைதி போன்ற தொழில் வளர்ச்சிக்கு உகந்த அனுகூலங்களை நெடுங்காலமாகத் தன்னிடத்தே பெற்றுள்ள மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இதற்கும் மேலாக, ஆதரவானதும், ஆக்கபூர்வமானதுமான சூழ்நிலையை உருவாக்கக்கூடிய முதலீட்டாளர், நேயமிக்க கொள்கையை வகுத்துப் பேணிக் காக்க அரசு உறுதி பூண்டுள்ளது.

2. தொழில்கள் தொடர்ந்து வளர்ச்சியுறுவதை உறுதி செய்ய மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவது அவசியம் என்பதை அரசு உணர்ந்துள்ளது. எனவே மின்சாரம், ரெயில் மற்றும் சாலைகள் தொடர்பு வசதிகள், சுகாதாரம், உயர் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி, திறமையான மனித ஆற்றல் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு கணிசமான முதலீடுகளைச் செய்துள்ளது.

3. ஆளுநர் உரையில் அறிவித்துள்ளபடியும், பின்னர் வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடியும், முதலீடுகளை ஈர்த்து, வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக, வளர்ச்சி நோக்கத்துடன்கூடிய, விரிவான புதிய தொழில் கொள்கை ஒன்றை வகுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தொழில் வளர்ச்சி மற்றும் புதிய தொழில்கள் தொடங்குவது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்க ஒரு வல்லுநர் குழுவை அரசு அமைக்கும். வெளிநாட்டு முதலீடுகளைப் பெறவும்,

தொழில்நுட்ப உத்திகளை இம்மாநிலத்திற்குக் கொண்டு வருவதற்கும், "வெளிநாட்டில் வாழும் இந்தியத் தமிழர்களின் கூட்டமைப்பு" ஒன்றினை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்றுமதி மேம்பாட்டு நடவடிக்கைகளில் முக்கிய கவனம் செலுத்த தலைமைச் செயலாளர் தலைமையில் மாநில அளவிலான ஏற்றுமதி வளர்ச்சிக் குழு ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தொழில் வளர்ச்சிக்கான மாநில ஆலோசனைக் குழு மீண்டும் அமைக்கப்படுகிறது.

4. அதிக அளவில் வளர்ச்சி அடையக்கூடும் என எதிர்பார்க்கக்கூடிய மிக முக்கிய தொழில் பிரிவுகளில் உயிர் தொழில்நுட்பவியல் முக்கியமான ஒன்றாகும். தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ளது போன்று இப்பிரிவிலும் வருங்காலங்களில் விரிவான வளர்ச்சி ஏற்படும் என்ற மதிப்பீட்டின் அடிப்படையில் தமிழகத்தில் இத் தொழிற்பிரிவு வளர்ச்சி காண அரசு முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. இதில ஓர் அங்கமாக சென்னை தரமணியில் உயிர் தொழில்நுட்ப பூங்கா ஒன்று அமைக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ரூ.62.5 கோடி செலவில் அமைக்கப்பட இருக்கும் இத் தொழிற்பூங்காவில் உயிர் தொழில்நுட்பவியலில் புதிய முயற்சிகள் தொடங்குவதற்கு பொதுக் கூட்டமைப்பு வசதி உருவாக்குவதுடன் இத் தொழிலுக்கு மிக அவசியமான நவீன அறிவியல் உபகரணங்கள் கொண்ட ஆய்வக வசதிகளும் உருவாக்கப்படும். அமெரிக்காவில் உள்ள முன்னணி பல்கலைக்கழகங்களில் ஒன்று கார்னல் பல்கலைக்கழகம். இப்பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இப் பூங்கா நிறுவப்பட்டு நிர்வகிக்கப்படும். தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கவும் பூங்காவை நிர்வகிக்க உதவவும், 25-8-2001 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கார்னல் பல்கலைக்கழகத்துடன் தொழில்நுட்பப் பணி ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது. அடிப்படை வசதிகள் உருவாக்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு டிசம்பர் 2002-க்குள் இப்பூங்கா முழு வசதியுடன் இயங்க நடவடிக்கை எடுக்கப்படும். கடல்சார் உயிர் தொழில்நுட்ப பூங்கா, மருந்துவகை தாவர உயிர் தொழில்நுட்ப பூங்கா அமைக்கவும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் முனைப்பாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

5. டைடல் பூங்காவின் வெற்றியைத் தொடர்ந்து தகவல் தொழில்நுட்பத்திற்கு மேலும் முக்கியத்துவம் அளிப்பதற்கு, சென்னையில் டைடல்-II பூங்காவை 'டிட்கோ' நிறுவனம் அமைக்கும். சென்னைக்கு அருகில் சிறுசேரியில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா விரைவில் அமைக்கப்படும்.



6. இராமநாதபுரம் போன்ற பின்தங்கிய மாவட்டங்கள் தொழில் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதில் அரசு முனைப்பாக உள்ளது. இதனை நிறைவேற்றும் வகையில், தகுந்த திட்டங்கள் தயாரிக்கப்படும். இந்த இடங்களில் பெரிய அளவிலான முதலீடுகளை ஈர்ப்பதற்கு அடிப்படை வசதிகளை அமைப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

7. தொழில்நுட்பக் கல்வி நிலையங்களுக்கு அருகிலுள்ள எம்.ஜி.ஆர். திரைப்பட நகரம் அமைந்துள்ள இடம் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி சம்பந்தப்பட்ட திட்டங்கள் அமைப்பதற்கு மிகவும் உகந்த இடமாகும். இந்தத் திரைப்பட நகரம் "எம்.ஜி.ஆர். அறிவுப் பூங்கா" என பெயர் மாற்றம் செய்யப்படும். புகழ்பெற்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து ஆராய்ச்சி மையங்கள், இங்கு அமைப்பதற்கு ஏதுவாக ஒரு முதன்மைத் திட்டம் தயாரிக்கப்படும். உலகத்தரம் வாய்ந்த கலந்துரையாடல் அரங்கம் மற்றும் பிற அத்தியாவசிய உட்கட்டமைப்புகள் இங்கு அமையப்பெறும். புதிதான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை ஊக்குவிப்பதற்கு இது ஓர் அமைப்பாக விளங்கும்.

8. திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரியில் 2000 ஏக்கர் பரப்பில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் மேம்படுத்தப்பட்டு அதில் மாசற்ற உயிர் தொழில்நுட்பத் தொழில்கள் அமைக்கப்படும். சென்னையிலிருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் தனியார் துறையில் ஒரு தொழிற் பூங்கா (மஹிந்திரா தொழிற் பூங்கா) அமைக்கப்பட்டுள்ளது.

9. மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்), மாநிலத்தில் பல்வேறு பின்தங்கிய பகுதிகளிலும், சென்னைக்கு அருகிலும் மற்றும் பிற இடங்களிலும் தொழில் பூங்காக்களையும், தொழில் வளர்ச்சி மையங்களையும் அமைத்துள்ளது. இப்பூங்காக்கள், நீர், மின்சாரம், சாலை, தகவல் தொடர்பு, மேம்படுத்தப்பட்ட மனைகள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுள்ளன.

10. மாநிலத்தில் அயல்நாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கு கீழ்க்கண்ட உத்திகள் கையாளப்படும்:-

அ) தமிழ்நாட்டில், போட்டியிடுவதற்கான அனுகூலங்களைப் பெற்றுள்ள முக்கிய தொழில்களைக் கண்டறிதல் (உதாரணமாக தகவல் தொழில்நுட்பம் - புகழ்பெற்ற 10 அமெரிக்க தகவல் தொழில்நுட்பக் கம்பெனிகள் உள்ள சென்னை டைடல் பூங்கா திட்டம், உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா/மரபணுசார் மையம் போன்றவை)

[2001 ஆகஸ்ட் 31

ஆ) முதலீடுகள் செய்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு குறிப்பிடப்பட்ட தொழிற் பிரிவுகளுக்கான கொள்கைகளை வகுத்தல்

இ) உட்கட்டமைப்பு வசதிகளைத் தரம் மற்றும் அளவுகளில் மேம்படுத்துதல்

ஈ) முதலீடுகள் செய்வதற்கான முக்கியத் தொழில்கள், அனுகூலங்கள் போன்ற தகவல்களை இணையதளம், தொழில் கருத்தரங்குகள், வெளியீடுகள் போன்றவற்றின் மூலம் அறிவித்தல்

உ) நடைமுறைகளை எளிமைப்படுத்தல் மற்றும் திட்டங்கள் செயலாக்கத்தை விரைவுபடுத்தல்

அயல் நாட்டினர் முதலீடுகள் செய்வதற்கு தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட சிறப்பு உதவிகளை அளிக்கிறது:-

- தொழிற் பூங்காக்களில் உடனடியாக நில ஒதுக்கீடு
- மின்சாரம், நீர் வழங்கல் மற்றும் இணைப்புச் சாலைகள்
- பல்வேறு அனுமதிகளுக்கு ஒற்றைச் சாளர முறை
- பொதுவான விண்ணப்பப் படிவம்
- இரண்டு உயர் மட்டக்குழுக்கள் மூலம் திட்டங்களுக்கு விரைவான அனுமதி

(அ)முதலமைச்சர் தலைமையில் மாநில முதலீடு மேம்பாட்டுக் குழுமம்

(ஆ)தலைமைச் செயலாளர் தலைமையில் திட்ட அனுமதி அதிகார அமைப்பு

- பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பல்வேறு விவரங்களுடன் கூடிய படிவங்கள் மூலம் அயல்நாட்டு நேரடி முதலீட்டுத் திட்டங்களைக் கூர்ந்து கண்காணித்தல்

- தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (கைடன்ஸ்) - பெரிய திட்டங்கள் செயலாக்கத்திற்கு வழிகாட்டி உதவுகிறது



2001 ஆகஸ்ட் 31]

11. நிதித் துறையின் 19-2-1997 ஆம் நாளிட்ட 75 ஆம் எண் அரசாணை பிரிவை திரும்பப் பெற அரசு முடிவெடுத்துள்ளது. இதற்குத் தேவையான சட்டத்திருத்தம் நடப்பு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் கொண்டுவரப்படும். இச்சட்டம் அரசின் கொள்முதல்களில் விலை மற்றும் கொள்முதல் வகையில் முன்னுரிமை அளிக்க வகை செய்யும். இந்த நடவடிக்கை தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் போன்ற அரசு பொதுத் துறை நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை மேம்படுத்த உதவும்.

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ)

நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில் முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டறிந்து தனியார் நிறுவனங்களுடனும் தொழில் முனைவர்களுடனும் இணைந்து தொழில் திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் 1965 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) அமைக்கப்பட்டது. இரும்பு மற்றும் உருக்கு, உரங்கள் மற்றும் இரசாயனங்கள், பெட்ரோலிய இரசாயனங்கள், ஆட்டோமொபைல்ஸ், பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், தோல், மலர்ச்செடி வகை மற்றும் தோட்டக்கலை, மருந்துப் பொருட்கள் ஆகிய பல்வகைத் துறைகளில் 100-க்கும் மேற்பட்ட தொழில் திட்டங்களை டிட்கோ நிறுவனம் செயல்படுத்தியுள்ளது.

தொடர்ந்து முதலீடுகளைப் பெறுவதை உறுதி செய்து கொள்ளும் வகையில் அண்மைக்காலமாக மாநிலத்தில் மிகவும் தேவைப்படுகின்ற கட்டமைப்பு வசதிகளையும், நவீன தொழில்நுட்ப வசதிகளையும் உருவாக்கும் பொருட்டு டிட்கோ நிறுவனம் தனது நோக்கத்தினை மறு சீரமைத்துக் கொண்டு தனது நடவடிக்கைகளையும் பல்முனைப் படுத்தியுள்ளது.

2000-2001 ஆம் ஆண்டில், டைடல் பூங்கா திட்டம், மகளிருக்கான தங்க விழா உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா, எஸ்.ஜி. இரும்பு வார்ப்படங்கள், குருதி சேகரிப்பு பை திட்டம், தென்னக இரும்பு உருக்கு நிறுவனத்தின் உருக்கு உருட்டாலைப் பிரிவு மற்றும் சென்னை வர்த்தக மையம் ஆகிய திட்டங்களை டிட்கோ நிறுவனம் வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது.

டிட்கோ நிறுவனம் செயல்படுத்தி வரும் திட்டங்களை, தொழில் திட்டங்கள், தொழில் பூங்காக்கள், மின் திட்டங்கள், இதர கட்டமைப்புத் திட்டங்கள் என வகைப்படுத்தலாம். பல்வேறு திட்டங்களின் செயலாக்க நிலை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

## I. தொழில் திட்டங்கள்:

### எண்ணெய் சுத்திகரிப்பாலைத் திட்டம்:

நாகார்ஜுனா குழும நிறுவனத்துடன் இணைந்து கடலூருக்கருகில், சுமார் 3,500 கோடி ரூபாய் செலவில், ஆண்டொன்றுக்கு 6.5 மில்லியன் டன் திறன் கொண்ட எண்ணெய் சுத்திகரிப்பாலை ஒன்றினை டிட்கோ நிறுவனம் நிறுவி வருகிறது. இத்திட்டத்தின் பங்கு மூலதனத்தில் பங்கேற்குமாறு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் உள்ளிட்டு சில மிகப் பெரிய எண்ணெய் நிறுவனங்கள் அணுகப்பட்டுள்ளன. திட்டத்திற்குத் தேவையான அனைத்து அனுமதிகளும் பெறப்பட்டுள்ளன. கட்டுமான வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. 2002 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் வணிகரீதியிலான உற்பத்தி தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் 500 நபர்களுக்கு நேரடியாகவும், 1,500 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு அளிக்கும்.

### நாப்தா கிராக்கர், துணைப் பாலிமர்கள்/பெட்ரோலிய இரசாயன வளாகம்:

சென்னை எண்ணூருக்கருகில் ஆண்டொன்றுக்கு 5,00,000 எதிலீன் திறனுடன் 6,000 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் பெரிய பெட்ரோலிய இரசாயன வளாகம் ஒன்றினை அமைத்திட டிட்கோ நிறுவனம் திட்டமிட்டு வருகிறது. இத்திட்டத்தை, ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மிட்சுய் நிறுவனத்துடன் கூட்டாக இணைந்து செயல்படுத்த அந்நிறுவனத்துடன் டிட்கோ நிறுவனம் உடன்பாட்டு ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. தகவல் திட்ட அறிக்கை மற்றும் நுண்ணிய அளவில் அங்காடி சந்தை வாய்ப்பு குறித்த ஆய்வு ஆகியவற்றை மேற்கொள்ள ஜப்பான் பன்னாட்டு வங்கி நிறுவனம் நிதியுதவி அளித்துள்ளது. இவ்வாய்வு விரைவில் முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் 2005 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும். இத்திட்டத்தினால் 1,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் 10,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கக் கூடும்.

### ஒருங்கிணைந்த பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம்:

பைவோல்டைன் பட்டு (சீனப்பட்டு) உற்பத்தி செய்வதற்காக, ஒவ்வொன்றும் 70 கோடி ரூபாய் திட்டச் செலவில் ஒருங்கிணைந்த பட்டுப்புழு வளர்ப்பு வளாகங்களை இரண்டு வெவ்வேறு இடங்களில் அமைக்க, திருவாளர்கள் ஓரியண்டல் செரிடெக் லிமிடெட் (டாடா





குரூப்) மற்றும் சென்னையைச் சேர்ந்த நல்லி சில்க்ஸ் ஆகிய இரு நிறுவனங்களை கூட்டுத் தொழில் முனைவோர்களாகத் தேர்ந்தெடுக்கக் கோரிய டிட்கோ நிறுவனத்தின் செயற்குறிப்புக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கூட்டுத் தொழில் முனைவர்கள் தற்போது நாசிக்கில் உள்ள அவர்களது தொழிற்சாலையில் கவனம் செலுத்தி வருகிறார்கள். அவர்கள், தமிழ்நாட்டுத் திட்டத்தை வெகு விரைவில் செயல்படுத்தக் கருதியுள்ளனர். தொழில் முனைவோர்கள் ஒப்பந்தம் இன்னமும் கையெழுத்திடப்படவில்லை. இத்திட்டம் சுமார் 1,000 நபர்களுக்கு நேரடியாகவும் 3,000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 100% ஏற்றுமதிக்கான கோழி இறைச்சி பதப்படுத்தும் திட்டம்:

கோயம்புத்தூர் மாவட்டம் பொங்கலூரில் 15 கோடி ரூபாய் திட்டச் செலவில் 100% ஏற்றுமதிக்கான கோழி இறைச்சி பதப்படுத்தும் திட்டம் ஒன்றினை அமைக்க, திருவாளர்கள் பயோனீர் ப்ரீடிங் பண்ணை நிறுவனத்துடன் தொழில் முனைவோர் ஒப்பந்தம் ஒன்றினை டிட்கோ நிறுவனம் ஏற்படுத்திக் கொண்டுள்ளது. உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்வதற்கான கோழி இறைச்சி பதப்படுத்தும் பிரிவு ஒன்றினை அமைக்க வாய்ப்புள்ளதாக அங்காடி ஆய்வு குறித்த வரைவு அறிக்கை உறுதி செய்துள்ளது. இத்திட்டத்திற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினால் சுமார் 300 நபர்களுக்கு நேரடியாகவும் 3,000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலை கிடைக்க வாய்ப்புள்ளது.

### 100% ஏற்றுமதிக்கான உறைநிலை ப்ஃரென்ச் வறுவல் திட்டம்:

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் 33 கோடி ரூபாய் திட்டச் செலவில், குவைத்தைச் சார்ந்த அயல்நாட்டு வாழ் இந்தியர் திரு ஆர். சுரேஷ் அவர்களை கூட்டுத் தொழில் முனைவராகக் கொண்டு 100 % ஏற்றுமதிக்கான உறைநிலை ஃப்ரென்ச் வறுவல் உற்பத்தித் திட்டம் ஒன்றினை டிட்கோ நிறுவனம் அமைத்து வருகிறது. கூட்டுத் தொழில் முனைவருக்கும் டிட்கோ நிறுவனத்திற்குமிடையே தொழில் முனைவோர் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இத்திட்டத்தின் உற்பத்திப் பொருளை, ஜப்பான், சிங்கப்பூர், மலேஷியா மற்றும் மத்தியக் கிழக்குச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யக் கருதப்பட்டுள்ளது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி, கால முறைக் கடனுக்கு ஒப்பளித்துள்ளது. இந்நிறுவனம், நிலம் கையகப்படுத்தும் பணியைத் தொடங்கியுள்ளது.

**நர்மதா டெக்ஸ்டைல்ஸ் திட்டம்:**

நர்மதா குரூப் நிறுவனத்தைச் சார்ந்த திரு கே. இராஜேந்திரன் அவர்களை கூட்டுத் தொழில் முனைவராகக் கொண்டு, 76.87 கோடி ரூபாய் திட்டச் செலவில் நவீன துணிநூல் செய்முறைப்படுத்தும் பிரிவு ஒன்றினை ஈரோடில் இணைத் துறையில் அமைப்பதற்காக டிட்கோ நிறுவனம் அனுப்பிய செயற்குறிப்புக்கு அரசு ஏற்பளித்தது. நூல் வெளுத்தல் மற்றும் சாயமேற்றுதல், நெய்யப்படும் துணி வகைகள், பின்னலாடை வெளுத்தல் மற்றும் சாயமேற்றுதல் ஆகியவற்றை மேற்கொள்ளும் வகையில் இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். முதற்கட்ட திட்டத்திற்கு தேவைப்பட்ட 19.18 கோடி ரூபாயினை கூட்டுத் தொழில் முனைவர் ஏற்றுக் கொண்டுள்ளார். முதற்கட்ட திட்டம் 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. முழுத்திட்டத்திற்குத் தேவைப்படும் காலமுறைக் கடன்களை வங்கிகளிடமிருந்தும் நிதி நிறுவனங்களிடமிருந்தும் பெற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நிதி முடிவுகளை எட்டியதும், கூட்டுத் தொழில் முனைவர் டிட்கோ நிறுவனத்துடன் இணைந்து இரண்டாம் கட்டத் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுப்பார்.

**ஒருங்கிணைந்த உருக்காலைத் திட்டம்:**

கோயம்புத்தூரைச் சார்ந்த திருவாளர்கள் லஷ்மி மெஷின் ஒர்க்ஸ் நிறுவனத்துடன் இணைந்து சேலம் மாவட்டம் மேட்டூரில் ஒருங்கிணைந்த உருக்காலை ஒன்றினை 839 கோடி ரூபாய் மூலதனச் செலவில் டிட்கோ நிறுவனம் நிறுவியுள்ளது. உருக்காலையின் பின் இணைப்பாக 142 கோடி ரூபாய் செலவில் கல்கரி சூளைத் திட்டம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்துவதை எதிர்த்து, சில நிலச் சொந்தக்காரர்கள் தடையாணை பெற்றுள்ளதனால், நில எடுப்புப் பணி தடைபட்டு நிற்கிறது. இத்திட்டம் செயல் படுத்தும்போது, 300 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் 1,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கும்.

## II. தொழில் பூங்காக்கள்

**பெட்ரோலிய இரசாயனப் பூங்கா:**

இத்திட்டம் எண்ணூருக்கருகில் 600 கோடி ரூபாய் திருத்திய செலவில் அமைக்கப்படவுள்ளது. தமிழ்நாடு பெட்ரோகெம் பார்க் என்ற பெயரில்





ஒரு நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவிற்கான தொழில் முனைவரைக் கண்டறிந்து, மதிப்பீடு செய்து தேர்ந்தெடுக்க ஓர் ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார். நிலம் கையகப்படுத்தும் பணி நடந்தேறி வருகிறது. எனினும், நிலம் கையகப்படுத்தப்படுவதற்கு எதிராகவும், திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு எதிராகவும் உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதனால், பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. வழக்குகளை எதிர்கொள்ள டிட்கோ நிறுவனம் தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்கிடையில், சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த விரைவான ஆய்வுப் பணி முடிக்கப்பட்டுள்ளது. கடல் சார்ந்த சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து விரிவான ஆய்வினை மேற்கொள்ள, கொச்சியிலுள்ள தேசிய கடலியல் ஆராய்ச்சி நிலையம் நியமிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்களது அறிக்கையினை அளித்துள்ளனர். சுற்றுச்சூழல் சார்ந்த அனுமதி வேண்டி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் கருத்தும் கேட்டறியப்பட்டுள்ளது. இத்திட்டத்தை 2003 ஆம் ஆண்டிற்குள் நிறுவக் கருதப்பட்டுள்ளது.

**மலர்ச்செடி வகை பூங்கா:**

டிட்கோ நிறுவனம், 24.85 கோடி ரூபாய் திட்டச் செலவில், ஹோசூரில் மலர்ச் செடிவகைப் பூங்கா ஒன்றினை, திரு நசீம் அகமது அசோசியேட்ஸ் என்ற சக தொழில் முனைவருடன் இணைந்து கூட்டுத் துறையில் நிறுவி வருகிறது. சுமார் 220 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு வாங்கப்பட்டுள்ளது. இந்திய சிறு தொழில் வங்கி 9.95 கோடி ரூபாய் காலமுறைக் கடன் வழங்க ஒப்பளித்துள்ளது. மைய அரசின் 'அபீடா' அமைப்பு 3.5 கோடி ரூபாய் மானியம் வழங்க ஒப்பளித்துள்ளது. டிட்கோ நிறுவனமும் சக தொழில் முனைவரும் தத்தமது பங்கினை முழுவதுமாக ஏற்கெனவே அளித்துள்ளனர். நில மேம்பாட்டுப் பணியும் செடி வளர்ப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. 2001 ஆம் ஆண்டு இறுதியில் மாதிரிப் பண்ணைத் தோட்டம் அமைக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இரப்பர் தொழில் பூங்கா:**

நாகர்கோவிலுக்கருகில் 14.11 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் இரப்பர் தொழில் பூங்கா ஒன்றினை டிட்கோ நிறுவனம் அமைத்து வருகிறது. தொடக்கத்தில், சுமார் 136 ஏக்கர் நிலத்தில் ஆய்வுக் கூடம், பொதுவான கழிவு சுத்திகரிப்பாலை, மூலப் பொருட்கள் சேகரிப்புக் கூடம் உள்ளிட்ட பொது வசதிகளுடன் இப்பூங்கா மேம்படுத்தப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், தோவளை வட்டம் செண்பகராமன்புதூர் கிராமத்தில் நிலப்பகுதி கண்டறியப்பட்டு நில எடுப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. சுமார் 45 முதல் 50 வரை இரப்பர் மற்றும் இரப்பர் மரம் அடிப்படையிலான தொழில் பிரிவுகளை இங்கு அமைக்கலாம். பொது உட்கட்டமைப்பு வசதிகளான தண்ணீர் வழங்குதல், உட்புறச் சாலைகள், சோதனைச் சாலைகள் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தர மைய அரசின் வர்த்தக அமைச்சகம் 7.16 கோடி ரூபாய்க்கு ஒப்பளித்துள்ளது. டிட்கோ நிறுவனமும், சக தொழில் முனைவரும் 3.48 கோடி ரூபாயினை சமபங்கு மூலதனமாக கொண்டு வருவார்கள். எஞ்சிய தொகை 3.47 கோடி ரூபாய் நிதி நிறுவனங்கள் மூலம் சமபங்கு மூலதனமாகவும் கடனாகவும் பெறப்படும். இத்திட்டத்திற்கான சக தொழில் முனைவரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் தற்போது டிட்கோ நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

***ஆட்டோ துணைப் பாகங்கள் பூங்கா:***

மகேந்திரா ரியல்டி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் மற்றும் உட்கட்டமைப்பு குத்தகை & நிதிச் சேவை நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து, சென்னைக்கருகில் 220 கோடி ரூபாய் திட்டச் செலவில் ஆட்டோ துணைப் பாகங்கள் பூங்கா ஒன்றினை டிட்கோ நிறுவனம் அமைத்து வருகிறது. இத்திட்டத்திற்காக உத்தேசித்துள்ள 1,350 ஏக்கர் நிலத்தில், 1,000 ஏக்கர் நிலம் ஏற்கெனவே தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்டுள்ளது. எஞ்சிய நிலம் நில எடுப்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. திட்டத்திற்கான அமைப்புத் திட்டத்தை (layout) சிங்கப்பூரைச் சேர்ந்த ஜே.டி.சி. நிறுவனம் செய்து முடித்துள்ளது. பாலாறு திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 1 மில்லியன் காலன் தண்ணீரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வழங்கும். நிதி முடிவுகளை எட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினால் சுமார் 3,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் 10,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

***உயர் தொழில் நுட்பத் தொழில் பூங்கா:***

டிட்கோ நிறுவனம், திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில், அமெரிக்காவைச் சார்ந்த இன்ஃபேக் குரூப் நிறுவனத்துடனும், ஆக்ஸஸ் டெக்னாலஜிஸ் நிறுவனத்துடனும் இணைந்து, 700 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் உயர் தொழில்நுட்பத் தொழில் பூங்கா ஒன்றினை



வழிகாட்டுத் துறையில் நிறுவி வருகிறது. சுற்றுப்புறத்தைப் பாதிக்காத தொழில்களான மின்னணு, தொலைத் தொடர்பு பாகங்கள், நுகர்வோர் உபயோகப் பொருட்கள், தகவல் தொழில் நுட்பம், உயிரியல் தொழில் நுட்பம் மற்றும் மருந்து பொருட்கள், இலகுவானதும் நுணுக்கம் மிகுந்ததுமான பொறியியல் போன்றவற்றிற்குத் தேவைப்படும் சர்வதேசத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை இப்பூங்கா அளிக்கும். இப்பூங்காவிற்குள் செய்யப்படும் முதலீடுகள் 8,000 கோடி ரூபாய் அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 'அட்மாக் லிமிடெட்' என்ற பெயரில் ஒரு கூட்டு முயற்சி நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. 2,107 ஏக்கருக்கான நில எடுப்புப் பணி முடிவடைந்துள்ளது. 1,534 ஏக்கர் பட்டா நிலம் அட்மாக் நிறுவனத்தின் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது. இட அமைப்பு, கான்டோர் ஆய்வுகள் மற்றும் திட்டத்தின் முழு பகுதிக்கும் வேலி அமைக்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இத்திட்டத்திற்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து நாளொன்றுக்கு 6.77 மில்லியன் காலன் தண்ணீர் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கூட்டுத் தொழில் முனைவர்கள் தமது சமபங்கு மூலதனமாக 1.6 மில்லியன் அமெரிக்க டாலர்களைக் கொடுத்துள்ளனர். நிர்வாக அமைப்பில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது. கூட்டுத் தொழில் முனைவர்கள் நிதியமைப்புத் திட்டத்தைத் தீட்டி வருகிறார்கள். அயல் நாட்டு கூட்டுத் தொழில் முனைவர்கள் 99% பங்களிக்க அயல் நாட்டு முதலீடு மேம்பாடு வாரியத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. உயர் தொழில் நுட்பத் தொழில் பூங்கா பகுதியை சிறப்புப் பொருளாதார மண்டலமாக மைய அரசு அறிவித்துள்ளது. இதற்கு முறைப்படியான அனுமதி வழங்க, சுற்றுச்சூழல், மின்சாரம், தண்ணீர் வழங்கல், பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் வளர்ச்சி ஆணையாளருக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல் ஆகியவை குறித்து மாநில அரசின் உறுதிப்பாடுகளைத் தெரிவிக்குமாறு மைய அரசு கேட்டுள்ளது. இது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

## III. மின் திட்டங்கள்

***திரவ இயற்கை எரிவாயு (எல்.என்.ஜி) முனையம் மற்றும் மின் உற்பத்தி திட்டம்:***

எண்ணூரில், ஆண்டொன்றுக்கு 2.5 மில்லியன் டன் திறன் கொண்ட எல்.என்.ஜி. இறக்குமதி முனையம் ஒன்றினை அமைக்கவும், 1,886 மெகாவாட் மின் உற்பத்தி செய்யவும், 'தக்ஷின் பாரத் எரிசக்தி நிறுவனம்'

என்ற ஒரு தொகுப்பு நிறுவனம் உலகளாவிய போட்டி ஏலம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. எல்.என்.ஜி.யை வாங்கி விற்பதற்கான ஒப்பந்தங்களையும் எல்.என்.ஜியை சேமித்து வைக்கும் முனையத்திற்கும், ஒப்பந்தக்காரர்களை, தொகுப்பு நிறுவனம் இறுதி செய்துள்ளது. சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த ஆய்வு முடிக்கப்பட்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து 'தடையின்மைச் சான்றிதழ்' பெறப்பட்டுள்ளது. இம்மின் திட்டத்திலிருந்து 750 மெகாவாட் மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் வாங்கிக் கொள்ளும். மைய அரசின் மின்சார அமைச்சகம் இட்ட கட்டளையின் பேரில், மீதமுள்ள மின்சாரத்தை வாங்கி ஆந்திரா, கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களின் மின்சார வாரியங்களுக்கு விநியோகிப்பதற்கு மின்சார வர்த்தக நிறுவனம் (Power Trading Corporation) நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டம் 2004 ஆம் ஆண்டில் செயல்படத் திட்டமிடப்பட்டுள்ளது. எனினும், மைய அரசு எதிர் பொறுப்புறுதி (Termination Counter Guarantee) வழங்காத நிலையிலும் மின்சார வர்த்தக நிறுவனத்திடமிருந்து. உகந்த பணப்பட்டுவாடா ஆதரவு எற்பாடுகள் இறுதி செய்யப்பட வேண்டிய நிலையிலும், இத்திட்டம் சிரமப்பட்டு வருகிறது. மாற்று வழியில் பணப்பட்டுவாடா ஆதரவு ஏற்பாடுகளை உண்டாக்க ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டம்:**

இத்திட்டத்தை மேம்படுத்த, திருவாளர்கள் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், ஐக்கிய அமெரிக்க நாட்டைச் சேர்ந்த வட அமெரிக்க நிலக்கரி நிறுவனம், ஹாங்காங்கைச் சேர்ந்த ஃபோஸ்டர் வீலர் மற்றும் சீபா (CEPA) ஆகிய நிறுவனங்களை உள்ளடக்கிய தொகுப்பு நிறுவனம் ஒன்று உலகளாவிய போட்டி ஏலம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இத்திட்டத்தைச் செயலாக்க, 'ஜெயங்கொண்டம் பவர் பிரைவேட் லிமிடெட்' என்ற தனி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவில் நிறைவுறும். இத்திட்டத்தை ஒவ்வொரு பிரிவும் 500 மெகாவாட் என்ற வகையில் 3 கட்டமாகச் செயல்படுத்த கருதப்பட்டுள்ளது. மின்சாரம் வாங்கிக் கொள்வது தொடர்பான ஒப்பந்தத்தை, தமிழ்நாடு மின்சார வாரியத்துடன் எற்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது.

**IV. இதர உட்கட்டமைப்புத் திட்டங்கள்:**

**சாலை மேம்பாட்டுத் திட்டம்:**

நெடுஞ்சாலை அமைப்புகளை சாலைச் சுங்கம் வசூல் அடிப்படையில் மேலாண்மை செய்யவும், நிதியுதவிகள் செய்து சாலைகளை மேம்படுத்தவும்,



அவற்றை நிர்வாகம் செய்து பராமரிக்கவும், உட்கட்டமைப்பு குத்தகை & நிதிச்சேவை நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் ஒன்றை டிட்கோ நிறுவனம் நிறுவியுள்ளது. இந்நிறுவனம், கிழக்குக் கடற்கரைச் சாலையையும், எண்ணூர்-மணலி சாலை அபிவிருத்தித் திட்டத்தையும் தேர்ந்தெடுத்துள்ளது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் தற்போது கிழக்குக் கடற்கரைச் சாலை திட்டத்தில் முனைப்பாக ஈடுபட்டு வருகிறது. கிழக்கு கடற்கரைச் சாலையில் சோழிங்கநல்லூரிலிருந்து பாண்டிச்சேரி வரை 112 கி.மீ. தூரத்திற்கான சாலையை ஒப்பந்த அடிப்படையில் நிர்வாகம் செய்து பராமரிக்கும் பணி தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. திட்டச் செலவு சுமார் 60 கோடி ரூபாயாகும். இத்திட்டத்தில் டிட்கோ நிறுவனத்தின் சமபங்கு மூலதனம் 5 கோடி ரூபாயாகும். இத்திட்டம் 10 மாத காலத்துக்குள் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இரண்டாம் பன்னாட்டு விமான நிலையம் அமைக்கும் திட்டம்:**

இந்திய அரசின் விமான நிலைய உட்கட்டமைப்பிற்கான புதிய கொள்கையின் அடிப்படையில், சென்னைக்கருகில், சுமார் 1,104 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் புதிய பன்னாட்டு விமான நிலையம் ஒன்றினை அமைக்க டிட்கோ நிறுவனம் திட்டமிட்டு வருகிறது. தொழில்நுட்ப-பொருளாதார சாத்தியக் கூறு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் அனுமதிகளை வழங்குமாறு இந்திய அரசின் விமானப் போக்குவரத்து அமைச்சகத்திற்கு செயற்குறிப்பொன்று அனுப்பப்பட்டுள்ளது.

## 2001–2002ஆம் ஆண்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்

**உயிர் தொழில்நுட்பத் தொழில் மண்டலம்:**

உயிர்தொழில்நுட்பத் தொழில் மண்டலத்தை சென்னையில் ஏற்படுத்த வேண்டுமென்பது ஒரு முக்கியமான முயற்சியாக அரசின் உயிர் தொழில்நுட்பக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நோக்கத்தினை எய்துவதற்காக உயிர் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றினை நிறுவிட அமெரிக்க நாட்டின் கார்னெல் பல்கலைக்கழகத்துடன் டிட்கோ நிறுவனம் உடன்பாட்டு ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. கார்னெல் பல்கலைக்கழகம், தொழில்நுட்பம் மற்றும் இதர ஆதரவுப் பணிகளை அளிக்கும். இப்பூங்காவில், தேவைப்படும் வசதிகளைக் கொண்ட உயிர் அணு வளர்ச்சி மையம் ஒன்றும் பொது குடிவாரப்

பகுதி (Common Tenancy Area) ஒன்றும் அமைக்கப்படும். உட்கட்டமைப்பு மேம்பாடுகளை மேற்கொள்ள சுமார் 62.50 கோடி ரூபாய் செலவாகும். இப்பூங்கா, தொழில்நுட்ப இணைப்புகள், ஒப்பந்த ஆராய்ச்சிப் பணிகள், உற்பத்திப் பொருள் மதிப்பீடுகள், காப்பு உரிமைப் பத்திரங்கள், சான்று ஆவணங்கள், வணிகப்படுத்துதல் போன்ற வசதிகளை ஒரே இடத்தில் அளிக்கவல்ல அறிவு சார்ந்த பூங்காவாக விளங்கும். இப்பூங்கா, படிப்படியாக, 50 புதிய நிறுவனங்கள் மூலமாக 1,000 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகளை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உயிர் தகவலியல் மற்றும் மரபணு மையம்:**

மேம்பாடுள்ள பரிசோதனைக்கூடம், DNA மரபுத் தொடர் சம்பந்தமான தொழில் நுணுக்க உத்திகள் மற்றும் இதர நுணுக்கங்களைப் பயன்படுத்தி நோய்களை உருவாக்கும் மரபணுக்களின் தன்மையைக் கண்டறிந்து, இதனை வணிக ரீதியில் செயல்படுத்த டிட்கோ நிறுவனம் எண்ணியுள்ளது. முதற்கட்டமாக, மரபுத் தொடர்புகள் சம்பந்தமான தகவல் களஞ்சியத்தின் உரிமையாண்மை மூலமாகவும், பின்னர் இதர ஆராய்ச்சி முடிவுகளுக்கான உரிமையாண்மை மூலமாகவும் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலதனச் செலவு 20 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக சக தொழில் முனைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கக்கோரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**கடல்சார் உயிர் தொழில்நுட்பப் பூங்கா:**

சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில், சிப்பி மீன்கள், ஆயிஸ்டர்கள், மீல்கள், நண்டுகள் மற்றும் இதர கடல் உணவுகளை உற்பத்தி செய்வதற்காக கடல் சார்ந்த உயிர் தொழில்நுட்ப நிறுவனங்களை சென்னைக்கருகில் அமைத்திடுவதற்கான வாய்ப்புகளை டிட்கோ நிறுவனம் கண்டறியும். சதுப்பு நிலக்காடுகள் மற்றும் கடல்புல் போன்றவற்றை பேணிக்காக்கவும், வளர்க்கவும் முக்கியத்துவம் தரப்படும்.

**மருந்துவகைத் தாவரங்கள் உயிர் தொழில்நுட்பப் பூங்கா:**

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்துடன் (சிப்காட்) இணைந்து, திண்டுக்கல் அருகே, மருந்துவகைத் தாவரங்கள் உயிர் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றினை, டிட்கோ நிறுவனம் அமைக்கும். இப்பூங்கா, மருந்துவகை



தாவர மூலப் பொருட்கள் தொடர்ந்து கிடைப்பதற்கு கவனம் செலுத்துவதுடன் அறிவியல்பூர்வமாக பரிசோதிக்கப்பட்ட மூலிகை மருந்துகளை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக ஆக்குவதற்கும் கவனம் செலுத்தும்.

**இரண்டாம் டைடல் தகவல் தொழில் நுட்பப் பூங்கா:**

கட்டப்பட்ட இடங்களுக்கு மென்பொருள் நிறுவனங்களிடம் நல்ல தேவை இருப்பதாக டிட்கோ நிறுவனம் செய்து முடித்த சந்தை வாய்ப்பு ஆய்வு புலப்படுத்துகிறது. புதிய டைடல்-II திட்டத்தை அமைப்பதற்காக தற்போதுள்ள டைடல் பூங்காவுக்கு அருகிலேயே உள்ள அண்ணா பல்கலைக் கழகத்தின் வசம் உள்ள 50 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க டிட்கோ நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**இரும்புத் தாது வெட்டி எடுத்து பயனுள்ள உற்பத்தி பொருட்களாக்கும் திட்டம்:**

சேலம் மாவட்டம் கஞ்சமலை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் கவுதி மலை, வேதியப்பன் மலை ஆகிய பகுதிகளில் கிடைக்கும் இரும்புத் தாதுவைப் பயன்படுத்தி 500 கோடி ரூபாய் திட்டச் செலவில் இரும்புத்தாது சுரங்கங்கள் அமைத்து பயனுள்ள பொருட்களை உற்பத்தி செய்ய டிட்கோ நிறுவனம் திட்டமிட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட இடங்களில் இரும்புத் தாது பிரித்தெடுக்கும் ஆலைகளும், சேலத்தில் ஆண்டொன்றுக்கு ஒரு மில்லியன் டன் இரும்பு உருண்டைகள் தயாரிக்கும் ஆலை ஒன்றும் நிறுவிடக் கருதப்பட்டுள்ளது. சுரங்கக் குத்தகை பெறுவதற்காக டிட்கோ நிறுவனம் விண்ணப்பித்துள்ளது. சுற்றுச்சூழல் சம்பந்தமான அனுமதிகளைப் பெற, சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த மதிப்பீட்டு அறிக்கையுடன் விண்ணப்பம் ஒன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. பொதுமக்கள் கருத்து அறிவது தொடர்பாக முறையான நடவடிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளன. கஞ்சமலை மற்றும் திருவண்ணாமலையில் இரும்புத் தாது உள்ள பகுதிகள் ஒதுக்கப்பட்ட வனப் பகுதிக்குள் இருப்பதால், வனங்கள் சட்டம் பிரிவு 2-ன்கீழ் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்திடமிருந்து அனுமதிகள் பெற, மாநில அரசு மூலமாக மைய அரசை டிட்கோ நிறுவனம் அணுகவுள்ளது.

**திராட்சை மது (ஒயின்) திட்டம்:**

தேனியில் உள்ள, கம்பம் பள்ளத்தாக்கு திராட்சை உற்பத்தி செய்வோர் சங்கத்திடமிருந்து, அங்கு உற்பத்தியாகும் திராட்சையிலிருந்து ஒயின் தயாரிக்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துமாறு டிட்கோ நிறுவனத்துக்கு கருத்துரு ஒன்று வரப்பெற்றுள்ளது. தரமான ஒயின் உற்பத்திக்கு, கம்பம் திராட்சைகள் தொழில்நுட்ப ரீதியில் உகந்ததாக உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பாக, இந்நாட்டில் ஒயின் உற்பத்தியில் சிறந்து விளங்கும் உற்பத்தியாளர்களுடன் டிட்கோ நிறுவனம் விரிவான பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டது. ஒயின் உற்பத்தியுடன்கூடிய வடிசாலை (Distillery) ஒன்றும் நிறுவப்படவேண்டியது செய்முறை அவசியமாகும். இம்மாநிலத்தில் ஒயின் உற்பத்திப் பிரிவு ஒன்றினை நிறுவ தக்க விதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இது கொள்கை தொடர்பான ஒரு பொருளாகும். இதுகுறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

**தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்):**

தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971-ல் நிறுவப்பட்ட மாநில அரசின் நிறுவனமாகும். தமிழ்நாட்டில் இந்நிறுவனம் நடுத்தர மற்றும் பெருந்தொழிலகங்களை ஊக்குவிப்பதில் முன்னோடியாகத் திகழ்கிறது. மாநில அரசின் தொழில் கொள்கைக்கேற்ப தொழில் வளத்தைப் பெருக்கி மிகவும் பின்தங்கிய மற்றும் வளர்ச்சி குறைந்த பகுதிகளைத் தொழில் துறையில் மேன்மையடையச் செயலாற்றி வருகின்றது. மாநில அரசின் ஆதரவுடனும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆதரவுடனும், கடந்த 30 ஆண்டுகளாக சிப்காட் நிறுவனம், கீழ்க்கண்ட பெரிய திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது

1. தொழில் வளாகங்களை உருவாக்கி பராமரித்தல் மற்றும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கான மேம்படுத்தப்பட்ட மனைகளை ஒதுக்கீடு செய்தல்.

2. தொழில் திட்டங்களுக்குக் குறித்த காலக் கடன் மற்றும் இயந்திரங்கள் மீதான குத்தகைக் கடன் வழங்கல்.

3. தொழிற்சாலைகளுக்கான விற்பனை வரி வசூல் தள்ளி வைப்பு/தள்ளுபடி திட்டத்தின்கீழ் தகுதிச் சான்றிதழ் வழங்குதல். 23.1.2000 முதல் இத்திட்டம் படிப்படியாகக் கைவிடப்படுகிறது.



4. குறிப்பிடப்பட்ட பகுதி மற்றும் குறிப்பிடப்பட்ட தொழில் பிரிவுகளுக்கான மாநில மூலதன மானியம் மற்றும் மின் உற்பத்தி சாதனங்களுக்கான கூடுதல் மானியம் மற்றும் மகளிர்க்கான வேலை வாய்ப்பளித்தல்.

**தொழில் வளாகங்கள்/தொழிற் பூங்காக்கள்/தொழில் வளர்ச்சி மையங்களின் மேம்பாடு**

சிப்காட் நிறுவனம் ராணிப்பேட்டை, ஓசூர், மானாமதுரை, புதுக்கோட்டை, கடலூர், கும்மிடிப்பூண்டி, தூத்துக்குடி ஆகிய ஏழு இடங்களில் தொழில் வளாகங்களை ஏற்படுத்தி உள்ளது. மேலும் இரண்டு தொழிற் பூங்காக்கள் கும்மிடிப்பூண்டி மற்றும் இருங்காட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் எல்லா அடிப்படை வசதிகளுடன் உருவாக்கி உள்ளது. இவை தவிர திருப்பெரும்புதூர், சிறுசேரி ஆகிய இடங்களில் இரண்டு தொழிற் பூங்காக்களை அமைக்கும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முன்னேற்ற நிலையில் உள்ளது. நெமிலி தொழில் துணைநகரம் ஒன்று அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் தமிழ்நாடு தொழில் வசதி மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்) சிப்காட் நிறுவனத்துடன் இணைந்ததால் டாசிட் நிறுவனம் மேற்கொண்ட திட்டங்களான இரண்டு தொழில் வளாகங்கள் (நிலக்கோட்டை, பர்கூர்) ஒரகடத்தில் ஒரு தொழில் பூங்கா மற்றும் மூன்று தொழில் வளர்ச்சி மையங்கள் (கங்கை கொண்டான், பெருந்துறை மற்றும் ஒரகடம்) ஆகியவைகளை சிப்காட் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

**தற்போது முன்னேற்றத்தில் உள்ள தொழிற் பூங்காக்கள்/ தொழில் வளர்ச்சி மையங்கள் குறித்த விவரங்கள் கீழ்வருமாறு:**

**1. பெருந்துறை வளர்ச்சி மையம்**

சுமார் 2800 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ள பெருந்துறை வளர்ச்சி மையத்திற்காக சுமார் 2462 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளன. பகுதி 1ஏ (1000 ஏக்கர்) மற்றும் பகுதி 1பி (300 ஏக்கர்) ஆகியவற்றிற்கான அனைத்து மேம்பாட்டுப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டு தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் நிலையில் உள்ளன. பொது சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது. சுமார் 486 ஏக்கர் நிலம் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2001 ஆகஸ்ட் 31

**2. தகவல் தொழில்நுட்பப் பூங்கா, சிறுசேரி**

சிறுசேரி கிராமத்தில், தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தொழில் பூங்கா ஒன்றை சிப்காட் நிறுவனம் நிறுவியுள்ளது. மேம்படுத்தக் கருதியுள்ள மொத்த நிலப்பரப்பளவு சுமார் 1000 ஏக்கர்களாகும். முதற்கட்டமாக சிப்காட் நிறுவனம் 230 ஏக்கர் நிலப்பரப்பளவை மேம்படுத்தி வருகிறது. மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளது. மனைகளை ஒதுக்கும் பணியை சிப்காட் நிறுவனம் ஏற்கனவே தொடங்கிவிட்டது. பன்னாட்டுத் தரங்களுடன்கூடிய அனைத்து அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

**3. சிப்காட் தொழிற்பூங்கா, திருப்பெரும்புதூர்**

திருப்பெரும்புதூர் தொழிற்பூங்கா 2469 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டு வருகிறது. இவற்றில் சுமார் 500 ஏக்கர் நிலத்தினை முதற்கட்டமாக மேம்படுத்தி, இதுகாறும் 263 ஏக்கர் நிலத்தினை தொழில் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது.

**4. கடலூர் தொழிற் பூங்கா**

கடலூரில் சுமார் 1266 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்பூங்கா அமைக்க இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, இதுகாறும் 974 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலம் கையகப்படுத்தும் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது.

**5. ஓரகடம் தொழில் வளர்ச்சி மையம்/தொழிற் பூங்கா**

ஓரகடம் தொழில் வளர்ச்சி மையம்/தொழிற் பூங்கா ஒன்றினை அமைப்பதற்கு 2043 ஏக்கர் நிலம் கையகப்படுத்த அரசு ஆணையிட்டது. இதுவரை 465 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலத்தைக் கையகப்படுத்தும் பணி முன்னேற்ற நிலையிலுள்ளது.

**6. ஏற்றுமதி தொழிற்பூங்கா, கும்மிடிப்பூண்டி**

மாநிலத்தில் ஏற்றுமதியைப் பெருக்கும் நோக்கத்துடன் ஓர் ஏற்றுமதி தொழிற்பூங்கா சுமார் 224 ஏக்கர் அளவில் ஒரு மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டமாக கும்மிடிபூண்டியில் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் திட்ட மதிப்பீடு சுமார் ரூ.19.90 கோடியாகும். இதில் மத்திய அரசின் அதிகபட்ச மானியம் ரூ.10



2001 ஆகஸ்ட் 31]

கோடியாகும். இப்பூங்காவில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்சமயம் இப்பூங்காவில் தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்ய தயார் நிலையில் உள்ளன.

**7. இருங்காட்டுக்கோட்டை தொழிற் பூங்கா**

இத்தொழிற்பூங்காவிற்காக இருங்காட்டுக்கோட்டையில் சுமார் 1843 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு எல்லா அடிப்படை வசதியுடனும் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதில் 786 ஏக்கர் நிலம் தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. ஒசூர் தொழில் வளாகம் (1 மற்றும் 2 விரிவாக்கம்)**

சிப்காட் நிறுவனம், ஒசூரில் சுமார் 1235.85 ஏக்கர் நிலப்பரப்பில் தொழில் வளாகம் (முதல் கட்டம்) ஒன்றை உருவாக்கி, சுமார் 975.77 ஏக்கர் நிலத்தை 186 தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவுமின்றி சிப்காட் நிறுவனம் சிப்காட் தொழில் வளாகம் ஒசூர்-2 ஆம் கட்டத்திற்கு மேலும் சுமார் 456.82 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி அதில் 386.21 ஏக்கர் நிலத்தை 69 தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. ஒசூர் தொழில் வளாகம்-2 ஆம் கட்டம் விரிவாக்கம் ஒன்றில் மேலும் சுமார் 179.06 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு அதில் 103.58 ஏக்கர் நிலம் 2 தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 2 ஆம் கட்டம் விரிவாக்கம் இரண்டிற்காக சுமார் 212 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது.

**9. தூத்துக்குடி தொழில் வளாகம் (விரிவாக்கம்)**

சிப்காட் நிறுவனம் 1084 ஏக்கர் நிலப்பரப்பில் தூத்துக்குடி தொழில் வளாகத்தை மேம்படுத்தி, முதற்கட்டமாக 72 தொழில் நிறுவனங்களுக்கு 703.54 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவுமன்றி இரண்டாம் கட்டம் விரிவாக்கத்திற்காக 1616 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படும் பணிகள் வெவ்வேறு நிலையில் உள்ளன.

**10. செய்யார் தொழிற் பூங்கா**

செய்யார் வட்டத்தில் தொழிற் பூங்கா அமைக்க சிப்காட் நிறுவனம் 1350 ஏக்கர் நிலத்தைக் கண்டறிந்து, இதுவரை 511 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்துள்ளது.

**11. கங்கை கொண்டான் தொழில் வளர்ச்சி மையம்**

கங்கைகொண்டான் தொழில் வளர்ச்சி மையத்திற்கு 2000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்துள்ளது. அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

## புதிய தொழிற் திட்டங்கள்

**1. வர்த்தகம் மற்றும் நிதி மையம்**

அண்ணாசாலையில சைதாப்பேட்டைக்கு அருகில் 10 ஏக்கர் நிலத்தில் வர்த்தகம் மற்றும் நிதிமையம் ஒன்றை அமைக்க சிப்காட் நிறுவனம் உத்தேசித்துள்ளது.

**2. நிலக்கோட்டை தொழில் வளாகம்**

நிலக்கோட்டையில் ஒரு தொழில் வளாகம் அமைக்க சுமார் 380 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு வளர்ச்சிப் பணிகள் முடிவடைந்துள்ளன.

**3. பர்கூர் தொழில் வளாகம், தர்மபுரி மாவட்டம்**

பர்கூர் தொழில் வளாகத்திற்காக இதுவரை 1393 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 30.33 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4. நெமிலி தொழில்ள துணை நகரம்**

காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் வட்டம் நெமிலியில் சுமார் 2400 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழில் துணை நகரம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது .

## திட்ட நிதியுதவி

சிப்காட் நிறுவனம் மார்ச் 2001 முடிய 1424 திட்டங்களுக்கு மொத்தம் ரூபாய் 871.37 கோடி நிதியுதவி அளித்துள்ளது.



## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 1949 ஆம் ஆண்டில் மாநில அளவில் நிறுவப்பட்ட முதன்மை நிதியுதவி நிறுவனமாகும். இந்நிறுவனம் தமிழ்நாட்டில் சிறுதொழில் வளர்ச்சிக்கு வேண்டிய குறிப்பிடத்தக்க உதவிகளைச் செய்து வருகிறது. இவ்வகையான சிறுதொழில் நிறுவனங்கள் உள்ளூரில் கிடைக்கும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி வேலைவாய்ப்புகளைப் பெருமளவில் உருவாக்க உதவிபுரிகின்றன.

இக்கழகம் நிலம், கட்டடம், தளவாடம் மற்றும் இயந்திர சாதனங்கள் போன்ற நிலையான சொத்துக்களை உருவாக்குவதற்கு குறித்த காலக் கடனாக ரூ.8 கோடி வரை நிதியுதவி அளிக்கிறது. தவணை கொள்முதல்/குத்தகை திட்டத்தின்கீழ் ரூ.5.00 இலட்சத்திலிருந்து ரூ.2.50 கோடி வரை நிதியுதவி அளிக்கிறது.

**சிறப்புத் திட்டங்கள்:**

இக்கழகம் ஒற்றைச் சாளர முறை, முன்னாள் இராணுவ வீரர்களுக்கு நிதியுதவி, மகளிர் தொழில் முனைவோருக்கு சலுகை அடிப்படையிலான நிதியுதவி, முதன்முதலில் தொழில் தொடங்குவோருக்கான சுலபத் தவணை முறைக்கடன், விற்பனை உதவித் திட்டம், நடைமுறை மூலதனத்திற்கான குறுகிய காலக் கடன், பங்கு முனைப்பு மூலதனத் திட்டம், தொழிற்சாலைகளை மேம்பாடு அடையச் செய்வதற்கும், நவீனப்படுத்துவதற்கும் நிதியுதவி அளித்தல், நெசவுத் தொழில் முன்னேற்றத்திற்கு தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியத்தின்கீழ் உதவி அளித்தல், திருமணக் கூடங்கள், சமுதாயக் கூடங்கள், வணிக வளாகங்கள், சேமிப்புக் கிடங்குகள் போன்றவற்றிற்கு நிதியுதவி அளித்தல் போன்ற சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**மேம்பாட்டிற்காக நடவடிக்கைகள்:**

சிறந்த தொழில்முனைவோர்களை ஈர்ப்பதற்கும், நல்ல வாடிக்கையாளர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், இக்கழகம் விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் முறைகளைச் சீரமைத்தும் தொழில் முனைவோரின் பங்கு மற்றும் துணைப் பிணையம் போன்றவற்றிற்கான விதிமுறைகளைத் தளர்த்தியும் உள்ளது.

இம்மாநிலத்தில் தொழில் முன்னேற்றம் மேன்மேலும் தொடரவும், சிறுதொழில் துறையில் தொழில் முனைவர்கள்/தொழில் அதிபர்கள் முதலீடு செய்வதை ஊக்குவிக்கவும் இந்நிறுவனம் ரூ.2 லட்சத்திற்குக் கூடுதலான கடன்களுக்கு வட்டி விகிதத்தை ஆண்டுக்கு 15.5 சதவிகிதமாகக் குறைத்துள்ளது.

இக்கழகம் தம்மிடம் கடன் உதவி பெறும் நிறுவனங்களுக்கு தமிழக அரசின் மானியம் வழங்கும் முகவராகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. தகுதியுடைய தொழிற்சாலைகளுக்கு மானியத்தொகை கிடைக்கும் வரை, இம்மானியத்தொகை காலக்கடனுடன் சேர்த்து தற்காலிகக் கடனாக வழங்கப்படுகிறது.

**புதிய திட்டங்கள்**

**1. பள்ளிகளில் மற்றும் கல்லூரிகளில் கணினிக் கல்வியைத் தொடங்குவதற்கான திட்டம்**

பள்ளிகள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்குக் கணினிக் கல்வியை அளிக்கும் நோக்கத்துடன் கணினிகளை வாங்குவதற்காக நிதியுதவி அளிக்கும் சிறப்புத்திட்டம் ஒன்றை இக்கழகம் செயல்படுத்தி வருகிறது.

**2. தகவல் தொழில் நுட்பவியல்**

தமிழ்நாட்டில் புதிய பொருளாதாரத்தின் ஓர் அங்கமான தகவல் தொழில் நுட்பத் துறையை மேம்படுத்துவதற்காக இந்நிறுவனம் தகவல் தொழில்நுப்பப் பிரிவில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோருக்கு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது. வன்பொருள்(ஹார்ட்வேர்)/ மென்பொருள் (சாஃப்ட்வேர்) போன்ற உபகரணங்களை வாங்குவதற்கு குறைந்த வட்டியில் நிதியுதவி வழங்கப்படுகிறது. மேலும்,தொழில்நுட்ப வல்லுனர்களுக்கும் இத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் தாராளமாக சுலபக்கடனும் வழங்கப்படுகிறது.

**3. தவணை தவறாமல் கட்டுவோருக்கு வட்டிச்சலுகைகள்**

தவணை தவறாமல் காலக் கடன்களைத் திரும்பச் செலுத்துவதை ஊக்குவிக்கும் வகையில், தவணை தவறாமல் தொடர்ந்து கடன்களை அந்த நிதியாண்டிலேயே திருப்பிச் செலுத்தி வரும் எல்லா தொழிலகங்களுக்கும் 1% வட்டிச் சலுகை ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் வழங்கப்படுகிறது.





**4. 2001–2002ம் ஆண்டுக்கான இலக்குகள்**

இந்தியாவில் தமிழ்நாட்டை தொழில் துறையில் முன்னணி மாநிலமாக தொடர்ந்திருக்கச் செய்யும் பொருட்டு 2001-2002 ஆம் ஆண்டிற்காக இந்நிறுவனம் கீழ்க்கண்ட இலக்குகளை நிர்ணயித்துள்ளது:

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| அனுமதித்தல் | 330 |
| வழங்குதல் | 280 |
| வசூலித்தல் | 360 |

## தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்

தமிழக அரசு கரும்புச்சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு ஆண்டொன்றுக்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதமும், 40,000 டன் அச்சு எழுது காகிதமும் தயாரிப்பதற்காக கரூர் மாவட்டம் புகளூரில் ஒருங்கிணைந்த காகித ஆலை ஒன்றை நிறுவியுள்ளது. இந்தக் காகித ஆலை 1985 ஆம் ஆண்டில் வணிக அளவிலான உற்பத்தியைத் தொடங்கியது.

**விரிவாக்கத் திட்டம்**

ஆரம்பிக்கப்பட்டு பத்து ஆண்டுகளுக்குள் இந்நிறுவனம் 600 கோடி ரூபாய் மூலதனச் செலவில் 90,000 டன்னாக இருந்த உற்பத்தியளவை 1,80,000 டன்னாக, அதாவது இரண்டு மடங்காக அதிகரித்தது. இந்த விரிவாக்கத் திட்டம் 1996 ஆம் ஆண்டு ஜனவரியில் செயல்படத் தொடங்கியது. இந்நிறுவனம் 1995 நவம்பரில் மூலதனப் பங்குகளை முதன்முறையாகப் பொது மக்களின் விற்பனைக்கும் கொண்டுவந்து விரிவாக்கத் திட்டத்திற்கு ஒரு பகுதியாக ரூபாய் 216 கோடி திரட்டியது. இத்திட்டச் செலவுக்கான எஞ்சிய தொகை இந்திய தொழில் வளர்ச்சி வங்கி, உலக வங்கி ஆகியவற்றிடமிருந்து தவணைக் கடனாகப் பெறுவதன் மூலமும், நிறுவன நிதியைக் கொண்டும் ஈடுசெய்யப்பட்டுள்ளது. இந்த விரிவாக்கத் திட்டத்திற்கு உலக வங்கி 75 மில்லியன் அமெரிக்க டாலரை நேரடி வெளிநாட்டு நாணயக் கடனாக வழங்கியுள்ளது.

### செயல்பாட்டு மற்றும் நிதி விளைவுகள்

இந்நிறுவனம் 2000-2001 ஆம் ஆண்டில் 106.17 விழுக்காடு உற்பத்தித் திறனைப் பயன்படுத்தி 1,91,106 மெட்ரிக் டன் செய்தித்தாள் மற்றும் எழுது அச்சுக் காகிதத்தை உற்பத்தி செய்தது. இந்நிறுவனம் ரூ.170.27 கோடி ரூபாய் இலாபம் ஈட்டி 25 விழுக்காடு ஆதாயப் பங்கு அளித்துள்ளது.

### ஏற்றுமதி

இந்நிறுவனம் எகிப்து, இலங்கை, ஜோர்டன், ஈரான் போன்ற பல நாடுகளுக்கு காகிதத்தை ஏற்றுமதி செய்து, 1994-95 ஆம் ஆண்டில் ஏற்றுமதியில் இறங்கியது. அன்றிலிருந்து ஏற்றுமதியில் தொடர்ந்து இந்நிறுவனம் சாதனை புரிந்து வருகிறது.

2000-2001 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 25,262 மெட்ரிக் டன் மரப் பொருளற்ற அச்சு மற்றும் எழுதும் காகிதம் மற்றும் செய்தித்தாள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்து ரூ.77.40 கோடி அந்நியச் செலாவணியை ஈட்டியுள்ளது. இந்நிறுவனத்திற்கு மத்திய அரசின் வணிக அமைச்சகம், "ஏற்றுமதி இல்லம்" என்ற சிறப்பு நிலையை வழங்கியுள்ளது .

### காற்றாலைப் பண்ணை

இந்நிறுவனம் ரூ.47.69 கோடி செலவில் திருநெல்வேலி மாவட்டம் தேவர்குளம், பெருங்குடி ஆகிய இடங்களில் மரபுசாரா, காற்று சக்தியால் மாசு அற்ற மின்சாரம் உற்பத்தி செய்ய 1993-94 ஆம் ஆண்டில் 15 மெகாவாட் திறன்கொண்ட ஒரு காற்றாலைப் பண்ணையை நிறுவியது. 2000-2001 ஆம் ஆண்டில் இக்காற்றாலை 185.67 லட்சம் யூனிட் மின்சக்தியை உற்பத்தி செய்துள்ளது.

### மூலப்பொருள்களுக்கான கூடுதல் ஆதாரங்கள்

இந்நிறுவனத்திற்கு கரும்புச் சக்கை (கரும்பின் கழிவுப்பொருள்) பிரதான மூலப்பொருளாக இருக்கிறது. சுற்றுச் சூழல் நேயமுள்ள கரும்புச் சக்கையை மூலப்பொருளாக புதுவகையில் பயன்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 30,000 ஏக்கர் பரப்பிலுள்ள காடுகளைப் பாதுகாக்க முடிகிறது. இந்நிறுவனம் நிலக்கரி/கச்சா பழுப்பு நிலக்கரியை எரிபொருளாகக் கொண்ட கொதிகலன்களை ஆறு சர்க்கரை ஆலைகளில் நிறுவி அதன் மூலம் கரும்புச் சக்கைக்குப் பதிலாக நீராவியை அளிக்கிறது. மேலும் இந்நிறுவனம் கூடுதலாகத் தேவைப்படும் கரும்புச் சக்கையை வெளிச் சந்தையில் வாங்குகிறது.



### வருங்காலத் திட்டங்களும் வாய்ப்புகளும்

2000-2001 ஆம் ஆண்டில் மணிக்கு 90 டன்கள் திறன்கொண்ட ஒரு புதிய கொதிகலன் நிறுவப்பட்டுள்ளது. 24.62 மெகாவாட் திறன்கொண்ட டர்போ ஜெனரேட்டர் ஒன்றும் நிறுவப்பட்டு 2001 ஆம் ஆண்டு மே மாத இறுதியில் இயங்கத் தொடங்கியது. இந்த புதிய டர்போ ஜெனரேட்டரை இயக்குவதன்மூலம் இந்நிறுவனம் எரிசக்தியில் 100 விழுக்காடு தன்னிறைவு அடையும். எரிசக்திச் செலவும் கணிசமான அளவு குறையும். மிகுதியாக உள்ள மின்சக்தி தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தொகுப்பிற்கு ஏற்றுமதி செய்யப்படும். தொழிலக நீரியற்கழிவின் தரத்தை மேலும் மேம்படுத்த ஒரு பயோ மெத்தனேசன் எந்திரம் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த எந்திரம் நிறுவப்பட்டால் அதில் உற்பத்தியாகும் மீதேன், சுண்ணாம்பு கால்வாயில் பர்னஸ் ஆயிலுக்குப் பதிலாக உபயோகப்படுத்தப்படும்.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் அதனுடைய காகித இயந்திரம் I மற்றும் காகித இயந்திரம் II ஆகியவற்றைச் சீரமைத்து ஒவ்வொன்றின் திறனையும் ஆண்டொன்றுக்கு 25000 மெட்ரிக் டன்னாக அதிகரிக்க ஜெர்மனியிலுள்ள, 'வாய்த் பேப்பர்' நிறுவனத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. இந்தச் சீரமைப்புப்பணி இந்நிறுவனத்தின் உற்பத்தித் திறனை 1,80,000 மெட்ரிக் டன்னிலிருந்து 2,30,000 மெட்ரிக் டன்னாக உயர்த்த உதவும்.

### வேலை வாய்ப்பு

இந்நிறுவனம் சுமார் 1700 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பினையும் சுமார் 5000 பேருக்கு பிற வகையில் வேலை வாய்ப்பினையும் அளித்துள்ளது.

## தமிழ்நாடு அரசு சிமெண்ட் நிறுவனம்

ஆலங்குளத்தில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (டிட்கோ) 1970-ல் ஏற்படுத்தப்பட்ட சிமெண்ட் தொழிற்சாலை நிர்வாகத்தைப் பின்னர் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (டான்செம்) ஏற்றுக் கொண்டது. அதனையடுத்து தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அரியலூரில் மேலுமொரு சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்தி 1979 ஆம் ஆண்டு சிமெண்ட் உற்பத்தியைத் தொடங்கியது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் 1981 ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டத்திலுள்ள ஆலங்குளத்தில் கல்நார் சிமெண்ட் தகடு (ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்)

தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றையும், மாயனூரில் 1984-ல் கல்நார் சிமெண்ட் அழுத்தக் குழாய் தயாரிப்புத் தொழிற்சாலை (ஆஸ்பெஸ்டாஸ் பிரஷர் பைப்ஸ்) ஒன்றையும் தொடங்கியது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், 1989-ல் கடலூர் மாவட்டத்திலுள்ள விருத்தாசலத்தில், இயங்காமலிருந்த கற்குழாய்த் தயாரிப்புத் தொழிற்சாலையை, தமிழ்நாடு பீங்கான் தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து (TACEL) எடுத்துக் கொண்டது.

**ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை**

2000-2001 ஆம் ஆண்டில் இத்தொழிற்சாலை 76 சதவிகித பயன்பாட்டுத் திறனை எட்டியது. முதலாம் காலாண்டில் கடுமையான சந்தை நிலவரத்தால் செயல் திறனை 43 சதவிகிதமே இருக்கும்படி குறைத்துக் கொண்டது. எனினும், பின்பு நிலைமை மாறி சாதகமான சந்தை நிலவரம் இருந்ததாலும், வாடிக்கையாளர்களிடமிருந்து நிலுவைத் தொகைகள் வசூலிக்கப்பட்டதாலும் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் 86 சதவிகிதம் வரை பயன்பாட்டுத் திறன் எட்டப்பட்டது. இத்தொழிற்சாலையின் நிகர நட்டம் ரூ.927.07 இலட்சங்களாகும்.

**அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை:**

2000-2001ஆம் ஆண்டில் இத்தொழிற்சாலை 92 சதவிகிதப் பயன்பாட்டுத் திறனை எட்டியது. முதலாம் காலாண்டில் நிலவிய கடுமையான சந்தை நிலவரத்தால் பயன்பாட்டுத்திறனை 65 சதவிகிதம் வரையே எட்ட முடிந்தது. எனினும் நிலைமை மாறி சாதகமான சந்தை நிலவியதாலும், மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்து நிலுவைத் தொகைகள் வசூலிக்கப்பட்டதாலும், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் இத்தொழிற்சாலை 101 சதவிகிதப் பயன்பாட்டுத் திறனை எட்டியது. இத்தொழிற்சாலையின் நிகர நட்டம் ரூ.1308.84 லட்சங்களாகும்.

**கல்நார் அட்டை தொழிற்சாலை**

2000-2001 ஆம் ஆண்டு இத்தொழிற்சாலை 76 சதவிகிதப் பயன்பாட்டுத் திறனை எட்டியது. இதன் நிகர நட்டம் ரூ.30.64 லட்சம் ஆகும். பிற உற்பத்தியாளர்களிடமிருந்து வந்த கடுமையான போட்டியாலும் உற்பத்திச் செலவுகள் அதிகரித்துவிட்டதாலும் இந்நட்டம் ஏற்பட்டது.



**கல்நார் குழாய் தொழிற்சாலை**

மாயனூரில் அமைந்துள்ள கல்நார் குழாய் தொழிற்சாலை, அதன் உற்பத்திப் பொருட்களை வாங்குவோர் இல்லாமையால் செயல்படாமல் உள்ளது. இத்தொழிற்சாலை ரூ.574.38 இலட்சம் நட்டம் அடைந்துள்ளது.

**கற்குழாய் தயாரிப்பு நிறுவனம்**

2000-2001 ஆம் ஆண்டில் உற்பத்திப் பொருளை வாங்கப் போதுமான வழங்கல் ஆணைகள் பெறப்படாததால் இத்தொழிற்சாலை 16 சதவிகிதப் பயன்பாட்டுத் திறனில் 1162 மெட்ரிக் டன் அளவு பொருளையே தயாரித்தது. இத்தொழிற்சாலையின் நிகர இழப்பு ரூ.109.20 இலட்சம் ஆகும்.

டான்செம் நிறுவனத்தைச் சீரமைக்க தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. டான்செம் நிறுவனத்திற்கு அரசுத் துறைகள், வாரியங்கள் முதலானவற்றிலிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகையை மற்றும் பல அரசுத் துறை நிறுவனங்களில் இருந்து வரவேண்டிய நிலுவைத் தொகையை வசூல் செய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. டான்செம் நிறுவனத்தின் எதிர்காலம், அதன் ஆலங்குளம் மற்றும் அரியலூர் சிமெண்ட் ஆலைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தின் மூலம் பணியாளர்களைக் குறைத்தல் போன்ற நடவடிக் கைகளைப் பொருத்தே இருக்கும்.

## தமிழ்நாடு கனிம நிறுவனம்

தமிழ்நாடு கனிம நிறுவனம், முறைப்படியும், அறிவியல் ரீதியாகவும், தமிழ்நாட்டில் பெருமளவில் கிடைக்கும் கருப்பு, சாம்பல், வெள்ளை மற்றும் இதர பல வண்ணப் பாறைகளையும், குவார்ட்ஸ், பெல்ட்ஸ்பர், வெர்மிகுலைட், சுண்ணாம்புக்கல், சிலிகா மணல் மற்றும் கிராஃபைட் கனிமங்களையும் வெட்டியெடுத்து வருகின்றது. 2000-2001 ஆம் ஆண்டில் 28000 கன மீட்டர் கருப்பு மற்றும் பல வண்ணப் பாறைகளையும், 30300 சதுர மீட்டர் கிரானைட் இறுதிப் பொருட்களையும், 3247 மெட்ரிக் டன் செழுமைப்படுத்திய கிராஃபைட்டையும் 2380 மெட்ரிக் டன் இதர கனிமப் பொருட்களையும் 1,77,000 மெட்ரிக் டன் உயர்வகை கனிமங்களையும் டாமின் உற்பத்தி செய்தது.

[2001 ஆகஸ்ட் 31

உலக அளவில் கிரானைட் சந்தையில் தேக்கநிலை இருப்பினும், டாமின் 2000-2001 ஆம் ஆண்டு சுமார் ரூ.67 கோடி விற்பனை அளவை எட்டியது. இவ்வாண்டில் ரூ.5 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

**(1) மாலிப்டினைட் திட்டம்**

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேலம்பட்டி கிராமத்தில் மாலிப்டினைட் கனிமத்தை, இந்திய அரசு நிறுவனமான கனிம ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் வெட்டியெடுக்க முன்னோடி சுரங்கப்பணிக்காக மைய அரசு ரூ.3.92 கோடி அனுமதித்துள்ளது. தமிழக அரசும் இந்தியப் புவியியல் நில அளவைத் துறையின் மூலம் வேலம்பட்டி கிராமத்தில் மாலிப்டினை கனிம ஆராய்ச்சிக்காக ரூ.1.80 கோடி அளித்துள்ளது. இதில் இந்தியப் புவியியல் நில அளவைத் துறைக்கு ஆழ் குழாய்க் கிணறு துளையிடுவதற்கு ரூ.1.18 கோடி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனம் தனது நிதியிலிருந்து இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.1.12 கோடி செலவு செய்துள்ளது. சுரங்க முன்னோடிப் பணிகள் கனிம ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் 2001 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் முடிவடையும். முன்னோடி சுரங்கப்பணி மற்றும் மாலிப்டினம் தாதுவின் ஆராய்ச்சிக் கூட முடிவுகளின்படி திட்ட அறிக்கை ஒன்றை கனிம ஆராய்ச்சி நிறுவனம் தயாரித்து வழங்கும். இத்திட்ட அறிக்கை மாலிப்டினம் தொழிற்சாலை அமைக்கத் தேவையான தொழில் நுட்ப பொருளாதார அறிக்கையைத் தயாரிக்க அடிப்படையாக அமையும். மாலிப்டினம் ஆராய்ச்சிக்காக 16.09 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, அதில் 15.76 ஏக்கர் நிலம் பேச்சுவார்த்தை மூலம் வாங்கப்பட்டுள்ளது.

**(2) கூட்டுச்செயல் திட்டத்தில் கார்னெட்**

கார்னெட் மணல் தொழிற்சாலையை திருவாளர்கள் டிரான்ஸ்வேர்ல்டு கார்னெட் நிறுவனத்துடன் டாமின் நிறுவனமும் இணைந்து கூட்டுச் செயல்திட்டத்தில் தொடங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. விவரமான திட்ட அறிக்கையின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**(3) கூட்டுச்செயல் திட்டத்தில் குவார்ட்ஸ்**

குவார்ட்ஸ் தொழிற்சாலையை திருவாளர்கள் செட்டிநாடு எம்.பி.எஃப் ஹை ஹைற சிலிகா நிறுவனத்துடன் இணைந்து கூட்டுச் செயல்திட்டத்தில் தொடங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



2001 ஆகஸ்ட் 31]

திருவாளர்கள் எம்.பி. எஃப் ஹைற சிலிகா நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட திருத்திய அறிக்கை ஏற்புடையதா என்று ஐடிபிஐ நிறுவனத்திடமிருந்து அறிக்கை கிடைத்தவுடன் தமிழ்நாடு கனிம நிறுவனம் மேல் நடவடிக்கை தொடரும்.

**தமிழ்நாடு கிரா·ஃபைட் நிறுவனம்**

தமிழ்நாடு கிராஃபைட் நிறுவனம் (டான்கிராப்) கிராஃபைட்டைக் கொண்டு மதிப்பு கூட்டிய பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை ஊக்குவிக்க 19-3-1997-ல் தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.10 இலட்சம் மற்றும் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.1 கோடி. டான்கிராப் நிறுவனம் மூலதனத்தை ஈர்ப்பதற்கு விரிவான மேம்பாட்டு நடவடிக்கைகளை எடுத்தபோதிலும், கிராஃபைட் தொழிலில் முதலீடு செய்ய தொழில் முனைவோர்கள் ஆர்வம் காட்டவில்லை. மேலும், தமிழ்நாடு கனிம நிறுவனம் கிராஃபைட்டை உற்பத்தி செய்து விற்றுவருவதால் தமிழ்நாடு கிராஃபைட் நிறுவனத்தின் செயல்பாடுகள் தற்போது ஏதுமில்லை. எனவே தமிழ்நாடு கிராஃபைட் நிறுவனத்தை தமிழ்நாடு கனிம நிறுவனத்துடன் இணைத்துவிடலாம் என்று தமிழ்நாடு கிராஃபைட் நிறுவன இயக்குநர்கள் குழு அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டான்மேக்)**

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டான்மேக்) மேக்னசைட் கனிமத்தை வெட்டியெடுப்பதற்காகவும், அதைக் கொண்டு மதிப்பு கூட்டப்பட்ட மேக்னசைட் பொருட்களை உற்பத்தி செய்யும் நோக்கத்துடனும் 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் சேலத்தில் தொடங்கப்பட்டது. ஆண்டொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன்கள் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி செய்வதற்காக ரூ.8.57 கோடி செலவில் சுழற்சூளை ஒன்று 1985 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் தொடங்கி வைக்கப்பட்டது. மற்றொரு பிரிவான நிலைச் சூளை, மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி செய்கிறது. 2000-2001 ஆம் ஆண்டில், டான்மாக் கச்சா மாக்னசைட் உற்பத்தி குறியீட்டளவான 55,000 மெட்ரிக் டன்களுக்கெதிராக 47,511 மெட்ரிக் டன்கள் உற்பத்தி செய்தும், விற்பனைக் குறியீட்டளவான 67,500 மெட்ரிக் டன்களுக்கெதிராக 78,301 மெட்ரிக் டன்கள் விற்னை செய்துள்ளது. 2001-2002 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி மற்றும் விற்பனைக் குறியீட்டளவுகள் பின்வருமாறு:

| | உற்பத்தி (மெட்ரிக் டன்கள்) | விற்பனை (மெட்ரிக் டன்கள்) |
|---|---|---|
| கச்சா மேக்னசைட் | 46,000 | 65,000 |
| முழுஎரியூட்டப்பட்ட மேக்னசைட் | 23,000 | 23,000 |
| மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 10,000 | 10,000 |

## தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம், தொழில் வெடிமருந்து, வெடி ஊக்கி மற்றும் வெடித்திரி தயாரிக்கவும், அவற்றை விற்பனை செய்யவும் தோற்றுவிக்கப்பட்டது. இது டிட்கோவின் துணை நிறுவனமாகும்.

### பல்திறப்படுத்துதல்

இந்நிறுவனம் அதன் செயலாக்கத்தைப் பல்திறப்படுத்தவும், எமல்சன் வகை வெடிமருந்துப் பொருட்களை உற்பத்தி செய்யவும் அனைத்து ஆரம்பகட்டப் பணிகளை முடித்துள்ளது. எமல்சன் வகை வெடி மருந்துப் பொருட்கள் பிரபலமடைந்து வருவதால், என்.ஜி. வெடி மருந்துப் பொருட்கள் மலிவானது என்பதாலும், அதைக் கையாள்வது எளிது என்பதாலும், சந்தையில் அதன் விற்பனை மெதுவாக உயர்ந்து வருகிறது. எமல்சன் வகை வெடிமருந்துப் பொருட்களைத் தயாரிக்கவும், புதியதாக மதிப்பு கூட்டப்பட்ட வெடிமருந்துப் பொருட்களைத் தயாரிக்கவும் ஒரு தொழிற் பிரிவை ஏற்படுத்தும் பொருட்டு ஒரு கூட்டு தொழில் முனைவோரை (பன்னாட்டு நிறுவனம்) ஏற்கனவே இந்நிறுவனம் தெரிவு செய்து ஒத்திசைவு/ஒப்பந்தம் செய்வதற்கான பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.



## சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம்

சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம் 1956 ஆம் ஆண்டு தனியார் துறையில் ரெயில் பெட்டிகள் மற்றும் பிற இரும்பு கட்டுமானப் பொருட்கள் தயாரிப்பதற்காகத் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் நலிவடைந்து மூடப்பட்டதும் அதில் பணிபுரிந்த சுமார் 1200 நபர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கும்பொருட்டு தமிழக அரசு இந்நிறுவனத்தை 1971 ஆம் ஆண்டு தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது.

இதன் நிகர மதிப்பு, முதலீட்டைவிடக் குறைந்துவிட்ட நிலையில், தனை ஆய்வு செய்வதற்காக தொழில் மற்றும் நிதி சீரமைப்புக் குழுமம் மே திங்கள் 1992 ஆம் ஆண்டில் கேட்டுக்கொள்ளப்பட்டது. நிறுவனத்தின் மறு சீரமைப்புத் திட்டத்திற்குத் தொழில் மற்றும் நிதி சீரமைப்புக் குழுமம் சனவரி திங்கள் 1998 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்தது. இந்த மறு சீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொழில் மற்றும் நிதி சீரமைப்புக் குழுமம் நிர்ணயித்த இலக்குகளுடன் ஒப்பிடும்போது, இந்நிறுவனமானது 1998-99 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டுகளில் மிக குறைந்த அளவே தனது தயாரிப்புகளை விற்பனை செய்துள்ளது. உயர்ந்த உற்பத்திச் செலவு, கடுமையான நிதி நெருக்கடி, குறைந்த அளவு ஆர்டர்கள் மற்றும் இரயில்வே சரக்குப் பெட்டி உற்பத்தியில் மிகக் குறைந்த அளவு இலாபம் ஆகியவற்றால் இந்நிறுவனம் ஏற்கெனவே மிகுந்த அளவில் சரிவில் உள்ள சந்தையில் போட்டியிட இயலாத நிலையில் உள்ளது. சிறிது காலத்திற்கு தொழில் மற்றும் நிதி சீரமைப்புக் குழுமத்தின் திட்டப்படி இந்நிறுவனம் செயல்படுவதைக் கண்காணித்து பின்னர் இந்நிறுவனத்தின் எதிர்காலத்தைப்பற்றித் தீர்மானிக்கலாம் என ராகவன் குழு பரிந்துரை செய்துள்ளது.

விருப்ப ஓய்வு ஊதியத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இயக்குநர் குழு அளவில் இந்நிறுவனத்தை மூடுதல்/ தொடர்ந்து நடத்துதல் பற்றி ஆய்வு செய்து, அரசிற்கு அறிக்கை அனுப்புமாறு சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம் கேட்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் தொழிற்சாலைக்கு உகந்த உப்பு உற்பத்தி செய்வதோடு, ஊட்டச் சத்து கலந்த உப்புக்களான அயோடின் உப்பு, இரும்பு ஊட்டச் சத்து உப்பு, இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு, டை எதில் கார்போமைசின் மருந்துச் சத்து கலந்த நல உப்பு மற்றும் அயோடின் கலந்த 'அரசு' உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்து வருகிறது. இந்நிறுவனம் மொத்தமுள்ள 4825 ஏக்கர் பாப்பளவில் இதுவரை 3210 ஏக்கர் பரப்பளவு உப்பு உற்பத்தி செய்ய மேம்படுத்தியுள்ளது.

2. அயோடின் சத்து கலந்த உப்பைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் இரும்பு அயோடின் சத்துக் குறைகளினால் ஏற்படும் நோய் பற்றிய விழிப்புணர்வு முகாம்களை நடத்தியும் தமிழ்நாட்டைச் சேர்ந்த கிராமப்புற மக்களுக்கு அறிவுறுத்துவதில் தமிழ்நாடு உப்பு நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் இதுவரை 19 மாவட்டங்களில் அதாவது தூத்துக்குடி, இராமநாதபுரம், தேனி, கரூர், பெரம்பலூர், சிவகங்கை, திண்டுக்கல், கடலூர், திருச்சி, விருதுநகர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, ஈரோடு, தஞ்சாவூர், கோயம்புத்தூர், நாமக்கல், மதுரை, விழுப்புரம் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் இத்தகைய விழிப்புணர்வு முகாம்களை நடத்தியுள்ளது.

3. அரசு நிலை ஆணை எண் 217, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 20-10-1998-ன்படி தமிழ்நாடு உப்பு நிறுவனம் அயோடின் சத்து நிறைந்த உப்பை பொது விநியோக பங்கீட்டு முறை திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு பண்டக சாலை மூலமாக ஒரு கிலோ பாக்கெட் ரூ.2.50 என்ற விலையில் முதற்கட்டமாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்யத் தொடங்கியது. இத்திட்டத்தை, தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த அரசு நிலை ஆணை எண் 83, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 4-5-2000-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. டிசம்பர் 1999 முதல் டிசம்பர் 2000 வரையில் அயோடின் 'அரசு' உப்பு உற்பத்தி மற்றும் விற்பனை முறையே 7194 மெட்ரிக் டன்கள் மற்றும் 6979 மெட்ரிக் டன்களாகும்.

4. இந்நிறுவனம் கர்நாடகா மாநிலத்தில் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் அயோடின் கலந்த 'அரசு' உப்பை விற்பனை செய்யத்





தொடங்கியுள்ளது. அயோடின் கலந்த 'அரசு' உப்பை ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் ஒரிசா மாநிலங்களில் விற்பனை செய்வதற்காக தமிழ்நாடு உப்பு நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஏப்ரல் 2000-ல் சென்னையிலுள்ள தேசிய நுகர்வோர் கூட்டுறவு ஒன்றியம், தமிழ்நாடு உப்பு நிறுவனத்தை அணுகி அயோடின் கலந்த 'அரசு' உப்பை வட மாநிலங்களில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விற்பனை செய்வதற்கு அனுப்புமாறு கேட்டுக் கொண்டது. இதற்கிடையில், பாண்டிச்சேரி வேளாண் பொருட்கள், உணவு மற்றும் நுகர்வோர் கழகத்திற்கு அளிக்க வேண்டிய 10 டன்கள் அயோடின் 'அரசு' உப்பை டிசம்பர் 2000-ல் தேசிய நுகர்வோர் கூட்டுறவு ஒன்றியம் கொள்முதல் செய்துள்ளது.

5. மாரியூர் வாலிநோக்கத்தில் சோதனை அடிப்படையில் ஆர்டிமியா பயோமாஸ் மற்றும் சிஸ்ட்ஸ் உற்பத்திக்கான திட்டம். பேராசிரியர் முனைவர் அப்துல் ஏ. ரகுமான் என்ற சுற்றுச்சூழல் அறிவியல் அறிஞரின் தொழில் நுட்ப உதவியைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. விரைவில் ஆர்டிமியா சிஸ்ட்ஸ் பயன் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உப்புக் கழிவுநீரிலிருந்து சோதனை அடிப்படையில் 150 கிராம் உரம், அமோனியம் மெக்னீசியம் பாஸ்பேட் என்ற பெயரில் தயாரிக்கப்பட்டு கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு சோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டத்தில் அதிக அளவு உப்புக் கழிவு உள்ளதால் இதனைப் பயன்படுத்தி உரமாக மாற்றி வணிக நோக்கத்திற்காகப் பயன்படுத்த மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 6. நிதிநிலை சிறப்புக் கூறுகள்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1990-91 ஆம் ஆண்டு முதற்கொண்டு தொடர்ந்து ஆதாயம் ஈட்டத் தொடங்கியுள்ளது. இந்நிறுவனம் அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஏதுமில்லை. 31-3-2001 அன்றுடன் முடிவுற்ற ஆண்டுக்கு வரிக்கு முன் நிகர இலாபம் (தோராயமாக) ரூ.11.92 இலட்சங்களாகும்.

### 7. ஆதாயப் பங்கு சாற்றுதல்

1999-2000 ஆண்டில் இந்நிறுவனம் 15 சதவீதம் அதாவது, ரூ.47.55 இலட்சம் ஆதாயப் பங்காக அறிவித்துள்ளது. இவ்வாறு அரசுக்கு ஆதாயப் பங்கு செலுத்தும் ஒரு சில பொதுத் துறை நிறுவனங்களில் தமிழ்நாடு உப்பு நிறுவனம் ஒரு முக்கிய நிறுவனமாக விளங்குகிறது.

[2001 ஆகஸ்ட் 31

## புவியியல் மற்றும் சுரங்கத் துறை

### புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் முக்கிய செயல்பாடுகள்:-

1. பெருங்கனிமங்கள் மற்றும் சிறு கனிமங்களுக்குக் கனிம குத்தகைகள் வழங்கி மாவட்டங்களில் கனிம நிர்வாகத்தைச் செயல்படுத்துதல்.

2. தொன்மையான முறைகளிலும், தற்போதுள்ள நவீன முறைகளிலும் ஆய்வுகள் மேற்கொண்டு தமிழ்நாட்டில் கிடைக்கும் பல்வேறு கனிம இருப்புகளைக் கண்டறிந்து அவற்றைப் பகுப்பாய்வு செய்தல்.

3. நீலகிரி மற்றும் கொடைக்கானல் ஆகிய மலைப் பகுதிகளில் புவியியல் தொழில் நுட்பவியல் ஆய்வுகள்மூலம் நிலச்சரிவுகள் ஏற்படும் சாத்தியக் கூறுகள் குறித்தும், மலைப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகள் குறித்தும் தகுந்த அறிவுரை வழங்குதல்.

### I. கனிமங்களை முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்:

அரசு (புறம்போக்கு) நிலங்களில் கனிமங்களுக்குத் குத்தகை வழங்குதல் மற்றும் ஆய்வு மேற்கொள்ள அனுமதி வழங்குதல் ஆகிய அதிகாரங்கள் மாநில அரசிடம் உள்ளது. மாநில அரசின் தாராளமயமாக்கப்பட்ட கொள்கையின்கீழ் பட்டா நிலங்களில் பெருங்கனிமங்களுக்குக் குத்தகைகளைப் புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநர் தொடர்ந்து வழங்கி வருகிறார். மத்திய அரசால் கொண்டுவரப்பட்டுள்ள 1999 ஆம் ஆண்டு கிரானைட் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்துதல் விதிகளின் அடிப்படையில் மாநில அரசும் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளுக்கு உரிய திருத்தங்கள் கொண்டு வந்துள்ளது.

### II. கனிம ஆய்வு:

கனிம ஆய்வுத் திட்டத்தின்கீழ் புவியியல் மற்றும் சுரங்கத் துறை கீழ்க்கண்ட ஆய்வுகளைத் திட்டப் பணிகள் மற்றும் திட்டம் சாராப் பணிகள் வாயிலாக நிறைவேற்றி வருகின்றது.



2001 ஆகஸ்ட் 31]

### (அ) திட்டப் பணிகள்

#### 1) சுண்ணாம்புக்கல் ஆய்வு

சிமெண்டு செம் இரசாயனங்கள் தயாரிப்பு போன்ற தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி செய்வதற்கு சுண்ணாம்புக்கல்லின் தேவை அதிகரித்து வருகின்றது. எனவே, இதைக் கருத்தில் கொண்டு இத்துறையினால் பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் சுண்ணாம்புக்கல்லின் இருப்பு மற்றும் அதன் தரம் ஆகியவை குறித்து இத்துறை விரிவான புவியியல் ஆய்வு செய்து வருகின்றது. சுண்ணாம்புக்கல் கிடைக்கும் இடங்களைக் கண்டறிய 80 துளைக் கிணறுகள் போடுவதற்கு 80 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு இடம் வரையறுக்கப்பட்டுள்ளது. இதுவரை 1,074.31 மீட்டர் ஆழத்திற்கு 18 துளைக் கிணறுகள் போடப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டில் அரியலூர் மாவட்டம் செந்துறை வட்டம் துலார் மற்றும் மருங்கூர் கிராமங்களில் 390.55 மீட்டர் ஆழத்திற்கு 7 துளைக் கிணறுகள் போடப்பட்டுள்ளன. 46 துருவல் சேறு மாதிரிகளும் 46 உள்ளிடு மாதிரிகளும் வேதியியல் ஆய்வுக்காக சேகரிக்கப்பட்டுள்ளன.

#### 2. நீலகிரி மாவட்டத்தில் புவி தொழில்நுட்ப ஆய்வுகள் தொடர்தல்

நீலகிரி மாவட்டத்தில் குன்னூரில் உள்ள புவி தொழில்நுட்ப மையம் நீலகிரி மாவட்டத்தில் உள்ள நிலச்சரிவு பகுதிகளைக் கண்டறிய புவி தொழில் நுட்ப ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளது. இம்மாவட்டத்தில் 121 இடங்களில் பல்வேறு கட்டுமானப் பணிகளுக்கான புவி தொழில் நுட்ப கருத்துக்களையும் வழங்கியுள்ளது. மேலும், மலைப் பகுதி பாதுகாப்பு ஆணைக் குழுவின் ஒப்புதலுக்காக வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

#### 3. கொடைக்கானல் மற்றும் பழனி மலைப் பகுதிகளில் புவி தொழில் நுட்பஆய்வு மையம்.

1999-2000 ஆம் ஆண்டில் முதற்கட்ட ஆய்வுப் பகுதிகளுக்கு கிழக்காக இரண்டாவது கட்டமாக சர்வே ஆப் இந்தியா வரைபடம் எண் 58 F/11, 58 F/12, 58 F/15 மற்றும் 58 F/16-ல் அடங்கும் அட்ச ரேகை 10°10'00" - 10°30'00" மற்றும் தீர்க்க ரேகை 77°35'00" - 77°50'00" உள்ளடக்கிய சுமார் 545 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு களப்பணி ஆய்வு செய்து மண்

சரிவு பகுதிகள் மற்றும் 15 பழைய மண் சரிவு வடு கண்டுபிடிக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

2001-2002 ஆம் ஆண்டில் முதற்கட்ட ஆய்வுப் பகுதிக்கு வடக்காக சர்வே ஆப் இந்தியா வரைபட எண் 58 F/7 மற்றும் 58 F/11-ல் அடங்கும் அட்ச ரேகை 10° 20’00” - 10° 26’00” மற்றும் தீர்க்க ரேகை 77° 9’00’ - 77° 35’00” உள்ளடக்கியதுமாக சுமார் 150 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு மூன்றாவது கட்டமாக ஆய்வு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. மழைக் காலங்களில் நிலச்சரிவு மற்றும் மண் சரிவு அடிக்கடி நிகழ்வதால் இவற்றைத் தவிர்க்க தடுப்புச் சுவர் கட்டுதல் வடிகால் அமைத்தல் போன்றவை இன்றியமையாததாகும். எனவே இந்த ஆண்டில் இந்த மையம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெருமாள்மலை மற்றும் பழனி மலைப் பாதையில் சுமார் 40 கிலோ மீட்டர் நீளத்திற்குப் பாதை நில வரைபடம் தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

மேலும் சர்வே ஆப் இந்தியா வரைபடம் எண் 58 F/7, 58 F/8 மற்றும் 58 F/12-ல் அடங்கும் அட்ச ரேகை 10°70’00” - 10°20’00” மற்றும் தீர்க்க ரேகை 77°16’00” - 77° 33’00” உள்ளடக்கியதுமாக பெரிஜாம் ஏரி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளைக் கொண்ட சுமார் 300 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு 2001-2002 ஆம் ஆண்டில் விரிவான தொழில் நுட்ப ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல் வத்தலகுண்டு கொடைக்கானல் மலைப் பாதை 46 கிலோ மீட்டர் நீளத்திற்கும், சித்தரேவு தண்டிக்குடி கிராமப் பாதை 30 கி.மீ. நீளத்திற்கும் நில வரைபடம் தயாரிக்க விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது. இந்த ஆய்வுகள் முடிந்த பின்பு, பின்பழனி மலைத் தொடரில் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் முடிவான மண்டல வரைபடம் தயாரிக்கப்படும்.

### 4. சேலம் மாவட்டத்தில் பிளாட்டினம் வகைக் கனிம இருப்பு ஆய்வு

சேலம் மாவட்டத்தில் உள்ள சாக் மலை மற்றும் கஞ்சமலைப் பகுதிகளில் உள்ள மிகுகாரப்பாறை மற்றும் மிகு வண்ணப் பாறைகளில் இருந்தும் மற்றும் ஆற்றுப் பகுதிகளில் இருந்தும் முறைப்படியாக, பிளாட்டினம் வகைக் கனிமம் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிய மாதிரிப் படிவங்கள் எடுக்கப்பட்டு இரசாயனப் பகுப்பாய்வு செய்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படும்.





### 5. தமிழ்நாட்டில் சில பகுதிகளில் கழிவுகளில் கனிம இருப்பு ஆய்வு

அதிக வெப்பத்தைத் தாங்கக்கூடிய கனிமங்களாகிய மாலிப்டினம், டின், டங்ஸ்டன் போன்ற கனிமங்களைக் கண்டறிய தமிழ்நாட்டில் உள்ள சுண்ணாம்பு மற்றும் மேக்னசைட் சுரங்கங்களில் உள்ள கனிம கழிவுகளில் ஆய்வு மேற்கொண்டு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு இரசாயனப் பகுப்பாய்வு செய்து விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

### 6. திட்டம் சாராப் பணிகள்

#### அ) புவிபௌதீகம் மற்றும் புவிவேதியியல் ஆய்வு

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் மோட்டன்குறிச்சி கிராமத்திற்கு அருகில், ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்தின்கீழ் 1968 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் ஒரு வட்ட காந்த பொருத்தமின்மை பகுதி கண்டறியப்பட்டு முதனிலை காந்த புலன் மற்றும் கதிரியக்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

### 7. கனிம வருவாய்

கனிம நிர்வாகப் பணி திறமையுடன் நடைபெற்று வருகிறது என்பதை ஆண்டுதோறும் படிப்படியாக அதிகரித்து வரும் வருவாயே நிரூபிக்கும். விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | வருவாய் (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1991-92 | 22.14 |
| 1992-93 | 63.17 |
| 1993-94 | 54.50 |
| 1994-95 | 64.80 |
| 1995-96 | 66.90 |
| 1996-97 | 73.85 |
| 1997-98 | 89.94 |
| 1998-99 | 110.37 |
| 1999-2000 | 124.86 |
| 2000-2001 சனவரி முடிய | 121.82 |

**8. புதிய திட்டம்**

மாநிலத்தில் கிரானைட் கற்கள் பெருமளவில் காணப்படும் மாவட்டங்களிலுள்ள ஏற்றுமதி தரமுடைய கிரானைட் படிவங்களின் ஆதார மதிப்பீடு திட்டத்தின்கீழ் கிரானைட் படிவங்கள் பற்றியும், குறிப்பிட்ட கிராமங்களின் வரைபடத்தில் கிரானைட் படிவங்களின் பரப்பளவு பற்றியும் மற்றும் செயற்கைக்கோள் மூலமாக எடுக்கப்படும் நிலப்படங்கள், வான்வழி புகைப்படங்கள் தயாரிப்பது பற்றியும் புவியியல் ஆய்வு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் கிரானைட் படிவங்கள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்காக 2001-2002 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.19.04 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. கனிம நிர்வாகம் மற்றும் கனிம ஆய்வுப் பணிகளில் ஆண்டுக்கு ஆண்டு நல்ல முன்னேற்றத்தினை எய்த புவியியல் மற்றும் சுரங்கத் துறை கடினமாக முயன்று வருகிறது.

## சர்க்கரைத் தொழில்

தமிழ்நாட்டிலுள்ள 38 சர்க்கரை ஆலைகளில் 16 கூட்டுறவுத் துறையிலும், 3 பொதுத் துறையிலும் மற்றும் 19 தனியார் துறையிலும் இயங்கி வருகின்றன. கரும்பு விலை அதிகரிப்பு, சர்க்கரை விலைச் சரிவு, உற்பத்திச் செலவு அதிகரிப்பு மற்றும் கட்டுமானக் குறைவு காரணமாக 16 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் 12 கூட்டுறவு சர்க்கரைச் ஆலைகள் நலிவடைந்துள்ளதால், இவ்வாலைகளைப் புனரமைக்க மைய அரசின் சர்க்கரை அபிவிருத்தி நிதியத்திலிருந்து உதவி கோரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் (டாஸ்கோ) கட்டுப்பாட்டிலுள்ள பொதுத் துறை சர்க்கரை ஆலைகளான அறிஞர் அண்ணா, மதுரா சர்க்கரை ஆலை மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் கட்டுப்பாட்டிலுள்ள ஜவஉறர்லால் நேரு சர்க்கரை ஆலை ஆகிய ஆலைகள் நலிவடைந்த ஆலைகளாக அறிவிக்கப்பட்டு, தொழில் மற்றும் நிதி புனரமைப்பு வாரியத்திடம் (BIFR) பதிவு செய்யப்பட்டுள்ளன. தொழில் மற்றும் புனரமைப்பு வாரியம் பணித்தபடி இயங்கும் முகவர் (Operating Agency) தொழில்நுட்பப் பொருளாதாரச் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்க இட்காட் (ITCOT) நிறுவனத்தை நியமித்துள்ளனர். பெரம்பலூர் சர்க்கரை ஆலைக்கான புனரமைப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின்





கட்டுப்பாட்டிலுள்ள அறிஞர் அண்ணா மற்றும் மதுரா சர்க்கரை ஆலைகளுக்கான புனரமைப்புத் திட்டத்தை டாஸ்கோ நிறுவனம் தயாரித்து வருகிறது.

2. இணைமின் உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடுதான் முன்னோடியாக உள்ளது. கூட்டுறவுத் துறையில் மூன்று ஆலைகள் அதாவது, எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி, செய்யாறு மற்றும் சுப்ரமணிய சிவா ஆகிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் உள்ள இணைமின் உற்பத்தித் திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு 1-4-2000 முதல் 31-3-2001 வரையில் 1,71,76,410 யூனிட் உபரி மின்சாரத்தைத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்றுள்ளன. விற்கப்பட்ட இந்த மின்சாரத்தின் மதிப்பு ரூ.459.60 இலட்சம்.

3. மத்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் உத்திரப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் எரிசாராயத்தை மோட்டார் வாகனங்களுக்கு எரிபொருளாக உபயோகிக்க மூன்று முன்னோடித் திட்டங்களைத் (Pilot Projects) தொடங்கியுள்ளது. 38 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளைக் கொண்ட தமிழ்நாடு, நாட்டில் கழிவுப்பாகு பெருமளவு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. இம்மாநிலத்திலுள்ள 16 வடிப்பகங்களில் உற்பத்தியாகும் ஆல்கஉறால் மக்களின் தேவையையும், தொழிற்சாலைகளின் தேவையையும் பூர்த்தி செய்கிறது. போர்டு, உறுண்டாய், மிட்சுபிசி லேன்சர், அசோக் லேலாண்ட், டிவிஎஸ் சுசுகி போன்ற முன்னணி மோட்டார் வாகனத் தயாரிப்பாளர்கள் (Automobile Manufacturers) தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்கியுள்ளனர். எனவே, எரிசாராயத்தை வாகனங்களுக்கு எரிபொருளாக உபயோகப்படுத்த மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகம் எடுக்கும் முயற்சியில் தமிழ்நாடு பெரும் பங்காற்றி இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்ய இயலும். எனவே, எரிசாராயத்தை வாகன எரிபொருளுடன் கலந்து மோட்டார் வாகனங்களுக்கு உகந்த எரிபொருள் தயாரிப்பதற்கான முன்னோடித் திட்டம் ஒன்றையாவது தமிழ்நாட்டில் தொடங்குமாறு மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகம் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

**புதிய திட்டம்**

தற்போது கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படும் உயிர்ச் சத்து உரத்தின் தயாரிப்பை ஆண்டுக்கு 100 டன்கள் என்ற அளவிலிருந்து 300 டன்களாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக

செங்கற்பட்டிலுள்ள உயிரியல் ஆய்வு மையத்தின் செயல் திறனைக் கூடுதலாக்கும் பொருட்டு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆகும் செலவு ரூ.17.70 இலட்சங்கள். இத்திட்டத்திற்காக ரூ.5.00 இலட்சம் அரசு மானியமாக வழங்கும் பொருட்டு 2001-2002 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்பம்

இந்திய நாட்டின் தகவல் தொழில் நுட்பத்தில் முக்கிய மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. இதனை உறுதி செய்யும் வகையில் 596 ஆக இருந்த பதிவு செய்யப்பட்ட இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா (Software Technology Park of India - STPI) பிரிவுகளின் எண்ணிக்கை தற்போது 764 ஆக உயர்ந்துள்ளது. மேலும், சென்ற ஆண்டு வன்பொருள்களின் ஏற்றுமதி ரூ.576 கோடியாக இருந்தது.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்குச் சாதகமான சூழ்நிலை தமிழ்நாட்டில் உள்ளது. மிகச் சிறந்த அறிவியல் மற்றும் சமூகக் கட்டமைப்பையும், அனைத்திந்திய அளவில் தலைசிறந்த மனித வள ஆற்றலையும் தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது. இவையனைத்தும் மிகக் குறைந்த செலவில் கிடைக்கின்றன. பல்வேறு தனி ஆய்வுகளின் மூலம் இவை தெரிய வந்துள்ளன.

இந்த முயற்சிக்குத் துணை புரியும் வகையில், பல்வேறு முக்கிய நடவடிக்கைகளைத் தமிழக அரசு எடுத்துள்ளது.

1. தகவல் தொழில்நுட்பத்திற்கென தனிக் கொள்கையை முதலாவதாக உருவாக்கிய மாநிலங்களுள் தமிழகம் ஒன்றாகும். இதுவரை பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலும், தற்போதைய சூழ்நிலைக்கேற்றவாறு கொள்கையை உருவாக்கவும், மென்பொருள், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், வன்பொருள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஆகிய தகவல் தொழில்நுட்பத்தின் அனைத்து அம்சங்களும் பரிசீலிக்கப்பட்டு, திருத்தி அமைக்கப்பட்ட கொள்கை ஒன்று விரைவில் வகுக்கப்படும்.

2. மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் 'தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மன்றம்' ஒன்று சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான அனைத்து கொள்கை முடிவுகள், தகவல் தொழில்நுட்பத்திற்கான மனிதவள ஆற்றல், அரசுத் துறைகளில் தகவல்



தொழில்நுட்பத்தின் பயன்பாடு ஆகியவற்றை இம்மன்றம் தொடர்ந்து விவாதித்து முடிவெடுக்கும்.

3. தகவல் தொழில்நுட்ப அடிப்படைக் கட்டமைப்பு தேவை பெருகி வருவதால் அதனை ஈடுகட்ட நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகளை மென்மேலும் சென்னையில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

4. பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள சிறுசேரியில் 1000 ஏக்கருக்கும் கூடுதலான மேம்படுத்தப்பட்ட நிலத்தில் தகவல் தொழில்நுட்பப் புங்கா ஒன்றினை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் ஏற்படுத்தி வருகிறது. தொழில் நிறுவனங்கள் இந்தப் பூங்காவைப் பெரிதும் வரவேற்றுள்ளன. இந்தப் பூங்காவில் பல தகவல் தொழில்நுட்பத் தொழில் பிரிவுகளுக்கு, தொழில் வளாகத்தை அமைப்பதற்காக நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. பழைய மகாபலிபுரம் சாலையில் உயர் தொழில்நுட்பம் கொண்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவுகள் விரைவாக அமைக்கப்பட்டு வருவதால், இச்சாலையை நான்கு வழிப் பாதையாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் தருவாயில் உள்ளது. இந்தச் சாலையிலிருந்து நெடுஞ்சாலை-45 மற்றும் கிழக்குக் கடற்கரைச் சாலை இணைப்புச் சாலையின் அபிவிருத்திப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்தப் பகுதியின் சீரான வளர்ச்சிக்காக சிறு முழுமைத் திட்டம் (Mini-Master Plan) ஒன்றைத் தயாரிப்பதில் சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமம் ஈடுபட்டுள்ளது.

6. அரசு அமைப்புக்குள் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடுகளை ஏற்படுத்தித்தரவும், தகவல் தொழில்நுட்பத் தொழில் வளர்ச்சி ஏற்படவும், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) தொடர்ந்து முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஒற்றைச் சாளர வசதிகளை இந்நிறுவனம் ஏற்படுத்தித் தருகிறது. இதன், தகவல் தளமான www.elcot.com தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பத்திற்கான அலுவல்சார்ந்த தகவல் தளமாக இயங்குகிறது.

7. மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் தகவல் தொழில் நுட்பத் தொழில் வளர்ச்சிக்கு ஏதுவாக திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயற்கைக்கோள் தரை நிலையங்கள் அமைப்பதற்கு இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காக்கள் நிறுவனம் ஊக்கமளிக்கப்பட்டுள்ளது. சென்னை மற்றும் கோயம்புத்தூரில் தற்போதுள்ள செயற்கைக்கோள் தரை நிலையங்களைத் தவிர, இவை கூடுதலாக உருவாக்கப்படும் செயற்கைக்கோள் தரை நிலையங்களாகும்.

8. எந்த ஒரு முன்னேற்றமடைந்த மாநிலத்திலும் உயர் அலைத்திறன் கொண்ட தகவல் தொடர்பு கட்டமைப்பு ஒன்று இருப்பது அத்தியாவசியமான அடிப்படைத் தேவையாகும். இதனை உருவாக்க, சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளில் பொது வழித்தடத்தை உபயோகித்து கண்ணாடி இழைவடம் பதிப்பதற்கு ஏதுவாக பொது வழித்தட உரிமை வழங்கி நல்லதோர் கொள்கையினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் பயனாக, தனியார் துறையின் மூலம் மாநிலத்தில் 1200 கிலோ மீட்டருக்கு மேல் கண்ணாடி இழை வடம் (Optic Fibre Cable) பதிக்கப்பட்டுள்ளது.

9. இதே கொள்கை வழிமுறைகளின்படி, ஆழ்கடல் வழியாக சிங்கப்பூரிலிருந்து சென்னைக்கு கண்ணாடி இழைவடம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள், இந்தத் திட்டம் செயல்படுத்தப்படக்கூடும். இதனால், அதிக அளவில் சர்வதேச அலைத் திறன் சென்னையில் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

10. சென்னையிலுள்ள, இந்தியத் தொழில்நுட்பக் கல்லூரி (IIT), எம்.ஐ.டி. மீடியா லேப் மற்றும் ஹார்வார்டு பல்கலைக்கழகம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட, குறைந்த செலவிலான வயர்லெஸ் தொழில்நுட்பம் மூலம் கிராமப்புறங்களுக்குத் தொலைபேசி வசதிகளும் இணைய வசதியும் அளிக்கும் புதிய திட்டத்திற்கு அரசு ஆதரவு அளித்துள்ளது. இத்தகைய முன்னோடித் திட்டம் ஒன்று மதுரை மாவட்டத்தில் செயலாக்கத்தில் உள்ளது.

11. தமிழ் விசைப்பலகை, தமிழ் எழுத்து வடிவக் குறியீடுகளுக்கான தரங்களை அரசு அறிவித்துள்ளது. இத்தரங்களுக்கு ஏற்பத் தயாரிக்கப்படும் வன்பொருள் மற்றும் மென்பொருளுக்குச் சான்று வழங்கும் முறையினை அரசு அறிவிக்கை செய்துள்ளது. இதுவரை, 26 பொருட்களுக்குச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

12. தமிழில் புதுமையான மென்பொருள் வளர்ச்சியடைவதை ஊக்குவிக்கும் பொருட்டு 'தமிழ்மென்பொருள் வளர்ச்சி நிதி' ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதியமைப்பு ஏற்கெனவே 7 திட்டங்களுக்கு நிதியுதவி அளித்துள்ளது.

13. வலைத் தள (web) அடிப்படையிலான தமிழ்க் கல்வியைப் பரப்புவதற்கு 'தமிழ் இணையப் பல்கலைக்கழகம்' ஒன்று சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ளது.





14. வாலாஜாப்பேட்டை வட்ட மருத்துவமனை, சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையுடன் ISDN (Integrated Services Digital Network) இணைப்பு மூலமாக இணைக்கப்பட்டு, தொலை தூரத்திலிருந்து மருத்துவ சிகிச்சை முறையை அறிய (Telemedicine) முன்னோடித் திட்டம் ஒன்று செயலாக்கத்தில் உள்ளது.

15. மக்களுக்கு நல்ல ஆளுமையை அளிக்கத் தொடர்ந்து உறுதிபூண்டு வரும் தமிழக அரசு, அதன் தொடர்பாக, பத்திரப் பதிவுகள், மோட்டார் வாகனங்கள், நிலப் பதிவுருக்கள், வரை படங்கள் மற்றும் விற்பனை வரி ஆகிய குறிப்பான பகுதிகளைக் கண்டறிந்து அவற்றைக் கணினிமயமாக்கி வருகிறது. பத்திரப் பதிவுத் துறையில் இதுவரை 25 பதிவு அலுவலகங்களில் கணினி வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இந்த வசதி மேலும் 100 இடங்களில் விரிவுபடுத்தப்பட உள்ளது.

16. மோட்டார் வாகனத் துறையிலும் 17 இடங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இதனை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

17. வன்பொருள் மற்றும் அதனைச் சார்ந்த மென்பொருள் வசதிகள் மாநிலத்தில் 206 வட்டங்களில் அளிக்கப்பட்டுள்ளது. நில வரைபடங்களைக் கணினியில் பதிவு செய்ய பெருந்திட்டம் ஒன்றைச் செயல்படுத்த வருவாய்த் துறை கருதியுள்ளது.

18. பள்ளிக் கல்வித் துறையின் ஒத்துழைப்புடன், மாநிலத்தில் உள்ள 1200 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி அறிவியல் விருப்பப் பாடமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இம்மாநிலத்தில் உள்ள 80,000 மாணவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டுள்ளனர். புதுமையாக இந்தத் திட்டம் பொது மற்றும் தனியார் ஒத்துழைப்பினால் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவதால், தேசிய அளவில் முன்னோடியாகத் திகழ்கிறது. இந்த ஆண்டில், ஆறாம் வகுப்பிலிருந்து கணினி அறிவியல் பாடத்தினை அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

19. உலகத் தகவல் தொழில்நுட்பத்திற்காக உயர்தரம் கொண்ட மனித வள ஆற்றலைத் தொடர்ந்து பயன்படுத்துவதை உறுதி செய்யும் பொருட்டு, அனைத்து அரசு கலைக் கல்லூரிகள், அறிவியல், மருத்துவம், பல் மருத்துவம் மற்றும் சட்டக் கல்லூரி மாணவர்களுக்குக் கணினி அறிவுத் திட்டம் விருப்பப் பாடமாக அளிக்கப்படுகிறது.

[2001 ஆகஸ்ட் 31

20. மருத்துவம், சட்டம் மற்றும் அலுவல் சேவைகள் போன்ற தகவல் தொழில் நுட்பம் சார்ந்த பணிகள் மேற்கொள்வது இந்த மாநிலம் முழுவதும் வெகுவேகமாக பிரபலமாகிக் கொண்டு வருகிறது. இதன் பயனாக தொழில்நுட்பம் சார்ந்த மூன்றாவது தேசிய மாநாட்டினை மே 2001-ல் சென்னையில் NASSCOM (National Association for Software & Services Companies) என்ற அமைப்பு நடத்தியது.

21. அரசின் நடவடிக்கைகள் ஒளிவு மறைவின்றி நடைபெறுவதற்கு ஏதுவாக பொது மக்களுக்குப் பயன்படும் அரசின் முக்கிய கொள்கைக் குறிப்புகள், ஒப்பந்தப்புள்ளி அறிக்கைகள், விண்ணப்பப் படிவங்கள், சம்பந்தப்பட்ட வலைத் தளத்திற்கான இணைப்புகள், புள்ளிவிவரங்கள், பொது மக்களுக்குத் தொடர்புள்ள பிற பத்திரங்கள் போன்றவை www.tn.gov.in என்ற அரசு தகவல் தளத்தில் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன.

---

223 444
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.